# நற்போதகம்.

அ. ஆகஸ்துமீ. ௲அஅ௰ஹ.

## உபாகமம்.

### 31. அதிகாரம்.

மோசே தன் மரணத்தை எதிர்நோக்கினவனாய்ச் செய்த கடைசிக் கிரியைகளும் ஏற்பாடுகளுமடங்கியது.

1. "போய்" பலஸ்தீனா தர்கூமில், புத்திசொல்லுகிற வீட்டுக் கூடாரத்துக்கு மோசே போய் என்றிருக்கிறது.

2. யாத்தி. 7: 7. உபா. 34: 7.

"நான் போக்கும் வரத்துமாயிருக்கக் கூடாது" 31: 7 வாசி. ஜனங்களின் தலைவனாக நானே முயற்சியாய் வேலைசெய்ய ஏதுவில்லை என்பது கருத்து. 34: 7-ல் மோசேக்குப் பிந்தி எழுதுகிறவன்: மோசே சாகும்பரியந்தம் சரியான புத்தியும் திறமையுமுள்ளவனாயிருந்தான் என்று சொல்லுகிறான். இரண்டும் ஒன்றுக்கொன்று விகற்பமல்ல.

"நீ கடந்துபோவதில்லை." 3: 27.

3. 9: 3.

6. யோசு. 1: 5. எபி. 13: 5.

7, 8. மோசேக்குப்பின் யோசுவா இஸ்ரவேலரை நடத்துகிறவன் என்பது முன்னமே குறிப்பிடப்பட்டிருந்தது. 1: 38. எண். 27: 23. இப்போதோ மோசே தன் உத்தியோகத்தை யோசுவாவுக்கு வெளிப்படையாய்க் கையளிக்கிறான். நியாயப்பிரமாணத்தை சனங்களுக்குப் போதித்து அதின்படி நடக்க ஏவுகிற பொறுப்பை, ஆசாரியர் பேரிலும் மூப்பர்பேரிலும் சுமத்துகிறான். 10—13.

9. மோசே தான் முன்னமே எழுதிவைத்திருந்த நியாயப்பிரமாணத்தை இப்பொழுது ஆசாரியருக்கும் மூப்பருக்கும் ஒப்புவித்தான் என்பது கருத்தாம். இனிமேல் நியாயப்பிரமாணத்துக்கு இவர்களே

உத்தரவாதிகளாயிருந்து காப்பாற்றவேண்டும். அதில் எழுதவேண்டியவைகளையெல்லாம் எழுதி முடியுமட்டும் அவன் புஸ்தகத்தைக் கொடுக்கவில்லை. 24-வா.

10. "விடுதலையின் வருஷம்." 15: 1-வியா.

"கூடாரப் பண்டிகை." லேவி. 23: 34.

11. "சந்நிதி." 16: 16. இந்தச் சடங்கு கொண்டாடப்பட்டதைக்குறித்து. நெகே. 8: 1.

"வாசிக்கக்கடவாய்." யோசு. 8: 34, 35. 2 இரா. 23: 2. நெகே. 8: 1. மோசேயின் ஐந்தாகமமுழுவதும் வாசிக்கப்பட்டதாக நினைக்கப்படாது. அப்படி வாசிக்கப்படவேண்டும் என்று நியாயப்பிரமாணத்தில் எழுத்துக் கட்டளையுமில்லை. இப்படி வாசிக்கவேணுமென்ற கட்டளை கொடுக்கப்பட்டது, சனங்களுக்கு நியாயப்பிரமாணத்தைப் போதித்து உணர்த்தவேணுமென்பது முக்கிய நோக்கமல்ல. ஏனென்றால் இது ஏழு வருஷத்துக்கொரு விசை தானே நடக்கும். ஆனால் இஸ்ரவேலருக்குக் கிடைத்த சலாக்கியங்களும் ஆசீர்வாதங்களுமெல்லாம் எந்த நிபந்தனைகளின்பேரில் கிடைத்ததென்பதை அவர்களுக்கு ஞாபகப்படுத்த நோக்கமாய் இப்படிக் கற்பிக்கப்பட்டது. நெகே. 8: 18-ல் விளங்குகிறபடி, பண்டிகையின் ஒவ்வொரு நாளிலும் எஸ்றா நியாயப்பிரமாணத்தை வாசித்தான். பிற்காலத்தில் பண்டிகையின் முதல்நாளில் மாத்திரம் உபாகமத்தில் சில பாகங்களை மட்டும் யூதர் வாசித்தார்கள். இதற்குப் பிற்காலத்தில் இந்தக் கடமை பிரதான ஆசாரியன் அல்லது இராசன் செய்யவேண்டியதென்றும், அவன் தேவாலயத்துக்குமுன் சபையாரெல்லாரும் கேட்க வாசிக்கவேண்டுமென்றும் யூதர் சட்டம் கட்டினார்கள். 12-வா.

14—23. கர்த்தர் யோசுவாவுக்குக் கட்டளைகொடுக்கும்படி, மோசேயையும் யோசுவாவையும் ஆசரிப்புக் கூடாரத்துக்கு முன்பாக கூடிவரக் கற்பித்தார். சனங்களின் ஆசரிப்புக்கூடாரத்தைக் குறித்து உபாகமத்தில் முதல் விசையாக இந்தச் சமயத்தில் தான் வருகிறது. கர்த்தர் மேகஸ்தம்பத்திலிருந்து தரிசனமானார். எண். 11: 25. 12: 5.

16. இஸ்ரவேலர் பிற்பாடு விக்கிரக சோரமார்க்கமாய்ப் போவதைப்பற்றி யோசுவா அறிந்திருக்கும்படி. இப்பொழுது கர்த்தர் முந்தியே எச்சரிக்கிறார். யோசு. 24: 31. 23: 15.

"சோரமார்க்கம்." யாத். 34: 15. நியா. 2: 17. உபா. 32. 15. நியா. 2: 12.

17. "முகத்தை" உபா. 32: 20. ஏசா. 8: 17. 64: 7. எசே. 39: 23.

19. 32: 1—43 சொல்லிய மோசேயின் பாட்டை தேவனுக்குச் சாட்சியாக எழுதிவைக்கும்படி மோசேயும் யோசுவாவும் கற்பிக்கப்

161397



பட்டார்கள். தேவனுடைய நன்மைகளையும், சனங்களுடைய கடமைகளையும், அவர்கள் மருளவிழுந்தால் கைவிடப்படுவதையும் குறித்து அவர்கள் வாயினாலேயே சாட்சிசொல்லும்படி கற்பிக்கப்பட்டது.

20. "கொழுத்து" 32: 15. நெகே. 9: 25. ஓசி. 13: 6.

21. "மறந்துபோகாதிருக்கும்." இது பாட்டாயிருப்பதால் லேசாய்ப் படிக்கவும் ஞாபகத்தில் பத்திரம்பண்ணவும் நன்றாய் உதவும்.

"இப்பொழுதே" ஆமோஸ். 5: 25.

24. "புஸ்தகத்தில்" இவ்விடத்தில் புஸ்தகம் என்பது, இந்த அதிகாரம் 24-ம் வாக்கியம் வரையுமுள்ள மோசேயின் ஐந்தாகமங்கள் முழுவதும் அடங்கியதாம். மோசேயின் புஸ்தகத்தை யூதர் பெரும்பாலும் "நியாயப்பிரமாணம்" என்று வழங்குவார்கள். மத். 22 : 40 கலா. 4: 21.

25. "லேவியர்" அதாவது லேவிபுத்திரரான ஆசாரியர் என்றர்த்தம். ஆசாரியரல்லாத லேவியர் ஆசரிப்புக்கூடாரத்துக்குள்ளாக போகவாவது, உடன்படிக்கைப்பெட்டியைத் தொடவாவது கூடாது. எண். 4: 15. வனாந்தரத்தில் பிரயாணம்போகும்போது ஆசாரியரல்லாத கோகாத்தியராலே உடன்படிக்கைப்பெட்டி சுமக்கப்பட்டபோதிலும், விசேஷ சமயங்களில் ஆசாரியராலேயே சுமக்கப்பட்டது. யோசு. 3: 3. 4: 9, 10. 6: 6, 12. 8: 33. 1 இரா. 8: 3.

26. "பக்கத்திலே" இரண்டு கற்பலகைகளும் உடன்படிக்கைக்கு உள்ளே வைக்கப்பட்டிருந்தது. 1 இரா. 8: 9. நியாயப்பிரமாணப் புஸ்தகம் மகா பரிசுத்த ஸ்தலத்தில் உடன்படிக்கைப்பெட்டிக்குப் பக்கத்தில் வைக்கப்பட்டது. அதாவது பக்கமாய் ஒரு பெட்டியில் வைக்கப்பட்டதென்று நிதானிக்கலாம். 2 இரா. 22: 8.

27. "என் மரணத்திற்குப பின்பு எவ்வளவு அதிகமாய்" மோசே எழுதி முடித்த புஸ்தகத்தை இந்த வார்த்தைகளோடு ஆசாரியருக்கு ஒப்புக்கொடுத்தானென்று காணப்படுகிறது. 24-வா. மோசேயினால் எழுதியது 23-ம் வாக்கியம் மட்டுந்தான். 24-ம் வாக்கிய முதல் (மோசேயின் பாட்டுத் தவிர, 19-வா.) புஸ்தகம் முடிவுமட்டும் இன்னொருவனாலே இவ்வாகமங்களுக்கு முடிவுரையாக எழுதப்பட்டிருக்கவேணும். ஆசீர்வாதம் சந்தேகமில்லாமல் மோசே எழுதிவைத்தது தான்.

29. "கடைசிநாட்கள்." 4: 30.

# Exposition of the Church Catechism.

## ஞானோபதேசவினாவிடை வியாக்கியானம்.

### ௯-ம் அதிகாரம்.

### விசுவாசப்பிரமாணம்.

### ௧-ம் பிரிவு.

(தொடர்ச்சி.)

வினா. தேவனைப்பற்றி விசுவாசபிரமாணத்தில் இன்னும் சொல்லியிருக்கிறதென்ன?

விடை. "வானத்திலும், பூமியிலும், காணப்படுகிறதும், காணப்படாததுமான எல்லாவற்றையும் படைத்தவர்" என்று சொல்லியிருக்கிறது.

அவைகள் உண்டாக்கப்பட்டன என்று விசுவாசிக்கிறது மாத்திரமல்ல, அவைகள் தேவனால் உண்டாக்கப்பட்டன என்றும், வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற காலத்திலும், வகையாகவும் உண்டாக்கப்பட்டனவென்றும் விசுவாசிக்கவேண்டும். மனிதர் கருவிகளைக்கொண்டு வேலைசெய்கிறார்கள். தேவனோ ஒன்றுமில்லாமையிலிருந்து எல்லா வஸ்துக்களையும் உண்டாக்கினார்.

இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கிறவருமாயிருக்கிறார். ரோ. 4: 17.

உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய்க் காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம். எபி. 11: 3.

சிருஷ்டிப்பின் கிரியை ஆதியாகமத்தின் முதலாம், இரண்டாம் அதிகாரங்களில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

௧-ம் நாள். வெளிச்சத்தை உண்டாக்கினார்.

௨-ம் நாள். ஆகாயவிரிவை உண்டாக்கினார்.

௩-ம் நாள். தரையினின்று ஜலத்தை வேறாகப் பிரித்து; தரையில் புற்பூண்டுகளையும், கனிதரும் விருட்சங்களையும் சிருஷ்டித்தார்.



௪-ம் நாள். சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்களைச் சிருஷ்டித்தார்.

௫-ம் நாள். நீர்வாழும் ஜெந்துக்களையும் பறவைகளையும் உண்டாக்கினார்.

௬-ம் நாள். மிருகங்களையும் ஊர்வனவற்றையும்.—மண்ணினாலே மனுஷனையும் உருவாக்கினார்.

(நீ மண்ணாயிருக்கிறாய். ஆதி. 3: 19.)

௭-ம் நாள். ஓய்ந்திருந்து, ஏழாம்நாளைப் பரிசுத்தமாக்கினார்.

கர்த்தர் ஆறுநாளுக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார். யாத். 20: 11. 31: 17.

உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான் பார்க்கும்போது. சங். 8: 3.

அவர் கட்டளையிட அவைகள் சிருஷ்டிக்கப்பட்டது. சங். 148: 5.

கர்த்தாவே, நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர். எபி. 1: 10.

☞ எந்த வீடும் ஒருவனால் உண்டாக்கப்படும்; எல்லாவற்றையும் உண்டுபண்ணினவர் தேவன். எபி. 3: 4.

தேவதூதர்களும் தேவனாலே சிருஷ்டிக்கப்பட்டார்கள்.

தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகவும், தம்முடைய ஊழியக்காரரை அக்கினிச்சுவாலைகளாகவும் செய்கிறார். சங். 104: 4. எபி. 1: 7.

வினா. எல்லாச் சிருஷ்டிகளும் ஏன் உண்டாக்கப்பட்டிருக்கின்றன?

விடை. சர்வவல்லவரின் மகிமைக்காகவே உண்டாக்கப்பட்டன.

கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திராயிருக்கிறீர்; நீரே சர்வத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது. வெளி. 4: 11.

வேதத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறபடி பிதாவாகிய தேவனுக்குச் சொல்லப்பட்டிருக்கிற எல்லா இலட்சணங்களையும் விசுவாசிக்கிறாயா? நீ அப்படி விசுவாசத்தால் குற்றமற்றவனாகவும், பரிசுத்தனாகவும் ஜீவிக்கிறாய்.—உன் பெற்றோருக்கும் போதகன்மாருக்கும் கீழ்ப்படிகிறாய்.—போதனையை அடைய விரும்புகிறாய்.—ஓய்வுநாளைக் கனப்படுத்துகிறாய்.—உனக்கு மற்றவர்கள் செய்ய நீ விரும்புவதுபோல நீயும் மற்றவர்களுக்குச் செய்கிறாய்.—சுருக்கமாய்ச் சொல்லவேண்டுமானால் தேவனுடைய எல்லாக் கற்பனைகளையும் கைக்கொண்டு,

ஒவ்வொரு தீமையான வழியையும் பகைக்கிறாய். அப்படியானால் நிச்சயமாகவே உன் நிலைமை பாக்கியமானது. மறு உலகத்திலுள்ள அதிக மேன்மையான பாக்கியத்துக்காக பக்குவப்படுகிறாய்.—ஆனால் இந்த பரிசுத்த அப்பியாசங்களும், விருப்பங்களும் அற்று; பாவத்துக்கும் பாவத்தோழமைக்கும் உடன்படுகிறதாயிருந்தால், நீ இன்னம் தேவனை உண்மையாய் விசுவாசியாமலிருந்து, குற்றவாளி என்கிற மோசத்தை உன்மேல் சுமத்திக்கொள்ளுகிறவனுயுமிருக்கிறாய். தேவனுடைய இலட்சணங்களைத் தியானித்து, நீயும் அவரோடு ஐக்கியமாயிரு. அவருடைய பழிவாங்குதலுக்குப் பயப்படு. அவருடைய இரக்கத்தைத் தழுவிக்கொள். நீயே அவரை அண்டிக்கொள். அவரை நோக்கி தாழ்மையோடும், நம்பிக்கையோடும் "ஆண்டவரே விசுவாசிக்கிறேன்; என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும்" என்று விண்ணப்பஞ்செய்வாயாக.

---

## விசுவாசப்பிரமாணம்.

### உ-ம் பிரிவு.

(கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவைப் பற்றி.)

வினு. விசுவாசப்பிரமாணத்தில் இரண்டாம் உபதேசம் என்ன?

விடை. அவருடைய குமாரனுகிய நம்முடைய நாதர் இயேசுக்கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன்.

ஞானோபதேசவினுவிடையில் அவர் "என்னையும் மற்றெல்லா மனிதரையும் மீட்டுக்கொண்டார்" என்று சொல்லியிருக்கிறது.

வினு. ஏசு என்ற வார்த்தைக்கு அர்த்தமென்ன?

விடை. இரட்சகர் என்று அர்த்தம். தம்மை விசுவாசிக்கிற எல்லாரையும் பாவத்தினின்றும், நரகத்தினின்றும் இரட்சிக்கும்படி அவர் வந்ததினாலே இந்தப் பேர் அவருக்குக் கொடுக்கப்பட்டது.

நீர் பூமியின் கடைசிபரியந்தம் என்னுடைய இரட்சிப்பாயிருக்கும்படி, உம்மை சாதிகளுக்கு ஒளியாகவும் வைப்பேன். ஏசா. 49: 6.

அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார். மத். 1: 21.

மனுஷகுமாரன் கெட்டுப்போனதை இரட்சிக்க வந்தார். மத். 18: 11. லூக். 19: 10.



நமக்கு இரட்சணிய கொம்பை ஏற்படுத்தினார். லூக். 1: 75. லூக். 2: 30. யோவா. 3: 17. 4: 42. 12: 47. அப். 4: 12. பிலி. 3: 20. 1 தெச. 1: 10. 5: 9. 1 தீமோ. 1: 15. தீத்து 2: 14. எபி. 5: 9. 9: 12.

வினு. இந்த இரட்சிப்பை அடையும்படி மனிதருடைய நிலைமை எப்படிப்பட்டதாயிருந்தது?

விடை. மனுஷர் ஆதிநீதியைவிட்டு வெகுதூரம் விலகி, தீமைக்கு இயல்பாய்ச் சாய்கிறார்கள், மாம்சமும் எப்பொழுதும் ஆவிக்கு விரோதமாய் இச்சிக்கிறது; ஆகையால் இவ்வுலகத்தில் பிறக்கும் ஒவ்வொருவனும் ஜர்மப்பாவமுள்ளவனுயிருப்பதினால் தேவனுடைய கோபத்துக்கும், ஆக்கினைத்தீர்ப்புக்கும் பாத்திரவானுயிருக்கிறான்.

வேதசித்தாந்தப் பிரமாணம். 9.

அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்கள். எபே. 2: 1.

இருதயம் முழுவதுமாய் சீர்கெட்டுப்போயிருக்கிறது.

மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டார். ஆதி. 6: 5.

எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது. எரே. 17: 9.

மத். 15: 19. மாற். 7: 21.

நம்முடைய திருச்சபை ஜெபபுஸ்தகம் நாம் அறிக்கையிடும்படி போதிக்கிறவைகளாவன. "எங்களுக்குச் சுகமேயில்லை." "நாங்கள் பாவங்களாகிய சங்கிலியினால் கட்டுண்டவர்களாயிருக்கிறோம்." "அக்கிரமங்களாலும் பாவங்களாலும் தடுக்கப்பட்டவர்களாயிருக்கிறோம்."

வினு. எல்லா மனிதரும் சுபாவப்படி இந்த நிற்பந்த நிலைமைக்குட்பட்டவர்களா?

விடை. ஆம். எல்லா மனிதரும் சுபாவப்படி இந்த நிற்பந்த நிலைமைக்குட்பட்டவர்கள் தான்.

நன்மைசெய்கிறவன் ஒருவனுமில்லை —எல்லாரும் வழிவிலகி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள்; நன்மைசெய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை. சங். 14: 1, 3.

வினு. இந்தச் சீர்கெட்ட நிலைமை எப்படி உண்டாயிற்று?

விடை. ஆதாமின் மீறுதலினாலே உண்டாயிற்று.

ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது. ரோ. 5: 12.

சுபாவத்தினாலே மற்றவர்களைப்போல கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம். எபே. 2: 3.

ஆனால் சென்மபாவமல்லாமல், நாம் செய்யும் பாவங்களே நம்முடைய அழிவுக்குப் போதுமானவைகளாயிருக்கின்றன. அவைகள் தொகையில் நம்முடைய சிரசின் ரோமங்களிலும் அதிகமாயும், நம்மை அமிழ்த்தத்தக்க பாரமானவைகளாயும் இருக்கின்றன.

நீ உலகத்தில் பிறந்தபொழுது இருந்த நிலைமையிலேயே இன்னம் இருப்பாயானால், நீ அக்கிரமத்தில் ஜீவிக்கிறவனாய், அல்லது அக்கிரமத்தினாலும் பாவத்தினாலும் மரித்தவனாயும்; தேவ கோபத்துக்கும் நரகாக்கினைத் தீர்ப்புக்கும் ஏதுவானவனாயும் இருப்பாய். ஆனால் உன்னுடைய நிலைமை பயங்கரமானதாயிருக்கிறதுபோல நம்பிக்கையற்றதாயுமிருக்கிறது. உன்னை மீட்கிறதற்காக மரித்தவரும், உனக்காக மத்தியஸ்தம்பண்ணும்படி என்றென்றைக்கும் பிழைத்திருக்கிறவருமான இயேசு, தமது சிலுவைப்பாடுகளின் புண்ணியங்கள் உனக்குப் பலிக்கும்படி காத்திருக்கிறார். அவரண்டை வா. உன் பாவங்கள் சிவேரொன்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்.

வினா. இயேசு நம்மை எப்படி மீட்டார்?

விடை. நம்முடைய சாயலைத் தாமெடுத்துக்கொண்டு, நமக்காக மரணமடைந்து நம்மை மீட்டார்.

அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார். யோவா. 1: 14.

மாம்சத்தின்படி கிறிஸ்துவும் அவர்களில் பிறந்தாரே. ரோ. 9: 5.

ஸ்திரீயினிடத்தில் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்துக்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார் கலா. 4: 5.

பிலி. 2: 7. 1 தீமோ. 2: 5. 3: 16. எபி. 2: 16, 17.

அவர் மற்றக் குழந்தைகளைப்போல ஆதரவற்றவராயிருந்ததினாலே, அவைகள் போஷிக்கப்படுகிறபடியே போஷிக்கப்பட்டார். பசியும் தாகமும் இளைப்பும் அடைந்தார். பிள்ளைகளுக்குண்டாகும் பலவகையான துன்பங்களுக்கும் உள்ளானவரானார்.

இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார். லூக். 2: 52.



மனுஷருக்குரிய எல்லாச் செய்கையுமுடையவராயிருந்தார். அழுதார், ஆவியிலே களிகூர்ந்தார்.

அவர் சமீபமாய் வந்தபோது நகரத்தைப் பார்த்து, அதற்காகக் கண்ணீர்விட்டார். லூக். 19: 41.

இயேசு கண்ணீர்விட்டார். யோவா. 11: 35. (21.

அந்தவேளையில் இயேசு ஆவியிலே களிகூர்ந்தார். லூக். 10:

அவர் பாவமற்றவராயிருந்த விஷயத்தில் மாத்திரம் நமக்கு வித்தியாசமானவராயிருந்தார்.

எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். எபி. 4: 15.

பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார். எபி. 7: 26.

வினா. நமது இரட்சகருடைய மனுஷாவதாரத்துக்கடுத்த சங்கதிகளெவை?

விடை. பரிசுத்தாவியினாலே உற்பவித்தார். கன்னிமரியாளிடத்தில் பிறந்தார். மற்றப் பிள்ளைகளுக்கிருப்பதுபோல அவருக்கு பூமிக்குரிய தகப்பனில்லை. யோசேப்பு அவருடைய தகப்பனாக எண்ணப்பட்டவனாக மாத்திரமிருந்தான். லூக். 3: 23.

இந்த அதிசய சங்கதி அநேக வருஷங்களுக்கு முன்னே ஏசாயா தீர்க்கதரிசியினால் முன்னறிவிக்கப்பட்டது.

ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள். ஏசா. 7: 14. மத். 1: 23.

இது மரியாளுக்கு ஒரு தேவதூதனாலே உரைக்கப்பட்டது.

பரிசுத்தஆவி உன்மேல் வரும். உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும், ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும். லூக். 1: 35.

வினா. இயேசுக்கிறிஸ்துவினுடைய ஜநநத்தை நமது திருச்சபை எப்பொழுது கொண்டாடுகிறது?

விடை. கிறிஸ்து ஜநந திருநாள் (கிறிஸ்த்மஸ்) என்று சொல்லப்படுகிற காலத்தில் கொண்டாடுகிறது.

இந்தப் பரிசுத்த திருநாள், திவ்விய ஸ்தோத்திரங்களைச் செய்வதற்காகப் பிரித்துவைக்கப்பட்டு, தேவனுடைய இரக்கங்களை அவமதிக்கிற இகழ்ச்சியான செய்கைகளைத் தடுக்கிற மார்க்க உணர்ச்சிகளை அதிகரிக்கச் செய்கிறதற்காகவும் பிரித்துவைக்கப்படவேண்டும்.

---

# இரக்ஷண்ய மனோகரம்.

ஞானசம்பந்த குரு.

நீயாருனக்கெந்த வகையிலென்னோடுறவு நினதுவாசஸ்தலமுமிந்
நிலவுலகமன்றுநீ தேவாதி தேவன் நான் நீசநரபுன் கிருமியாம்
மாயாபிரபஞ்சமும் நின்றிருவுளத்து நினைவாக வெம்மாத்திரங் காண்
மற்றதிலோரணுவுக்கு நிகரிலேனென்னையு மதித்துனுயிர் மாய்க்கவந் (தாய்
தாயேனுமகவின் பொருட்டுயிரை யீவளோ சார்வதா நன்றிகெட்ட
சண்டாளனுக் குன்னையல்லாமலிப் பெரியதண்ணளியையார் காட்டுவர்
நாயேனிவ்வன்பினைமதித்துணர்ந்திடு செயகனிசிறிதும் வல்லனல்லேன்
நரசரீரங்கொண்டவரராஜனே பரமஞான சம்பந்த குருவே. 1

முள்ளுமுடியாகியுன் சென்னியிற்றைத்தது முரண்கோலதாகியுன்றன்
முடிமீதடித்ததுவுமுமிழ் நீரதாய்த்திருமுகக்கஞ்சமலர் தோய்த்ததும்
எள்ளுபழிமொழியாகி யஞ்செவி நிறைத்ததுவுமீணர்கரமாகியர்தா
எழிலுறுகபோலத்தறைந்ததும் விலாவிலோரீட்டியாய்நுழைவுற்றதும்
விள்ளபயவரதாஸ்த முபயதிருவடி நோகவெவ்விருப்பாணியாகி
வேதனைவிளைத்ததும் பாதகப்புலையேன் விளைத்த தீவினையல்லவோ
நள்ளியெனையுள்ளென்ற கள்ளனுக்கூர்த்தகதி நல்குகருணாமூர்த்தமே
நரசீரங்கொண்டவரராஜனே பரமஞான சம்பந்த குருவே. 2

அத்தோவறக்கொடிய நிர்ப்பந்த பாவிநான் அனகவுனையன்றியிந்த
ஆபாசமரண ஜடலத்தினின்றெனை மீட்டநுக்கிரகஞ்செய வல்லர்யார்
எந்தாய் பாரமுகம் பண்ணில்லைழனோயேனிடேறும் வகையெங்ஙனம்
என்னிதய நோவு திருவுளமறியவுங்கணீரிருவன சபதமறியவும்
சிந்தாகுலந் தவிர்த்துலகுதர வொண்ணாத திவ்விய சமாதானமென்
சித்தமிசை நிலைகொளத்திருவிழிக்கடைசிறிது திறவாதிருப்பதென்னோ
நந்தாத கருணைப்பிரவாகமே யெம்மனோர் நவிலரிய அன்புமயமே
நரசீரங் கொண்டவரராஜனே பரமஞான சம்பந்த குருவே. 3

ஜெனமத்திலேயுற்ற கர்ம்மாநுசாரமோ திரிகரண துர்ஜேஷ்டையோ
திடசித்தமின்மையோ விஸ்வாசஹீனமோ ஜெகசாலவிபரீதமோ
உன்மத்தமோபாப கன்மப்பழக்கமோ ஒன்றொன்றொரோவேளையில்
ஊர்ச்சிதமடைந்தகச் சாக்ஷியை மழுக்கியெனையூர்த்த கதிநெறிவிலக்கி
வன்மித்தறக்கேடு சூழ்கின்றதென்று நான் மாறாத நிலையினின்றுன்
மலரடிக்கந்திலே யன்பு நிகளங்கொண்டு மன்மத்தயானை கட்டி
நன்மைத்திரவியமுண்டு சித்தசாஞ்சல்யமற நல்லருள் சுரப்பை அய்யா
நரசீரங் கொண்டவரராஜனே பரமஞான சம்பந்த குருவே. 4



மூடரியல்பிற் சிறந்தாகாம்ய சோதியிலே மூழ்கியின்னுங் கெடாமல்
முந்துசிலுவைக்கு வந்துன்றிருவடிச் சுவடுமுன் கண்டுபின்தொடரவும்
பாடரிய வுன்றிருப்புகழ் பாடியானந்த பரவசக் கூத்தனுகிப்
பக்திவிசுவாசத்தினுலுனை விடாது நனிபற்றிப் பிடித்தநுதினம்
கூடரியமன நிஷ்டைகூடிச் சுகிக்கவும் குன்றியுயிர்பொன்று நாளுன்
குரைகழற்றுணை நீழல் விரவியென்னுத்துமங் குலவியுய்யவுமருளுவாய்
நாடரிய ஞானமே தேடரிய மோனமே நவிலரிய சுகுண நிலையே .
நரசீரங் கொண்டவரராஜனே பரமஞான சம்பந்த குருவே. 5

சூடுகின்ற சிலகவலையோடு பலபிணியுந் தொடர்ந்து பீடிக்கவுள்ளம்
துன்பவெஞ்சுழலிலே யுழல்கின்ற திரணமாய்ச் சோகமுற்றிடவேழை (யான்
படுகின்றபாடெல்லாம் பாராதிருக்க விழிபார நித்திரைகொண்டவா
பாவியேற்கஞ்சலென்றொருமொழிபகர்ந்திடப்பவளவாய்திறவாததென்
கடுகின்றவுள்ளமென்கைந்நின்றகற்றவுன்கருணைமடையடைபட்டவோ
கங்குல்புகலாய்க் கூவிவாயுஞ் சலித்ததேகா தென்மந்தமுண்டோ
நடுகின்ற நாயனே வடுகின்ற காயனே நலிவுதீர்த்தெனையாளுவாய்
நரசீரங் கொண்டவரராஜனே பரமஞான சம்பந்த குருவே. 6

போல்லா நீசப்புலைப்பாவி வஞ்சனைபுரிந்த சண்டாளனிதயப்
புற்றிடங்கொண்டு வளர்ச்சையாடரவை நனிபோற்றிவரு புத்திஹீனன்
கல்லாது சுருதியையுபேக்ஷித்த மூடன்முன் காப்பியக்கவிகள் கூடிக்
கட்டிய வறுங்காதை கற்றுவாளுள் வீண்கழித்திட்டமாகாதகன் (மும்
சொல்லாத பொய்யுமுன்னரினையாத கேடுந் துணிந்துசெய்யாப் பாவ
சுத்தமாயில்லை முற்றும் பாவிநானுனது துணைமலர்ச்சரணடைந்தேன்
நல்லாய்மனக்கினிய சொல்லாய் மணிப்பருவிநாணுருமரக்ஷி அய்யா
நரசீரங் கொண்டவரராஜனே பரமஞான சம்பந்த குருவே. 7

அம்புவியிலே தனுவெடுத்துப் பிறந்தநாளன்று தொட்டின்று காறும்
ஆகாததீவினைக்காளானதன்றி யோரணுநன்மைசெய்து மறியேன்
வெம்பிமனவேதனையோடுண்டுத்துக் கவலைமேன்மேலுமதிகரிக்க
வியாதிமுதலாய பலதுன்பமுமடர்ந்தெனை வெருட்டமெலிவுற்றுடைந் (தேன்
இம்பரிற் கதியற்ற வேழையாளுயினுமிகுந்து தள்ளாதெமரொடும்
என்னையாட்கொண்டநின் பேரருளை நித்தமுமெண்ணியெண்ணித் தே (றுகேன்
நம்பியதொழும்பனென் பிழைபொறுத்துளமாயினல்லசுகவாழ்வருளு (வாய்
நரசீரங் கொண்டவரராஜனே பரமஞான சம்பந்த குருவே. 8

பாவவுணர்வாதிய குணங்களுண்டாத்துமப் பசிதாகமெத்தவுண்டு
பரிசுத்தநிலை நின்றிரக்ஷண்யமடைய வெகுபாரமாங் கவலையுண்டு

தேவபயமுண்டுனது திருவடிக்கே தொண்டுசெய்யமனமுண்டையரின்
திருவருளின் மாட்சியேயாயினு மிகந்துபலதீயநெறி செல்லவென்னை
ஏவுமொரு கேடானதத்துவமிடைக்கிடை யென்னிருதயத்தூடெழும்பி
இகலிமேலிடுமனர்த்தந்தொலைய வேழைக்கிரங்கியொருவார்த்தைதவில
நாவசையமாட்டாத காரணமென்யானுன்னைநம்பியதொழும்பனலனோ
நரசரீரங் கொண்டவரராஜனே பரமஞான சம்பந்த குருவே. 9
சாதன சதுஷ்டயமடைந்தீஷணுத்திரய சம்பந்தமொருவி ஞான
சற்குருவநுக்கிரகமாட்சியாற் ஜீவாத்மதத்ஸ்வாபமுணர்ந்து
சேதனமகதவ பரிசுத்த திரியேகத்வ தெய்வ நிர்ண்ணயமும் நீதி
திவ்யபரிபூரண இரக்கசமரசமுந் தெரிந்துதெளிவுற்று நினது
பாதநளினத்தை யிருதயமீதலர்த்திப் பராவிவருஜீவன்முக்தர்
பழுதின்றி வைதீகநெறி நின்று முடிவிலே பரசுகாநந்தமடைவர்
நாதனின்னருளினாலடியேற்கு மிந்நிலையிக்க நல்லாவிதருவாய்
நரசரீரங் கொண்டவரராஜனே பரமஞான சம்பந்த குருவே. 10

முற்றிற்று.

## யேசுநாயக ஸ்வாமி.

காசாசைகொண்டொருக் காலுன்னை யூதாசகாட்டிக்கொடுத்தனன்மு
கள்ளரிற்கள்ளனானுன்றெழும்பாயுனது கருணாமிர்தம் பருகியும் (னம்
ஆசாவசத்தனாய் நித்தமுமநேக முறையாகாமியம் புரிந்தன்
அன்புமயமான திருமேனியைச் சிலுவைமீதறைகின்ற துரோகி ஐயா
கூசாதுன்னருளைக் குறிக்கொண்டு கூவுமெக்கொடிய பாவனையும்நித்ய
கொந்தழல் சுடாதிரக்ஷிப்பதுன்னியல் பெனிற்குவலயத்திடையெனைப் (போல்
நாசாமிகப் பெரியபாவியார் புகழுனக்கெனை யிரக்ஷிப்பதன்றோ
ஏகநாயக சருவலோக நாயக கிறிஸ்தியேசுநாயக ஸ்வாமியே. 1
அன்புமயமே கருணையானந்தவாரியே அருள்பொழி மழைக்கொண்ட
ஆருயிர்க்குயிரான வமிர்தசஞ்சீவியே அடியரிதயாம்பரத்தில் (லே
இன்புறவுதித்திலகுமெய்ஞ்ஞான பானுவே ஏத்தருஞ் சகுணநிதியே
இதரசமயாதீத நிலையமேவானிழிந்திம்பர் வருஜீவநதியே
மன்பதை புரக்கநடு நின்றோங்குமக்ஷய மாமேருவேயென்று நின்
வண்புகழ் வழுத்திமெய் யன்பினொடு சிந்தைபரவசமாகி யாவியனல் (கொண்ட்
என்புருகியானந்த பாஸ்பஞ்சொரிந்து நின்றேத்தவருளிவதென்றோ
ஏகநாயக சருவலோகநாயக கிறிஸ்தியேசுநாயக ஸ்வாமியே. 2
பிறவியிற் பிடிவாத கொடியவைணவனாய்ப் பிறந்து மூப்பதுவற்சாம்
பிரபஞ்சமயல்கொண்டு மூடாந்தகாரப் பிளம்பிலடைபட்டுழன்று



மறலிவினைக்காளாகிநெறி நிலாத்துர்த்தமனவாஞ்சைக் கிடங்கொடுத்து
மருளூற்றுவறிது நாட்செலவிட்ட நீசனெனைமலரடிக் காட்படுத்திக்
குறைவிலாப் பேரருளளித்தின்றுகாறுங் குறிக்கொண்டு காத்தியெனி (னும்
கொச்சைமதியேற்கின்னு நன்றியறியாக்கெட்ட குணதோஷமொழியவி
இறைவலப்புறமிருந்தடியருக்காப் பரிந்தென்றுமன்றாடுமுகிலே (லையே
ஏகநாயக சருவலோக நாயககிறிஸ்தியேசுநாயக ஸ்வாமியே. 3
கண்ணீருகுப்பினுமானந்த பரவசங்காணினுங் கவனமொன்றிக்
கருதரிய நின்சீர்புனைந்து கவிபாடினுங் கன்மனங் கனியநாளும்
உண்ணீர்மையொடு முழங்கால்நின்றுபன் முறையுவப்பொடு ஜெபஞ் (செய்யினும்
உள்ளுருகியே பிறர்க்குன்னன் பின்மாட்சியையுரைத்துழைத்தோலமிடி (னும்
தண்ணீரைவேட்டலையுமான்போல வினுமனோசஞ்சல நிவர்த்தி நாடித்
தளருகின்றேனிதய தந்தரமலதுன்னருட்டாமத மௌனத்தருவதோ
எண்ணீர்மைகுன்றாத சித்தவிஸ்ராந்தி நிலையென்றைக்கெனக்கருள்வை (யோ
ஏகநாயக சருவலோக நாயக கிறிஸ்தியேசுநாயக ஸ்வாமியே. 4

## "கர்த்தாவை நல்ல பத்தியாலே"

### என்று துவக்கும் ஞானப்பாட்டின் சரித்திரம்.

(தொடர்ச்சி.)

லை: நாளைக்கல்ல, இப்போதே அதை வாசித்து அதனிடத்தில் செலவு பெற்றுக்கொள்ளவேணும் என்று சொல்லி, கின்னரத்தைச் சட்டென்று எடுத்து உளுக்கார்ந்து அதில் வாசிக்கத் துவக்கினார். யூதனோ மெல்லவும் மாட்டாமல் முழுங்கவும் மாட்டாமல் உளுக்கார்ந்து, வாத்தியத்தைக் கவனித்தான். அவர் அதில்: போதும், போதும். கர்த்தாவே என்னும் வார்த்தைகளோடு துவக்கும் சமது ஞானப்பாட்டின் 2-கவிகளை வாசித்துப் பாடி முடிக்குமுன் யூதன்: போதும், போதும், ஏன் இந்தப் புலம்பல் அப்பா! உமது பையில் 2½-ரூ யல்லவோ இருக்கிறது என்க,

லை: அதைக் கேளாதவர்போல் தொடுத்த பாட்டை விடாமல் பாடிக்கொண்டே போனார். சடுதியாய் வாத்தியத்தின் சுதியை மாற்றிக்கொண்டு வேறொரு இராகம் வாசித்தார். அவர் வாசித்தது கார்மேகத்தினின்று சூரிய வெளிச்சத்தில் பெருமழை சொரிந்ததுபோலிருந்தது. அவர் தொனி வரவர உச்சத்துக்கேறிற்று. அவர் முகம் ஆனந்தமாகி ஜொலித்தது.

யூ: வெகு சேர்த்தி, நிறுத்தும். உமது சாக்கிலே 2½-ரூ கிடக்கிறது என்பதையும், நீர் கெடுப்படி பதினாலு நாளைக்குள் பணஞ்செலுத்தாதேபோனால் கின்னரம் என்னுடையதாகிவிடும் என்பதையும் மறக்

தவேண்டாமென்று உரக்கச்சொல்லி, இந்த மரத்துண்டை நான் வைத்துக்கொண்டு என்னபண்ணுகிறது என்று முணங்கிக்கொண்டான்.

கைமார்க்கு: அந்த கின்னரத்தை ஒருமூலையில் சார்த்திவிட்டு கர்த்தருடைய சித்தத்தின்படி ஆகக்கடவதென்று மெதுவாய்ச் சொல்லிக்கொண்டு விசையாய் வெளிப்புறப்பட்டார். வாசற்படியில் நெடுநேரமாய் வாத்திய வாசிப்பையும் பாடலையும் கேட்டு உளுக்கார்ந்துகொண்டிருந்த ஒருவன்மேல் அவர் கால் தட்டி விழப்பார்த்தார். அந்த மனிதன் கைமார்க்கைப் பார்த்து: ஐயா மன்னியுங்கள். நீங்கள்தானா இவ்வளவுநேரம் அவ்வளவு சேர்த்தயாய் கின்னரம் வாசித்துப் பாட்டுப் பாடினவர்கள் என்றான். அவர்: ஆம் என்ச, அவன் இவர் சட்டையைப் பிடித்துக்கொண்டு: ஐயா, நான் ஒரு ஏழை மனிதன், நீங்கள் இப்போது பாடின பாட்டு என் ஆத்துமத்தைத் திருப்தியாக்கிற்று. அதின் ஒரு நகல் எனக்கு எங்கே கிடைக்கும் என்று சொல்லுவீர்களா. அதுக்குக் காசுகொடுத்து வாங்கிக்கொள்வேன். அது சரியாய் எனக்கென்றே எழுதப்பட்டதாகக் காணுது என்றான். அதற்கு கைமார்க்கு: பிரிய சிநேகிதா, நான் காசில்லாமல் சந்தோஷத்தோடு உன் விருப்பத்தை நிறைவேற்றுவேன். நீ யாரென்று எனக்குச் சொல் என்க. அவன்: ஐயா, என் பேர் யோவான் கித்திகு, நான ரோசன் கிரான்சு பிரபு என்கிற சுவேதனிய ஸ்தானாபதி வீட்டில் வேலை செய்துகொண்டிருக்கிறேன் என்றான். கைமார்க்கு: நல்லது: நாளைக்கு வா. என் பேர் கேயோர்கு கைமார்க்கு. இந்த ஊர் கோணல் தெருவில் யோவான்சன் என்ற அம்மாள் வீட்டில் என்னைப் பார்க்கலாம். சலாம் என்று சொல்லிப்போய் விட்டார். அப்படியே கித்திகு மறுகாலையில் வந்து பிரதியும் வாங்கித் திரும்பினான்.

ஒரு வாரங் கழித்து, ஒருநாள் காலையில் கித்திகு என்ற மேற்படி வேலைக்காரன் இரண்டாம் விசையாக கைமார்க்கிடம் வந்தான். கைமார்க்கு அவனோடு பட்சமாகப் பேசினபின், வேலைக்காரன்: நான் திரும்பவும் வந்தது ஒருவேளை மூடத்தனமாகத் தங்களுக்குத் தோன்றலாம். நான் இரவெல்லாம் ஒரு சங்கதியைக்குறித்துச் செபம்பண்ணினேன். தங்களுக்குச் சம்மதமானால்———என்று முடிப்பதற்குள் கைமார்க்கு: என்ன, என் ஞானப்பாட்டுக்கு இன்னம் ஒரு நகல் வேண்டுமோ. அப்படியானால் சந்தோஷத்துடன் தருகிறேன் என்க, அவன்: அல்ல, அல்ல, அது வேண்டியதில்லை. நீங்கள் கொடுத்த நகலை என் வேதபுத்தகத்தில் பத்திரமாய் வைத்திருக்கிறேன். நான் விசுவாசப் பிரமாணம், கர்த்தருடைய செபத்தைப்போல் இதையும் மனப்பாடமாக நன்றாய்ப் படித்திருப்பதால், அந்த நகல் காணமற்போனாலும் மோசமில்லை. ஆனால், நேற்று ஒரு சங்கதி நடந்தது. அதைச் சொல்லுவதால் என்மேல் ஆயாசப்பட்டுக்கொள்ள மாட்டீர்கள் என்று நினைக்கிறேன் என்க, கைமார்க்கு: மோசமில்லை. சொல் என்றார்.

கித்திகு: என் எசமானாகிய ஸ்தானாபதியாருக்கு எழுத்துவேலை பார்க்கும் ஒரு லிகிதர் இருந்தார். அவர் ஏதுகாரணத்தாலோ திடீரென்று நேற்று உத்தியோகத்துக்கு நீங்கலானார். அவர் ஏதோ மோசம் பண்ணினதால் தள்ளுபட்டாரென்று நினைக்கிறேன். நேற்றிரவு என் ஆண்டவன் பள்ளியறைக்குப் போகையில், நானும் வேலையாக அவர் பின்னே சென்றேன். அவர் என்னுடனே: எனது லிகிதர் போய்விட்டது உனக்குத் தெரியுமே. அவனைப்போல் வேலைபார்க்கக் கூடிய சமர்த்தன் எனக்கு எங்கே அகப்படுவான் என்று தெரியவில்லை என்றார். அப்போது தெய்வச்செயலாய் உங்கள் பெயர் என் ஞாபகத்தில்



வந்ததால்: ஆண்டவனே, அதற்குத் தகுந்த ஒருவனை எனக்குத் தெரியுமென்று சொன்னேன். அதற்கு அவர்: நீ என்ன சொல்லுகிறாய். உன் இஷ்டர்களில் ஒருத்தன் லிகித உத்தியோகத்துக்கு லாயக்குள்ளவனாயிருக்கிறானா என்று சிரித்துக்கொண்டு சொன்னார். அதற்கு நான்: அப்படியல்ல, மகாப் பிரபு! அவனை எனக்குத் தெரிந்திருந்தபோதிலும் அவனை எனக்குச் சமதையான இஷ்டமித்திராள் தொகையில் சேர்க்க நான் அருகனல்ல என்று பல வார்த்தைகளால் தங்களைப் பற்றிய எல்லா விஷயங்களையும் சொல்லிப்போட்டேன் என்றார்.

கைமார்க்கு: எல்லாவற்றையுமா சொல்லிப்போட்டாய்; அடுக்ஞார பூதனின் கடைவாசலில் என்னைக் கண்டனைதக் கூடவா என்றார். கித்திகு: ஆம் அதெல்லாந்தான். அதை நான் சொன்னது தப்பிதமாயிருக்குமாகில் மன்னியுங்கள், ஏனென்றால் நான் என் இருதயத்தின் பரிபூரணத்தால் பேசினேன். என் எசமான் அதனால் இடறற்படாமல் தங்கள் எழுத்தைப் பார்க்கும்படி தங்களின் ஞானப்பாட்டு நகலைக் கொண்டுவரச் சொன்னார். அவர் அதைப் பார்வையிட்டு: எழுத்து நடை செய்யுள் நடை இரண்டும் மேம்பாடுதான். அந்த வாலிபன் இப்படியே எழுதுகிறவனாயிருப்பானாகில் அவன் வேலைக்குத் தகுந்தவன் தான் என்று சொன்னதை நான் கேட்டதுமுதல் எனக்கு அமைச்சல் இல்லை. எப்போது பொழுது விடியும் என்று காத்திருந்து ஓடிவந்தேன். என் எசமானிடம் போவதற்குக் காலை நேரம் மிகவும் ஏற்றதாகையால், என் வார்த்தையைத் தட்டாமல் உடனே அவரிடம் போங்கள் என்று சொன்னான். கைமார்க்கு பதில் ஒன்றுஞ் சொல்லாமல் தமது அறையில் சற்று உலாவியபின்: ஆம், கர்த்தருடைய வழிகள் மெய்யாகவே ஆச்சரியமானவைகள். பராபரனை நம்பினவர்களுக்கு ஒரு குறைவுமில்லை என்று தாமாய்ச் சொல்லிக்கொண்டு வேலைக்காரனைப் பார்த்து: நீ எனக்குச் செய்தவைகளுக்காக கர்த்தர் உனக்குப் பலனளிப்பார். நான் உன்னோடு வருகிறேன் என்று சொல்லி அவனோடு ஸ்தானாபதி வீட்டுக்குப் போனார். அந்த ஸ்தானாபதியாகிய பிரபு அவரைப் பட்சமாக ஏற்றுக்கொண்டு: உமது செய்யுளை நான் பார்த்தமட்டில் நீர் கவிஞன் என்று காணுது. நீர் ஞானப்பாட்டுகள் மாத்திரம் செய்கிறதோ என்று கேட்டார். கை: தரித்திரரைக்குறித்து, வானராச்சியம் அவர்களுடையதாயிருக்கிறது என்று எழுதியிருக்கிறது. உலக செல்விக்கையில் கதித்த யாரும் ஞானப்பாட்டுகள் எழுதியிருப்பதாக நான் கேள்விப்பட்டதில்லை. ஏழைகளாகிய எங்களுக்குப் பாட்டுப் படித்துக்கொடுப்பது சிலுவைதான் என்றார்.

ஸ்தானாபதிப் பிரபு இதனால் கோபமடையாமல், ஆச்சரியமடைந்தவராய் கைமார்க்கைப் பார்த்து: வாலிபரே, உமது அனுபோகம் சொற்பம். எங்கள் அரசராகிய குஸ்தாவு அதொல்பு என்பவர் மகத்துவம்பொருந்திய சிம்மாசனாதிபதியாயிருந்தும், மெய்யாகவே சிறந்ததான ஒரு ஞானப்பாட்டை உண்டுபண்ணினதுமன்றி அதைத் தாமே பாடி, கின்னரத்திலும் வாசித்தார் என்பது உமக்குத் தெரிந்திருக்கட்டும். என் வேலைக்காரன் உம்மைக்குறித்து எனக்குச் சொன்னது உண்மையானால் நீர் மகா ஏழை என்று நினைக்கவேண்டியது. உம்முடைய வறுமை உம்மை எந்தக் காலத்திலாவது அவநம்பிக்கைக்குள்ளாக்கினதுண்டோ என்று கேட்க, கை: ஒருக்காலும் இல்லை என்பதற்காக பிராபரனுக்கு ஸ்தோத்திரம். அப்படி அவநம்பிக்கைப்பட கர்த்தர் இடங்கொடுத்ததில்லை. அவர் எப்போதும் என் இருதயததில் மெய்ச்சமாதானம் நிலைத்திருக்க அருள புரிந்தார். அவர், உங்களிடத்தில் எப்

போதும் தரித்திரர் இருக்கிறார்கள் என்று ஒரு சமயத்தில் சொன்னதுமன்றி, வேறொரு சமயத்தில் அவர்களைப் பாக்கியவான்கள் என்றார். அவர் எங்கள் நிமித்தமாகத் தரித்திரராகி, தரித்திரரை (அப்போஸ்தலன் சொல்லுகிறபடி) ஐசுவரியவான்களாக்க அவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கக் கட்டளைபண்ணினார். ஆகையால் ஒருவன் தரித்திரனாயிருப்பது அவ்வளவு வருத்தமல்ல என்றார். பிரபு அதைக் கேட்டு மகிழ்ந்து: ஒரு மெய்க்கிறிஸ்தவனுக்கேற்றபடியே மேன்மையான உத்தரவு சொன்னீர். இது விஷயத்தைக்குறித்து இன்னம் ஒரு சமயத்தில் பேசலாமென்று நினைக்கிறேன். நீர் நியாயசாஸ்திரம் படித்திருப்பீரென்று நம்புகிறேன். அது படித்தவர்கள் மாத்திரமே துரைத்தன தஸ்தாவேஜுகளைக் கிரமமாக வைக்கக்கூடும். நீர் அப்படிச் செய்யக்கூடியவரோ என்று கேட்க, நை: தங்களுக்குச் சித்தமானால் நான் சந்தோஷத்தோடு அப்படிச்செய்யப் பார்க்கிறேன் என்றார். அதற்குப் பிரபு: நல்லது, இந்தக் காகிதங்களை எடுத்து வாசித்துப் பாரும். அவைகள் ஆலோசனைக்காரரின் கேள்விகள் என்று எண்ணுகிறேன். இதற்கு மறுமொழி எழுதவேண்டும். ஆகையால் இந்தக் கேள்விகளுக்கு ஒரு தொகுப்பு எழுதிவாரும். நீர் இதைச் சாவகாசமாய்ச் செய்யும். அதை முடித்தவுடனே அடுத்த அறைக் கதவைத் தட்டும் என்றார்.

அன்று சாயங்காலம் நைமார்க்கு, ஸ்தானாபதி தங்கியிருந்த வீட்டைவிட்டு ஆனந்த கம்பீர முகத்தோடு புறப்படக் கர்த்தர் கிருபை செய்ததால், அவர் தாமாய்ப் பேசி: ஆம், ஆம் கர்த்தரை நல்ல பத்தியாலே எப்போதும் நம்புவது நல்லதல்லவா—என்று சொல்லிக்கொண்டு போனார். அவர் யூதன் கடைக்குள் பிரவேசித்து: என் கிண்ணாரத்தைக் கொடும். இதோ நீர் சொன்னபடிக்கு வட்டியும் முதலும்—நீர் ஆச்சரியப்படவேண்டாம். உம்மை நான் போந்தபடி அறிவேன். எனது வறுமையை உமக்கு ஆதாயவழியாக்கினீர் அல்லவா—நீர் சொன்ன 2-வாரக் கெடுவுக்குமேல் ஒருமணி நேரம் ஆனால் போதுமே; என் பத்து நூ கிண்ணாரத்தைப் பயமின்றி அபகரிப்பீரோ. ஆயினும், நீர் சமயத்துக்கு உதவினீரே; அதற்காக வந்தனம். நீர் அந்த உதவிசெய்திராதேபோனால் நான் அனாக்காசுமற்ற அகதியாய் ஆம்பூர்கை விட்டுப் புறப்பட நேரிட்டிருக்கும். இந்த உதவியையும் நீர் சுயமாய்ச் செய்ததாக எனக்குத் தோன்றுகிறதில்லை. கர்த்தருடைய கரமே இதற்கெல்லாம் காரணம். ஒரு கிறிஸ்தவன் தன் சகோதரருக்கு உதவிபுரிந்து அடையும் ஆனந்தம் இன்னதென்று எள்ளளவும் உமக்குத் தெரியாதல்லவா. இதோ இன்னம் கால்ரூபாய் தருகிறேன். வல்லவரின்மேல் நம்பிக்கை வைத்தோன் கல்மலையில் வீடுகட்டினான் என்பதை மாத்திரம் கவனத்தில் வையும் என்று சொல்லி வீரதீரமாய்க் கிண்ணாரத்தைத் தூக்கிக்கொண்டு விரைவாய் வீடுபோய்ச் சேர்ந்தார். தமது அறைவீட்டில் நுழைந்ததும், ஒரு பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு இனிய இராகங்களை முழக்கினார். அந்த வீட்டுக்குச் சொந்தக்கார அம்மாள் ஆனந்த கீதங்களைக் கேட்ட மாத்திரத்தில் விரைந்து ஓடிவந்து அவரைக் கேட்ட கேள்விகள் கொஞ்சமல்ல. இவர் ஒன்றும் உத்தரம் சொல்லாமல் ஆனந்த கீதத்தில் அமிழ்ந்திவிட்டார். அதைப் பார்த்த அந்த அம்மாள், இது வானமோ பூமியோ என்றறியாதவள்போல் மலைத்து நின்றாள். நைமார்க்கு தமது வாத்திய வாசிப்பை முடித்தபின்: அம்மா நீரா இங்கே நிற்கிறீர். நல்லதுதான். நீர் தயவுசெய்து எத்தனைபேரை இங்கே அழைத்து வரக்கூடுமோ அத்தனை பேரையும் கொண்டுவாரும். அப்போது நீங்கள் இதுவரையில் கேட்டிராத ஒரு பாட்டைப் பாடு



வேன். ஏனெனில் இந்த ஆம்பூர்கு நகரத்தில் என்னிலும் பாக்கியசாலியில்லை. அம்மா சீக்கிரம்போய் நமது வீட்டில் ஒரு சிறு சபையைக் கூட்டும். அப்போது நான் எனது கிண்ணாரத்தைக்குறித்து ஒரு பிரசங்கம் செய்வேன் என்றார். அப்படியே சற்று நேரத்துக்குள் அறை நிறைந்துபோயிற்று. நைமார்க்கு: கிண்ணாரத்தை நன்றாய் மீட்டினபின் அதை வாசித்துக்கொண்டு தெளிவான சப்தமாய்ப் பாடினதென்னவெனில்:

௧. கர்த்தரை நல்ல பக்தியாலே
எப்போதும் நம்பும் நீதிமான்
எத்தீங்கிலேயும் அவராலே
அன்பாய்க் காப்பாற்றப்படுவான்,
உன்னதமான கர்த்தரை
சார்ந்தோருக்கவர் கன்மலை.

௨. அழுத்துங் கவலைகளாலே
பலன் ஏதாகிலும் உண்டோ,
நாம் நித்தம் சஞ்சலத்தினாலே
தவிப்பது உதவுமோ;
விசாரத்தாலே நமக்கு
இக்கட்டதிகரிக்குது.

௩. உன் காரியத்தை நலமாக
திருப்ப வல்லவருக்கு
நீ அதை ஒப்புவிப்பாயாக,
விசாரிப்பார், அமர்ந்திரு;
மாதிட்டமாய்த் தயாபரர்
உன் தாழ்ச்சியை அறிந்தவர்.

௪. சந்தோஷிப்பிக்கிறதற்கான
நாள் ஏதென்றவர் அறிவார்,
அநேக நற்குணங்கள் காண
அந்தந்த வேளை தண்டிப்பார்;
அசுப்பிலே திரும்பவும்
தெய்வன்பு பூரிப்பைத் தரும்.

இதைப் பாடும்போதே கை நடுங்க கண்ணீரோடே அவர் பேசாது அமர்ந்திருந்தார். இந்த அமைச்சலும் எழுப்புதலை உண்டாக்கிற்று. யாவரும் வீட்டுக்கார அம்மாளும் கண்ணீர் சொரிந்தார்கள். அந்த அம்மாள் பொறுத்திருக்கக் கூடாமல்: என் அருமைத் துரையே, இப்போது நான் என் எல்லாக் கவலைகளையும் மறந்து, என் பரமபிதாவையும் அருமை இரட்சகரையும் விலையேறப்பெற்ற சிலுவையையும் நினைத்துக்கொண்டு தேவாலயத்தில் உட்கார்ந்துகொண்டிருப்பதுபோலிருக்கிறது. இப்படியாவதற்குக் காரணமென்ன, காலமே சஞ்சலப்பட்டு எழுந்தீரே. இப்போதே கெம்பீரக் கீதம் தொனிக்குதே. கர்த்தர் உமக்குச் சகாயம்செய்தாரோ என்க, அவர்: ஆம், ஆம். தயவும் கிருபையுமுள்ள என் பராபரனும் பிதாவுமானவர் சகாயம்செய்தார். என் தரித்திரம் தூரத்துண்டது. இல்லாமை சொல்லாமல் சென்றுவிட்டது. நான் இப்போது ஆம்புர்கு நகரம் வந்திருக்கும் சுவேதன் இராஜ்ஜிய ஸ்தானாபதியின் லிகிதர். சம்பளம் வருஷவாரி இருநூறு ரூ. நான் என் கிண்ணாரத்தை மீட்டுக்கொள்ள ஐம்பது ரூ முன் பணம் கிடைத்ததால் என் சந்தோஷம் இரட்டிப்பாயிற்று. கர்த்தர் ஆச்சரியமுள்ள

கருணை மிகுந்த தேவனல்லவா, ஆம் ஆம், என் பிரிய சனமே, ஒன்று நிச்சயம்.

உன்னதமான கர்த்தரை
சார்ந்தோருக்கவர் கன்மலை என்றார்.

யோவான்சன் அம்மாள்: இந்த சிறந்த பாட்டு உங்களுக்கு எங்கே கிடைத்தது. எனக்குப் பிரார்த்தனை புஸ்தகம் முழுவதும் தெரியும். அதில் இதில்லையே, ஒருவேளை நீங்கள் தான் உண்டாக்கினீர்களோ என்க, அவர்: நானு, ஆம் நான்தான். சரியாய்ச் சொன்னால் நான் வாத்தியம்; பராபரன் வாத்தியக்காரர். உன்னதமான கர்த்தரைச் சார்ந்தோருக்கவர் கன்மலை என்கிற வார்த்தைகள் வெகுநாளாக என் இருதயத்தில் கிடந்தது. அதைப்பற்றி நான் தியானிக்க தியானிக்க இந்தப் பிரார்த்தனை உண்டாயிற்று. எப்படியென்று எனக்குத் தெரியவில்லை. நான் சந்தோஷத்தினால் பாடி, செபிக்கத் துவக்கினேன். என் ஆத்துமா கர்த்தரை ஸ்தோத்திரிக்க ஊற்றிலிருந்து சலம் புறப்படுவதுபோல வார்த்தைகள் ஓடிவந்தன. அது போதும். இன்னமும் கேளுங்கள் என்று சொல்லி,

௫. நீ கர்த்தரால் கைவிடப்பட்டோன்
என்றுபத்தில் நினையாதே,
எப்போதும் பாடும் நோவு மற்றோன்
பிரியனென்றும் எண்ணாதே.
அநேக காரியத்துக்கு
பின் மாறுதல் உண்டாகுது.
கதியுள்ளோனை ஏழையாக்கி
மகா எளியவனையோ
திரவிய சம்பன்னனாக்கி
உயர்த்த சுவாமிக்கரிதோ;
தாழ்வாக்குவார், உயர்த்துவார்.
அடிக்கிறார், அணைக்கிறார்.
மன்றாடி, பாடி கிறிஸ்தோனாக
நடந்து கொண்டுன் வேலையை
நீ உண்மையோடே செய்வாயாக,
அப்போ தெய்வாசீர்வாதத்தை
திரும்பக் காண்பாய், நீதிமான்
கர்த்தாவால் கைவிடப்படான்.

என்று பாடி முடிந்தவுடனே அவர் அதற்குமேல் வாசிக்கக்கூடாமல் கின்னரத்தை ஒரு மூலையில் வைத்தார். கூடிவந்த சபையார் ஒருவர் பின்னொருவராய்ப் போய்விட்டார்கள்.

இது நமது ஞானப்பாட்டுப் புஸ்தகத்திலுள்ள மிகவும் சிறந்த பாட்டுகளிலொன்றின் சரித்திரம். இதில், ஆறுதலற்றுச் சஞ்சலத்தில் மூழ்கியிருக்கும் ஆத்துமாக்களுக்கு ஏற்ற அரும் பிரசங்கம் அடங்கியிருக்கிறது. இதை உண்டுபண்ணின நைமார்க்கு இரண்டு வருஷத்துக்குப்பின் வைமார் நகரத்தின் புஸ்தகசாலைத் தலைவர் என்ற உயர்ந்த உத்தியோகம் பெற்று, தமது ௬௧-ம் வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அவர் உண்டுபண்ணின பாடல்களில் மேற்படி பாட்டே அதிமுக்கியமானது.

(தாங்கன்-மிசி-அல்மனாக்கு.)



# சமாசாரத்திரட்டு.

**இங்கிலந்து.**—இந்திய சக்கரவர்த்தினியாகிய விக்றோரியா ராணியவர்களின் ஜென்மதினோற்சவம் சென்ற மேமீ 24உ கொண்டாடப்பட்டது. மகா ராணியவர்களின் வயசு 61. நார்தாம்பற்றன் நகரத்துக்கு பிரதிநிதியாக பார்லமெந்து மகா சங்கத்துக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட பிராட்லா துரை என்னும் நிரீச்சுரவாதி ஒருவர், முறைப்படி, தேவசாட்சியாகப் பிரமாணஞ்செய்யச் சம்மதியாததினால், அவருக்கு அச்சபையில் இடமில்லையென்று விலக்கினார்கள். சத்தியத்துக்குப் பதிலாக பயபத்தியான வாக்குறுதி ஒப்புக்கொள்ளப்படலாமென்று ஒரு புதிய சட்டம் ஏற்பாடானதின்பின்பு அவரும் பார்லமெந்தில் இடம்பெற்றுக்கொண்டார். இதையிட்டு இங்கிலாந்தில் அநேக வாதானுவாதங்களுண்டாயின. மதுபான வகைகளின் விற்பனையைத் தடுக்கிறதான சட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டு ஜனப்பிரதிநிதிகளின் சபையில் அங்கீகரிக்கப்பட்டது. அந்தச் சட்டத்தின்படி எந்த இடத்தில் நகரவாசிகளின் பொதுவான சம்மதமில்லையோ அந்த இடத்தில் மதுபான வியாபாரம் செய்யக்கூடாதென்று தடுத்துப்போடலாம். இந்தியாவிலும் இப்படிப்பட்ட சட்டம் ஏற்படுமானால் நலம் என்று சொல்லவும் வேண்டுமா!

**ருஷியா.**—ருஷியச் சக்கரவர்த்தியின் பத்தினியார், நெடுநாள் காசரோகத்தால், காலஞ் சென்றுபோனார். இதினால் சக்கரவர்த்தி விசனமுடையவராயும் துணையிழந்தவராயுமிருக்கிறார்.

**இந்தியா.**—பழைய கவர்ணர் ஜெனரலாகிய லார்ட் லிற்றன் பிரபு அவர்கள் சென்றமீ 3உ பம்பாய் மார்க்கமாக இங்கிலந்துக்குப் பிரயாணமானார்கள். அடுத்த வருஷம் இந்தியாமுழுவதிலும் குடிமதிப்புச் செய்யவேண்டுமென்று இந்திய துரைத்தனத்தாரவர்கள் உத்தரவு செய்திருக்கிறதினால் அதற்கு வேண்டும் பிரயத்தனங்கள் நடக்கிறது. திருவாங்கூரின் பழைய மகாராஜா சென்ற மேமாசத்தில் காலஞ் சென்று போனதினால், அவர் சகோதரராகிய இளவரசரை மகா ராஜாவாக சென்ற ஜூன்மீ 17உயில் மிகுந்த ஆடம்பரத்துடன் பட்டாபிஷேகம் செய்தார்கள். புதியவரசர் கல்வி, கேள்வி முதலியவற்றில் மிகவும் தேர்ந்தவரென்று லோகப்பிரசித்தமாகையால் அவர் ஆளுகையில் ஜனங்களுக்கு அநுகூலமான அநேக நல்ல ஏற்பாடுகள் உண்டாகுமென்று யாவரும் ஆவலாய் எதிர்பார்க்கிறார்கள்.

**ஆப்கானிஸ்தான்.**—ஆப்கான் யுத்தம் சீக்கிரம் முடிவு பெறுமென்றும், அப்துல்ரயிமான் என்பவரை ஜனங்கள் தங்கள் அமீராக ஏற்றுக்கொள்வார்களென்றும் உத்தேசிக்கப்படுகிறது. அத் தேசத்தில் அங்கங்கே வைக்கப்பட்டிருக்கிற பிரிட்டிஷ் தளங்கள் அவ்விடம்விட்டு புறப்பட்டுவந்துவிடும்படிக்கான எத்தனங்கள் நடக்கிறது. சீமைத் துரைத்தனத்தார் ஆப்கான் யுத்தச்செலவில் ஓர்பாகத்தைச் செலுத்துவார்களாம்.

ஆகஸ்துமீ நாள் 31-ஆடிமீ 19உ-முதல், ஆவணிமீ 18உ-வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| ஞா | 1 | ௧௯ | நான் உம்முடையவன் என்னை இரட்சியும். சங். 119: 94. |
| தி | 2 | ௨௰ | கர்த்தாவே உமது கிருபையை எங்களுக்கு காண்பியும். சங். 85:7 |
| செ | 3 | ௨௧ | ஆவியின் சிந்தை சீவனும் சமாதானமுமாம். ரோ. 8: 6. |
| பு | 4 | ௨௨ | தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர். யோபு 42: 2. |
| வி | 5 | ௨௩ | தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்யக்கூடாது. |
| வெ | 6 | ௨௪ | பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். லூக். 12:15 |
| ச | 7 | ௨௫ | உம்முடைய கோபத்திலே என்னைக் கடிந்துகொள்ளாதேயும். |
| ஞா | 8 | ௨௬ | உமது வாக்கை என் இருதயத்தில் வைத்தேன். சங். 119: 11. |
| தி | 9 | ௨௭ | அவர் ஒருவருக்கே ஆராதனைசெய்வாயாக. லூக். 4: 8. |
| செ | 10 | ௨௮ | உம்முடைய வசனம் என் காலுக்குத் தீபம். சங். 119:105. |
| பு | 11 | ௨௯ | ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு. சங். 50:15. |
| வி | 12 | ௩௰ | எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளது. எரே. 17: 9. |
| வெ | 13 | ௩௧ | இருதயத்தில சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் மத். 5:8. |
| ச | 14 | ௩௨ | ஒரு அநியாயமும் என்னை ஆளவொட்டாதேயும். சங். 119:133. |
| ஞா | 15 | ௧ | கர்த்தாகிய நானே இருதயத்தை ஆராய்கிறவனாயிருக்கிறேன். |
| தி | 16 | ௨ | கர்த்தாவே உம்முடைய கிரியையை உயிர்ப்பியும். ஆப. 3: 2. |
| செ | 17 | ௩ | தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள் |
| பு | 18 | ௪ | நீதியின் கிரியை சமாதானம். ஏசா. 32: 17. (எபே. 4: 30. |
| வி | 19 | ௫ | தேவபக்தியானது பிரயோஜனமுள்ளது. 1 தீமோ. 4: 8. |
| வெ | 20 | ௬ | எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தை. ஏசா. 64: 6. |
| ச | 21 | ௭ | தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிறகாலம் இனி வருகிறது |
| ஞா | 22 | ௮ | என்னைக் கொன்றாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன். |
| தி | 23 | ௯ | இலக்கைநோக்கித் தொடருகிறேன். பிலி. 3: 14. (யோபு 13:15. |
| செ | 24 | ௧௰ | தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம். மத். 5:39. |
| பு | 25 | ௧௧ | என்னோடே இராதவன் விரோதியாயிருக்கிறான். மத். 12. 30. |
| வி | 26 | ௧௨ | நீதிமான் மரிப்பதுபோல நான் மரிப்பேனாக. எண். 23: 10. |
| வெ | 27 | ௧௩ | விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும். மாற். 9: 23. |
| ச | 28 | ௧௪ | எனக்கு தேவனை அண்டிக்கொண்டிருப்பதே நலம். சங். 73: 28. |
| ஞா | 29 | ௧௫ | தீமைசெய்தலைவிட்டு ஓயுங்கள். ஏசா. 1:16. |
| தி | 30 | ௧௬ | என்னுடைய வீடு ஜெபவீடாயிருக்கிறது. லூக். 19: 46. |
| செ | 31 | ௧௭ | யாரைச் சேவிப்பீர்களென்று இன்று தெரிந்துகொள்ளுங்கள். |

## விசேஷ நாட்கள்.

1. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 10-ம் ஞாயிறு.
6. அமாவாசை.
8. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 11-ம் ஞாயிறு.
15. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 12-ம் ஞாயிறு.
20. பௌரணமி.
22. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 13-ம் ஞாயிறு.
24. பரி. பர்த்தொலொமேயுவின் திருநாள்.
29. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 14-ம் ஞாயிறு.

# நற்போதகம்.

௯. செப்தெம்பர்மீ. ௲௮௱௮௰ வரு.

## உபாகமம்.

### 32. அதிகாரம்.

மோசேயின் பாட்டு (1—43.) மோசேயால் எழுதப்பட்டது.

1—3. முகவுரை. 43-முடிவுரை. மற்ற வாக்கியங்களை மூன்று பிரிவாகச் சொல்லுகிறார்.

I. 4—18. தேவனுடைய உண்மையும் இஸ்ரவேலருடைய உண்மைத் தாழ்வும்.

II. 19—33. தேவன் இஸ்ரவேலரைத் தண்டித்ததும் அதனால் உண்டான சிறுமையும்.

III. 34—42. தேவன் தமது ஜனங்களின் தாழ்வான ஸ்திதியைப் பார்த்து இரங்குவது.

1. "வானங்களே கேளுங்கள்." 4: 26. 30: 19. 31: 28, 29. ஏசா. 1: 2. எரே. 2: 12. 22: 29. பின்பு பேசப்போகிறவைகளின் முக்கியத்தையும் அருமையையும் உணர்த்தும்படி.

4—14. பாட்டின் முக்கிய பாகம் அடங்கியது. தேவனுடைய உண்மையையும் இஸ்ரவேலருடைய இரண்டகத்தையும் ஒப்பிட்டுப் பேசுகிறார்:

4. "அவர் கன்மலை." 15, 18, 31, 37. தேவ மகத்துவத்தை வற்புறுத்திக் காட்டுகிறார்.

6. "ஆட்கொண்ட" விலைக்கு வாங்கின என்றர்த்தம்.

7. "நாட்கள்" இந்த வாக்கியத்திலும் சங்கீ. 90: 15-லும் வருஷங்கள் என்றர்த்தம்.

8. தேவனுடைய ஆளுகையின்படி அந்தந்த ஜாதியாருக்கு தேசங்களைப் பங்கிட்டபோது, இஸ்ரவேலரைக் குறித்து விசேஷித்த ஞாபகமிருந்ததாம்.

10. "ஊளையிடுதல்" மிருகங்கள் ஊளையிட்டுத் திரிகிற.,

"பாழான" ஆதி. 1: 2-ல் "வெறுமை" என்றிருக்கிற வார்த்தை இந்த வார்த்தைதான்.

"கண்மணி" சங். 17: 8. நீதி. 7: 2.

11. தேவன் இஸரவேலரை நடத்தின வகையை விளக்கும்படி ஒரு சிறந்த உபமானத்தைச் சொல்லுகிறார். கழுகு தன் குஞ்சுகளை விந்தையாய்ப் பறக்காட்டும் விதத்தைச் சொல்லுகிறார். கழுகு குஞ்சுகளைப் பறக்காட்டும்பொழுது, ஒரு கழுகு, குஞ்சியிருக்கிற கூட்டைக் கலைத்துவிடும். இன்னொரு கழுகு குஞ்சுகள்மேல் வெகு விழிப்பாய் அசைவாடிக்கொண்டிருக்கும். கூட்டைக் கலைத்தவுடனே குஞ்சுகள் தத்தித்தத்திக் கீழேவிழும். அப்போ கழுகுகள் மின் வேகமாய் விலாப்பாய்ச்சலில் வந்து, குஞ்சிகள் கீழே விழாதபடி செட்டைகளை விரித்துத் தாங்கி அதி உயரமான தன் பழய கூட்டில் கொண்டு போய்ச்சேர்க்கும். இந்தப்படியே செய்து பறக்காட்டப் படிப்பிக்கும். தேவன் தமது பிள்ளைகளை துன்பத்தினாலே சிட்சிக்கும்போது அவர்களை அழித்துப்போடவேண்டுமென்பது அவருடைய நோக்கமல்ல, அவர்களை மேலான இடத்துக்குப் பக்குவப்படுத்தும்படிக்கே அப்படிச் செய்கிறார்.

13. பாழான இடத்தை அல்ல. (31.) மன்னர்கள் அதிகாரம் செலுத்திவந்த உயர்ந்த ஸ்தானங்களைக் கொடுத்தார்.

"கற்பாறையிலிருந்து வடியும் எண்ணெய்." ஒலிவ எண்ணெயாம். ஒலிவமாம் கற்பாறையான இடத்தில்தான் நன்றாய் செழிக்கும்.

15. "யெஷூரன்" இந்த வார்த்தை. 33: 5, 26-லும் ஏசா. 44: 2-லும் மட்டும் வருகிறது. இந்த வார்த்தைக்கு உத்தமன், நீதிமான் என்றர்த்தம். இஸரவேலர் உத்தமராயிருக்கும்படி அழைக்கப்பட்டதினாலே இந்தப் பேரைச் சொல்லுகிறார். எண். 23: 21. மற்றப்படி இஸரவேலர் நீதிமான்களாய் நடந்தார்கள் என்று அவர்கள் குணத்தைக் காட்ட நோக்கமாய் மோசே இந்தப் பேரைச் சொல்லவில்லை. அசேத்தாற்போல் இஸரவேலருடைய இரண்டகத்தைச் சொல்லப் போகிறார். அதற்காக இப்படிப்பட்ட பேரை மூந்திச் சொல்லது, அவர்களுக்கு உறைக்கும்படிக் கூர்மையாய்க் கடிந்துகொள்ளுகிறதாயிருக்கிறது.

17. "பயப்படாதவைகள்." 13: 7. 29: 25.

19—33. தேவன் இஸரவேலரைத் தள்ளிப்போடும்படி தீர்ந்த தீர்ப்பு. அதின் பயங்கர நிறைவேறுதல். அதற்கடுத்த முகாந்தரங்கள் சொல்லப்பட்டது.

21. "மதிக்கப்படாத...மதிகெட்ட". யூதர் புறச்சாதியாரை இப்படிச் சொல்லுவார்கள். யூதருடைய லாக்கியத்தைப் பிடுங்கி தேவன்



புறச்சாதியாருக்குக் கொடுத்தார். ரோமர். 10: அதி. ஓசி. 1: 10. இந்த இரகசியம் இன்னம் பூரண நிறைவேறுதல் அடையவில்லை.

22. எரே. 15: 11. 17: 4. புல. 4: 11.

24 [illegible]. 26: 22. எஸே. 15: 2. எசே. 5: 17. 14: 21.

27. சத்துருக்கள் இஸரவேலரை நசுக்கும்போது தங்கள் சாமர்த்தியத்தினாலே அப்படிச் செய்ததாக நினைத்தார்கள். தேவன் இஸ்ரவேலரைக் கைவிட்டதினாலே தங்களுக்கு ஜெயம் கிடைத்ததென்று நினைக்கவில்லை. அதற்காக இஸரவேலரை ஒடுக்கின சத்துருக்களை தேவன் சிக்ஷித்தார்.

32. இஸரவேலருடைய தன்மை குறைவுகளைக் காட்ட ஒரு உபமானம் சொல்லுகிறார்.

44—52. உபாகமத்திற்கு முடிவுரை எழுதினவன் இந்த வாக்கியங்களை யெழுதியிருக்கவேண்டும்.

52. ஸெ. 11: 13.

49. "அபாரீம்" என்ற வார்த்தைக்கு கரைச்சுற்று நாடுகள் என்றர்த்தம். ஆனால் எரிகோவுக்கு நேர் பதிவாயிருக்கிற மலைகளுக்கு இந்தப்பேர் விசேஷித்த வகையாய் வழங்கியது. பொதுவாகச் சொன்னால், யோர்தானுக்குக் கிழக்கேயுள்ள மேடான தேசங்களை யெல்லாம் குறிக்கும். எரே. 22: 20.

"பிஸ்கா" என்ற வார்த்தைக்கு உச்சிப் பரும்பு என்றர்த்தம். அபாரீம் மலைகளின் ஒரு உயர்ந்த உச்சிக்கு பிஸ்கா என்று பேர் இது எஷ்போனுக்கு மேற்கேயிருக்கிறது. இந்த உச்சி அல்லது கொடிமுடியின் மேல் சரிவில் நேபோ என்ற பேருள்ள ஒரு பட்டணமுண்டு. 32: 3, 38. நேபோ என்று பேருள்ள ஒரு பட்டணம் அழிந்து கிடக்கிறதை நாளதிலும் பிரயாணிகள் கண்டிருக்கிறார்கள். ஒரு வேளை இந்தப் பட்டணம் அதாயிருக்கலாம். இப்பட்டணத்தின் பேராலே, பிஸ்காவுக்கு நேபோமலை எனவும் பேர் வந்தது. இந்தப் பிஸ்காவின் சிகரத்திலேறி இஸ்ரவேலர், சவக்கடலின் பக்கமான பாழ்வனங்களையும் யோர்தானின் பள்ளத்தாக்கையும் பார்த்தார்கள். மோசே மரிக்குமுன் இவ்விடத்திலிருந்துதான் வாக்குத்தத்த தேசத்தைப் பார்த்தான். இவ்விடத்தின் முக்கியத்தையிட்டு கிறிஸ்தவர்கள் இதை நேபோமலை என்று அடிக்கடி சொல்லுவார்கள்.

## 33. அதிகாரம்.

---

மோசேயின் ஆசீர்வாதம்.

i. முகவுரை 1—5.

ii. கோத்திரங்களுக்கு தனித்தனியே சொன்ன ஆசீர்வாதம். 6—25.

iii. முடிவுரை. 26—29.

இந்த ஆசீர்வாதம் மோசேயால் சொல்லப்பட்டது. இவனுடைய பாட்டைக் கேட்ட சனங்களுக்கு அந்த ஒரே நாளிலேயே இந்த ஆசீர்வாதமும் சொல்லப்பட்டது. 32: 48-ன்படி மோசே தன் மரணத்தைக் குறித்த கடைசி உத்தரவைப் பெற்ற உடனேயும், நேபோ மலையில் ஏறுகிறதற்குச் சற்று முன்னதாகவும் இப்படி ஆசீர்வதித்தான்.

ஆதி. 49-அதி. வாசி. யாக்கோபு சொல்லிய ஆசீர்வாதத்தோடு இதை ஒத்துப்பார்த்தால் மோசே ஒருவகையில், யாக்கோபு முன்னறிவித்தவைகளையே திரும்பச் சொல்லுகிறார். இன்னொரு வகையில் அவர் சொல்லியதை விரித்துக் கூட்டியும் சொல்லுகிறார். சில விஷயங்களில் அதைக்குறைப்படுத்தியும் ரத்துச்செய்தும் போடுகிறார்.

"தேவனுடைய மனுஷன்" யோசு. 14: 6. 1 சா. 9: 6. 1 இரா. 12: 22. தேவனிடத்திலிருந்து சேதியை வெளிப்படுத்தல் அடைந்தவனுக்கு பழய ஏற்பாட்டில் இந்தப் பேர் வழங்கியது. இந்தப் பேர் பெற்றவனெல்லாம் அவசியமாய் தீர்க்கதரிசியாயிருக்கவேண்டிய நிமித்தமில்லை. இந்த வார்த்தை இந்த இடத்தில் வருகிற சம்பந்தமென்னவென்றால், மோசேயின் பாட்டை மோசே தானே எழுதினவைத்ததுபோல், மோசேயின் ஆசீர்வாதத்தை எழுதினவையாவிட்டாலும் அது திவ்ய அதிகாரமுள்ளதென்பதற்குச் சந்தேகமில்லை என்று காட்டவே.

மோசே இந்த ஆசீர்வாதத்தைச் சொல்லும்போது யோசுவாவும் கூடவே இருந்தான். 31: 14. மோசே அடைந்த தீர்க்கதரிசன ஆவியில் அவனும் வரமடைந்தான்.

2. "சேயீர்." ஏதோமியருடைய மலைத்தேசத்தைக் குறிக்கும்.

"பாரான்மலை." எண். 10: 12. சீனாய்வனாந்தரத்தின் வடஎல்லையிலிருக்கிற மலைத்தொடருக்குப் பேர். இப்படியாக தேவன் இத்தனை விஸ்தாரமான இடத்தில் பிரசன்னமானார் என்று சொல்லுகிறார்.

"பரிசுத்தவான்கள்." பரிசுத்த தூதர்களைக் குறிக்கும். சகரி.





3. "சனங்களை" அதாவது 12-கோத்திரத்தாரைக் குறிக்கிறார்.

"பரிசுத்தவான்கள்." தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஷ 12-கோத்திரத்தாரைக் குறிக்கும். 7: 18, 21. எண். 19: 6: தானி. 7: 18, 21.

"அவர்கள்...உம்முடைய" திருவென்று படர்க்கையிடத்தை முன்னிலையிடமாய்ப் பேசுவது எபிரேயச் செய்யுளுக்கு வழங்கினதே. 32: 15. சங்கீ. 49: 15—19.

4. மோசே தான் சொன்ன ஆசீர்வாதத்தை எழுதாவிட்டாலும், தேவாவியினால் ஏவப்பட்டுப் பேசினானே. ஆகையால் தன்னையும் மற்ற இஸ்ரவேலரில் ஒருவனாய்ப் பாவித்து "நமக்கு" என்கிறான்.

5. "இராசாவாயிருந்தார்." கர்த்தரைக் குறிக்கும். மோசேயைக் குறிக்கமாட்டாது. மோசே ஒருக்காலும் இராசா என்று சொல்லப்பட்டிருப்பதில்லை.

6. "ரூபன்" இவன் சனம் கொஞ்சமாயிராமல் பெருகிப்போம் என்று முன்னறிவிக்கிறார். ஆதி. 49-ல் சொல்லியதை ஒத்துப்பார்த்து இப்படிச் சொல்லுகிறார். என்றாலும் இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்டதுமுதல் இவர்கள் தொகை குறைந்துவந்ததென்று காண்கிறோம். (எண். 1: 21ஐ 26: 7 றும் பார்.) பிற்பாடு ரூபன், காத், பாதி மனாசே இந்த 3-கோத்திரங்களையும் சேர்த்துத் தொகை எடுத்தபோதும், எண். 1-ல் சொல்லிய குடிமதிப்பின்படி. இந்த 3-கோத்திரங்களின் மொத்தத் தொகையெல்லாம் கூடி, ரூபன் கோத்திரத் தொகைக்குக் கூடச் சரிவரவில்லை. 1 நாளா. 5: 18. ரூபனர் யோர்தானுக்குக் கிழக்கே பங்குபெற்றார்கள். இவர்களுக்குத் திட்டமான எல்லை குறிக்கப்படாமல் ஐபிராத்து நதிவரையும் போக இடங்கொடுக்கப்பட்டிருந்தது. இவர்களுடைய ஆடுமாடுகளின் மேய்ச்சலுக்கேற்ற நல்ல இடங்களிருந்தது. என்றாலும் யோசுவாவுக்குப்பின் இவர்கள் தங்கள் ஆதி தைரியத்தை விட்டு விட்டதாகக் காணப்படுகிறது. யாபீனைச் செயிக்கும்போது இவர்கள் முன்னுக்கு வரவில்லை. நியா. 5: 15, 16. இவர்கள் தங்கள் ஆடுமாடுகளுக்கு வசதியான இடம் தேடுவதில் ஐபிராத்வரையும் போய் சண்டைசெய்து தங்கள் பலத்தையெல்லாம் செலவழித்துப்போட்டார்கள். 1 நாளா. 5: 9, 10, 18. சீகோன் ஓகு என்ற இராசாக்களின்மேல் ஜெயங்கொண்டபின் அவர்களிடத்திலிருந்து பிடிக்கின நாடுகளைக் காப்பாற்றி, மேலும் மேலும் ஜெயிக்கவேணுமென்று பிரயாசப்பட்டதாய்த் தோன்றவில்லை. எண். 32: யாதாமொரு நியாயாதிபதி, தீர்க்கதரிசி, அல்லது வீரன் இந்தக் கோத்திரத்திலிருந்து எழும்பவில்லை. இப்போ கொஞ்சக்காலத்துக்குமுன் மோவாபியரைச் சேர்ந்த கற்கள் கண்டெடுக்கப்பட்டது. அவற்றினால் விளங்குகிறபடி, யோசுவா ரூபேனியருக்குக் கொடுத்த பட்டணங்கள் ஒரு பாகமாயாவது முழுவதுமா

யாவது மோவாபியராலே நீங்கப்பட்டுப்போயிருக்கவேணுமென்று தெரியவருகிறது ரூபேனர் வரவர மோவாபியரோடு சம்பந்தம் கலந்துபோனார்களென்றும் நாம் நினைக்கவேண்டியதிருக்கிறது.

சிமியோன் கோத்திரம் பிறப்பு வரிசையின்படி இரண்டாவது வரவேண்டும். [illegible] பொதுவாய்ச் சொல்லப்பட்ட ஆசீர்வாத[illegible] சார்ந்திருக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை. [illegible] 1-ம் 26-ம் [illegible] இந்தக் கோத்திரப் பேர் சொல்லப்படவில்லை. இந்த முகாந்தரமாவது: யாக்கோபு முன்னறிவித்தபடி இவர்கள் இஸ்ரவேலிலே சிதறடிக்கப்பட்டார்கள். ஆதி. 49: 7-வியா. வாசி. யாக்கோபு சொல்லிய குற்றங்களல்லாமலும் இவர்கள் வேறே குற்றந்துக்குள்ளானார்கள். எண். 25: [illegible] எகிப்தை விட்டுப் புறப்பட்டபோது இவர்கள் மிக ஏராளமாயிருந்தாலும், மோசேயின் மரணத்துக்குள்ளாக அதிகமாய்க் குறைந்துபோனார்கள். (எண். 1: 22, 23 ஐ 26: 12—14 ஓடு பார்.) கடைசியாக யூதாக்கோத்திர எல்லைக்குள் ஒரு கோணத்தில் இடம் கிடைத்தது. யோசு. 19: 2—9. இவர்கள் யூதாக்கோத்திரத்தாரோடு சேர்ந்து சில ஜெயங்களை அடைந்ததாக வாசிக்கிறோம். (நியா. 1: 17.) 1 இரா. 12: 23-ல் "மற்ற சனங்கள்" என்பது இவர்கள்தானென்று தோன்றும். பிற்கால சரித்திரத்தில் தலங்குறிப்படி இவர்கள் தென் திசைகளில் சில ஜெயங்களை அடைந்தார்கள். 1 நாளா. 4: 21. 39—43.

7. "யூதாவைக்குறித்து." இவன் யுத்தங்களில் ஜெயகெம்பீரனாய்த் திரும்புவானென்று யாக்கோபு முன்னறிவித்தான். ஆதி. 49: 8, 9. இதை மோசே இப்பொழுது முன்னுக்கு வைத்துக்கொண்டு, மற்றக் கோத்திரங்களுக்குத் தலைமையாக நின்று யூதா யுத்தத்துக்குப் போகும்போது, சுகத்தோடும் ஜெயத்தோடும் "தன் சனத்தோடு திரும்பச் சேரப்பண்ணும்" என்று ஜெபிக்கிறார். மற்றப்படி பிரிந்துபோன 10-கோத்திரத்தாரை அவனோடு சேரப்பண்ணும் என்ற அர்த்தமில்லை.

8—11. லேவிக்கு இடப்பட்ட ஆசீர்வாதம் யூதாவைப்போல் தேவனைப் பார்த்து ஜெபிக்கும் ஜெபமுறையாய்ச் சொல்லப்பட்டது.

"பரிசுத்த புருஷன்." அதாவது லேவியாம். ஆசாரியரும் லேவியரும், லேவியிலிருந்துண்டானவர்கள். யாக்கோபு லேவியைக்குறித்து விரோதமாய் உரைத்திருந்தபோதிலும்.

1. மோசே ஆரோன் என்பவர்கள் தங்கள் உயர்ந்த உத்தியோகங்களிலிருந்து மகா உத்தமமாய் கர்த்தருக்கு ஊழியஞ்செய்ததாலும்,

2. இந்தக் கோத்திரத்தில் பினெகாஸ்முதலானவர்கள் உண்மையும் பத்திவைராக்கியமும் காட்டினதாலும்; எண். 25: 11—.



3. விபத்தான வேளையில் இந்தக் கோத்திரத்தாரெல்லாரும் கர்த்தர் பட்சமாய்ச் சேர்ந்துகொண்டதாலும்; யாத்தி. 32: 26.

இவர்களுக்கிடப்பட்ட சாபம் ஆசீர்வாதமாக மாறி, கும்பிடும் தட்சணையும் வாங்கும்படி இஸ்ரவேலிலே சிதறடிக்கப்பட்டார்கள். (ஆதி. 49: 7-வியா.) ஆசரிப்புக்கூடாரத்தில் தேவனுக்கடுத்த முக்கிய வேலைகளைச் செய்யும்படி தெரிந்தெடுக்கப்பட்டதற்கும், நியாயப்பிரமாணத்தை மற்ற யூதருக்குப் போதிக்கும்படி இவர்கள் நியமிக்கப்பட்டதற்கும் மேற்காட்டிய முகாந்தரங்களே காரணமாகச் சொல்லப்படுகிறது. 10: 8—. எண். 8: 5—. மாசாவின் பரீட்சையானது (யாத். 17: 1—7.) 40-வருஷ அலைச்சலின் ஆரம்பத்திலும், மேரிபாவின் வாக்குவாதம் (எண். 20: 1—13.) டி காலத்தின் கடைசியிலும் நடந்ததால் இந்தக் காலங்களிலெல்லாம் தேவன் இந்தக் கோத்திரத்தாரின் உண்மையையும் கீழ்ப்படிதலையும் சோதித்தார் என்று காட்ட நோக்கமாய் இந்த இரண்டு சரித்திரங்களையும் சொல்லுகிறார். இப்படிப்பட்ட முகாந்தரங்களையிட்டுத்தான் மோசே ஆரோன் என்பவர்கள் காதேசில் தவறின சங்கதியையும், எண். 20-அதி—. சில லேவியர், கோறாவின் கலகத்தில் சம்பந்தப்பட்டிருந்த சங்கதியையும் (எண். 16: அதி.) சொல்லாமல் விட்டுவிட்டார்.

9. "தன் தகப்பனுக்கும் தன் தாய்க்கும்." மத். 10: 37. லூக். 14: 26.

11. "இடுப்புகளை" பலத்துக்கு ஆதாரம் இடுப்பு.

12. "பென்யமீன்" தன் தகப்பனாலே விசேஷித்த வகையாய் அன்புகூரப்பட்டவன். ஆதி. 35: 18. 44: 20. இப்பொழுதும் அப்படியே தேவனாலே நேசிக்கப்படுவான் என்று மோசே ஆசீர்வதிக்கிறார்.

13—17. எப்பிராயீமும் மனாசேயும் யோசேப்பில் அடக்கம். ஆதி. 49: 25, 26. மோசே சொன்னதும் யாக்கோபு சொன்னதும் ஒன்றுபோல தான். ஆனால் இந்தக் கோத்திரங்களுக்குண்டாகும் போராட்டத்தைக்குறித்து யாக்கோபு வற்புறுத்திப் பேசுகிறார். ஆதி. 49: 23, 24. மோசேயோ, இவர்கள் வெற்றியடைந்து வல்லமையில் ஸ்திரப்படுவதைப்பற்றி வற்புறுத்திப் பேசுகிறார்.

17. "அவன்" அதாவது யோசேப்பின் அலங்காரமாம். காளை என்பது யோசேப்பையாவது, யோசுவாவையாவது, II. எரோபோவாமையாவது குறியாமல், எப்பிராயீமைக் குறிக்கும். எப்பிராயீமுக்குத் தான் தலைச்சனுக்குரிய கனத்தை யாக்கோபு கொடுத்தான். ஆதி. 48-அதி. இந்த வாசகத்தில், எப்பிராயீம், யோசேப்பின் தலையீற்றுக் காளைக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறான். இது பலத்துக்குக் குறிப்பாம்.

"பதினாயிரம்" ஆதி. 48: 19. 1 சாமு. 18: 7, 8.

18, 19. "செபுலோன், இசக்கார்" ஆதி. 49: 13—15-ன் பொருளை மனதில் உறைக்கும்படி மோசே வற்புறுத்திச் சொல்லுகிறார். யாக்கோபைப்போலவே மோசேயும் இளையவனை முந்திச் சொல்லுகிறார். செபுலோனுக்கு கடற்கரையோரத்தில் வசதியான சுதந்தரம் கிடைத்தது. திபேரியாக் கடலில் மீன்பிடிக்க நல்ல துறைகள் கிடைத்தது. ஆகையால் வியாபாரம்பண்ணி வர்த்தகனாகி, வியாபார விர்த்திக்காக "வெளியே புறப்பட்டுப்போகையில் சந்தோஷமாயிரு" என்று ஆசீர்வதிக்கிறார்.

இசக்காருக்குச் செழிப்பான உள் நாடு கிடைத்தது. ஆகையால் அவன் வீட்டிலே வாசம்பண்ணி சமுசாரியாக வேளாண்மைத் தொழிலில் வாழ்வடைவான் என்கிறார். இரண்டு கோத்திரத்தாரும் யாபீன் யுத்தத்தில் வீரம் பாராட்டினார்கள். நியா. 5: 14, 15, 18. சிசேராவின் சேனையை மடங்கடித்த ஆபீசர்கள், செபுலோனைச் சேர்ந்தவர்கள். நியா. 5: 14. 1 நாளா. 12: 33.

"மலையின்மேல்" யாத்தி. 15: 17.

"மண்ணுக்குள்ளே" மீ. இது பொதுவாக கடலினால் உண்டாகக் கூடிய நன்மையையெல்லாம் குறிக்கும். ஆனபோதிலும் இந்தக் கடற்கரை மணல் பளிங்குக் கண்ணாடி வார்ப்புக்கு மெத்த உபயோகப்பட்டது. விலையுயர்ந்த கண்ணாடிகள் இத்தால் வார்க்கப்பட்டதினால் இந்த மணல் விலையுயர்ந்த பொருளாய் மதிக்கப்பட்டது. பூர்வகாலத்தில் பளிங்குக் கண்ணாடி வெகு அருமையான பொருளாக எண்ணப்பட்டது. யோபு 28: 17. "மணலுக்குள்ளே மறைந்திருக்கும்" சங்கு, சிப்பி, ரத்தை இவற்றால் நல்ல ஆதாயம் பெற்றார்கள். எப்படியென்றால் சங்குக்கறி சிப்பிக்கறி முதலிய இவைபோல்வனவற்றால் விலையுயர்ந்த ரத்தாம்பரம் வடிப்பார்கள். இது புறச்சாதியார் திருச்சபையில் சேர்க்கப்படுவதை உபமானமாய்க் குறிக்கிறதாக ஏசாயா சொல்லுகிறார். ஏசா. 60: 5, 6, 16. 66: 11, 12.

20. "காத்துக்கு" விஸ்தாரமான எல்லை கிடைக்குமாம். ஆதி. 9: 26.

"புயத்தையும்" இவர்கள் யுத்தத்தில் பிரியப்படுகிற கோத்திரத்தார் என்பது யோசு. 4: 12, 13. 22: 1—4. யெகூவின் செய்கையாலும் விளங்கும். 2 இரா. 9-அதி. 10-அதி. மேலும் 1 நா. 5: 18—22. 12: 8-லும் விளங்கும்.

21. "முதல் இடத்தை" எண். 32-ன் வெற்றி, மோசேயால் காதியருக்கும் ரூபேனருக்கும் முதலாவதாகச் சொல்லப்படுகிறது.

"பத்திரமாயிருக்கிறது." யுத்தத்தில் முகாண்மையாயிருந்து முன்னணியில் செல்லும்படி கொடுத்த பங்கு என்றர்த்தம்,



"முன்னணியாய் வந்து" கானான்தேசத்தை ஜெயித்து தேவ கட்டளையை நிறைவேற்றுவதில் முகாண்மையாய் நின்ற மற்ற இஸ்ரவேலரோடு காதியரும் முகாண்மைக்காரராயிருந்தார்கள் என்றர்த்தம். எண். 32: 17, 21, 32. யோசு. 1: 14. 4: 12.

22. "தாணைக்குறித்து." பாஷானிலிருக்கிற பதிவிடையிலிருந்து சிங்கத்தைப்போல் பாய்வானும். உன். 4: 8. தாண் லாயிஷை ஜெயித்த விபரத்தைப்பற்றிய சரித்திரமில்லை. யோசு. 19: 47.

23. "நப்தலி" ஆதி. 49: 21-வியா. வாசி. இரண்டு வாக்கியமும் பொருளில் ஒன்றுதான்.

"மேற்றிசையையும் தென்திசையையும்". நப்தலியின் எல்லை கானானுக்குத் தென் மேற்கிலுள்ளது. ஆகையால் இவ்வார்த்தைகள் பூமி சாஸ்திரப் பிரிவை அல்ல, பூமி இயல்பாய் அமைந்திருக்கிற பிரிவுப்படி பேசுகிறார் என்று காணலாம். இந்த வார்த்தைகளை, "கடலையும் சூரிய நாட்டையும்" என்று திருப்பலாம். கலிலேயாக் கடல், மெரோம் ஏரி, தற்காலத்து பார்எல்அலே ஆகிய இவற்றின் மேல் கரையை கொஞ்சங்குறைய முழுவதுமாகவும், யோர்தான் உற்பத்தி ஸ்தானத்துக்குச் சமீபமான நீர்வளமபொருந்திய நாட்டையும், நப்தலி சுதந்தரித்தான். இவன் சுதந்தரித்த சில இடங்களில், பலஸ்தீனாவில் எங்கும் கிடையாத மகா சேர்த்தியான காட்சிக்குரிய அழகான இடங்களும், மிகவும் செழிப்பான பூமியுமிருந்தது. கினேசரேத் கடற்கரையை யோசேப்புஸ் சரித்திரக்காரன்: "பூமியின் பரதீசு" என்று அழைக்கிறார். இன்னொருவர் அதை "பலஸ்தீனாவின் தோட்டம்" என்கிறார். நாளதில் அதற்கு "பேலாத் பெஷாரா" என்று பேர். இந்த வார்த்தைக்கு "நற்செய்திகளின் தரை" என்றர்த்தம். மேரோம் குளம் பக்கமாய் உஷ்டணம் மிகுதியாயிருப்பதாலும், ஆகாயகுணத்தினாலும் மற்ற இடங்களைப் பார்க்கிலும் முந்தி இவ்விடத்தில் நல்ல பழம் பழுக்கும். ஆ! இவ்விடம் பழத்துக்கு வாயூறும்.

24, 25. "ஆசேரைக்குறித்து" ஆதி. 49: 20. இவனுடைய நாட்டில் இரும்பும் வெண்கலமும் கண்டெடுக்கக்கூடிய இடங்களுண்டு. 8: 9.

26—29. மோசே, தேவவல்லமையில் சார்ந்தவராய் தான் உரைத்தவைகளையெல்லாம் தேவனே நிறைவேற்றுவார் என்று அகமகிழ்கிறார். நாமும் நமது மரணவேளையில் நாம் விட்டுப்போபவர்களுக்கு இந்த வார்த்தைகளைச் சொல்லி விசுவாசத்தோடு பிரிந்தால் எத்தனை நன்றாயிருக்கும். "அநாதி தேவனே உனக்கு அடைக்கலம். அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம்"

"மேடுகளை மிதிப்பாய்." உன் சத்துருக்களின் முக்கிய ஸ்தானங்களைப் பிடித்து ஆண்டுகொள்ளுவாய் என்றர்த்தம். 32: 13. ஏசா. 37: 24.

## 34. அதிகாரம்.

மோசேயின் பாக்கியமான மரணமும் அடக்கமும்.

1 "நேபோ மலை" 32: 49. வியா.

"தாண்மட்டுமுள்ள கிலேயாத் தேசம் அனைத்தையும்." இது நியா. 18: 27-ன் தாண்லாயிஷாயிருக்கமாட்டாது. ஏனென்றால் அது கிலேயாத் தேசத்திலிருந்ததில்லை. இவ்விடத்தில் சொல்லிய தாணானது, பெரோயா நாட்டுக்கு வடக்கிலிருந்திருக்கவேண்டுமென்று தோன்றும். ஒருவேளை 2 சாமு. 24: 6, ஆதி. 14: 14. இவ்வாக்கியங்களில் சொல்லிய தாண்ஜயான் என்ற பட்டணமாயிருக்கலாம்.

2. "கடைசிச் சமுத்திரம்" மெதித்திராணியாக் கடல் 11: 24.

3. "சோவார்" சவக்கடலின் தென் அந்தத்திலிருக்கிறது. ஆதி. 19: 22.

4. "இதை உன் கண் காணும்படி செய்தேன்." லூக். 4: 5-ல் சொல்லியபடி கிறிஸ்துநாதருக்கு, "உலகத்தின் இராச்சியங்களையெல்லாம் ஒரு நிமிஷத்திலே அவருக்குக் காண்பித்தது!" எப்படி இயல்புக்கு மிஞ்சி தேவாதீனமாய் நடந்ததோ, அப்படியே மோசேக்கும் இந்தக் காட்சி திவ்ய வல்லமையால் காட்டப்பட்டது.' இந்தக் காட்சி மோசேக்கு மனத்தோற்ற பாவனையாக காட்டப்பட்டதல்ல, உள்ளபடிக்கே அந்தத் தேசங்களை அவன் கண்கள் கண்டன. மரிக்கப்போகிற நியாயப்பிரமாணிக்கனுடைய பார்வைக்கு இப்போது இயல்புக்கு மிஞ்சின சத்துவம் அளிக்கப்பட்டிருக்கும்.

5. "கர்த்தருடைய வார்த்தையின்படியே" எபிரேயு பாஷையில் "கர்த்தருடைய வாயின்படியே" என்றிருக்கிறது. இதை வைத்துக்கொண்டு யூத ரபிமார், கர்த்தர் மோசேக்கு முத்தம்கொடுத்த பின் மரித்தான் என்று அர்த்தம் பண்ணுகிறார்கள். ஆனால் இவ்வார்த்தைகளின் அர்த்தம் தெளிவாயிருக்கிறது. (ஆதி. 45: 21) அதாவது மோசே மரித்தது அவனுடைய ஜீவ சத்துவங்கள் தளர்ந்து நின்று போனதினாலல்ல. தேவன் இட்டத் தீர்ப்பின்படிக்கும், உபா. 32: 51-ன்படி அவன் செய்த பாவத்துக்குத் தண்டனையாகவுமே மரித்தான் என்பதே கருத்தாம்.

6. "அடக்கம் பண்ணினார்" தேவன் தாமே அடக்கஞ்செய்தார்! மோசேயால் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தை தாம் ஒப்பி அங்கிகரிக்கிறதாகவும், அப்பிரமாணம் பூரண ஊர்ஜிதத்திலிருக்கிறதென்றும் காட்டும்படிக்கு அதைக் கொடுத்த மனுஷனை இப்படி கனயப்படுத்தினதினாலே காட்டினார். ஒருவருக்குமில்லாத மேலான



கனயதை மோசேக்குக் கிடைத்தது. நியாயப்பிரமாணம் இத்தனை மேன்மையுள்ளதாயிருந்தாலும் நம்மை பரம கானானில் சேர்க்கிறது அதல்ல. பரம கானான் நமக்கு தேவனுடைய இலவசமான கிருபையால் கிடைக்கக் கூடியது. மோசே முன்னறிவித்த மேசியாவின் புண்ணியத்தால் மட்டும் நமக்குக் கிடைக்கிறது.

என் நேச ரட்சகா
அருளின் சொரூபா!
நீர்தாம் அல்லோ
பாவத்தை ஜெயித்தீர்!
சாபத்தைச் சகித்தீர்!
என்றைக்கும் ரட்சிப்பீர்
என் ரட்சகா!

"ஒருவனும் அவன் பிரேதக்குழியை அறியான்." மோசேயின் பிரேதக் கல்லறையை யூதர் அவபக்திக்கேதுவான பொருளாக்காதபடி. தேவன் அதை மறைத்துவைத்ததாகத் தோன்றுது. ஏனென்றால் யூதர்கள் இந்த விசேஷித்த வகையான தவறுதலுக்கு மனஞ் சாய்ந்தவர்களல்ல.

கிறிஸ்துநாதர் மறுருபமானபோது மோசே காணப்பட்டதையும் மத். (17: 1—10), பரி. யூதா சொல்லியதையும் (யூதா. 9-வா) கவனிக்கும்போது, (தேவன் இட்ட தீர்ப்பின்படி உபா. 32: 51.) மோசே மரணமடைந்தாலும், சற்றுக்காலத்துக்குப்பின், ஏனோக் எலியா அடைந்த கதியை இவனும் அடைந்தான் என்றும்; மோசே தன் பிரேதக் கல்லறையிலிருந்து சீக்கிரமாய் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதினாலேதான் "ஒருவனும் அவன் பிரேதக் குழியை அறிய" வில்லை என்றும் நிதானிக்கலாம்.

9. "ஞானத்தின் ஆவி." மேசே காண்பித்த அனுபவத்துக்கடுத்த ஞானத்தை முக்கியமாய்க் குறிக்கும். ஏசா. 11: 2.

12. "ஒரு தீர்க்கதரிசியும் மி" மோசே மரித்து கொஞ்சகாலத்துக்குப் பின் இந்த வார்த்தைகள் எழுதப்பட்டிருக்கவேண்டும். வெகுகாலம் சென்றபின் எழுதப்பட்டதென்று சொல்லவேண்டிய அவசியமில்லை. இஸ்ரவேலர் எகிப்தை விட்டபோதும், வனாந்தரத்திலும், மோசேயால் செய்யப்பட்ட அதிசய அற்புதங்களை இவ்வாக்கியங்கள் முக்கியமாய்க் குறிக்கும். தேவன் சொன்ன சாட்சியையே மறுபடி இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறது. எண். 12: 6, 7. கானானில் இஸ்ரவேலர் நிலையாய்க் குடியேறின பிற்பாடு மோசேக்குப் பின்வந்த ஒருவன் இந்த வார்த்தைகளை எழுதினானென்று இயல்பாய் நினைக்கத்தக்கதாயிருக்கிறது.

உபாகமம் முற்றிற்று.

# யோசுவாவின் புஸ்தகம்.

I. இந்த ஆகமம் யோசுவாவினால் எழுதப்பட்டதென்பதைக் குறித்துப் பல தர்க்கங்களுண்டு. ஆனால் வேதசாஸ்திரிகளில் பலர் இது யோசுவாவினாலேயே எழுதப்பட்டதென்று நிச்சயிக்கிறார்கள். அதற்கு அவர்கள் சொல்லும் நியாயங்களாவன;

1. கல்தேயப் பாஷையின் வார்த்தைகள் இதில் சொல்லப்படாதபடியால், யூத ஆகமக்காரரும், அப்போஸ்தல பிதாக்களும் இது பூர்வீகமானதென்றும், யோசுவாவினால் எழுதப்பட்டதென்றுஞ் சொல்லுகிறார்கள்.

2. 24: 26-ல் யோசுவா, நடந்தவைகளைத் தேவனுடைய நியாயப்பிரமாணப் புஸ்தகத்தில் எழுதிவைத்ததாகச் சொல்லியிருக்கிறது. இதைப் பார்க்கும்போது யோசுவாவின் புஸ்தகம் மோசேயின் பஞ்சாகமங்களின் தொடர்ச்சியென்றும், அது யோசுவாவினால் எழுதப்பட்டதென்றும் தோன்றுகிறது. இந்த நியாயத்தை மறுக்கிறவர்கள் 24: 26-ல் “இந்த வார்த்தைகள்” என்று சொல்லப்பட்டிருப்பது யோசுவாவின் கடைசிப் பிரசங்கத்தைக் குறிக்குமென்றும், அந்தப் பங்கு மாத்திரம் யோசுவாவினால் எழுதப்பட்டதென்றும் சொல்லுகிறார்கள்.

3. 24: 29—33 வாக்கியங்களில் யோசுவாவின் மரண சரித்திரமடங்கியிருக்கிறது. அதில் யோசுவாவைக் கர்த்தருடைய ஊழியக்காரன் என்று சொல்லியிருப்பதினால், அந்தப் பங்கு பிற்காலத்திலே ஒருவன் எழுதப்பட்டிருக்க, முந்தின பங்கு யோசுவாவினால் எழுதப்பட்டிருக்கவேண்டுமென்றும், அதற்கும் முந்தின பங்குக்கும் பாஷைநடையிலிருக்கிற வித்தியாசம் உபாகமம் கடைசிப் பங்குக்கும் அதற்கு முந்தின பங்குகளுக்குமிருக்கிற வித்தியாசம்போலிருக்கிறதென்றும் அநேகர் சொல்லுகிறார்கள்.

4. 5: 1-ல் கண்டிருக்கிற சங்கதி நடந்ததாகச் சொல்லப்படுகிற தருணத்தில் இந்த ஆகமத்தை எழுதினவர் கூட இருந்தாரென்பது “நாங்கள் கடந்தோம்” என்று தன்மையிடத்தில் சொல்லியிருப்பதால் விளங்குகிறது. இதை மறுக்கிறவர்கள் சீரியாக், அரபித் திருப்புதல்களில் அவர்கள் கடந்தார்களென்று படர்க்கை இடமாய்ச் சொல்லியிருப்பதினாலே மேற்கண்ட நியாயம், ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல என்கிறார்கள். ஆனாலும் எபிரேயு மூலத்தில் சொல்லியிருப்பதைத் தான் நாம் அங்கீகரிக்கவேண்டும்.

5. இந்த ஆகமம் முழுவதும் மோசேயின் நியாயப்பிரமாண ஆவியைக் காட்டுகிறபடியால், மோசேக்கு விசேஷித்த ஊழியக்காரனாயிருந்த யோசுவாவினாலேயே எழுதப்பட்டிருக்கவேண்டியது.



II. இது பூர்வீகமானதும், உண்மையுள்ளதும் ஆக்கியோனிருந்த காலத்தில் எழுதப்பட்டதுமான தஸ்தவேசுகளிலிருந்து பெயர்த்து வரையப்பட்டதென்பது பின்வரும் நியாயங்களால் தெரியவரும்.

1. மோசேயின் காலத்தில் நிகழ்ந்த சங்கதிகள் எழுதப்பட்டிருக்கிற மேரையைக் கவனித்தால், முற்பிதாக்களுக்குச் செய்யப்பட்ட வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலைக் காட்டவும், பன்னிரு கோத்திரத்தாருக்குள் கானான்தேசம் பங்கிடப்பட்ட ஜாபிதா இருக்கவும், பிற்காலத்தில் அவர்களுக்குள் வாக்குவாதமுஞ் சச்சரவும் நேரிடாதபடி விலக்கவும், மோசேயின் ஆகமத்துக்குத் தொடர்ச்சியான மற்றொரு ஆகமமிருக்கவேண்டியதவசியமென நினைக்க இடங்கொடுக்கிறதல்லவா?

2. அந்தப்படி யோசுவா 18-ல் இஸ்ரவேலின் தளகர்த்தனாயிருந்த யோசுவா தேசத்தைச் சுற்றிப்பார்த்து, பங்கு பங்காக ஓர் புஸ்தகத்தில் எழுதும்படி கற்பித்தான் என்று வாசிக்கிறதுந்தவிர, 24: 25-ல் தேவனோடு இஸ்ரவேலர் செய்த உடன்படிக்கையை யோசுவா புதுப்பித்து அதை எழுதினானென்றும் வாசிக்கிறபடியால், அக்காலத்துக்குரிய மற்றச் சங்கதிகளுக்கும் அப்படியே உண்மையான தஸ்தவேசுகளிருந்திருக்குமென்று அபிப்பிராயங்கொள்ளவேண்டியதாயிருக்கிறது.

3. இப்படிப்பட்ட தஸ்தவேசுகளில்லாவிட்டால் இந்த ஆகமத்தை எழுதினவர் ஒவ்வொரு கோத்திரத்தின் எல்லைத் திட்டங்களை இவ்வளவு நுட்ப திட்பமாய்க் காட்டுவது கூடிய காரியமல்ல. காலேப்புடைய சம்பாஷணைகளையும், யோசுவா 14: 6—12. பினேகாஸ் முதலிய தானாபதிகள் யோர்தானுக்குக் கிழக்கேயுள்ள கோத்திரத்தாருடன் பேசின விபரம். மீ. யோசு. 22: 16—20. யோசுவாவின் பிரசங்கமும், அதி. 23, 24. திட்டமாய் எழுத ஏதுவிராது.

4. இவ்வித தஸ்தவேசுகளில்லாமல், இந்நூலாசிரியன், தான் சொல்லுகிற சங்கதிகள் நடந்த காலத்தில் தானிருந்ததையும், 5: 1. இராகாப் விஷயத்தில் தாம் செய்ததையும், அவள் இந்நாள்வரைக்கும் இஸ்ரவேல் நடுவில் குடியிருக்கிறாளென்றும், 6: 25. யாசேரின் புஸ்தகத்தில் எழுதியிருக்கவில்லையா என்றும் (10: 13) சொல்வது கூடாதே.

5. கோத்திரத்தாருக்குள் தங்கள் பங்குவீத எல்லைகளைப்பற்றி, வாக்குவாதங்களும், சச்சரவுகளும், அக்காலத்தில் சம்பவியாதபடியால், அதிகாரம்பெற்ற சில தஸ்தவேசுகள் அவர்கள் வசம் இருந்திருக்குமெனத் தெரியவருகிறது.

6. சங்கதி நடந்த காலத்தில், எழுதப்பட்டதும் உண்மையுள்ளதுமான ரிக்கார்ட்டுகளில்லாதிருக்குமானால், ஆசாரியருக்குக் கொடுக்கப்பட்ட 13-பட்டணங்கள் பயனற்றதாய்ப் போய்விடும். ஏனென்றால்

அக்காலத்தில் ஆரோன் வம்சத்தில் அத்தனை பட்டணங்களில் குடியிருக்கத்தக்கதான ஆசாரிமாரில்லை. பிற்காலத்தாருக்கு உதவியாக இப்பட்டணங்கள் குடியேற்றப்படாமல் விடப்பட்டிருக்கிறது.

III. இவ்வாகமத்திலடங்கிய சங்கதிகள் உண்மையும், திவ்ய அதிகாரமுமுள்ளவை.

1. காலேப், பினேகாஸ், இரண்டாக் கோத்திரத்தார், யோசுவா இவர்களுடைய சம்பாஷணைகள் வார்த்தை, வார்த்தையாக் விடாமல் சொல்லப்பட்டிருக்கின்றன. சீட்டினால் தேசம் பங்கிடப்பட்ட விபரப்படி, வரிசையாய் எழுதப்பட்டிருக்கிறது. யோசு. 15—19-அதி. பூர்வ தஸ்தவேசுகளுக்கிசைவாய் ஆக்கியோன், யோசுவாவைப்பற்றி அவன் மரணம்வரைக்கும் கனமாய்ப் பேசவில்லை. ஆதலால் பூர்வ தஸ்தவேசுகளும் யோசுவாவினால் எழுதப்பட்டவையென்று நம்பத்தக்கது.

2. பூர்வ தஸ்தவேசுகள் பரம்பியிருந்த காலத்திலும் ஆக்கியோனுடைய உண்மை பரீட்சிக்கப்படவேண்டியிருந்தபொழுதும், இவ்வாகமம் உண்மையுள்ளதென்று யூதர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

3. இதிலடங்கிய சரித்திர விசேஷங்களுக்கு மற்றப் பழையஏற்பாட்டாகமங்களிலும், புதியஏற்பாட்டு ஆகமங்களிலும் அத்தாட்சி உண்டு. (1) சீலோவாவிலே ஆசரிப்புக்கூடாரம் நிறுத்தப்பட்டதைக் குறித்து நியாயா. 18: 31. 1 சாமு. 1: 3, 9. 3: 21. (2) எரிகோவைத் திரும்பக் கட்டுபவன்மேற் போடப்பட்ட சாபம். 16: 24. நிறைவேறுதல் 1 இராசா 16: 34. (3) 7: 1-ல் சொல்லிய ஆகானைப்பற்றி, 1 நா. 2: 7. (4) தேசத்தை ஜெயித்துப் பங்கிட்டதைக்குறித்து, சங். 78: 54—65. (5) கானானியர் அழிக்கப்பட்டதைக்குறித்து, சங். 68: 13-16. (6) யோர்தான் பிரிந்ததைப்பற்றி, சங். 114: 1—5. ஆபகூக். 3: 11-13. (7) 5: 6-ல் கீழ்ப்படியாதவர்கள் கானானுக்குள் பிரவேசிப்பதில்லையென்பதைப்பற்றி. சங். 95: 10, 11. (8) ஏழு ஜாதியார் ஜெயிக்கப்பட்டதற்கு அப். 13: 19. (9) யோசுவா அவர்களை இளைப்பாறச் செய்யவில்லை. எபி. 4: 8. (10) எரிகோவின் மதில் விழுந்தது. எபி. 11: 30. (11) இராகாப் காக்கப்பட்டது. எபி. 11: 31. (12) இராகாப்புடைய விசுவாசம். யாக். 2: 24, 25.

4. யோசுவாவின் புஸ்தகத்தில் சொல்லப்படுகிற சங்கதிகள் அஞ்ஞானிகளுக்குள் வழங்கிவந்த பாரம்பரையாலும் உலக சரித்திரங்களாலும் உறுதிப்படுத்தப்படுகின்றன. யோசுவாவுக்குத் தப்பி ஓடின தீரியரால் கார்தேகாப் பட்டணத்தார் உண்டானார்கள். பெனிக்கேயருக்குள் (Hercules.) எர்க்கியுலசைப் பற்றிய கதை யோசுவாவின் சரித்திரத்திலிருந்து உற்பத்தியானது.



5. சமாரித்தருக்குள்ளும் யோசுவாவின் புஸ்தகமென ஒன்றிருக்கிறது.

IV. இந்தப் புஸ்தகம் 17-வருஷக்கால சரித்திரத்தை அடக்கியிருக்கிறதென்று சிலர் சொன்னபோதைக்கும், இதில் 30-வருஷக்கால சரித்திரம் அடங்கியிருக்கிறதென்பதே பொதுவான கொள்கை. இது மோசேயின் பஞ்சாகமங்களிலிருந்து ஒருக்காலும் பிரிக்கப்படாமல் அதின் தொடர்ச்சியும் நிறைவுமாயிருக்கிறது.

V. நோக்கம். சத்திய தேவன் ஆபிரகாமுக்கும், ஆதி. 13: 15. ஈசாக்குக்கும் ஆதி. 26: 4. யாக்கோபுக்கும் ஆதி. 35: 12. யோசேப்புக்கும், ஆதி. 50: 24. மோசேக்கும் யாத். 3: 8. மீ. முற்பிதாக்களுக்கும், கானான்தேசத்தைச் சுதந்தரமாகக் கொடுப்போமென்று சொன்ன வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலைக் காண்பிக்கும் நோக்கமாக எழுதப்பட்டது. இதோடு இஸ்ரவேலர் பல கஷ்டங்கள் வருத்தங்களினின்று விடுதலையாக்கப்பட்டதிலும், ஆதரிக்கப்பட்டதிலும் விளங்கிய தேவனுடைய வல்லபமும் இரக்கமுங் காட்டப்படுகிறது.

2. ஒவ்வொரு கோத்திரத்தின் பங்கு விபரத்தைக் காட்டும் நோக்கமாகவும் எழுதப்பட்டது. இந்த நோக்கமாகவே ஆக்கியோன், 23: 14-லும் 21: 45-லும், "இஸ்ரவேலுக்குக் கர்த்தர் சொன்ன நல்வார்த்தைகளிலொன்றும் தவறிப்போகவில்லை" என்று பலதரஞ் சொல்லுகிறார். ஆக்கியோன், தேசம் பங்கிடப்பட்டதைப் பற்றியுள்ள மாறுதலைக்குறித்து ஒரு குறிப்புஞ் சொல்லக் காணோம்.

VI. இந்த ஆகமம் 3-பங்காகப் பிரிக்கப்படலாம்.

க. இஸ்ரவேலரால் கானான்தேசம் பிடிபட்டது. i—xii.

இவற்றுள்...1. இஸ்ரவேலுக்கு யோசுவா தளகர்த்தனாக உறுதிப்படுத்தப்பட்டது I.

2. எரிகோவைச் சுற்றிப் பார்க்க வேவுகாரர் அனுப்பப்பட்டது. ii.

3. யோர்தானைக் கடந்த அதிசயம். iii, iv.

4. கில்காலில் இஸ்ரவேலர் விருத்தசேதனம் அடைந்ததும், பஸ்காவை ஆசரித்ததும், சேனையின் அதிபதி தரிசனம் அளித்ததும். V.

5. எரிகோவையும். vi. ஆயியையும் பிடித்தது. vii: viii.

6. கிபியோனர் தந்திரமாய் உடன்படிக்கைசெய்தது. ix.

7. கானானிய இராஜாக்களோடு யுத்தம், சூரியன் நின்ற அற்புதம். X.

8. யாபீனும் அவன் கூட்டாளிகளுஞ் செயிக்கப்பட்டது. xi.

3. இஸ்ரவேலர் மோசேயின் கீழாக காநானின் கீழ் பங்கையும், xii: 1—6. யோசுவாவின் கீழாக, மேல் பாகத்தையும், xii. 7—24. ஜெயித்த வரலாற்றின் தொகுப்பு.

௨. செயிக்கப்பட்ட தேசம் பங்கிடப்பட்டவரலாறு. xiii—xxii.

1. கானான்தேசத்தின் பொதுப் பிரிவு. xiii.

2. ஒன்பதரைக் கோத்திரத்தாருக்குப் பங்கிடப்பட்டது. xiv—xix.

3. அடைக்கலப் பட்டணங்களும். xx. லேவியரின் பட்டணங்களும் குறிக்கப்பட்டது. xxi.

N. B. எபிரேயருக்குள் கோத்திரப் பிரிவுகளும், வம்ச அட்டவணைகளும் பழுதுபடாமல் காக்கப்பட்டு வந்ததைக் கவனிக்கும்போது, நம்முடைய மேசியாவின் வம்ச அட்டவணையை, ரூபிக்கப் போதுமானதெனக் காணப்படுகிறது.

4. இரண்டரைக் கோத்திரத்தார் சாட்சிக்கென்று ஓர் பலிப்பீடங் கட்டினதினாலுண்டான விசனமும், அதற்கு அவர்கள் சொன்ன நியாயமும். xxii.

௩. யோசுவாவின் அந்தியகால போதனைகளும் மரணம், அடக்கம். ௴. xxiii: xxiv. இதில்

1. இஸ்ரவேலருக்குத் தேவன் செய்த நன்மைகளை யோசுவா அவர்களுக்கு ஞாபகப்படுத்தித் தேவனை ஒட்டியிருக்கும்படி ஏவுகிற விபரம். xxiii.

2. தேவனுக்கும், இஸ்ரவேலருக்குமுண்டான உடன்படிக்கையைப் புதுப்பித்தல். xxiv: 1—28.

3. யோசுவாவின் மரணமும், அடக்கமும், யோசேப்பின் எலும்புகள் புதைக்கப்பட்டதும், பிரதானஆசாரியனாகிய எலெயெசாரின் மரணமும். xxiv: 29—33.

## கேள்விகள்.

1. வேதத்திலுள்ள ஒவ்வொரு ஆகமத்தின் பெயரும், என்னென்ன முகாந்தரங்களினால் அப்படி அழைக்கப்படுகின்றன? யோசுவாவின் புஸ்தகமும் இப்பெயரால் அழைக்கப்படும் முகாந்தரங்களென்ன?

2. இந்த ஆகமம் யோசுவாவினால் எழுதப்படவில்லையென்று சொல்லுகிறவர்கள் காட்டும் நியாயங்களென்ன? அதற்கு என்னென்ன சமாதானஞ் சொல்லக்கூடும்.

3. இப்புஸ்தகம் நியாயாதிபதிகளின் புஸ்தகத்துக்கு முன்னதாக எழுதப்பட்டதென்று காண்பிக்கவும்.



4. இது எஸ்றாவால் எழுதப்படவில்லையென்று ரூபிக்கவும்.

5. இப்புஸ்தகத்திற்கும், மோசேயின் பஞ்சாகமங்களுக்கும் என்னென்ன விஷயங்களில் சம்பந்தமுண்டு? இப்படிப்பட்ட சம்பந்தமுடைய புதியஏற்பாட்டாகமங்களெவை?

6. இதிலுள்ள சங்கதிகளைக் காலக்கிரமப்படி ஒழுங்குப்படுத்தி இதில் கண்டிருக்கும் அற்புத சங்கதிகளைக் காட்டவும்.

7. இதிலிருந்து மற்ற ஆகமங்களில் எடுத்துச் சொல்லப்படுகிற சங்கதிகளெவை?

8. மோசேயின் ஆகமங்களின் உண்மையை இப்புஸ்தகத்தைக் கொண்டு ரூபிக்கவும்.

9. இதிலிருந்து புதியஏற்பாட்டில் காட்டப்படுகிற வாக்கியங்களெவை? என்ன சம்பந்தம் பற்றி வருகின்றன?

10. இந்த ஆகமத்தால் விளங்குகிற தேவஇலட்சணங்களைத் திருஷ்டாந்தப்படுத்தவும்.

---

வாரத்தின் ஒவ்வொரு நாளுக்கும் ஏற்ற
பத்திக்குரிய

## சதத தியானங்கள்.

(தொடர்ச்சி.)

## ஐந்தாம் தியானம்.

வியாழன்.

பரிசுத்தமாக்குதல்.

"பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள், பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப்பதில்லையே." எபி. 12: 14.

மனுஷரை இரக்ஷிப்பதில், கடவுளுடைய கிரியையானது, இருமடங்காயிருக்கிறது. முதலாவது, அவர் பாவியை இயேசுக்கிறிஸ்துவின் புண்ணியத்தால் நீதிமானாக்குகிறார்; இரண்டாவது, பரிசுத்தாவியின் வல்லமையினால் பரிசுத்தமாக்குகிறார். நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தமாக்கப்படுதலின் முத்திரையாயிருக்கிறதுபோல, பரிசுத்தமாக்கப்படுதல் நீதிமானாக்கப்பட்டதின் ரூபகாரமாயுமிருக்கிறது. தேவன் பரலோகத்திலிருக்கிற மகிமைகளுக்கு பாவிகளை ஏற்றுக்கொள்ளச் சித்தமுள்ளவராயிருக்கிறார். அப்படிப்பட்ட ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளத்தக்கதான வழிகளையும், அவர் தாமே நியமித்திருக்கிறார். அதற்கென்றே இயேசுக்கிறிஸ்துவையுங் கொடுத்திருக்கிறார்; ஒருவன் கிறிஸ்துவை தன் இரட்சகர் என்று விசுவாசித்தவுடனே அவன் நீதிமானாக்கப்படுகிறான். அதை வேறு வார்த்தைகளால் சொல்லவேண்டு

மானால், அவருடைய முன்பின் பாவங்கள் எல்லாம் தேவனுடைய ஜீவ புஸ்தகத்திலிருந்து கிறுக்கப்பட்டு, ஏசுக்கிறிஸ்துவினிமித்தமாக, தேவனுடைய பிள்ளையென்று அங்கிகரிக்கப்படுகிறான். ஆனாலும் இப்படிப்பட்ட ஒருவன் பாவமன்னிப்பையும், தேவஅங்கிகாரத்தையும் பெற்றுக்கொள்வதுந்தவிர, பரிசுத்தவானாக்கப்பட்டு பரலோகத்துக்குப் பாத்திரவானாக வேண்டியவனாகவுமிருக்கிறான். ஏனென்றால் அவன் இன்னும் தவறக்கூடியவனாயிருக்கிறான். பரிசுத்தமில்லாமல் ஒருவனும் தேவனை தரிசிக்கக் கூடாது. ஆகையால் பரிசுத்தாவியாகிய தேவன் இயேசுக்கிறிஸ்துவினால் சம்பாதிக்கப்பட்ட இரக்ஷிப்பின் கிரியையைக் கொண்டு நடத்தவும், நீதிமானாக்கப்பட்ட பாவியை பரிசுத்தவானாக்கி, பரிசுத்தமுள்ள தேவனுடைய சமுகத்தில் நிற்கத்தக்கவனாகவும், இரக்கமாய் கிருபைகூருகிறார். பாவியின் இருதயத்தில் பரிசுத்தாவியால் துவக்கி முடிப்பிக்கப்பட்ட இந்தத் தொழில் "பரிசுத்தமாக்கப்படுதல்" என்று சொல்லப்படும்.

வாசிக்கிறவனே! இந்தக் கிரியை உன் இருதயத்தில் நடந்துகொண்டு வருகிறதா? அப்படியானால் நீ கிறிஸ்துவுக்குள் புதுசிருஷ்டியாயிருக்கிறாயா? பழையவைகள் எல்லாம் கடந்துபோய், எல்லாம் புதிதாயினவா? ஒவ்வொருநாளும் உலகமானது உனக்கும், நீ உலகத்துக்கும் சிலுவையிலறையப்படவேண்டும். நீ உலகத்தை பாவமும், குற்றமுமுள்ளதென்று தீர்க்கப்பட்ட உலகம் என்றும், அது நிலையானதல்லவென்றும், அதில் உனக்கு பங்குவேண்டியதில்லையென்றும் எண்ணுகிறாய். ஒருகாலத்தில் உனக்கு பிரியமாயிருந்த பாவங்கள் எல்லாம் உனக்குத் துன்பத்தைக் கொடுக்கிறவைகளும், வெறுக்கப்படத்தக்கவைகளுமாகக் காண்பாய். நீ ஒவ்வொருநாளும் பாவத்தோடு போர் செய்கிறவனாகக் காணப்படுவாய். உன் சந்தோஷமானது உள்ளான மனுஷனுடைய சாயலாகக் காணும். நீ தேவனோடும் அவருடைய குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவோடும் இசைந்திருப்பது உன்னுடைய போசனமும், பானமுமாயிருக்கும். நீ நாள்தோறும் உன் இரட்சகரைப் போலாகிறாய். அவருடைய மாதிரியைத் தொடர்ந்து, அவருடைய காலடியைப் பிடித்து நடக்கும்படி நீ பிரயாசப்படும்போது நீ அவருடைய சாயலுக்கு கொண்டுவரப்படுகிறாய். தேவாவியானவர் உன்னுடைய ஒவ்வொரு யோசனைகளையும், கிறிஸ்துவுக்குள் சிறைப்படுத்தி, உன்னுடைய இருதயத்தில் கிரியை நடப்பிக்கிறபொழுது அவர் உன்னை ஒருபோதும் பாராமல்விடார். அவருடைய ஆவியானது நம்முடைய ஆவியோடிருக்கிறது. அவருடைய ஆவி நமது ஆவியோடு சாக்ஷிகொடுக்கிறது. நாம் அவருடைய பிள்ளைகளாயிருக்கிறோம். நாம் பிள்ளைகளானால் சுதந்தரவாளிகளும், கிறிஸ்துவுடன் உடன்சுதந்தரவாளிகளுமாகவேயிருப்போம். அப்படியானால் நமது தற்கால உபத்திரவங்கள் நம்மில் இனி வெளிப்படும் மகிமையோடு ஒப்பிடப் பாத்திரமல்ல என்பதை நாமே நிதானித்துக்கொள்ளவேண்டியது.

ஆத்துமாவே! தேவாவியானவர் கிறிஸ்துவுக்குடையவைகளை எடுத்து வந்து, அவைகளை உன்னிடத்தில் காட்டி உன்னை மோட்சத்துக்கு வழிநடத்தி, நீ பாக்கியத்திலும், நமது இரட்சகரும் தேவனுமாகிய இயேசுக்கிறிஸ்வைப் பற்றிய அறிவிலும் வளரச்செய்தால், நீ முக்காலும் பாக்கியவானாயிருப்பாய்.

அடியார் நெஞ்சை தயவாய் சுத்தித்து ரப்பி உமக்கே,
பொருந்தும் அலங்காரமாய், படையும் தேவ ஆவியே.

---



# சமாசாரத்திரட்டு.

**ஆப்கானிஸ்தான்.**—இத்தேசத்தின் அமீர் அதிபத்தியத்தைச் சம்பந்தித்த உடன்படிக்கைகள் அப்டேல் ரைமான் என்பவனோடு இன்னும் நடந்தேறி வருகின்றன. மேற்படி அதிபத்தியத்தை அங்கீகரிக்கும் விஷயத்தில் அவனுக்கு மனக்குறை உண்டாயிருப்பதாகக் காணப்படவில்லை. ஆகிலும் அவனோடு செய்துகொண்ட ஊடாட்டங்கள் இன்னும் தகுந்த முடிவுக்குள்ளாகவில்லை. இதினிடையில் முந்தின அமீராகிய யாக்கூப்கானின் சகோதரன் அயூப்கான் என்பவன் ஒரு பெரிய சேனை திரட்டி, கந்தகாரிலிருந்து சுமார் 20 மைல் தூரமான கூர்க்கி—நகுர்து என்னும் இடத்திலுள்ள பிரிட்டிஷ் தளத்தைப் பொருதினான். பிரிட்டிஷ் ராணுவத்தார் கிட்டத்தட்ட ஆயிரம்பேரைச் சாகக்கொடுத்து, அபசெயப்பட்டவர்களாய் கந்தகார் கோட்டைக்குள்ளே இடைந்து போயினர். கந்தகாரிலுள்ள சேனையை நடத்தும் தளபதிக்கு உதவியாக துணைப்படைகள் அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த வர்த்தமானம் நம் இஷ்டர்களுக்கு எட்டுமுன் மேற்படி பட்டாளங்கள் அங்கே போய்ச் சேர்ந்துவிடும்போலும். அயூப்கான் அப்டேல் ரைமானோடு பந்தக்கட்டுக்குள்ளாய் இருந்தான் என்றும், அப்டேல் ரைமான் பிரிட்டிஷ் அரசாட்சியார் நேருக்கு அபகடமாய் நடந்துகொண்டான் என்றும் வதந்திகள் பிறந்ததுண்டு. ஆனால் இதை வாஸ்தவம் என்று நிச்சயிக்க ஏதுவில்லை. இவ்வாறு தோல்வி நேரிட்டபோதிலும், பிரிட்டிஷ் துரைத்தனத்தார் சபூலிலிருந்து தங்கள் தண்டுகளை விலக்கிவிடவும் யுத்தத்திற்கு முடிவுசெய்யவும் ஏற்கனவே ஆலோசித்திருந்த தீர்மானத்தை மாற்றவில்லை.

**இங்கிலந்து.**—உவேல்ஸ் நாட்டில் நீயுப்போர்ட்டு நகரத்துக்குச் சமீபமாய் ரிஸ்கா என்னும் இடத்து நிலக்கரிச் சுரங்கம் ஒன்றில் பயங்கரமான வியத்து நேரிட்டு, 119 ஆட்கள் உயிர் இழந்தனர். சுரங்கத்துக்குள் அகப்பட்ட ஒருவரும் உயிரோடு தப்பவில்லை. பிரதம மந்திரியாகிய கிலாட்ஸ்தோன் துரை கடினமாய் வியாதிப்பட்டிருந்து, இப்போது ஒருவாறு சுகமடைந்திருக்கிறார். "ஐரிஷ் குழப்பப் பத்திரம்" என்னப்பட்ட சட்டம் ஒன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் அங்கீகாரம் பெற்றபின் பிரபுக்கள் சபையில் தள்ளுபடியாய்ப் போயிற்று. அயர்லாந்திலுள்ள வாரக்குடிகளுக்கு சகாயம்செய்வதே மேற்படி பத்திரத்தின் தாற்பரியம். சுருக்கமான காலத்துக்குள் பார்லிமெந்தார் பெருத்த சோலிகள் நடத்தவேண்டியிருந்தமையால், இத்தவணைக் கூட்டத்தில் அரங்கேற்றக் கருதியிருந்த பத்திரங்கள் அநேகம் இருப்பிலாயின. செப்டெம்பர்௴ ஆரம்பத்தில் பார்லிமெந்து சிறிதுகாலத்துக்கு கலைந்துபோம். முன்னொரு காலத்தில் இந்திய கவர்னர் ஜெனராலாயிருந்த டல்ஹௌஸி பிரபுவின் பௌத்திரனாகிய டல்ஹௌஸி ஏர்ல் பிரபு (Earl Dalhousie) சிலநாளுக்குமுன் தேகவியோகமானார். இந்தியாவின் முந்தின கவர்னர் ஜெனராலாகிய லிற்றன் ஏர்ல் பிரபு இங்கிலாந்தில் போய்ச் சேர்ந்து, காருண்ணிய ராணியவர்களின் முகதரிசனை அடைந்தார்.

செப்தெம்பர்மீ நாள் 30-ஆவணிமீ 19௨முதல், புரட்டாசிமீ 16௨வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| பு | 1 | ௧௯ | உங்கள் வழிகளையும்கிரியைகளையும் சீர்ப்படுத்துங்கள். எரே. 7: 8. |
| வி | 2 | ௨௰ | மேலானவைகளையே நாடுங்கள். கொலோ. 3:2. (வெல் 2:27. |
| வெ | 3 | ௨௧ | என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை. யோ |
| ச | 4 | ௨௨ | நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா ? அப. 8: 30. |
| ஞா | 5 | ௨௩ | கர்த்தர் நீதிசெய்கிற தேவன். ஏசா. 30: 18. |
| தி | 6 | ௨௪ | உமது உண்மை பெரிதாயிருக்கிறது. புல. 3: 23. |
| செ | 7 | ௨௫ | உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள். சங். 95: 8. |
| பு | 8 | ௨௬ | உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள். மத். 5: 44. |
| வி | 9 | ௨௭ | என் மகிமையை வேறொருவனுக்குக் கொடேன், ஏசா. 42: 8. |
| வெ | 10 | ௨௮ | இச்சியாதிருப்பாயாக. ரோ. 7: 7. |
| ச | 11 | ௨௯ | மேய்ப்பனைப்போலத் தமது மந்தையை மேய்ப்பார். ஏசா. 40: 11. |
| ஞா | 12 | ௩௰ | தீமையை நன்மையினாலே வெல்லு. ரோ. 12: 21. |
| தி | 13 | ௩௧ | இந்த நாள் நம்முடைய ஆண்டவருக்குப் பரிசுத்தமான நாள். |
| செ | 14 | ௩௨ | தீமையினாலே வெல்லப்படாதே. ரோ. 12: 21. |
| பு | 15 | ௧ | உமது கட்டளைகளால் உணர்வடைகிறேன். சங். 119: 104. |
| வி | 16 | ௨ | ஒருவனும் மனுஷனைக்குறித்துமேன்மைபாராட்டாதிருப்பானாக. |
| வெ | 17 | ௩ | அவரிடத்தில் திரளான மீட்பு உண்டு. சங். 130: 7. (சங். 51: 11. |
| ச | 18 | ௪ | பரிசுத்தஆவியைஎன்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலிரும். |
| ஞா | 19 | ௫ | கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். கொ. 14: 16. |
| தி | 20 | ௬ | கர்த்தருக்குள் காத்திரு. சங். 37: 7. |
| செ | 21 | ௭ | தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்கவேண்டும். 1 தெச. 2: 11. |
| பு | 22 | ௮ | தீமையைவிட்டு விலகி நன்மை செய். சங். 37: 27. |
| வி | 23 | ௯ | உங்கள் நன்மை தூஷிக்கப்பட இடங்கொடாதிருங்கள். |
| வெ | 24 | ௧௰ | என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்யவிரும்புகிறேன். |
| ச | 25 | ௧௧ | அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள். ரோ. 11: 33. |
| ஞா | 26 | ௧௨ | உமது வெளிச்சத்தையும்உமது சத்தியத்தையும்அனுப்பியருளும். |
| தி | 27 | ௧௩ | கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். பிலி. 4: 4. |
| செ | 28 | ௧௪ | என் ஆத்துமா கர்த்தரில் களிகூரும், சங். 35. 9. |
| பு | 29 | ௧௫ | தேவன் ஒளியாயிருக்கிறார். 1 யோ. 1: 5. (33: 5. |
| வி | 30 | ௧௬ | பூமி கர்த்தருடைய காருணியத்தினால் நிறைந்திருக்கிறது. சங். |

## விசேஷ நாட்கள்.

1. அமாவாசை.
5. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 15-ம் ஞாயிறு.
12. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 16-ம் ஞாயிறு.
13. பௌரணமி.
19. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 17-ம் ஞாயிறு.
21. பரி-அப். மத்தேயுவின் திருநாள்.
26. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 18-ம் ஞாயிறு.
29. பரி-மிகாவேல் முதலான சகல தேவதூதர்களின் திருநாள்.

# நற்போதகம்.

௰. அக்டோபர்மீ. ௲அ௱௵.

## யோசுவாவின் புஸ்தகம்.

### I. அதிகாரம்.

1. "மோசே மரித்தபின்பு." மரித்த உடனே அல்லது மோசேக் காகத் துக்கித்த நாட்கள் முடிந்தபின், யோசுவா மோசேக்குப்பின் அதிகாரியாக வரவேண்டியவரென்று முன்னமே நியமிக்கப்பட்டிருந் தபடியால், எண். 27: 18. உபா. 31. அவர் மரித்த உடனே தேவனால் அந்த உத்தியோகத்தில் உறுதிப்படுத்தப்படுகிறார்.

"கர்த்தருடைய தாசன்." மோசே என்பவர் இந்தப் பெயரால், இந்த வாக்கியத்திலும் அடுத்த வாக்கியத்திலும், உபா. 34: 5-லும் மற்ற அநேக இடங்களிலும் அழைக்கப்படுகிறார். இதற்கு முகாந்தரங்களு ண்டு. (1) அவருக்குக் கனமாக, (2) தேவஊழியக்காரனாகிய அவர் தேவநாமத்தினாலே சொன்ன பிரமாணங்களுக்கும், எழுதிய ஆகமங் களுக்கும், அதிகாரங்கொடுக்க (3) இஸ்ரவேலர் மோசேயைத் தெய்வ மென்றெண்ணாமல் அவருடைய ஊழியக்காரனாக மாத்திரம் மதித்து, அவரை வணங்காமலும், அவருடைய ஏற்பாடுகளையே எப்போதும் பிடிவாதமாய்க் கைக்கொள்ளாமலிருக்க, (4) இவர் தேவனுடைய வீட் டில் ஊழியக்காரனாகவும், கிறிஸ்துவோ அவ்வீட்டுக்கு மேற்பட்டவ ரான குமாரனாகவும், கர்த்தாவாகவும் இருக்கிறாரென்று காட்டவுமே. எபி. 3: 3—6. இப்படிச் சொல்லப்படுகிறார்.

"கர்த்தர் பேசினார்." சொப்பனத்தின் மூலமாயாவது தரிசனத் தினாலாவது, எண். 27: 21. ஊரிமினாலாவது பேசியிருக்கலாம்.

2. "இந்த யோர்தான்" உங்களுக்குச் சமீபமாய் முன்னாலேயி ருக்கிற யோர்தான். இதுவே கானானில் அவர்கள் பிரவேசிக்க, இப் போதிருக்கிற தடை. "நான் கொடுக்கும் தேசத்துக்கு" முன் வாக் குத்தத்தத்தினால் அதின் சுதந்தரத்தைக் கொடுத்தார். இப்போது நே ராகவே கொடுக்கிறார்.

4. "இந்த லீபனோன்" இது சீரியாவிலுள்ள விசேஷித்ததும், கானானுக்கு வடஎல்லையுமான மலை. தேவன் மனுரூபமாக வந்து அவனுக்கு அந்த மலையைச் சுட்டிக் காண்பித்த பாவனைபோலிருக்கிறது. "ஏத்தியரின் தேசம்" இவர்கள் கானானியரோ. ஆதி. 15: 16-ல் எமோரியரென்றழைக்கப்படுகிறார்கள். ஏத்தியர் மற்றவர்களிலும் பெருக்கமாகவும் அதிகப் பெலசாலிகளுமாகக் காணப்படுவதாலும், எண். 13: 33. 14: 1. 2 இராசா 7: 6. அவர்களில் சிலர் எபிரோனில் இராட்சதராயிருந்தபடியாலும், ஆதி. 25: 9, 10. 26: 34. 27: 46. கானானியரில் ஓர் வகுப்பாராகிய இவர்கள், எல்லா வகுப்பாரையும் குறிக்கும் பொதுப் பெயராக அழைக்கப்படுகிறார்கள்.

இந்த வாக்கியத்தில் கண்டிருக்கிற எல்லைப்படி இந்தத் தேசத்தை இஸ்ரவேலர் முழுதுமாகச் சுதந்தரிக்கவில்லை. (1) இஸ்ரவேலருடைய சோம்பலும், வீண் பயமும், தேவனுக்குக் கீழ்ப்படியாமையும், மற்றும் குறைவுகளினிமித்தமுமே அந்த முழுச் சுதந்தரத்தையும் அடையவில்லை. நியா. 2: 20. (2) தேசம் ஒருமிக்க அல்ல, படிப்படியாய் இஸ்ரவேலருடைய பெருக்கத்துக்கும் அவசியத்துக்குந்தக்கதாகச் சுதந்தரிக்கப்பட்டது. அக்காலத்தில் கானான்தேசம் அவர்களுக்குப் போதுமானதாயிருந்தது. இஸ்ரவேலருடைய பாவங்களினிமித்தம் அவர்கள் குறைக்கப்பட்டுஞ் சிறைபிடிக்கப்பட்டுமிருந்தபடியால், அவர்கள் சுதந்தரத்தை விசாலிக்க அவசியங் காணப்படவில்லை. (3) ஐப்பிராத் நதிவரையில், அவர்கள் சுதந்தரம் நீண்டிராவிட்டாலும் தாவீது, சாலொமோனென்ற இராஜாக்கள் காலத்தில், அவ்விடத்தார் இஸ்ரவேலருடைய ஆளுகையின் கீழ் கப்பங் கட்டினார்கள்.

5. உபா. 7: 24. 31: 6—8. ஏசாயா 43: 5. எபி. 13: 5. சத்துருக்களை மேற்கொள்ளவும், கடினக்கழுத்துள்ள இஸ்ரவேலரை ஆளவும், தேவன் மோசேயோடிருந்ததுபோல யோசுவாவோடும் இருப்பேனென்கிறார். யோசுவாவோ கானானியரைப் பார்க்கிலும் இஸ்ரவேலரைப் பற்றியே அதிகப் பயமுடையவராயிருந்தார்.

6. யோசுவாவென்பவர் தைரியமும், மனநிர்ணயமுமுள்ளவராயிருந்தாரென்றாலும், இப்போது அவருக்குப் பெரிதும், வருத்தமும் ஆதனமுமான வேலை கொடுக்கப்பட்டதாலும், மோசேயோடு தம்மை ஒப்பிட்டுப் பார்க்கையில் இந்த உத்தியோகத்துக்குத் தம்மை அபாத்திரனென எண்ணினதாலும், மோசேயின் காலத்திலேயே இஸ்ரவேலர் அடங்காத முரட்டாட்டக்காரராயிருந்தபடியால், அவர்களை ஆளுவது தமக்குப் பாரமென நினைத்ததாலும், இவ்வித வாக்குத்தத்தமும் ஆறுதலுமான போதனைகள் அவருக்கு வேண்டியதவசியமே.

7. யோசுவா இஸ்ரவேலருக்குத் தளகர்த்தனாயிருந்தாலும் தேவனுக்குக் கீழ்ப்பட்டவரானதால், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளக் கடமைப்பட்டவரென்பதை ஞாபகப்படுத்துகிறார். உபா. 31: 7. 5: 32. 28: 14.



8. உபா. 17: 18, 19. சங். 1: 2. வேதாகமமே யாவருக்கும், சொந்த வேலைகளையும், உத்தியோக கடமைகளையுஞ் செவ்வையாய் நிறைவேற்றுவதற்குத் தகுந்த எத்தனமாயிருக்கிறபடியால், அதை வாசிக்கிறதற்கும், படிக்கிறதற்கும், போதிக்கிறதற்கும் விடாமுயற்சி வேண்டியது.

9. உபா. 31: 7, 8, 23. எரே. 1: 8.

11. "போசனபதார்த்தங்களை ஆயத்தம்பண்ணுங்கள்." இஸ்ரவேலர் வனாந்தரத்தில் மன்னாவால் போஷிக்கப்பட்டவர்களாயிருந்தாலும் அவர்களுக்குச் சமயங் கிடைத்தபோதெல்லாம் மற்றப் போசனபதார்த்தங்களையுஞ் சாப்பிட்டார்களென்றறிகிறோம். உபா. 2: 6, 28. எமோரியர் தேசத்தில் இப்போது அவர்களிருக்கிறபடியால், அத்தேசத்தின் போசனத்தையுஞ் சாப்பிட்டார்கள்.

"மூன்றுநாளைக்குள்ளே" வேவுகாரர் இன்னம் அனுப்பப்படவில்லையே. அவர்கள் தப்பி 3-நாள் மலையில் ஒளித்திருந்தார்களே. 2: 22. வேவுகாரர் திரும்பிவந்து மூன்றுநாளைக்குப் பின்பல்லவோ யோர்தானைக் கடந்தார்கள். 3: 2. அப்படியிருக்க இப்போது மூன்றுநாளைக்குள்ளே யோர்தானைக் கடப்பீர்களென்று எப்படிச் சொல்லலாம்? வேவுகாரர் வந்ததின் பின்னாலேதான் யோசுவா இந்த வார்த்தைகளைச் சொல்லியிருப்பார். வேதாகம சரித்திரங்களில் முன்பின் என்கிற வித்தியாசமில்லாமல் எழுதப்பட்டிருக்கிற அநேக சங்கதிகளுண்டு. செப்தியுஜென்று திருப்புதலில் "இன்னம் மூன்றுநாள்" என்றும் கல்தேயத் திருப்புதலில் "மூன்றுநாளின் முடிவில்" என்றும் வேறு திருப்புதல்களில் "மூன்றுநாளைக்குப்பின்" என்றும் கண்டிருக்கிறது. இந்த வார்த்தைகள் சொல்லப்பட்ட அன்றே வேவுகாரர் அனுப்பப்பட்டிருக்கலாம். வேவுகாரர் மூன்றாம்நாள் கடைசியில் வந்திருப்பார்கள். 3: 2. இரண்டாந்தரம் இந்தக் கட்டளை கொடுத்திருப்பார்.

13. எண். 32: 20—28.

14. "யுத்தவீரர் யாவரும்" இஸ்ரவேலர் எகிப்தியரிடத்திலிருந்தும், அமலேக்கியர் எமோரியர் முதலியவர்களிடத்திலிருந்தும் பறித்துக்கொண்டதும், மற்றச் சாதிகளிடத்திலிருந்து விலைக்கு வாங்கிக் கொண்டதுமான ஆயுதங்களை உடைத்தாயிருந்தார்கள்.

"அணியணியாய்" யாத். 13: 18. யுத்தவரிசையாய் ஐந்தைந்து பேராய் ஆயுதப்பாடானவர்கள் யுத்தத்துக்கு வரவும், மீதியானவர்கள் அவர்களுடைய சமுசாரங்கள், பிள்ளைகள், சொத்துகள் முதலியவைகளைச் சத்துருக்கள் கையினின்று காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டு அவ்விடம் இருக்கவும் உத்தரவுபெற்றார்கள்.

## கேள்விகள்.

1. யோசுவாவைப்பற்றித் தெரிந்த சங்கதிகளை எழுதவும். இவர் கிறிஸ்துவானவருக்கு எப்படி முன்னடையாளமானவர்?

2. யோசுவா தன் உத்தியோகத்துக்குத் தேவனால் நியமிக்கப் பட்டபோது, அவரால் பெற்ற கற்பனைகளெவை? வேறெந்தச் சமயத் திலும் தைரியப்படுத்தப்பட்டார்?

3. யோசுவாவின் காலத்தில் இஸ்ரவேலர் அவர்களுக்கு முன்னி ருந்தவர்களைப் பார்க்கிலும் நல்லவர்களென்பதற்கு இந்த ஆகமத்திலி ருந்து உதாரணஞ் சொல்லவும்.

4. இந்த அதிகாரத்தினால் தேவஊழியக்காரர் கற்றுக்கொள்ள வேண்டிய படிப்பினைகளெவை?

5. பெரிய நதி, பெரிய சமுத்திரம், லீபனோன் இவைகளைப்பற் றித் தெரிந்ததை எழுது.

6. அதிகாரிகளுக்குச் செய்யவேண்டிய கடமையைப்பற்றி என்ன படிக்கிறோம்?

7. 1: 4-ல் சொல்லப்பட்டிருக்கிற எல்லைகளுக்குட்பட்ட தேசங் களை இஸ்ரவேலர் ஒருமிக்கச் சுதந்தரித்துக்கொண்டார்களா இல்லை யா? ஏன்?

8. கர்த்தர் உம்மோடிருப்பாராக. யார், யாருக்கு இப்படிச் சொல்லுகிறார்கள்? இப்படியே யார், யாரைப்பற்றிச் சொல்லியிருக் கிறார்கள்?

9. யோசுவாவுக்குச் சொல்லப்பட்ட ஆறுதலான வாக்கு, எக் காலத்து விசுவாசிகளுக்குஞ் செல்லத்தக்கது என்று காட்டவும்.

10. ரூபேனியர், காதியர் சேர்ந்து, கீலேயாத்தில் பங்கு கேட்ட முகாந்தரமென்ன? முந்திச் சுதந்தரம்பெற்ற அவர்களுக்குக் கொடுக் கப்பட்ட கட்டளை என்ன? அவர்கள் சகோதரருக்கு முன்பாக அணி யணியாய்க் கடந்துபோனதற்கு நியாயமென்ன?

## II. அதிகாரம்.

1. சேத்தீம். ஆபேல் சேத்தீமென்றும் பெயர். எண்ணா. 33: 49.

"இரண்டு மனிதர்" மோசே செய்ததுபோல வேவுகாரர் 12- பேர் அனுப்பப்படவில்லை. ஏனென்றால் மோசேயின் காலத்தைப் பார்க் கிலும், கானானியர் இப்போது அதிகப் பயமுற்றவர்களாயிருந்ததாலும்,



அக்கினியுவைப்பற்றி ஐயங்கொண்டவர்களாயிருந்ததாலும், தேசமுழுவ தையுமல்ல, எரிகோவை மாத்திரம் வேவுபார்க்கப்போனதாலுமே. யோசுவா. உபாகமம் 1-ல் ஜனங்கள் செய்ததுபோல, அவநம்பிக்கை யாயல்ல, தனக்கும், தன் சேனைக்கும் தைரியமுண்டாகத்தக்கதாக, தேவனால் நேரான கட்டளைபெற்றவராய், வேவுகாரரை அனுப்பினார். அவர்கள் தேவன்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயும், தங்கள் ஜாதியா ருக்காக ஜீவனை வெறுத்தவர்களாயும் யோசுவாவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்துபோனார்கள்.

"வேசியின் வீடு." நியாயா. 11: 1. 16: 1. 1 இராசா 3: 16. மூல பாஷையில், ஷன் என்ற பதத்தின் பொருள் போஷிக்கிற என்றிருப் பதால், வேசியென்ற வார்த்தைக்கு அன்னியரை உபசரிக்கிறவளென்று அருத்தங்கொள்ளும். இந்தக் கருத்தாகவே, யூத ரபிமார்களும் அபிப் பிராயப்படுகிறார்கள். அநேகருடைய அபிப்பிராயங்கள் இதற்கெதிரி டையாயிருக்கிறது. புறச்சாதியாருக்குள் வேசித்தனமானது பாவ மல்லவென்றும், அது அற்பக்காரியமென்றும் எண்ணப்படுவதுண்டு. இப்போது இராகாப், பணத்துக்காகிலும் தீதுக்காகிலும் வேவுகார ரை ஏற்றுக்கொள்ளாமல் விசுவாசத்தினாலேயே அவர்களைச் சேர்த் துக்கொண்டாள். எபி. 11: 31. யாக். 2: 25.

2. சங். 127: 1. நீதிமொ. 21: 30.

4, 5. இராகாபென்பவள் இராஜாவுக்கும், தன் ஜனத்துக்கும் பயப்படாமல் இந்தத் தேசத்தைத் தேவன் இஸ்ரவேலர் கையில் ஒப் புக்கொடுப்பாரென்ற விசுவாசத்தால் வேவுகாரரை ஒளித்துவைத் தாள். யாரென்றும் எவ்விடத்தாரென்றும் அறியாதிருந்தும் அதை விசாரிக்காமல் ஒளித்துவைத்தது ஆச்சரியம். வேவுகாரர், தன் வீட் டிலிருக்க அவர்களில்லையென்று அவள் சொன்னது குற்றமாயினும் அவளுடைய எண்ணமும், நம்பிக்கையும் நல்லது. ஆனதால் அவளு டைய குற்றம் கிருபையாக மன்னிக்கப்பட்டு அவளுடைய விசுவாசம் வியந்துகொள்ளப்பட்டதோடு பலனளிக்கவும் பட்டது. 9—13.

"துறைகள்." யோர்தானைக் கடந்துபோவதற்கு இசைந்த திட் டையான இடங்கள்.

"வாசலடைக்கப்பட்டது." சத்துருக்கள் உட்பிரவேசியாதபடிக் கும், வேவுகாரர் தப்பிப்போகாதபடிக்குமே.

9. எபிரேயப்பாஷையைப் பேசுகிற வேவுகாரர் கானான் பாஷை பேசுகிற இராகாபோடு எப்படிச் சம்பாஷிக்கக் கூடும்? உத்தரவு. (1) எபிரேயப் பாஷைக்கும், கானான் அல்லது பெனிக்கேயப் பாஷைக் கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. கல்விமான்கள் அந்த இரண்டு பா ஷைகளும், கொஞ்சங்குறைய சமமென்றும், அநேக வார்த்தைகள், இரு பாஷைக்கும் பொதுவாயிருக்கின்றனவென்றுஞ் சொல்லுகிறார்,

கள். (2) இதற்கும் இதுபோன்ற மற்ற சமயங்களுக்கும் உதவியாயிருக்கும்பொருட்டு யோசுவாவின் உத்தரவுப்படி சில எபிரேயர் கானான் பாஷை கற்றிருக்கலாம்.

"உங்களைப்பற்றிய திகில்." யாத்தி. 23: 27. 34: 24. உபா. 11: 25. 28: 7.

12. "கர்த்தர்பேரில்." மெய்யான தெய்வமாகிய உங்கள் தேவன் மேல் தேவனண்டைக்கு அவள் மனந்திரும்பினதையும், அவரையே வணங்கத் தான் தெரிந்துகொண்டதையும் இதினால் காட்டுகிறாள்.

13. "நிச்சயமான அடையாளம்." தன்னையும், தன்னுடையவர்களையும் பொதுவான சங்காரத்திலிருந்து அவர்கள் காத்துக்கொள்வார்களென்பது நிச்சயமாகவும், அவர்கள் செய்த உடன்படிக்கைக்குச் சாட்சியாகவும், தானும் மற்றவர்களும் இரட்சிக்கப்படுவதற்கு எத்தனமாகவுமிருக்கும்படி அடையாளங் கேட்டாள்.

15. இராகாப் வேவுகாரரை மதில் வழியாய் இறக்கிவிட்டது போல், பவுலப்போஸ்தலனையும், சீஷர்கள் தமஸ்குப் பட்டணத்தில் கூடைவழியாய் இறக்கிவிட்டார்கள். அப். 9: 25. அலங்கத்தின் வாசல் அடைபட்டுப்போனதாலும், இராகாபின் வீடு அதிலிருந்தபடியாலும் அவள் விசுவாசத்தோடு கூடிய இரக்கத்துடன் அவர்களைத் தப்புவித்தாள்.

16. எரிகோவுக்குச் சமீபமாய்ச் சிறு மலைகளுண்டு. அந்த மலைகளில் மறைந்துகொள்ளத்தக்கதான குகைகளுமுண்டு. வேவுகாரர் அங்கே மூன்றுநாள் முழுவதுமல்ல, ஒருநாள் முழுவதும் மற்ற இரண்டு நாட்களில் குறைவாயுமிருந்திருக்கலாம். யோசு. 1: 11.

17, 18. வேவுகாரர் இறக்கிவிடப்படுமுன்னதாகவே, இராகாபுடன் இவ்வித ஏற்பாடுசெய்திருக்கவேண்டியது. இஸ்ரவேலருடைய தலைச்சன்பிள்ளைகள் சங்கார தூதனுக்குத் தப்ப, பஸ்காஆட்டுக்குட்டியின் இரத்தம் நிலைகளில் பூசியிருந்தது நல்ல எத்தனமானதுபோல, தன் வீட்டாருடன் இராகாப், தப்பும்படி சன்னலில் கட்டியிருந்த சிவப்புநூல் கயிறும் ஓர் எத்தனமாயிற்று.

21. வேவுகாரர் புறப்பட்டுப்போவதற்குமுன், சிவப்புநூல் கயிற்றைத் தூரத்திலிருந்தும் அவர்கள் பார்க்கத்தக்கதாகவும், செய்த உடன்படிக்கையை மறந்துபோகாதபடி செய்யவும், தனக்கு ஆறுதலும் தன் விடுதலைக்கு நிச்சயமுமான அடையாளமாயிருக்கவும் கட்டிவைத்தாள்.

22. அக்காலத்திலும் அவ்விடங்களிலுமுள்ள வழக்கப்படி, மூன்றுநாளைக்குப் போதுமான போசனம் வேவுகாரருக்குக் கொடுத்தனுப்பியிருப்பாள்.



23. எண். 13-ல் சொல்லியபடி, வேவுகாரர் ஜனங்களிடத்தில் அல்ல, யோசுவாவிடத்தில் மாத்திரம் அறிவித்தார்கள்.

## கேள்விகள்.

1. வேவுகாரர் இரகசியமாய் அனுப்பப்படவேண்டியதென்ன?

2. இராகாபுடைய விசுவாசம் வேதத்தில் எப்படி வியந்துகொள்ளப்படுகிறது? விசுவாசத்தை எப்படிக் காண்பித்தாள்? அவள் விசுவாசம் பலமுள்ளதென்று எப்படி அறியலாம்?

3. கானானியரோடு உடன்படிக்கைசெய்யக்கூடாதென்று தேவ கட்டளையிருக்க, வேவுகாரர் செய்தது சரியா?

4. சித்தீம், எரிகோ எங்கே? அவைகளில் நடந்த விசேஷங்களென்ன?

5. இஸ்ரவேலரைக்குறித்துக் கானானியர் பயந்ததினால் எந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று? இதினால் நாம் அறிந்துகொள்ளும் படிப்பினையென்ன?

6. சிவப்புநூல் கயிற்றைக் கட்டித் தொங்கவிட்ட முகாந்தரம் யாது? அது எதற்குக் குறிப்பாயிருக்கலாம்?

7. மத்தேயு 1-ல் வருகிற வம்ச அட்டவணையில் சொல்லப்படுகிற ஸ்திரீகளார்? எப்படிப்பட்டவர்கள்? அவர்கள் பேர் அங்கே சொல்லப்படுங் காரணமென்ன?

---

## III. அதிகாரம்.

1. "அதிகாலையில்" நமக்கு முதலாவது தோன்றுகிறபடி, வேவுகாரர் திரும்பினபின்பல்ல, 2-ல் சொல்லியபடி 3-நாளைக்குப் பின்புள்ள காலையில் மறுநாள் காலையில் யோர்தானைக் கடந்துபோகவேண்டியதற்காகவும், அந்த அற்புதம் யாவருக்கும் பிரத்தியட்சமாயும் ஆட்சேபிக்கக் கூடாத வகையாயுமிருக்கவும், சத்துருக்களுக்கு எத்திக்கிலும் பயமுண்டாயிருக்கவும் நோக்கமாக அங்கே இராத்தங்கினார்கள்.

2. "மூன்றுநாள் சென்றபின்பு" யோசுவா 1: 11-ல் சொல்லிய மூன்றாம்நாளின் முடிவில் அல்லது உபா. 15: 1. 14: 28. எரே. 25: 12. லூக். 2: 21. அப். 2: 21-ல் காட்டியபடி மூன்றாம்நாளின் கடைசியில் என்றும், (2) அந்த நாட்கள் முடிந்தபின்பு யோசு. 1: 11. அதிபதிகள் பொதுவாய்க் கட்டளையிட்டிருக்க இப்போது 2-ம் தரமாக விசேஷித்த வகையாய் கட்டளையிடுகிறார்கள்

3. அதிபதிகள் யோசுவாவின் நாமத்தில் அதாவது அவருடைய அதிகாரத்தின்பேரில் சனங்களுக்குக் கட்டளையிடுகிறார்கள். இங்கே லேவியர் மாத்திரமல்ல ஆசாரியரும் கூட இருந்தார்கள். எண். 4-ல் லேவியர் மாத்திரந்தான் உடன்படிக்கைப்பெட்டியைச் சுமக்கும்படி கட்டளையிருந்தாலும், விசேஷித்த சமயங்களில் யோசு. 6: 6. ஆசாரியரும் சுமக்கிறதுண்டு.

இதுவரையும் உடன்படிக்கைப்பெட்டி மேகஸ்தம்பத்தின் நடுவில் அதாவது பாளையத்தின் நடுவில் போயிற்று. இபபோது அது மறைந்து போனதால் அது சனங்களுக்கு முன்பாகப் போகவேண்டியதாயிற்று.

4. இரண்டாயிரம் முழம் 1000 செஜத்துக்குச் சரி. அவ்வளவு தூரம் இஸ்ருவேலர் வனாந்தரத்தில் கூடாரம் அடித்திருந்தார்கள். இஸ்ருவேலர் தங்கள் கூடாரங்களிலிருந்து தேவனை ஆராதிக்கும்படி உடன்படிக்கைப்பெட்டிக்கு நாடோறும் விசேஷமாய் ஓய்வுநாள்தோறும் போனதால் ஓய்வுநாள் பிரயாணமாக யூதருக்குள் 2000 முழம் தூரமாக கணக்கிட்டிருக்கிறது என்று சிலர் நினைக்கிறார்கள். வேறு சிலர் இது சரியல்ல. உடன்படிக்கைப்பெட்டிக்குச் சமீபமாயிருந்தவர்களுக்கு மாத்திரம் 2000 முழம் என்றாலும் மற்றவர்களுக்கோ அதிகத் தூரமாயிருந்ததால் ஓய்வுநாள் பயணமென்பது அதிகத் தூரமான இடமென்கிறார்கள்.

உடன்படிக்கைப்பெட்டிக்கு கனமாகவும் அவர்கள் நடக்கவேண்டிய வழியை அறியும்படியாகவும் அதற்கு சமீபமாய் வராதபடி கற்பிக்கப்பட்டார்கள். உடன்படிக்கைப்பெட்டி அவர்களுக்கு முன்பாக ஆற்றுக்கு நடுவே போகவும், அவர்கள் கடந்துபோகுமட்டும் அங்கே நிற்கவும் அதினால் அவர்கள் சந்தோஷமாய்க் கடந்துபோவதின் நிச்சயம் தெரியும்படிக்குமே அப்படி கற்பிக்கப்பட்டார்கள்.

5. யோர்தான் நதியைக் கடந்துபோகிற தேவனுடைய பெரிய தயவை அடையப்போகிறபடியால் அதைக் கவனமாயும் வணக்கமாயும் நினைத்து மதித்துக்கொள்ளவும், அது அவர்கள் இருதயங்களிலும் ஞாபகங்களிலும் நிலைத்திருக்கும்படிக்கும் அவர்கள் சரீரத்தையும், ஆத்துமாவையும் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளும்படியாக கற்பிக்கிறார். யாத். 19: 10. லேவி. 20: 7. 1 பேது. 1: 16. எபி. 10: 22.

6. எஸ்ரு. 4: 15-ல் முன் வனாந்தரத்தில் செய்ததுபோல இஸ்ருவேலருடைய பாளையத்தின் நடுவாகவல்ல, இப்போது அவர்கள் முன்பாக ஆசாரிமார் தோள்களில் சுமந்துபோகச் சொல்லுகிறார். எண். 7-9.

7. மோசேயின் உத்தியோகத்துக்கு யோசுவாவே நியமிக்கப்பட்டிருக்கிறாரென்பதை அறிந்து அவரைக் கனஞ்செய்யவும் அவருடைய அதிகாரத்துக்கு அடங்கவும், யோசுவா மூலமாய் கானான்தேச சுதந்



தரம் கிடைக்குமென்பதை அறியச்செய்யவும் நோக்கமாக தேவன் இந்த அற்புதம் நடக்கச்செய்தார். 1 நாளா. 29: 25. 2 நாளா. 1: 1.

9. யோசுவா உடன்படிக்கைப்பெட்டி, அல்லது ஆசரிப்புக்கூடாரம், அல்லது சபைகூடிவரும் இடத்துக்குச் சனங்களை வரும்படி செய்து, தேவனே காத்தரென்றும் வானத்துக்கும் பூமிக்குமுரிய சருவவல்லமையுள்ள அதிபதியென்றும், இஸ்ருவேலர்மேல் பட்சமும் கவலையுமுள்ளவரென்பதையும அறிந்துகொள்ளும்படிக்கான அத்தாட்சியை பார்க்கப் போகிறீர்கள் என்கிறார்.

10. சாதிகளின் தேவர்கள் மந்தமும், உயிரற்றதும் புத்தியற்றதும் அசைவற்றதுமாயிருக்க, நம்முடைய தேவன ஜீவனும் வல்லமையும் சுறுசுறுப்புமுள்ளவரானதால், நம்மைக் காக்கவும் நமது நன்மைக்காகப் பிரயாசப்படவும் தக்கவரென்பது நிச்சயம். இப்படிப்பட்ட ஜீவனுள்ள தெய்வம் நம்மைப் பெலப்படுத்தவும் ஆதரிககவும நம்முடைய நடுவிலிருக்கிறாரென்கிறார். யாத். 17: 7. உபா. 31: 17. யோசு. 22: 31.

13. சருவபூமிக்கும் ஆண்டவர், சேர்ந்த தண்ணீரைப் பிரிந்துபோகச் செய்யத்தக்கவர். ஓடுகிற தண்ணீர் சவக்கடலுக்கு நேராக ஓடின. வந்த தண்ணீர் தேசமெங்கும் சிதறிப்போகாதபடி குவியலாக நின்றன. சங். 78: 13. 114: 3.

15. "அறுப்பு நாட்கள்." இது வாற்கோதுமை அறுப்பே. கோதுமை அறுப்பு முடிந்துபோயிற்று. ரூத். 1: 22. 2 சாமு. 21: 9. அவர்கள் கடந்தவுடன் பஸ்காவை ஆசரித்தபடியால் தெரியவருகிறது. யோசு. 5: 10. அவர்கள் ஆபீப் மாதம் 14-யில் முதற் விளைச்சலின் கதிர்க் கட்டை கொண்டுவரவேண்டியிருந்தது. லேவி. 23: 10. உபா. 16: 9, 10. இந்த வாற்கோதுமை அறுப்பே காங்கையான தேசங்களில் வசந்த காலத்தின் துவக்கத்தில் ஆற்றுவெள்ளம் புறப்படும்போது துவக்கும். யோர்தான் நதி, மாரிகாலத்தில் மழைபெய்தபடியாலும், மலைகளிலுள்ள மூடுபனி இளகிப்போகிறதாலும், கரை புரண்ட வெள்ளம் வரச்செய்தது. தேவன் இந்த அற்புதம் அதிக மகிமைப்படும்படிக்கும், இஸ்ருவேலருக்கு ஆச்சரியமும், கானானியருக்குப் பயமுமுண்டாகும்படிக்கும், இஸ்ருவேலர் கானானில் பிரவேசித்தவுடன் சம்பூரண போசனபதார்த்தங்கள் சவதரிக்கவும் தேவன் இதுவே நல்ல காலமாகத் தெரிந்துகொண்டார். 1 நாளா. 12: 15. எரேமி. 12: 5. 49: 19.

16. மிகவும் சிறிதான ஆதாம் ஊருக்குச் சமீபமாக பிரபலியமாக அறியப்பட்ட "சார்தான்" இருந்தது. இது 1 இராசா 4: 12. 7: 46-ல் சொல்லிய இடத்துக்குச் சரியென்பாருமுண்டு. அக்காலத்தில் அது பேர்பெற்றிருந்தும் பிற்காலத்தில் மங்கின இடமாயிருக்கலாம்.

"எரிகோவுக்கு எதிரே" இங்கே வல்லமையுள்ள இராசாவும், பலசாலிகளும் யுத்தவீரருமான சனங்களும் இருந்ததுமன்றி விசேஷித்த அரணான பட்டினமாயுமிருந்ததினாலும், இஸ்ரவேலர் நீடித்ததும் இளைப்புற்றதுமான பிரயாணங்களுக்குப்பின், இளைப்பாறும்படி வசதியும் செழிப்புமுள்ள இடமானதாலும், இஸ்ரவேலரை யுத்தத்துக்கு உற்சாகப்படுத்தும்படிக்கும் அதற்கு நேரே கடந்துபோனார்கள்.

17. தண்ணீர் வற்றிப்போகும் மட்டும் கரையில் நின்று சனங்கள் முழுவதும் கடந்துபோகுமட்டும் யோர்தான் நடுவில் ஆசாரியர் நின்றார்கள். (1) மூலத்தில் "நடு" என்பது சரியான பாதி. ஆதி. 45: 6. யாத். 8: 22. யோசு. 7: 13. 10: 13. (2) ஆழமான பள்ளத்தில் என்று கருத்தாம். இஸ்ரவேலர் யோர்தானைக் கடக்கிறதில், அவர்களை உற்சாகப்படுத்தி நடத்தவும், மோசம் வராதபடிக்குக் காக்கவும் நடுவில் நிற்பதுதான் தகுதியான இடம். (3) யோ. 4: 3, 8-ல் சாட்சிக்கும் அடையாளத்துக்கும் எடுக்கப்பட்ட கற்கள் ஆற்றின் மத்தியில் எடுப்பதற்குச் சரியான இடம். அதினால் ஆசாரிமார் யோர்தான் நடுவிலிருந்து மேலே எறிவாருங்கள் என்று கற்பிக்கப்படுகிறார்கள்

## கேள்விகள்.

1. யோசுவா எந்தெந்தப் பெரிய காரியங்களைச் செய்வதற்கு அதிகாலையில் எழுந்தார்? அதினால் நாம் படிக்கிற படிப்பினை.

2. யோர்தானைக் கடந்த சங்கதி அற்புதமென்று ரூபியுங்கள்? தேவன் இந்த அற்புதம் நடக்கச்செய்த நோக்கமென்ன? இதினால் உண்மைபெறுகிற வாக்குத்தத்தமென்ன? இது என்னத்துக்கு நிச்சயமும் ஆறுதலுமான அடையாளமாயிருந்தது?

3. இஸ்ரவேலர், எந்தக் காலத்தில் கானானில் பிரவேசித்தார்கள்? அது வசதியான காலமென்று காட்டுங்கள்?

4. "உங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளுங்கள்." இப்படி எந்தெந்த சமயங்களில் யார் யார் ஏன் கற்பிக்கப்பட்டார்கள்? இதினால் நாமும் படிக்கிறதென்ன?

5. உடன்படிக்கைப்பெட்டி புறப்படும்போதும் நிற்கும்போதும் செய்யப்படும் செபமென்ன? இதற்குரிய மேன்மையுமென்ன?

6. தேவன் தம்மைக் கனஞ்செய்கிறவர்களைக் கனஞ்செய்கிறாரென்பதற்கு உதாரணமுண்டா?

7. யோர்தான் நதி உற்பத்திமுதல் அது விழுகிறவரையுமுள்ள விசேஷங்களை எழுதுங்கள்? இப்போது இருகரையும் புரண்டுவருகிறதற்கு முகாந்தரமென்ன? இஸ்ரவேலர் லேசாய்க் கடந்துபோகாதபடிக்கு இந்தத் தடை நேரிட்டதால் நாம் படிக்கிறதென்ன? இந்த அற்புதத்தை உறுதிப்படுத்துகிற வேதவாக்கியங்களைச் சொல்லுங்கள்? இதற்கிசைவாய் சுவிசேஷ பிரபலியத்துக்கு தேவன் செய்கிறதென்ன?



8. இந்த அதிகாரத்தில் இஸ்ரவேலர், ஆசாரியர், யோசுவா என்பவர்களுடைய விசுவாசத்துக்குரிய ருசுத் துலக்குங்கள்?

9. உடன்படிக்கைப்பெட்டியை ஆசாரியர் எடுத்துக்கொண்டு போன விஷயத்தில் போதகன்மார் அவர்களுக்கு எப்படி ஒத்திருக்கிறார்கள்?

10. லேவியர், ஆசாரிமாருடைய வேலைகளென்ன? தாவீது இராசாவின் காலத்தில் எத்தனை பேர்? எப்படி வகுக்கப்பட்டார்கள்?

---

## Exposition of the Church Catechism.

## ஞானோபதேசவினாவிடை
### வியாக்கியானம்.

### ௯-ம் அதிகாரம்.

### விசுவாசப்பிரமாணம்.

௨-ம் பிரிவு.

(கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றி.)

(தொடர்ச்சி.)

வினா. இயேசுகிறிஸ்துவைப்பற்றி விசுவாசப்பிரமாணம் இன்னம் நமக்குப் போதிக்கிறது என்ன?

விடை. அவர் "பொந்தியுபிலாத்துவின் காலத்தில் பாடுபட்டார்" என்று போதிக்கிறது.

இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே சனத்தைப் பரிசுத்தம் செய்யும்படியாக நகரவாசலுக்குப் புறம்பே பாடுபட்டார். எபி. 13: 12.

வினா. பொந்தியுபிலாத்து என்பவன் ஆர்?

விடை. யூதேயாவில் தேசாதிபதியாயிருந்த ரோமனாயே. லூக். 3: 1. அவன் கண்டிப்பும் குரூரமுமுள்ளவன்.

நம்முடைய இரட்சகர் பிறந்த காலத்தில் (ஆதி. 49: 10-ல் உரைக்கப்பட்டிருக்கிறபடியே) தேசாதிபத்தியம் யூத ஜனத்திலிருந்து நீக்கப்பட்டது என்பதைக் காண்பிக்கும்படியாகவும்;

இயேசுகிறிஸ்துவானவர் பாடுபட்ட காலத்தைக் குறிப்பாய்க் காட்டும்படியாகவும்;

கிறிஸ்துவானவர் ஒரு குற்றமுமின்றி, யூதருடைய பகையினாலே மாத்திரம் மரணாக்கினைக்குட்பட்டாரென்று பிலாத்து உறுதியாய்ச் சாட்சிகொடுத்ததினாலும் இவனுடைய பேர் விசுவாசப் பிரமாணத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

வினா. நம்முடைய இரட்சகர் தேவனும் மனிதனுமாயிருக்க, எந்தத் தன்மையில் பாடுபட்டார்?

விடை. மனிததன்மையில் மட்டும் பாடுபட்டார். அவருடைய தேவ தன்மை பாடுகளுக்குட்படக் கூடாது.

கிறிஸ்து நமக்காக மாம்சத்திலே பாடுபட்டார் 1 பே. 4: 1.

வினா. கிறிஸ்துவானவர் எப்படி பாடுபட்டார்?

விடை. தம்முடைய சரீரத்திலும் ஆத்துமத்திலும் பாடுபட்டார்.—வறுமையும் நஷ்டமும் அடைந்தார்; பசியும் தாகமும் இளைப்புமுள்ளவரானார்.—வருத்தத்தையும், கைவிடப்படுதலையும், நிந்தையையும், மரணத்தையும் உத்தரித்தார்.—மனுஷ தன்மைக்குரிய திகில்களுக்கும், பாடுகளுக்குமுள்ளானார்.—பெத்லெகேமின் பிள்ளைத்தொட்டில் முதல் கல்வாரியின் கல்லறைவரைக்கும் துக்கம் நிறைந்தவராயிருந்தார். மாட்டுத்தொழுவில் பிறந்தார். முன்னணையில் கிடத்தப்பட்டார். பிள்ளையாயிருக்கும்போது தம்முடைய நாட்டினின்று துரத்தப்பட்டார். தம்முடைய வாலிபப் பிராயத்தைத் தச்சுவேலைசெய்வதில் செலவழித்தார். தாம் புருஷனானபோது வீடில்லாதவராயிருந்தார். வனாந்தரத்தில் பிசாசானவனால் சோதிக்கப்பட்டார். அவர் போதக ஊழியத்தைச் செய்த காலத்தில் மனிதர்களாலே துன்பப்படுத்தப்பட்டு, இகழப்பட்டார்; அவருடைய சீஷரில் ஒருவனாகிய யூதாசினால் காட்டிக்கொடுக்கப்பட்டார்; தம்மைப் பின்சென்ற மற்றவர்களால் கைவிடப்பட்டார்; பேதுருவினால் ஆணையோடு மறுதலிக்கப்பட்டார். கெத்செமனே தோட்டத்தில் சேவகரால் பிடிக்கப்பட்டார். அன்னா முன்பாகவும், பிரதானஆசாரியனாகிய காய்பாவின் அரண்மனையிலும் கட்டுண்டவராய் நிறுத்தப்பட்டார். அங்கேயிருந்து பிலாத்து துரையின் நியாயஸ்தலத்துக்குக் கொண்டுபோகப்பட்டார். அவருக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சிகள் சொல்லப்பட்டது. அநியாயமாய் குற்றவாளியாக்கப்பட்டார். வாரினால் அடிக்கப்பட்டார். முள்முடி சூட்டப்பட்டார். குட்டப்பட்டார். சிவப்பு அங்கி தரிப்பிக்கப்பட்டார். அவருடைய கையில் ஒரு கோல் கொடுக்கப்பட்டது. பரிகாசமாய் அவருக்கு முன்பாக முழங்கால்படியிட்டு, நிந்தையாய் "யூதருடைய



இராஜாவே" என்று வாழ்த்தப்பட்டார். அவருடைய வஸ்திரங்கள் கழற்றப்பட்டது. அவருடைய தோல் பிய்க்கப்பட்டது. பிலாத்து துரை அவரை நீச்சமாய் கொலைபாதகருக்கு முன்பாக நிறுத்தி, "இதோ இந்த மனுஷன்" என்று சொன்னபோது, பரிதபிக்க ஒருவனுமில்லை. (சங். 69: 20.) தமது சிலுவையைச் சுமந்துகொண்டு, அந்தப் பாரச்சுமையினால் தவிப்படைந்தவராய் கொல்கதாவுக்கு நடத்தப்பட்டார். சிலுவையில் அறையப்பட்டார். ரோமராலே நிற்பந்தமான அடிமைகளுக்கு நியமிக்கப்பட்ட அவ்வளவு நீசமான தண்டனையைச் சகித்தார். நிர்வாணியாக்கப்பட்டார். அவருடைய கைகள் விரிக்கப்பட்டது. அவருடைய கைகளும் கால்களும் சிலுவை மரத்தோடு சேர்த்து ஆணி உருவ அடிக்கப்பட்டது. இவ்விதமாய் இரண்டு கள்ளருக்கு நடுவே உயர்த்தப்பட்டு, மனுஷருக்கும் தூதருக்கும் வேடிக்கையானார். அவருடைய முழுச் சரீரமும் உலைக்கப்பட்டது. எலும்புகளெல்லாம் கட்டுவிட்டது. (சங். 22: 14.) இந்தத் துயரமான நிலைமையில், அவருடைய இரத்த ஓட்டம் மெதுவாய்க் குறைந்து, அவரைத் தூஷிக்கிறவர்களும் பார்த்துக்கொண்டிருக்கவே அவர் தமது சத்தத்தை உயர்த்தி முடிந்தது என்று சொல்லி, ஆவியை ஒப்புக்கொடுத்தார்.

அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே. 2 கொரி. 8: 9.

மத். 4: 22. யோவா. 19: 28. 4: 6. சங். 22: 7, 12—18. ஏசா. 53: 3. லூக். 2: 16. மத். 2: 13. மாற்கு 6: 3. மத். 8: 20. 4: 1. 11: 19.

இரட்சகருடைய பாடுபடுதலின் வரலாறு. மத். 27. மாற். 15. லூக். 23. யோவா. 19-அதிகாரங்களில் அடங்கியிருக்கிறது.

வெளியாகச் சரீரத்தில் துன்பங்கள் அடைந்தது மாத்திரமல்ல, அவருடைய ஆத்துமாவும் மிகவும் துயரப்பட்டு, ஆவிக்குரிய துக்கத்தை அனுபவித்தது. ஒரு பாவியின் நிமித்தம் உண்டாகும் துக்கம் சஞ்சலத்தையும் வேதனையையும் உண்டாக்குமென்றால், இலக்ஷக்கணக்கானவர்களினிமித்தம் தேவனுடைய கரம் அவரை இருத்தும்போது அவருக்குண்டாகும் துக்கம் எவ்வளவு அதிகமாயிருக்குமென்று உணர்ந்துகொள்ளலாம்.

என் இருதயம் மெழுகுபோலாகி, என் குடல்களின் நடுவே உருகிற்று. சங். 22: 14.

துக்கமடையவும் வியாகுலப்படவும் தொடங்கினார். மத். 26: 37.

என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங் கொண்டிருக்கிறது. மத். 26: 38.

என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர். மத். 27: 46. மாற்கு 14: 33.

அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது. லூக். 22: 44.

எரேமியாத் தீர்க்கதரிசியின் மூலமாய் எருசலேம் நகரம் முறையிட்டதுபோல, நன்றிகெட்ட பாவிகளைப் பார்த்தும் அவர் சொல்லவேண்டியது.

வழியில் நடந்துபோகிற சகல சனங்களே, இதைக்குறித்து உங்களுக்குக் கவையில்லையா? கர்த்தர் தமது உக்கிரமான கோபமூண்ட நாளிலே என்னைச் சஞ்சலப்படுத்தினதினால் எனக்கு உண்டான என் துக்கத்துக்குச் சரியான துக்கம் உண்டோ என்று என்னை நோக்கிப் பாருங்கள். புலம்பல் 1: 12.

கிறிஸ்துநாதர் பாடுகளை முழு மனதோடு சகித்தார். அவர் தமக்கு உதவிசெய்ய ஆறு லட்சம் பேர்கொண்ட பன்னிரண்டு லேகியோன் தேவதூதரை எந்தச் சமயத்திலும் வருவிக்கலாம். இவர்களிலொருவன் சனகெரிப்பின் திரள் சேனையை எல்லாம் அழிக்கப் போதுமான பெலமுடையவன். ஆனாலும் அவர் மனிதரிடத்தில் அவ்வளவாய் அன்புகூர்ந்து அவர்களுக்காகத் தம்மைத் தேவகோபத்துக்குள்ளாக்கினார்; அவர் நமக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்ததினாலே மனதாரப் பாடுபட்டார். அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.

பரிசேயர், வேதபாரகரைப்போல "எங்கள் பிதாக்களின் நாட்களில் இருந்தோமானால், அவர்களோடே நாங்கள் தீர்க்கதரிசிகளின் இரத்தப்பழிக்கு உடன்பட்டிருக்கமாட்டோம்" என்று சொல்லாதேயுங்கள். நாம் பாவஞ்செய்யும்பொழுதெல்லாம் அவர்களுடைய குற்றத்தில் பங்குள்ளவர்களாயிருக்கிறோம். ஏனென்றால் நாம் "தேவனுடைய குமாரனை மறுபடியும் சிலுவையிலறைந்து அவமானப்படுத்துகிறோம்." எபி. 6: 6.

வினா. கிறிஸ்துவானவர் நிச்சயமாகவே மரணமடைந்தார் என்பதற்கு என்ன நிச்சயமுண்டு? ஏனென்றால் சரீர மரணம் பாவத்திற்கு வரும் தண்டனையின் பாகமே.

விடை. கிறிஸ்து மரணமடைந்தாரென்று நூற்றுக்கதிபதி சாட்சிகொடுத்தான். மாற். 15: 45.

கிறிஸ்து மரித்ததால் அவருடைய காலெலும்புகள் முறிக்கப்படவில்லை. யோவா. 19: 33.



கிறிஸ்துவினுடைய விலா ஈட்டியினால் குத்தப்பட்டதால், அவர் இனி ஜீவனோடிருப்பது கூடாத காரியம்.

கிறிஸ்து மரித்ததால் தான் குத்தப்பட்ட விலாவிலிருந்து இரத்தமும் ஜலமும் புறப்பட்டது.

கிறிஸ்து மரித்திராவிட்டால் பிலாத்து துரை அவரை அடக்கம் செய்ய உத்தரவுகொடுக்கமாட்டான்.

கிறிஸ்து மரணம் அடைந்திராவிட்டால், அவருடைய சிநேகிதர்கள் அவருடைய தேகத்தை கல்லறைக்குள் வைக்கச் சம்மதிக்கமாட்டார்கள்.

இயேசு மகா சத்தமாய்க் கூப்பிட்டு ஜீவனைவிட்டார். மாற். 15: 37. லூக்கா 23: 46. யோவா. 19: 34.

நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக அடிக்கப்பட்டிருக்கிறாரே. 1 கொரி. 5: 8.

கிறிஸ்து வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டார். 1 கொரி. 15: 3, 4.

அவர் நமக்காக மரித்தாரே. 1 தெச. 5: 9, 10.

வினா. கிறிஸ்து மரணமடைந்த சமயத்தில் சம்பவித்தது என்ன?

விடை. பற்பல அதிசயங்களும், அடையாளங்களும் நடந்தன.

வினா. கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதை நம்முடைய சபை எப்பொழுது கொண்டாடுகிறது?

விடை. பெரிய வெள்ளிக்கிழமையில் கொண்டாடுகிறது.

இந்தக் காலம் நமக்கு எவ்வளவு பயபக்தியான சமயமாயிருக்கவேண்டும். நம்முடைய ஆண்டவரைச் சிலுவையில் அறைந்த பாவங்களுக்காக நாம் எவ்வளவாய்த் துக்கித்துப் புலம்பவேண்டும்!

வினா. கிறிஸ்துவானவர் ஏன் இவ்விதமாய்ப் பாடுபட்டார்!

விடை. தம்மையே பலியிட்டு, நம்முடைய பாவங்களைத் தொலைக்கவே இப்படி பாடுபட்டார்.

நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார். 2 கொ. 5: 21.

கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார். கலா. 3: 13.

கலா. 3: 22. 5: 24. 6: 14. கொலோ. 2: 14.

கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார். 1 பேது. 3: 18.

வினா. நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் பாடுகளுக்கு குறிப்பாயிருந்த சில விசேஷித்த முன்னடையாளங்களைச் சொல்லு?

விடை. ஈசாக்கு பலியிடப்பட்டது. ஆதியாகமம் 22-ம் அதிகாரத்தை ரோ. 8: 32-உடன் ஒத்துப்பார்.

பஸ்கா ஆட்டுக்குட்டி. யாத்திராகமம் 12-அதிகாரத்தை யோவா. 1: 29. 1 கொரி. 5: 7-உடன் ஒத்துப்பார்.

வெண்கலச் சர்ப்பம். எண்ணாகமம் 22; 8, 9-ஐ ஏசா. 45: 22. யோவா. 3: 14, 15-உடன் ஒத்துப்பார்.

வினா. இயேசு மரித்தபிற்பாடு அவருடைய சரீரத்துக்கு சம்பவித்ததென்ன?

விடை. பிலாத்துவினிடத்தில் உத்தரவுபெற்றுக்கொண்ட அரிமத்தியா ஊராகிய யோசேப்பினாலே மரியாதையாய் அடக்கம் செய்யப்பட்டது. மத். 27: 57—60.

அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார். ஏசா. 53: 9. யோவா. 19: 39, 40.

ரோமராலே சிலுவையில் அறையப்படுகிறவர்கள், வழக்கமாய் ஆகாயத்துப்பறவைகளுக்கு இரையாகும்படிக்கு சிலுவைமரத்திலேயே விட்டு வைக்கப்படுவார்கள். அவர்களுடைய சரீரங்களை இனத்தார் எடுத்துக்கொண்டுபோய் அடக்கம்செய்யாதபடி காவல்வைக்கப்பட்டிருக்கும். மத். 27: 65, 66.

வினா. இயேசுக்கிறிஸ்துவைப்பற்றி அப்புறம் நாம் விசுவாசிக்கிறதென்ன?

விடை. அவர் பாதாளத்தில் இறங்கினார் என்று விசுவாசிக்கிறோம்.

பாதாளம் அல்லது ஆதேஸ் என்பது வேதாகமத்தில் பல கருத்துக் கொள்ளும்.

1. கல்லறை:

நான் பாதாளத்தின் வயிற்றிலிருந்து கூக்குரலிட்டேன். யோனா 2: 2.

2. நரகவேதனையை அனுபவிக்கும் நிலைமை.

பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது தன் கண்களை ஏறெடுத்தான். லூக். 16: 23.

கிறிஸ்துவானவர் பாதாளத்திலிறங்கினார் என்று சொல்லும்போது மேற்சொல்லிய இரண்டு நிலைமையையும் குறியாது.

1-வது. கல்லறையைக் குறியாது. ஏனென்றால் அவர் அடக்கம்பண்ணப்பட்டார் என்று முன்னமே சொல்லியாயிற்று.

2-வது. நரகவேதனையை அனுபவிக்கும் நிலைமையைக் குறியாது. ஏனென்றால் கிறிஸ்துவானவருக்குத் தன்மனச்சாட்சியில்லாததினாலே, அதன் வேதனையும் அவருக்கிருப்பது கூடாத காரியம்.

வினா. இந்த இடத்தில் பாதாளம் என்கிற சொல்லுக்கு அர்த்தமென்ன?



விடை. மரித்தவர்களுடைய ஆத்துமாக்கள் நன்மைதீமை அனுபவிக்கிற மறுலோகமே. மோட்சம், நரகமாகிய இரண்டும் பொதுவாய் மறுலோகம் என்று சொல்லப்படுகின்றன. ஆனால் இவ்விடத்தில் பாதாளம் என்பது இன்பமான மோட்சலோகத்தையே குறிக்கும். ஏனென்றால் கிறிஸ்துநாதர் குணப்பட்ட கள்ளனை நோக்கி "இன்றைக்கு நீ என்னுடனேகூட பரதீசில் இருப்பாய்" என்று சொல்லி; தாம் மரிக்கிற சமயத்தில் தேவனை நோக்கி "பிதாவே! உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்று சொல்லியிருப்பதினால் மோட்சலோகத்தில் சேர்ந்தார் என்பது நிச்சயம். லூக். 23: 43, 46.

வினா. அப்படியானால் கிறிஸ்துநாதர் பாதாளத்தில் இறங்கினார் என்பதற்கு அர்த்தமென்ன?

விடை. மரணத்தினாலே அவருடைய ஆத்துமாவும், சரீரமும் பிரிந்துபோனபொழுது, அவருடைய ஆத்துமா மறுலோகத்தில் சேர்ந்தது. அவருடைய சரீரம் கல்லறையில் வைக்கப்பட்டது. இப்படி மற்ற மனுஷருக்கு உண்டாகிறதுபோலவே அவருக்கும் உண்டாயிற்று என்பதே அர்த்தம்.

என் ஆத்துமாவை பாதாளத்திலே விடீர். சங். 16: 10. அப். 2: 27, 31.

தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டவிழ்த்து, அவரை எழுப்பினார்; அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது. அப் 2: 24.

பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார். எபே. 4: 9

வினா. கிறிஸ்துநாதர் ஏன் இப்படி பாதாளத்தில் இறங்கினார்?

விடை. மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனை தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கே. எபி. 2: 14.

---

வாரத்தின் ஒவ்வொரு நாளுக்கும் ஏற்ற
பக்திக்குரிய

## சந்த தியானங்கள்.

(தொடர்ச்சி.)

## ஆறாம் தியானம்.

வெள்ளி.

நன்றியறிதல்.

*"என் ஆத்துமாவே! கர்த்தரை ஸ்தோத்திரி அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே." சங். 103:2.*

• நன்றியறிதலுள்ள இருதயத்தின் ஞாபகாணிக்கை, புஷ்பங்களின் நேர்த்தியான வாசனையைப்போலிருக்கிறது. நன்றியறிதலானது, பரி

161397
600 0

சுத்தஆவியாகிய பனியினால் நீர்ப்பாய்ச்சப்பட்டு போஷிப்பிக்கப்படுகிற எல்லா ஆவியின் கனிகளிலும், முக்கியமான பாகமாயிருக்கிறது. அது எல்லா கிறிஸ்தவ அநுபவங்களையும், புதுப்பித்து சிறப்பிக்கிறது. அது கிறிஸ்தவனுடைய சாயலின் தொனியும், அவனுடைய கண்களின் ஒளியுமாயிருக்கிறது. அது பரலோக தேவனுக்கு முன்பாக படைக்கப்படும்பொழுது, அதுவே இருதயத்தின் முயற்சிக்கு ஏற்ற பலனாகவிருக்கிறது. அது நம்மை அன்போடு பலமான கட்டுகளால் இணைக்கிறது. வரண்ட மலை, ஆகாயத்திலுள்ள பனிகளையெல்லாம் பெற்று, அவைகளைத் தன் பக்கங்களில் செழிப்பான சிறு ஓடைகளாக வடியச்செய்கிறதுபோல, ஒரு கிறிஸ்தவனுடைய ஆவலுள்ள இருதயமானது, பரலோக ஆசீர்வாதங்களை மதுரமான நீரூற்றுகளிலிருந்து பெற்று, அவைகளை தேவனுடைய மடியில் திரும்பவும ஊற்றுகிறது.

ஆனால் பரலோகத்துக்கும் பூலோகத்துக்கும் நடுவாக ஓடுகிற இந்த ஆறு, சாத்தானுக்கு எப்படித் தெரியும்? அவன் அதினுடைய தண்ணீர்களைக் கருப்பாக்கி, அதன் ஓட்டத்தை அணைபோட்டுத் தடுக்கப் பிரயாசப்படுவது எப்படி? அவன் நன்றியறிதலில்லாத உலகத்தில் எவ்வளவாய் சித்தியடைந்திருக்கிறான் என்று யார்?

ஆ! தேவனுக்கு முன்பாக நம்முடைய இருதயத்தில் நன்றியறிதலில்லாத சுபாபத்தை சுமந்துகொண்டு திரிவது சத்தியமார்க்கத்தின் ஆவியானவர் தம்முடைய செட்டைகளை அங்கே பரப்பவில்லை என்பதைக் காட்டுகிற ஒரு கெட்ட குறிப்பாயிருக்கிறது. என்னுடைய சந்தோஷத்துக்காக தேவன் இவ்வுலகத்தை எவ்விதமாய்ச் சிருஷ்டித்திருக்கிறார் என்று நான் கவனிக்கும்போது, நான் நன்றியறிதலற்றவனாயிருப்பேனோ? தேவன் என்னுடைய பாவங்களை எவ்வளவ காலமாய்ச் சகித்திருக்கிறார் என்று நான் பார்க்கும்போதும், அவர் கோபிக்கத் தாமதமாயும், மன்னிக்க ஆயத்தமாயும் இருக்கிறார் என்று எனக்குச் சொல்லப்படும்போதும், நான் நன்றியறிதலற்றவனாயிருப்பேனோ? இந்த உலகத்தில் என்னுடைய ஜீவனை அவர் பராமரித்துவருகிற அவருடைய அதிசயத்தை நான் நினைவுகூரும்போது, நான் நன்றியறிதலற்றவனாயிருப்பேனோ? "வழக்காடுவோம் வாருங்கள், உங்கள் பாவங்கள் சிவேரொன்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல வெண்மையாகும், அவைகள் இரத்தாம்பர சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்" என்று கர்த்தர் சொல்லியிருக்கிறபோதும், "தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு தேவன் அவரைத் தந்தருள இவ்வளவாய் உலகத்தாரில் அன்புகூர்ந்தார்" என்பதை நான் வாசிக்கும்போதும், இரட்சகர் என்னுடையவர் என்று உணரும்போதும், தேவன் கிறிஸ்து ஏசுவின்மூலமாய் எல்லாவற்றையும் இலவசமாய் அருளுகிறார் என்று எனககுச் சொல்லப்படும்போதும், நான் நன்றியற்றவனாயிருப்பேனோ? ஆத்துமாவே! உன்மேலுள்ள தேவனுடைய இவ்வளவு அதிசயமான அன்பு, சொல்லமுடியாத தயை நீ அசதியாயிருக்கவும், குளிர்ந்துபோகவும் ஒட்டாதிருப்பதாக. தாவீதின் சங்கீதங்களில் சிலவற்றைப் பிடித்துக்கொள். "கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது. அவர் கிருபை என்றுமுள்ளதென்று கர்த்தரால் சத்துருவின் கைக்கு நீங்கலாகி மீட்கப்பட்டவர்கள் அப்படி சொல்லக்கடவர்கள்." "ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி" "நான் உயிரோடிருக்குமட்டும் கர்த்தரைத் துதிப்பேன், நான் உள்ளளவும் என் தேவனைக் கீர்த்தனம்பண்ணுவேன்."



"என்னுடைய வாய் தேவனுடைய ஸ்துதியைச் சொல்வதாக, எல்லா மாம்சமும் அவருடைய பரிசுத்த நாமத்தை எப்பொழுதும் ஸ்தோத்திரிப்பார்களாக. அப்பொழுது காலையில் அவருடைய தயவையும் இரவில் அவருடைய உண்மையையும் காட்டும்படியாக, நீ ஸ்தோத்திரங்களைச் செலுத்துவது எத்தனை நன்று என்பதை நீ நிச்சயமாய் அறிந்துகொள்வாய்.

நல்ல யோசிப்பாய் விழித்து, தெளிவாகென் நெஞ்சமே!
தேவஅன்பையே சிந்தித்து, ஸ்தோத்திரி என் உள்ளமே!
இந்த நாளில் கர்த்தர் உன்னைக் காத்தாரே.

---

## சமாசாரத்திரட்டு.

**ஆப்கானிஸ்தான்.**—சர் பிரடிரிக் ராபெர்ட்ஸ் தளபதியின் சேனையொன்று சென்ற ஆகஸ்துமீ 31உ காந்தகாரில் சேர்ந்தது. காந்தகாரை முற்றுகைசெய்துகொண்டிருந்த அயூப்கான் பாபாஉவாலியென்ற இடத்துக்கு தன் சேனையோடு விலகிப்போயிருந்ததினால், பிரிட்டிஷ் தளத்துக்கும் அயூப்கான் சேனைக்கும் அந்த இடத்தில் யுத்தம் நடந்தது. அயூப்கான் சேனை முற்றிலும் அபஜெயப்பட்டு சிதறி புறங்காட்டியோடி விட்டது. அயூப்கானின் பாளயமும் 32-பீரங்கிகளும் பிரிட்டிஷ் தளத்தால் பிடிபட்டது. சில சர்தார்களுடனும் குதிரைவீரருடனும் அயூப்கான் ஈராத் நகரத்துக்குத் திரும்பிப்போய்விட்டான். ஆப்கானின் புதிய அமீராகிய அப்துல் ரைமான் கபூலில் ஸ்தாபகமானதினால் பிரிட்டிஷ் தளங்கள் அந்நகரத்திலிருந்து புறப்பட்டு விட்டன. காந்தகாரிலுள்ள பிரிட்டிஷ் தளங்களும் சீக்கிரம் அகன்றுவிடுமென்று தோன்றுகிறது.

**இங்கிலந்து**—பிரதம மந்திரியாகிய கிலாட்ஸ்டன் துரை மோசகரமான வியாதியாயிருந்து இப்போது நல்ல சௌக்கியம் அடைந்திருக்கிறார். அவருடைய சுகசேமத்தையிட்டு இங்கிலந்து முழுவதும், அதிக கரிசனமாயிருந்ததென்பதற்கு அவர் சுகவீனமாயிருக்கும்போது அவர் சுகத்தை விசாரிக்கும் கடிதங்கள் தினம் ஒன்றுக்கு ஆயிரம் வீதம் தேசத்தின் நாலுதிசைகளிலுமிருந்து வந்துகொண்டேயிருந்தது என்று திஷ்டாந்தமாயிருக்கிறது. செப்டம்பர்மீ 7உ பார்லிமெந்து சபை கலைந்தது. நாசகரமான கேணியபத்துகளும் இருப்புப்பாதை விக்கினங்களும் பின்னும் பல இடங்களில் நடந்தது.

**ஸ்பானியா.**—ஸ்பானியாதேசத்து அரசனின் தேவியாகிய கிறிஸ்தீனா ராணி செப்றெம்பர்மீ 11உ ஒரு புதல்வியைப் பிரசவித்தார்.

அக்டோபர்மீ நாள் 31-புரட்டாசிமீ 17உ முதல், ஐப்பசிமீ 17உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ் தேதி. | அன்றாடத் தியானம். |
|---|---|---|---|
| வெ | 1 | கஎ | மனப்பூர்வமாய் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள். |
| ச | 2 | கஅ | உமது முகத்தை ஊழியக்காரன்மேல் பிரகாசிக்கப்பண்ணும். |
| ஞா | 3 | ககூ | நிர்ப்பயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம். 1 யோ. 3:4. |
| தி | 4 | உ0 | விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள். 1 கொ. 16:13. |
| செ | 5 | உக | மாறுபாடானதை உன்னைவிட்டு அகற்று. நீதி. 4:24. |
| பு | 6 | உஉ | எப்பொழுதும் நன்மைசெய்ய நாடுங்கள். 1 தெச. 5:15. |
| வி | 7 | உங | நீதிமானுடைய பேர் புகழ்பெற்று விளங்கும். நீதி. 10.7. |
| வெ | 8 | உச | மேட்டிமையைச் சிந்தையாயிராதே. ரோ. 11:20. |
| ச | 9 | உரு | வாழ்வுகாலத்தில் நன்மையை அநுபவித்திரு. பிர. 7:14. |
| ஞா | 10 | உசு | கர்த்தரை நம்பிக்கையாகக் கொண்டிருக்கிறவன் பாக்கியவான். |
| தி | 11 | உஎ | விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான். ரோ. 1:17. |
| செ | 12 | உஅ | தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தர் ஒருவரே. 1 தீமோ. 2:5. |
| பு | 13 | உகூ | உங்கள் பக்தி, காலையில் காணும் மேகத்தைப்போலானது. ஓசி. 6: |
| வி | 14 | ங0 | நீ தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறாயா? யோ. 9:35. |
| வெ | 15 | க | உங்கள் உள்ளத்திலே ஆவியை வைப்பேன். எசே. 36:27. |
| ச | 16 | உ | விசுவாசத்தில் நல்ல போராட்டத்தைப் போராடு. 1 தீமோ. 6:12. |
| ஞா | 17 | ங | தேவனை மகிமைப்படுத்தி விசுவாசத்தில் வல்லவனானான். ரோ. 4:20. |
| தி | 18 | ச | நித்தியஜீவனைப் பற்றிக்கொள். 1 தீமோ 6:12. (97:10. |
| செ | 19 | ரு | கர்த்தரில் அன்புகூருகிறவர்களே, தீமையை வெல்லுங்கள். சங். |
| பு | 20 | சு | உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள். ரோ. 12:16. |
| வி | 21 | எ | கர்த்தர் தம்முடைய ஜனத்தை நெகிழவிடார். சங். 94:14. |
| வெ | 22 | அ | ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளக்கடவோம். ரோ. 13:12. |
| ச | 23 | கூ | மாம்சசிந்தை மரணம். ரோ. 8:6. |
| ஞா | 24 | க0 | அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது. 1 கொ. 13:4. |
| தி | 25 | கக | பயத்துடனே கர்த்தரைச் சேவியுங்கள். சங். 2:11. |
| செ | 26 | கஉ | ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள். ரோ. 12:12. |
| பு | 27 | கங | கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதல் பெருகுகிறது. 2 கொ. 1:5. |
| வி | 28 | கச | இது நீங்கள் இளைப்பாறுகிற இடம் அல்ல. மீகா. 2:10. (7:10. |
| வெ | 29 | கரு | தேவனுக்கேற்ற துக்கம் மனந்திரும்புதலை உண்டாக்கும். 2 கொ. |
| ச | 30 | கசு | தேவனே, நன்மையுண்டாக என்னை நினைத்தருளும். நெகே. 5.19. |
| ஞா | 31 | கஎ | பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதாரபலி அவரே. 1 யோ. 2:2. |

## விசேஷ நாட்கள்.

3. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 19-ம் ஞாயிறு.
4. அமாவாசை.
10. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 20-ம் ஞாயிறு.
17. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 21-ம் ஞாயிறு.
18. பரி. லூக்கா சுவி. திருநாள். (பௌரணமி.)
24. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 22-ம் ஞாயிறு.
28. பரி. சீமோன், யூதா அப். திருநாள்.
31. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 23-ம் ஞாயிறு.


# நற்போதகம்.

௰க. நவம்பர்மீ. ௲அஅ௰௫.


## யோசுவாவின் புஸ்தகம்.

## IV. அதிகாரம்.

1. இப்படியே முன் கற்பிக்கப்பட்டிருந்தது. யோசுவா 3:12. இப்போது விபரமாகத் திரும்பவுஞ் சொல்லப்படுகிறது.

2. அற்புத சங்கதிக்குச் சாட்சியாகவும், நிச்சய அடையாளமாகவும், எல்லாக் கோத்திரத்தாருக்கும் தெரியும்படியாகவும், கோத்திரத்துக்கு ஒருவராக 12-பேர் தெரிந்துகொள்ளப்பட்டார்கள்.

3. கில்காலில். 19, 20.

5. 12-கற்களை ஆற்றின் நடுவிலிருந்தெடுக்கும்படி குறிக்கப்பட்டவர்கள் ஆற்றைக் கடந்துபோய்த் திரும்பி உடன்படிக்கைப்பெட்டி நிற்கிற இடத்துக்கு வந்தார்கள்.

6. யாத்தி. 12:26. 13:14. உபா. 6:20. சங். 44:1. 78:3—6.

7. யாத்தி. 12:14. எண். 16:40.

9. "யோர்தான் நடுவில்." யோசு. 3:17. யோர்தானின் தண்ணீரால் அதின் நடுவிலுள்ள கற்கள் காணப்படாதிருக்க, எப்படி அவை இந்த அற்புத சங்கதிக்கடையாளமாயிருக்கும்? இவை 12-பேர் தங்கள் தோளிலெடுத்துப்போன கற்கள்போலல்ல, (வச. 5.) அவைகளிலும் அதிகப் பெரிதாயும், இரண்டு வரிசைகளில் ஒன்றின் மேலொன்றாய் வைக்கப்பட்டவைகளாயும் வெள்ளம் வற்றிப்போகுங்காலத்தில், எல்லாராலுங் காணப்படக்கூடியதாயுமிருக்கும். அல்லது யோர்தானின் தண்ணீர் அதிகச் சுத்தமும், தெளிவுமானபடியாலும் அந்த நதி சாதாரணமாய் அகலமில்லாதபடியாலும், கரையில் நிற்கிறவர்கள் அவைகளை இலேசாய்ப் பார்க்கலாம். படகுகளால் ஆற்றைக் கடக்கிறவர்கள் கற்குவியலிலிருந்து தண்ணீர் இரைச்சலாய் ஓடுவதாலும் அதை இலேசாய்க் காணக்கூடியது தானே.

“அவை இந்நாள்வரைக்குமிருக்கின்றன. இது சம்பவித்து 20-வருஷத்துக்குப்பின் இதை எழுதின யோசுவாவினாலாவது, இதிலும் மோசேயின் ஆகமங்களிலும் இப்படி வருகிற வாக்கியங்கள் யூத சபையாரால் திவ்ய அதிகாரம்பெற்றவர்களென்று ஒப்புக்கொள்ளப் பட்ட பரிசுத்த மனுஷராலாவது இப்படிச் சொல்லப்பட்டிருக்கவேண்டியது.

10. ஜனங்கள் பயத்தினாலாவது, விசுவாசப் பெலவீனத்தாலாவது துரிதமாய்க் கடந்துபோக, ஆசாரியரோ தங்கள் மனதில் திடச்சித்தமுடையவர்களாய் அசையாமல் நின்றார்கள்.

12. எண். 32: 20—28.

13. “கர்த்தருக்கு முன்பாக” யோர்தான் நதியைக் கடந்தபோது உடன்படிக்கைப்பெட்டிக்கு முன்பாக, அல்லது தங்கள் சகோதரருக்குச் செய்த வாக்குகளையும் உடன்படிக்கைகளையும் கைக்கொள்கிறார்களோ அல்லவோ என்று கவனித்துவந்த தேவசமுகத்துக்கு முன்பாக.

16. ஆசாரிமார் ஆற்றின் நடுவில் அல்லது ஆழமும் பள்ளமுமான இடத்தில் நின்றதால் கரையேறி வரும்படி கற்பனைபெற்றார்கள். “கரையேறி” என்ற வார்த்தை இதிலும் மற்ற வாக்கியங்களிலும் 3-தடவை சொல்லப்படுகிறது.

17. ஆசாரிமார் யோசுவாவைக்கொண்டு தேவன் கரையேறி வரச் சொல்லுமளவும் பொறுமையாய் நின்றார்கள்.

18. நின்ற தண்ணீர் தன் குவியலிலிருந்து முன்போல இயல்பானபடி ஓடிப்போயிற்று.

19. எகிப்திலிருந்து புறப்பட்டு இப்போது 5-நாள் குறைய 40-வருஷமாயிற்று. புறப்பட்டது நீசான் மாதம் 15உ. வந்து சேர்ந்தது நீசான் மாதம் 10உ. தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதில் வெகு திட்டமாய் இருந்திருக்கிறதாக இதினால் தெரியவருகிறது. நியாயப்பிரமாணத்தின்படி, பஸ்காப்பண்டிகை கொண்டாட 4-நாளுக்குமுன் ஆட்டுக்குட்டிகளை ஆயத்தம்பண்ணவேண்டியதால், வந்துசேர்ந்தது சரியான காலமே.

20. 12-கற்களையும் அலாதியாய், ஒழுங்காய், அடி அற்புத சங்கதியை நினைவுகூரும்படி சிறு தூண்களாய் நிறுத்தினார்கள்.

23. “நமக்கு முன்பாக” சிவந்த சமுத்திரத்தைக் கடந்தவர்களில் இப்போது உயிரோடிருக்கிறவர்கள் யோசுவாவும், காலேப்புமே. மற்ற இஸ்ரவேலரோ தங்கள் பெற்றோரின் இடுப்பிலிருந்தபடியால் தன்மையிடமாகச் சொல்லுகிறார்.

24. 1 இராசா 8: 42, 43. யாத். 15: 16. 1 நாளா. 29: 12. உபா. 6: 2. சங். 89: 7. எரேமி. 10: 7.



## கேள்விகள்.

1. இரண்டரைக் கோத்திரத்தார் யோர்தானைக் கடக்குமுன் இலக்கம் பார்க்கப்பட்டதில் வாலிபராய் யுத்தஞ்செய்யத்தக்கவர்கள் ரூபேனியரில் 43,730. காதியரில் 40,500. மனாசே பாதியில் 20,000, 30,000 வரையிருக்கும். யுத்தத்துக்கு எல்லா ஆண்களும் போகவேண்டுமென்று கட்டளையிட்டிருக்க, லட்சத்துக்கு அதிகமான இவர்களில் 40,000 பேர் மாத்திரம் யுத்தத்துக்குப் போனதாகச் சொல்லியிருக்கிறதே, இது குற்றமல்லவென்று காண்பிக்கவும்.

2. தேவன் செய்த நன்மைகளுக்கு நன்றியறிதலாக யூதர்கள் வழங்கிவந்த முறைமைகளெவை? ஒவ்வொன்றுக்கும் திஷ்டாந்தஞ் சொல்க.

3. இஸ்ரவேலர் யோர்தானைத் துரிதமாய்க் கடந்துபோனதற்கு முகாந்தரங்களெவை?

4. பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய கடமையைக்குறித்து என்ன படிக்கிறோம்?

5. இஸ்ரவேல் ஜனங்கள் சிவந்த சமுத்திரத்தையும் யோர்தானையும் அதிசயமாய்க் கடந்துபோகச் செய்ததினால் அவர்கள் அறிந்துகொள்ளவேண்டியதென்ன?

6. அற்புதமாவதென்ன? அதற்கிருக்கவேண்டிய குறிப்புகளெவை?

7. யோர்தானே, நீ பின்னிட்டுத் திரும்புவதற்கு உனக்கென்ன வந்தது? இதற்கு அது சொல்லவேண்டிய மறுமொழி என்ன?

8. உடன்படிக்கைப்பெட்டியைப் பற்றிய சரித்திரத்தை எழுதுக. அது இஸ்ரவேல் சபையின் நடுவிலிருக்குமளவும் அவர்களுக்கு மேன்மையும் அது இல்லாதபோது அவர்களுக்கு கஷ்டமும் நேரிட்டதென்பதைத் திருஷ்டாந்தத்தால் காண்பிக்க. அதினால் நமக்குப் படிப்பினையென்ன?

9. இஸ்ரவேலர் கானானில் பிரவேசித்த காலமெது? அது ஏற்ற சமயந்தானென்று எப்படி அறியலாம்?

10. இஸ்ரவேலர் யோர்தானைக் கடந்த இடத்துக்குப் பேர் என்ன? புதியஏற்பாட்டில் அங்கே நடந்த விசேஷமென்ன?

## V. அதிகாரம்.

1. ஏமோரியரும் கானானியரும் தொகையிலும் வல்லமையிலும் தைரியத்திலும் மற்ற வகுப்பாருக்கு மிஞ்சினவர்களாயிருந்தபடியால்,

எல்லா வகுப்பாருக்கும் பொதுவாக அவர்கள் பெயர் சொல்லப்படுகிறது. யோர்தானின் கீழ்க்கரையிலுள்ள எமோரியர் மோசேயின் காலத்திலேயே இஸ்ரவேலரால் ஜெயிக்கப்பட்டுப்போனதால் அவர்களினின்று வேறுக்கும்படி மேல்கரையிலிருந்த எமோரியரென்று கண்டிருக்கிறது.

"அவர்கள் இருதயங் கரைந்து" அவர்கள் தைரியமிழந்து, இஸ்ரவேலருக்கு எதிர்த்து நிற்கத் துணிவுகொள்ளவில்லை. இது தேவசெயல். இஸ்ரவேலர் விருத்தசேதனம், பஸ்கா என்னும் சாக்கிரமெந்துக்களை அமரிக்கையாய் அனுசரிக்கவும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசம் விருத்தசேதனமில்லாத ஜனங்களால் அசுசிப்பட்டுப்போனதால், அந்தக் கனமும் வருத்தமுமான வேலைக்கு ஜனங்கள் ஆயத்தப்படுத்தவும் ஏதுவாயிருக்கும்பொருட்டு இது தேவனால் நடந்தது.

2. "அக்காலத்திலே" இஸ்ரவேலர் கில்காலுக்கு நீசான் மாதம் 10௳ வந்தார்கள். மறுநாள் காலையில் விருத்தசேதனம்பெற்றார்கள். 11௳ காலைமுதல் 13௳வரை காயங்களால் வருத்தமடைந்திருப்பார்கள். 14௳ சுகமாகி அன்றிரவு பஸ்காவை ஆசரித்தார்கள்.

"இரண்டாம் விசை இஸ்ரவேலரை விருத்தசேதனம்பண்ணு." இதில் சொல்லப்பட்டிருக்கிற ஜனங்கள் முன்னொருதடவை யோசுவாவினாலாவது, மற்ற யாராலாவது விருத்தசேதனம்பண்ணப்பட்டார்களென்பது கருத்தல்ல. ஏனெனில், அவர்கள் முன் விருத்தசேதனம் பெற்றவர்களல்லவென்று வா. 7-ல் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வசனத்தில் ஜனங்களைக் குறித்த மொத்தக் கருத்தாயிருக்கிறது. அவர்களிலொரு பங்கு முன்னமே விருத்தசேதனம் பெற்றிருந்தார்கள். ஆகையால் மறு பங்கு இப்போது விருத்தசேதனம்பெற்றதை இரண்டாம் விசை ஒன்று மூந்தின சம்பந்தமாகச் சொல்லியிருக்கிறது. முன்னமே விருத்தசேதனம்பெற்றவர்கள், (1) ஒருவேளை எகிப்தில் பெற்றிருப்பார்கள். எகிப்தியருக்குப் பயந்து, எகிப்திலே இந்த முறையைச் செய்யாமல் அநேகர் அசட்டையாய் விட்டிருப்பார்கள். மோசே இதைக்குறித்துத் தனக்கு நேரிட்ட சங்கடத்தை ஞாபகமாய் வைத்து, அவர்களை எச்சரித்ததினாலும், எகிப்தியர்மேல் வாதைகள் வந்தபோது இவர்களுக்கு நல்ல சமயம் இருந்ததாலும் அவர்களில் சிலர் உடனே விருத்தசேதனம்பெற்றிருப்பார்கள். (2) சீனாய்ப் பர்வதத்தண்டையில் அவர்கள் பஸ்காவை ஆசரிக்குமுன் விருத்தசேதனம்பண்ணியிருப்பார்கள். எண். 9. ஏனெனில் விருத்தசேதனம் இல்லாதவன் பஸ்காவைப் புசிக்கக்கூடாது. யாத். 22: 48. ஆகையால் இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்ட முதலாம் வருஷத்தில் பிறந்தவர்களும், எகிப்திலிருந்து புறப்பட்ட குழந்தைகளில் தப்பித் தவறி விருத்தசேதனம் பெறாதிருந்தவர்களும் இப்பொழுது விருத்தசேதனம்பெற்றார்கள்.



ஆக்ஷேபனை 1. அப்படியானால் 5-வா-ல் எகிப்திலிருந்து புறப்பட்ட யாவரும் விருத்தசேதனம்பெற்றார்களென்று சொல்லியிருக்கிறதே, அதற்குப் போக்கென்ன?

சமாதானம். இது நிசமாயிருக்கலாம். ஆகிலும் அவர்கள் எங்கே, எப்போது விருத்தசேதனம்பெற்றார்களென்று இதில் காட்டவில்லையே. மேலும் அவர்களில் ஒருவரும் எகிப்தில் வாதையுண்டான காலத்திலாவது சீனாய் மலையிலாவது விருத்தசேதனம்பெறவில்லையென்று மறுக்கவுமில்லையே. (2) "எல்லாரும்" என்ற வார்த்தை மிகுதியானவர்களைக் குறிக்கிற கருத்தாக அப்படி வழங்கப்படுகிறது.

ஆக்ஷேபனை. 2. 5-வா-ல் வனாந்தரத்தில் பிறந்த சகல ஜனங்களும் விருத்தசேதனம்பெறவில்லையென்று சொல்லியிருக்கிறதே அதற்கு நியாயமென்ன?

சமா.—(1) சகல ஜனங்களும் என்பது இதிலும் மிகுதியானவர்களென்ற கருத்தைக் கொள்ளுகிறதென்று அறியவேண்டும். (2) வழியில், அதாவது அவர்கள் பிரயாணஞ்செய்கையில் பிறந்தவர்கள் மாத்திரம் விருத்தசேதனம்பண்ணப்படவில்லையென்று 5-வா-ல் சொல்லியிருக்கிறதுபோல 7-லும் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது. ஆகையால் அவர்கள் விருத்தசேதனம்பெறாத முகாந்தரம் பிரயாணகாலத்தில் பிறந்ததுதானென்று யோசுவா நியாயஞ்சொல்லியிருக்கிறதுபோலிருக்கிறது. ஆனால் இஸ்ரவேலர் சீனாய் மலையண்டையில் பாளயமிறங்கியிருந்தபடியால், அதற்குமுன் பிறந்தவர்களை ஜனங்கள் எப்படியும் விருத்தசேதனம்பண்ணியிருப்பார்கள். அவர்கள் அசட்டையாயிருந்தாலும், மோசேயே அவர்களை ஏவியிருப்பார்.

ஆக்ஷேபனை. 3. வா. 6-ல் ஜனங்கள் 40-வருஷமாய் வனாந்தரத்தில் விருத்தசேதனம்செய்யாமலிருந்தார்களென்று சொல்லியிருக்கிறதே.

சமா.—(1) 40-வருஷமென்பதை ஏறக்குறைய 40-வருஷமென்று கருத்துக்கொள்ளவேண்டும். எண். 14: 33, 34. 32: 13. (2) ஆபிரகாமுக்கு நம்மால் ஏற்படுத்தப்பட்ட விருத்தசேதனம் அவன் சந்ததியாரால் அநுசரிக்கப்பட்டு வந்து கடைசியாக உங்களால் நின்றுபோயிற்று. நமமுடைய உடன்படிக்கைக்கடையாளமாகிய இந்த முத்திரையை நீங்கள் முழுவதும் இழந்துவிட்டீர்களே. ஆகையால் இந்த முறையை மறுபடியும் புதுப்பிக்கத்தக்கதாக ஆபிரகாமின் சந்ததியானது மறுபடியும் விருத்தசேதனம்பண்ணவேண்டுமென்று தேவன் சொன்னதாகவும் அருத்தம்பண்ணலாம்.

3. ஆசாரியராவது, லேவியராவது முன் விருத்தசேதனம்பெற்றவர்களாவது பஸ்கா சமீபித்தபடியால், அவசரமாய் விருத்தசேதனஞ்

செய்தார்கள். யோர்தானுக்கப்புறத்திலுள்ள இஸ்ரவேலரும் இச்சமயத்தில் தான் விருத்தசேதனம்பெற்றிருக்கலாம்.

4. எண். 14: 29. 26: 6. 4. உபா. 2: 16. 20-வயதுக்கு மேற்பட்டவர்கள் கலகத்தினால் வனாந்தரத்தில் மாண்டுபோனார்களே. 6-வா.

5. ஆதி. 17: 14-ல் விருத்தசேதனத்தை அசட்டைசெய்கிறவன் ஜனத்திலிருந்து அறுப்புண்டுபோவான் என்றிருப்பதால், அது பெரிய குற்றமென்றறிந்து இஸ்ரவேலின் மூப்பராவது பெற்றோராவது விருத்தசேதனம்பண்ணியிருப்பார்கள். வனாந்தரத்திலோ இஸ்ரவேலர் எப்போதும் பிரயாணஞ்செய்யவேண்டியதிருந்ததாலும் பஸ்காவும் வருஷந்தோறும் ஆசரிக்கப்படாமல் தவறிப்போனதாலும் (எண். 9: 10-13.) அவர்கள் பிற்காலம்போல அந்நிய ஜனங்களோடே கலவாமல் தனித்த ஜாதிகளாயிருந்தபடியாலும் விருத்தசேதனம்பெற அவசியமிருந்ததில்லை.

6. “யாவரும்” மூலபாஷையில் புறச்சாதியாரெனக் கருத்துக்கொள்ளுகிறது. இது இஸ்ரவேலருடைய பேருக்கும் அவர்களுடைய சலாக்கியங்களுக்கும் அவர்கள் அபாத்திரரெனக் காட்டுகிறது.

“காண்பதில்லை” கொடுப்பதில்லை. சங். 4: 6. 60: 3. பிரசங்கி. 2: 24.

7. “யோசுவா அவர்கள் பிள்ளைகளை விருத்தசேதனம்பண்ணினான்.”

(1) அவர்கள் பெற்றோர் கலகக்காரராயிருந்தபோது தேவன் அவர்களுக்கு எதிராயிருந்ததுபோலல்ல, இப்போது அவர்களோடு சமாதானமாயிருக்கிறாரென்று காட்டும் நோக்கமாகவும்.

(2) விருத்தசேதனத்துக்குத் தடையாயிருந்த இடைவிடாத பிரயாணங்கள் இப்போது நீங்கினவென்று அறியும்படியாகவும்.

(3) சமீபித்து வருகிற பஸ்காவை ஆசரிக்கும்படி ஆயத்தப்படுத்தவும்.

(4) கானான்தேசத்தில் வந்திருக்கிற இஸ்ரவேலைக் கானானியரிலிருந்து வேறுபடுத்தவும்.

(5) கானான்தேசத்தைக் கொடுப்போமென்ற வாக்குத்தத்தத்தை நிச்சயப்படுத்தவும், தேவனுக்குச் செய்யவேண்டிய கடமைகளையும், ஆராதனைகளையும் தாங்கள் நிறைவேற்றக் கடமைப்பட்டவர்களென்பதை உறுதிப்படுத்தவுமான உடன்படிக்கைக்கு அடையாளமாகவும், விருத்தசேதனஞ்செய்தான். யாத். 12: 25. லேவி. 23: 10. எண். 15: 2.

8 வா. ஆதி. 34: 25-ல் கண்டபடி விருத்தசேதனம்பெற்றவர்களுக்கு அதிக நோவும் வருத்தமுமிருக்கும். சத்துருக்களின் நடுவில்



இவர்களிப்படியிருந்தது விசுவாசப் பரீட்சைக்கே இந்தச் சமயத்தில் சத்துருக்கள் ஏகமாய்த் திரண்டுவந்தாலும் தேவன் தங்களைக் காப்பாரென்று விசுவாசமிருந்தது.

9. விருத்தசேதனமில்லாமையே இஸ்ரவேலருக்குள் மிகவும் நிந்தையாயிருந்தது. ஆதி. 34: 14. 1 சாமு. 14: 6. 17: 26. இது உலகத்திலுள்ள அநேக ஜாதியாருக்கு நிந்தையாயிருக்க இங்கே விசேஷித்தவகையாய் எகிப்தின் நிந்தையென்று சொல்வானேன்? (1) அடுத்த ஜாதியாரெல்லாரும் ஆபிரகாமுக்கு மறுமனையாட்டிகளின் பிள்ளைகளின் வம்சமானதால் அவர்களுக்குள் விருத்தசேதனப் பழக்கமிருக்கலாம். இக்காலத்தில் எகிப்தியருக்குள் இந்தப் பழக்கமில்லை. யாத். 2: 6. எகிப்தியர் இஸ்ரவேலரின் பிள்ளைகளை இந்த அடையாளத்தால் அறிந்துகொள்வார்கள். (2) இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்டு வந்தபடியால் மற்றவர்களால் எகிப்தியோரில் ஓர் வகுப்பாராக எண்ணப்பட்டார்கள். எண். 22: 5. இதுவே இஸ்ரவேலருக்குப் பெரிய நிந்தை. விருத்தசேதனத்தினால் இஸ்ரவேலர் வேறே ஜாதியாரென்று காட்டப்பட்டார்கள். (3) அநேகர் விருத்தசேதனத்தை உலகத் தடைகளால் எகிப்திலே அசட்டைசெய்து இந்த நிந்தைக்குள்ளிருந்தார்கள். மற்ற அநேகர் இந்த இகழ்ச்சியான நிலைமையிலேயே வனாந்தரத்தில் வெகுகாலமிருந்தார்கள். இப்போது அந்த நிந்தை புரட்டப்பட்டுப் போயிற்று. (4) வனாந்தரத்திலிருந்த இந்த நிந்தை (யாத். 14: 3.) இஸ்ரவேலர் கானானுக்கு வந்தபடியால் நீங்கிப்போயிற்று.

10 வா. இது இஸ்ரவேலர் ஆசரித்த மூன்றாம் பஸ்கா. முதலாம் பஸ்கா எகிப்திலும், இரண்டாம் பஸ்கா சீனாயிலும், மூன்றாவது கானான்தேசத்திலும் ஆசரிக்கப்பட்டன. வனாந்தரத்தில் பண்டிகைகளும் பலிகளும் பிரயாணத்தால் அசட்டைசெய்யப்பட்டன. ஆமோ. 5: 25.

11. பஸ்காவின் மறுநாள் அதாவது 16-ம் நாளில் இஸ்ரவேலர் தங்கியிருந்த இடத்துக்குச் சமீபமான குடிகள் அவர்களுக்குப் பயந்து தங்களுடைய களஞ்சியங்களையும் வீடுகளையும் விட்டுத் தூரமான இடங்களுக்கும் அரணான கோட்டைகளுக்கும் ஓடிப்போனபடியால், அத்தேசத்தின் மூர்தின வருஷத்துத் தானியத்தாலாகிய புளிப்பில்லா அப்பங்களையும் முதற் கட்டுச் செலுத்தியபின்பு அந்த வருஷத்தில் விளைந்த சுட்ட கதிர்களையும் புசித்தார்கள்.

12. மன்னாப் பெய்யாமல் நின்றுபோகச் செய்தார். ஏனென்றால் அவர்கள் அதை எப்போதும் அனுபவித்தால் சாதாரண சங்கதியாக நினைக்கப்படுமே. அப்படிக்கில்லாமல் இஸ்ரவேலருக்கு அது விசேஷித்த அற்புத ஈவென்று காண்பிக்கும்படிக்கும் (2) தேவன் தமது கிருபைவரங்களில் ஆராதாரியாய்க் காணப்படாதபடிக்கும், நிறுத்திப்போட்டார், இஸ்ரவேலருக்குப் பிழைப்புக்குரிய தானிய தவசங்கள் கிடைக்

கக் கூடிய இடத்தில் மன்னாப் பெய்யுமென்றால் அதை அலட்சியம் பண்ண ஏதுவிருக்குமே. 17ட நின்றுபோயிற்று.

14. யோசுவாவுக்குக் காணப்பட்டவர் இஸ்ரவேலனுமல்ல, கானானியனுமல்ல. கர்த்தருடைய சேனையின் அதிபதியே. (1) கர்த்தருடைய சேனைகளாகிய வானத்திலும் பூமியிலுமுள்ள சிருஷ்டிகளுக்கெல்லாம் அதிபதி. (2) 1 இராசா 22: 19. 2 நாளா. 18: 18. லூக். 2: 13-ல் சொல்லப்பட்ட வானசேனைகளாகிய தூதர்களுக்கதிபதி. (3) யாத். 12: 41. கர்த்தருடைய சேனையென்றழைக்கப்படுகிற இஸ்ரவேல் சபையின் அதிபதி. இந்தப் பெரிய காரியத்தில் உன்னையும் அவர்களையும் நடத்தி உதவிசெய்யும்படிக்கு வந்த பிரதான தளகர்த்தன் நானேயென்ற பொருளாம். தானியேல் 10: 21. 12: 1-ல் சொல்லப்பட்ட பிரபுவாகிய மிகாவேலேயல்லாமல் வேறல்ல. சிருஷ்டிக்கப்பட்ட தூதனுமல்ல. 1 கொரி. 10: 4-ல் இஸ்ரவேலரோடு கூடச் சென்ற தேவகுமாரனே. (1) தூதர் ஏற்றுக்கொள்ளக்கூடாத வணக்கத்தை ஏற்றுக்கொண்டதாலும் அறிவி. 22: 8, 9. (2) யாத். 3: 5-ன்படி அவருடைய பிரசன்னத்தால் அந்த இடம் பரிசுத்தமானதாலும் (3) யோசு. 6: 2-ல் யேகோவாவாகிய கர்த்தரென்றழைக்கப்படுவதாலும் அவர் தேவகுமாரனே.

## கேள்விகள்.

1. இஸ்ரவேலர் கில்காலில் விருத்தசேதனம்பண்ணப்பட்டார்களே அதற்கு முகாந்தரமென்ன?

2. இஸ்ரவேலர் 2-ம் விசை விருத்தசேதனம்பண்ணப்பட்டார்களென்பதின் கருத்தென்ன?

3. இஸ்ரவேலர் விருத்தசேதனம்பண்ணப்பட்டதால் எப்படி எகிப்தின் நிந்தை புரட்டப்பட்டுப்போயிற்று.

4. மன்னாவென்றாலென்ன? அதைப்பற்றி தெரிந்ததை வரையவும். மன்னா எப்படி கிறிஸ்துநாதருக்கு முன்னடையாளமானதாம்?

5. யோசுவாவுக்குக் காணப்பட்டவர் தேவகுமாரனென்று ரூபியும். இந்த சமயத்தில் அவருடைய தரிசனையின் நோக்கமென்ன? இந்தப்படி எவர் எவருக்கு காட்சியளித்து என்னென்ன விசேஷங்களை அறிவித்திருக்கிறார்?

6. கில்கால், ஆர்லோத் என்ற இடங்களுக்கு அர்த்தமென்ன? கில்காலில் நடந்த விசேஷங்களையெல்லாம் வரை.

7. இந்த இரண்டாம் விருத்தசேதனம் ஆவிக்குரிய மெய் இஸ்ரவேலருடைய விருத்தசேதனத்துக்கு எப்படி முன் குறிப்பு.

8. இஸ்ரவேலருடைய விசுவாசத்துக்கு இதில் பலத்த திருஷ்டாந்தமெழுதுங்கள்.



9. "பாவியின் ஆஸ்தியோ நீதிமானுக்காகச் சேர்த்துவைக்கப்படும்" என்ற சத்தியத்தை உறுதிப்படுத்துகிற திருஷ்டாந்தரங்களை எழுதும்.

10. "பாதரட்சைகளைக் கழற்றிப்போடு" என்னத்திற்கு அடையாளமாக இந்தக் கட்டளை பிறந்திருக்கலாம்?

## VI. அதிகாரம்.

1. எதிர்க்கத் திராணியில்லாமல், எரிகோவின் இராசா, பயமுற்றவனாய்க் கோட்டை வாசலை அடைத்திருந்தான். யோசு. 2: 5-ல் சொல்லியபடி இரவில் மாத்திரமல்ல, எப்போதும் அடைபட்டிருந்தது.

3. சத்துருக்களின் அம்புகள் எட்டாத தூரத்தில், பட்டணத்தை பிரதிதினமும் ஒவ்வொரு விசையாக ஆறுநாளும், சுற்றிவரக் கற்பிக்கப்பட்டார்கள். இது இஸ்ரவேலருடைய பலம், யுத்தி, ஆயுதமுதலியவைகளாலல்ல, முன் குறிக்கப்பட்ட தேவநியமிப்பினாலும் உத்தரவாலும் ஜெயமுண்டாயிற்றென்று காட்டவும், தேவன் எந்த அற்ப எத்தனத்தாலும் தமக்குப் பிரியமானதைச் செய்ய வல்லவரென்று இஸ்ரவேலருக்கு ரூபிக்கவும் நோக்கமாகச் செய்யப்பட்டது.

4. "கொம்பு எக்காளங்கள்." யூபிலி வருஷத்தில் கெம்பீரத்துக்கடையாளமாக ஊதப்படவேண்டியவைகள். லேவி. 25: 9. எண். 10: 8. இவை பயங்கரமான யுத்த எக்காளங்களல்ல, ஜெயத்தைக் காட்டும் சந்தோஷ எக்காளங்களாம். கானானில் பிரவேசித்ததே அவர்களுக்கு யூபிலி என்கலாம்.

5. "நெடுந்தொனி" வாத்தியங்களை முடிக்கிறபோது செய்கிற வழக்கம்.

"பட்டணத்தின் அலங்கம்." முழுவதுமாய் விழவில்லை. ஏனெனில் சத்துருக்கள் தப்பியோடுவதற்கிடமாகும். இஸ்ரவேலர் தாராளமாய்ப் பிரவேசிக்கப் போதுமானதவ்வளவு இடிந்தது. இராகாபிருந்த அலங்கமும் விழவில்லை. வா. 22.

7. எரிகோப் பட்டணத்தாருக்கு உடனே சேதம் வராததால் இஸ்ரவேலரைப் பரிகாசஞ்செய்திருப்பார்கள். இஸ்ரவேலர் தங்களுக்கும் உடன்படிக்கைப்பெட்டிக்கும், அபாயம் வராதபடி காக்கவும், பட்டணத்தின்மேல் தேவகோபத்தை நிறைவேற்றவும் நோக்கமாய் ஆயுதந் தரித்து அணியணியாய்ப் புறப்பட்டார்கள்.

9. "பின்தண்டு" தேவன் செய்யப்போகிற அதிசய கிருபையைப் பார்க்க விரும்பின ஆயுதமணியாத பேராம்.

10. "ஆர்ப்பரியாமல்" குறிக்கப்பட்டகாள் வருமுன் ஆர்ப்பரித்தால் பயனற்றதாய்ப் போகும். அதனால் இஸ்ரவேலருக்கு இளக்கரிப்பு வருவதோடு சத்துருக்கள் நிந்திக்கவும் இடமாகும்.

12. உபா. 31: 25.

16. தேவனுடைய வாக்குத்தத்தங்களின்பேரில் விசுவாசமுடையவர்களென்பதைக் காட்டவும், தேவனுடைய பெரிதான இரக்கத்துக்கு நன்றிசெலுத்தவும், அவர்களை உற்சாகப்படுத்தவும், சத்துருக்கள் திகிலடையவுமே ஆர்ப்பரிக்கக் கட்டளைகொடுத்தார்.

17. "சாபத்தீடு" சர்வசங்காரத்துக்கென்று நியமிக்கப்பட்டது. லேவி. 27: 21, 29. உபா. 12-அதி. தேவனுடைய கட்டளையினால் இப்படிப் பேசினார். 1 இரா. 16: 34. நியாயப்பிரமாணத்தின்படி முதற்பலன்கள் கர்த்தரைச் சேர்ந்தவைகளானதாலும், வளம்பொருந்திய இப்பட்டணத்தின் கொள்ளையினால் யுத்தவீரர் செருக்கடைந்து தங்கள் வேலையில் அசமந்தராகாதபடிக்கும், மீந்திருக்கிற சத்துருக்கள் அஞ்சவும் நோக்கமாய் எரிகோவின் ஆஸ்தி கர்த்தருக்குச் சாபத்தீடென்று சொல்லப்பட்டது.

18. இஸ்ரவேலர் சாபத்தீடானதில் யாதொன்றை எடுத்து அதினால் தங்களைத் தண்டிக்கும்படி தேவனுக்குக் கோபமூட்டாமல் எச்சரிக்கையாயிருக்கக் கற்பிக்கிறார்.

19. பொன், வெள்ளியால் செய்யப்பட்ட சொருபங்களை மாத்திரம் முழுவதும் அழித்துப்போடவேண்டும். யாத். 32: 20. உபா. 7: 25. இவைகளை அக்கினியில் போட கர்த்தருக்குப் பரிசுத்தமாம். எண். 31: 22, 23. இது ஒரு ஆசாரியனுக்கென்றல்ல, ஆசரிப்புக்கூடாரத்தின் வேலைக்கு முழுவதுமாய்ச் சேரும்.

21. ஒவ்வொரு மனுஷ ஜீவனுக்கும் காரணரான தேவன் கானானியர் அருவருப்பான அக்கிரமங்கள் செய்து பயங்கர தண்டனைக்கே அவானவர்களாயிருந்தபடியால் சர்வசங்காரமாய் அவர்களை அழிக்க முன்னமே கற்பித்திருந்தார்.

22. இராகாபிருந்த அலங்கம் விழவில்லை. இது தேவனுடைய பெரிய தயவு.

23. இராகாபும் அவள் வீட்டாரும் புறச்சாதியின் நிலைமைக்குரிய அசுத்தங்களிலிருந்து சுத்திகரிக்கப்பட்டு, யூதமார்க்க உபதேசங்களைக் கற்று யூதச் சபையோடு சேர்ந்தார்கள்.

25. கானானியரை முற்றிலும் அழிக்கவேண்டுமென்ற பொதுச் சட்டத்துக்கு அவர்களில் யாராவது விக்கிரகாராதனையை வெறுத்து இஸ்ரவேலருக்கு அடங்கிவருவார்களானால் அவர்கள் காக்கப்படுவது விரோதமல்ல.



26. எரிகோவின்பேரிலுள்ள எரிச்சலினாலும் வெறுப்பினாலுமல்ல, தேவஉத்தரவினாலேயே யோசுவா சபித்தான். 1 இராசா 16: 34. விக்கிரகாராதனைசெய்த ஜனங்களின் பேரில் தேவன் விளங்கச்செய்த நீதிக்கும், இந்தப் பெரிய பலத்த பட்டணத்தை அழித்ததில் விளங்கச் செய்த சர்வவல்லபத்துக்கும் என்றும் நினைப்பூட்டும் அடையாளமாக இப்பட்டணத்தின் அழிவு நிலைத்திருக்கத் தேவன் சித்தங்கொண்டார். இந்தச் சாபங் கட்டினவனைச் சாருமேயல்லாது, கட்டினபின்பு குடியிருப்பவர்களைச் சாராது. 1 இராசா 2: 18. லூக். 19: 1—5. கட்டுகிறவன் கட்டத்துவக்கின நாள்முதல் முடிக்கிறவரை தன் பிள்ளைகளெல்லாரையுஞ் சாகக்கொடுப்பான். 1 இரா. 16: 34.

## கேள்விகள்.

1. எரிகோவின் அலங்கம் விழுந்தது அற்புதமென்று ரூபியுங்கள்.

2. எரிகோவைப் பிடிப்பதற்குச் செய்த முறையை தேவன் ஏற்படுத்தினதற்கு முகாந்தரமென்ன? இதெப்படி சுவிசேஷ பிரபலியத்துக்குக் குறிப்பு.

3. கர்த்தர் யோசுவாவோடே கூடவிருந்தார் என்பதற்கு குறிப்புகள்.

4. இராகாபும் அவள் வீட்டாரும் யூதசபையில் சேர்க்கப்பட்ட விதமெப்படி! இதினால் நாம் படிக்கிறதென்ன?

5. கானானியரை சர்வசங்காரம்செய்ய தேவனுடைய கட்டளையிருக்க, யார் யார் தப்புவிக்கப்பட்டார்கள்—ஏன்! இதற்கொத்தபடியான வேறு திருஷ்டாந்தரங்களுண்டா?

6. தேவன் கானானியரை சர்வசங்க்ரம்பண்ணினதும், அவர்கள் தேசத்தை இஸ்ரவேலருக்குக் கையளித்ததும் தேவனுடைய நீதிக்கும் இரக்கத்துக்கும் ஒத்துவரமாட்டாதே என்று சிலர் ஆக்ஷேபித்தால் என்ன சொல்லலாம்?

7. கானானியருடைய குற்றமில்லாத குழந்தைகளையும் அழிக்க வேண்டியதென்ன? அவைகளென்ன பொல்லாப்புச் செய்தது? இது தேவநீதிக்கும் இரக்கத்துக்கும் பின்னமுண்டாக்குமல்லவா?

8. எக்காளங்கள் எத்தனை தடவையாக ஊதப்பட்டது, ஏன்? வேதத்தில் 7-என்கிற இலக்கம் நிறைவைக் குறிக்கத்தக்கதான கருத்தாய் வருகிற சங்கதிகளை எழுதும்.

9. எரிகோப் பட்டினம் எப்படி சபிக்கப்பட்டது ஏன்? அதின் சாபம் எப்படி எப்போது நிறைவேறிற்று?

10. "சாபத்தீடானது" என்ற வார்த்தையின் அருத்தமென்ன?

# Exposition of the Church Catechism.

## ஞானோபதேசவினாவிடை
வியாக்கியானம்.

## கூ-ம் அதிகாரம்.

### விசுவாசப்பிரமாணம்.

உ-ம் பிரிவு.

(கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றி.)

(தொடர்ச்சி.)

வினா. நம்முடைய இரட்சகருடைய சரீரம் கல்லறையிலிருந்தபோது, அவருடைய ஆத்துமா எங்கே இருந்தது?

விடை. பரதீசிலிருந்தது. அங்கே நீதிமான்களுடைய ஆத்துமாக்கள் அவர்களுடைய சரீரங்களைவிட்டு பிரிந்தபின் போய்ச் சேர்ந்து, உயிர்த்தெழுதலின் நாள்வரைக்கும் அவ்விடத்திலே இருக்கும்.

இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய். லூக். 23: 43.

வினா. கிறிஸ்து என்றால் அர்த்தமென்ன?

விடை. அபிஷேகம்பண்ணப்பட்டவர்.

மேசியா என்பதற்கு கிறிஸ்து என்று அர்த்தமாம். யோவா. 1: 41.

வினா. ஏன் அபிஷேகம்பண்ணப்பட்டவர் என்று அழைக்கப்பட்டிருக்கிறார்?

விடை. அவர் தம்முடைய ஜனங்களுக்கு தீர்க்கதரிசியும், ஆசாரியரும், இராஜாவுமாயிருக்கும்படி, பரிசுத்தஆவியினாலே அபிஷேகம்பண்ணப்பட்டபடியினாலேயே. இந்த உத்தியோகங்களில் ஒவ்வொன்றுக்கும் ஆட்கள் நியாயப்பிரமாண முறைமையின்படி அபிஷேகம்பண்ணப்பட்டார்கள். கிறிஸ்துவானவர் இம்முறைகளினாலே முன்னறிவிக்கப்பட்டும் முன்னடையாளம் காட்டப்பட்டும் இருந்தார்.

இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார். அப். 10: 38.

இந்தச் சமயங்களில் யூதர்களாலே அபிஷேக எண்ணெய் பிரயோகிக்கப்பட்டது.



இது எனக்குரிய பரிசுத்த அபிஷேக தைலமாயிருக்கவேண்டும். யாத். 30: 31

1. தீர்க்கதரிசிகள் அபிஷேகம்பண்ணப்பட்டார்கள்.

எலிசாவை உன் ஸ்தானத்திலே தீர்க்கதரிசியாக அபிஷேகம்பண்ணு. 1 இரா. 19: 16.

கிறிஸ்து தீர்க்கதரிசியாக அபிஷேகம்பண்ணப்பட்டு, தேவனுடைய சித்தத்தை நமக்கு வெளிப்படுத்தினார்.

அவர் தமது வசனத்தினாலும், தம்முடைய ஊழியக்காரர்களைக் கொண்டும், தம்முடைய ஆவியினாலும் போதிக்கிறார்.

மனிதர் மற்ற எல்லாத் தீர்க்கதரிசிகளையும் அசட்டைபண்ணினதினாலே (மத். 21: 37.) தேவன் தம்முடைய குமாரனை அனுப்பினார்.

சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார். ஏசா. 61: 1. லூக். 4:18.

பரி. பவல் போதித்தலை, தீர்க்கதரிசனஞ் சொல்லுதலாக அழைக்கிறார். 1 கொரி. 14: 1, 3, 4.

2. ஆசாரியர் அபிஷேகம்பண்ணப்பட்டார்கள்.

அவர்கள் எனக்கு ஆசாரிய ஊழியஞ்செய்யும்படி, அவர்களையும் அபிஷேகம்பண்ணுவாயாக. யாத். 40: 15.

அபிஷேகம்பெற்ற ஆசாரியன் மி. லேவி. 4: 3.

கிறிஸ்துவானவர் ஆசாரியராக அபிஷேகம்பண்ணப்பட்டார். நாம் குற்றவாளிகள். கிறிஸ்து தம்மைத் தாமே பலியிட்டதினாலே, நமக்காகப் பிராயச்சித்தம் செய்தார். அவருடைய மத்தியஸ்தத்தினாலே மாத்திரம் நாம் தேவனுக்கு முன்பாகக் காணப்படக் கூடியவர்கள். அவர் மாத்திரம் ஏற்ற பலியைச் செலுத்தி, பிதாவின் கோபத்தை சாந்திபண்ணக் கூடும்.

நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர். சங். 110: 4.

கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்தார். எபே. 5: 2.

இயேசுவானவர் ஆணையின்படியே ஆசாரியராக்கப்பட்டார் எபி. 7: 21.

அவர் நாடோறும் பலியிடவேண்டியதில்லை; ஏனெனில் தம்மைத் தாமே பலியிட்டதினாலே இதை ஒரேதரம் செய்துமுடித்தார். எபி: 7: 27.

ஒவ்வொரு பிரதான ஆசாரியனும் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தும்படி நியமிக்கப்படுகிறான்; ஆதலால் செ

னுத்தும்படிக்கு ஏதோ ஒன்று இவருக்கும் அவசியம் வேண்டியதாயிருக்கிறது. எபி. 8: 3.

3. இராசாக்கள் அபிஷேகம்பண்ணப்பட்டார்கள்.

| | |
|---|---|
| சவுல். ... 1 சாமு. 15: 1. | ஆசகேல். 1 இரா. 19: 15. |
| தாவீது. 1 சாமு. 16: 12. | ஏகூ. ... 1 இரா. 19: 16. |

கிறிஸ்து இராஜாவாகச் சொல்லப்பட்டிருக்கிறார். நாம் சுபாவப்படி நம்முடைய ஆவிக்குரிய சத்துருக்களாலே சிறைப்படுத்தப்பட்டவர்களாயிருக்கிறோம். ஆனால் கிறிஸ்து அவைகளினின்று நம்மை விடுதலையாக்கி, தம்முடைய கிருபையினால் நம்முடைய இருதயத்தில் ஆளுகைசெய்யும்படி நம்முடைய இராஜாவாக வந்திருக்கிறார். நாம் நம்முடைய சத்துராதிகளை ஜெயிக்கும்படிக்கும், பரிசுத்தராய் நடக்கும்படிக்கும் கிருபை அளிக்கிறார். அவருடைய இராச்சியம் உலகத்துக்குரியதாயிராமல், ஆவிக்குரியதாயும், நித்தியமுள்ளதாயுமிருக்கிறது.

நான் என்னுடைய பரிசுத்த பர்வதமாகிய சீயோன் மீதில் என்னுடைய இராஜாவை அபிஷேகம்பண்ணி வைத்தேன். சங். 2: 6.

தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய இராச்சியத்தையும் அவர் திடப்படுத்துவார். ஏசா. 9: 7.

இதோ உன் இராஜா உன்னிடத்தில் வருகிறார். மத். 21: 4.

இவன் யூதருடைய இராஜாவாகிய இயேசு. மத். 27: 37.

கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார். லூக். 1: 32, 33.

இராஜாதி ராஜா கர்த்தாதி கர்த்தர். வெளி. 19: 16.

அவருடைய ஆளுகைக்கு விரோதியாகாதே. அவருடைய அன்பை அவமதியாதே. தேவனுடைய கிறிஸ்துவை உன்னுடைய தீர்க்கதரிசியாகவும், ஆசாரியனாகவும், இராஜாவாகவும் ஏற்றுக்கொள். அவரண்டை வா; அவர் ஆசாரியராக தம்முடைய தெளிக்கப்பட்ட இரத்தத்தினாலே உன்னை பாவங்களற கழுவி, சுத்திகரிக்கட்டும். அவர் தீர்க்கதரிசியாக உன்னுடைய சமாதானத்துக்கடுத்தவைகளை உனக்குப் போதித்து, எல்லா திவ்விய அறிவினாலும் உன்னை உணர்த்துவிப்பாராக. அவர் இராஜாவாக உன்னுடைய இருதயத்தில் ஆளுகைசெய்யட்டும். அவரிடத்தில் உன்னுடைய செய்கைகளையும், வார்த்தைகளையுமட்டுமல்ல, உன்னுடைய ஒவ்வொரு நினைவுகளையும் கொண்டு வா.

---



## ௫-ம் பிரிவு.

---

## கிறிஸ்துவின் தேவதன்மையைப் பற்றி.

இயேசுகிறிஸ்துவை இரட்சகராகவும், தேவனால் அபிஷேகம்பண்ணப்பட்டவராகவும் கவனித்தோம். இப்பொழுது அவர் தேவனுடைய ஒரே குமாரனென்றும், நம்முடைய கர்த்தர் என்றும் கவனிப்போம்.

வினா. இயேசுகிறிஸ்து தேவனுடைய ஒரே குமாரனாயிருக்கிறாரென்பதற்கு அத்தாட்சி என்ன?

விடை. 1. மனுஷருடைய சாட்சி.

நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து. மத். 16: 16.

அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது. யோவா. 1: 14.

பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார். யோவா. 1: 18.

நீர் தேவனுடைய குமாரன். யோவா. 1: 49.

யோவா. 11: 27. அப். 8: 37. 1 யோவா. 4: 9. 4: 14.

2. கிறிஸ்துநாதர் தாமே சாட்சியிட்டிருக்கிறார்.

நீ ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து தானா? என்று கேட்டான். அதற்கு இயேசு நான் அவர் தான் என்றார். மாற். 14: 61, 62.

அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரே பேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்பட்டாயிற்று. யோவா. 3: 18.

யோவா. 9: 35, 37. 10: 36.

3. பிதாவாகிய தேவனே சாட்சியிட்டிருக்கிறார்.

நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை செனிப்பித்தேன். சங். 2: 7. அப். 13: 33. எபி. 1: 5. 5: 5.

இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன். மத். 3: 17. 17: 5. லூக். 1: 35.

இயேசுகிறிஸ்து நம்முடைய கர்த்தராகவும் இருக்கிறார்.

கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி, மி. சங். 110: 1. மத். 22: 44.

நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள்; நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர்தான். யோவா. 13: 13.

இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும். பிலிப். 2: 11.

2 பேது. 3: 18. 1 தீமோ. 6: 15. வெளி. 17: 14. 19: 16.

குமாரனைக் கனம்பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம்பண்ணாதவனாயிருக்கிறான் என்பதை நினைத்துக்கொள். யோவா. 5: 23. உன்னுடைய உதடுகளினாலே அவரைக் கனம் பண்ணவும், அவர் கற்பிக்கிறவைகளை நீ செய்யாமலிருக்கையில் அவரை ஆண்டவரே, ஆண்டவரே என்று கூப்பிடவும் நினையாதே. லூக். 6: 46. நீரே பரிசுத்தர், நீரே கர்த்தர். கிறிஸ்துவே, தேவரீர் ஒருவரே பரிசுத்த ஆவியோடே தேவனாகிய பிதாவின் மகிமையிலே உன்னதமானவராயிருக்கிறீர் என்று அறிக்கையிடு. இயேசுவானவர் தேவனாயிருக்கிறாரென்றும், அவர் சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்திசெய்வதற்கு நிறைவும் பூரணமும் போந்ததுமான பலியையும் காணிக்கையையும் பரிகாரத்தையும் செலுத்தினாரென்றும் விசுவாசித்து, பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் அவரைப் பற்றும் விசுவாசத்தினாலே பெற்றுக்கொள்ளும்படி ஜெபம்பண்ணு. அப். 26: 18.

அவர்பேரில் வைக்கும் நம்முடைய விசுவாசம் பெலப்படும்படியாக, அவருடைய தேவதன்மைக்குரிய ரூபகாரங்களை ஆராய்வோமாக.

புதியஏற்பாட்டிலுள்ள அநேக இடங்களில் காணப்படுகிறபடி, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷருக்கும் யூதருக்கும் பழையஏற்பாட்டிலுள்ள தீர்க்கதரிசனங்களில் சொல்லப்பட்ட இலட்சணங்களையுடைய மேசியாவே நீங்கள் கண்டவர் என்று தம்மைப்பற்றி அறிவித்தார். லூக். 24: 25—27, 44—46. யோவா. 5: 39, 46. அப்போஸ்தலர்களும் கிறிஸ்துநாதரின் தேவதன்மையை ரூபிக்கும்படி பழையஏற்பாட்டிலுள்ள வாக்கியங்களை அடிக்கடி எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

யோவா. 1: 45; அப். 3: 22, 24. 13: 27—30. 17: 2, 3. 26: 22. 28: 23. 1 பேது. 1: 10, 11.

தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக் குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள். அப். 10: 43.

**வினா. எந்த வேதவாக்கியங்களில் கிறிஸ்து தேவனாகச் சொல்லப்பட்டிருக்கிறார்?**



விடை. தேவனே, உமது சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது. சங். 45: 6

வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா. ஏசா. 9: 6.

சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர். ஏசா. 6: 3. யோவா. 12: 41.

இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம். மத். 1: 23.

அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார். யோவா. 1: 1, 14.

யோவா. 5: 18. 10: 33. அப். 20: 28. ரோ. 9: 5. பிலி. 2: 6. கொலொ. 2: 9 1 தீமோ. 3: 16. 1 யோவா. 5: 20 யூதா: 25.

---

தேவனுக்கு மாத்திரமுரிய பல இலட்சணங்கள் உண்டு. வேதாகமத்தில் அந்த இலட்சணங்கள் யாருக்குச் சொல்லப்படுகிறதோ அவர் தேவனாயிருக்கிறாரென்பது பூரண நிச்சயமே.

அவர் தமது மகிமையை வேறொருவருக்கும் கொடார். ஏசா. 42: 8.

1. தேவன் நித்தியமுடையவராயிருக்கிறார்.

நான் முந்தினவரும், நான் பிந்தினவருந் தானே; என்னைத் தவிர தேவன் இல்லை. ஏசா. 44: 6.

கிறிஸ்துநாதரைப்பற்றியும் அப்படியே சொல்லப்பட்டிருக்கிறது.

நான் முந்தினவரும் பிந்தினவரும் உயிருள்ளவருமாயிருக்கிறேன். வெளி. 1: 17.

இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்படுவார்; அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது. மீகா. 5: 2.

ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன். யோவா. 8: 58.

(தேவன் இந்த நாமத்தினாலேயே தம்மை மோசேக்கு வெளிப்படுத்தினார். யாத். 3: 14.)

நான் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு உலகத்திலே வந்தேன். யோவா. 16: 28.

பிதாவே, உலகம் உண்டாகிறதற்குமுன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும். யோவா. 17: 5.

எபி. 7: 3. 13: 8. மத். 22: 45. வெளி. 22: 16.

தேவன் எல்லா வஸ்துக்களையும் சிருஷ்டித்தவர்.

நானே எல்லாவற்றையும் செய்கிற கர்த்தர்; நான் ஒருவ

ராய் வானங்களை விரித்து, நானே பூமியைப் பரப்பினவர். ஏசா. 44: 24.

நான் பூமியை உண்டுபண்ணி, நானே அதின்மேல் இருக்கிற மனுஷனைச் சிருஷ்டித்தேன்; என் கரங்கள் வானங்களை விரித்தன. ஏசா. 45: 12.

கிறிஸ்துநாதரும் அப்படியே சிருஷ்டிகர் என்பதைக் காணலாம்.

சகலமும் அவர்மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. யோவா. 1: 3, 10.

சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. கொலோ. 1: 16.

எபி. 1: 10. 2: 10. வெளி. 4: 11.

3. தேவன் எல்லா வஸ்துக்களையும் ஆதரித்துத் தாங்குகிறார்.

சகல பிராணிகளின் ஜீவனும், மாம்சமான சகல மனுஷரின் ஆவியும் அவர் கையிலிருக்கிறது. யோபு 12: 10.

நீர் அவைகளின் சுவாசத்தை வாங்கிக்கொள்ள அவைகள் மாண்டு, தங்கள் மண்ணுக்குத் திரும்பும். சங். 104: 29.

கிறிஸ்துநாதரைப்பற்றியும் அப்படியே சொல்லப்பட்டிருக்கிறது.

சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறார். எபி. 1: 3.

எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது. கொலோ. 1: 17.

4. தேவன் சர்வவியாபகர்.

கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது. 2 நாளா. 16: 9.

கிறிஸ்துநாதரும் அப்படியே எங்கும் இருக்கிறாரென்று பார்க்கலாம்.

இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன். மத். 18: 20.

உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன். மத். 28: 20.

யோவா. 3: 13. 1 கொரி. 1: 2. எபி. 2: 18. யோவா. 10: 28.



# சமாசாரத்திரட்டு.

**இங்கிலந்து.**—சில நாட்களுக்குமுன் நிலக்கரிக் கேணி விபத்துகள் பல நேரிட்டன. அவைகள் ஒன்றினால் 170-பேருக்கு உயிர் நாசமுற, விதவைகளும் அநாதருமான 500-சில்வானம் பேருக்கு ஜீவனார்த்தமில்லாத இக்கட்டும் நேர்ந்திருக்கிறது.—உவேல்ஸ் நாட்டு இளவரசர் அவுஸ்திரேலியாவில் கூடப்போகிற மேல்போர்ன் வஸ்துநிச்சய வேடிக்கை பார்க்கப்போகக் கருதியிருந்த யோசனை நிறுத்தலாயிற்று.

**ஜர்மானியா**—கொலோனை நகரத்தில் 600-வருஷங்களாய்க் கட்டிவந்த பெரிய ஆலயம் ஒன்று இப்போதுதான் முற்றுப்பெற்று, செப்றெம்பர்மீ 15உ விசேஷித்த மேளாயாய் பிரதிஷ்டைசெய்யப்பட்டது. ஆனால் கடந்த அநேக ஆண்டுகளாய் அதில் தேவாராதனை நடந்து வந்தது.

**துர்க்கியா.**—மொந்தினிக்ரோ, கிரேகியா பிரதேசங்களையிட்டு பர்லின் மகாசபையில் தீர்மானித்த திட்டவட்டங்களுக்கு துர்க்கியாவை பலவந்தமாய் அமையப்பண்ணும்பொருட்டு கடல் ராணுவத்தினால் அச்சுறுத்தவேண்டும் என்று ஐரோப்பிய மகா துரைத்தனத்தார் ஐக்கிய யோசனைக்குள்ளாயினர். இதற்காக அனுப்பப்பட்ட போர்க்கப்பல்கள் ரகுசாவில் கூட்டம்போட்டு, அங்கிருந்து ஆதிரியாக்கடலின் கீழ்கரைப் பற்றிப் போகிறதும் வருகிறதுமாய் இருக்கின்றன. மகா துரைத்தனத்தாரின் தீர்மானங்களுக்கு இணங்குவதைவிட ராச்சிய பாரத்தைக் கைவிடுவது தமக்குச் சம்மதமென்று சுல்த்தான் ஒரு விசை வெளியிட்டும், பிந்தி அவர் அதற்கு உடன்பட்டு வழிக்கு வந்தார் என்று கடைசியாய் எட்டின சமாசாரத்தில் கண்டிருக்கிறது.

**இந்தியா.**—ஜெயபுரி ராஜா 47-வயசில் சந்தானமில்லாமல் மரித்தார். அவர் தமது தேசத்தின் விருத்தியை நாடின விவேகமுள்ள அதிபதியாம். தமக்குப்பின் பட்டத்துக்கு வரவேண்டிய ஆளை அவரே நியமித்திருந்தபடி அநுமதித்து பட்டஞ் சூட்டியிருக்கிறது.—தற்கால சீமை மந்திரி சபையில் சேர்ந்தவராகிய கௌரவ ஆதாம் துரை சென்னை கவர்னராகிய பக்கிங்ஹாம் டியூக் பட்டவர்த்தனருக்குப் பதில் நியமகம்பெற்று, இம்மாசத்தின் முடிவுக்குள்ளாக சென்னைக்கு வருவார்.—தற்கால இந்திய ராஜபிரதிநிதியவர்களின் பத்தினியாராகிய ரிப்பன் பெருமாட்டி எர்ல் டி கிரேய் என்ற குமாரர் சகிதம் டிசம்பர்மீ ஆரம்பத்தில் பொம்பாயில் சேர்வார்கள். ரிப்பன் பிரபு அவர்களைச் சந்திக்குமாறு பொம்பாய்க்குப் போவார். செப்றெம்பர்மீ நயினிதால் என்னும் இடத்தில் ஒரு பயங்கர விபத்து நேரிட்டது. அதற்குச் சமீபமான மலைப்பக்கங்களிலிருந்து ஒரு பெரும்பாளம் இடிந்திறங்கி, மைதானத்திலுள்ள வீடுகளையும் கடைகளையும் அமுக்கிக்கொண்டதினால், சுமார் 200-பேர் உயிரோடே புதையுண்டு போயினர்.

நவம்பர்௴ நாள் 30-ஐப்பசி௴ 18௳முதல், கார்த்திகை௴ 17௳வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அனுதினத் தியானம். |
|---|---|---|---|
| தி | 1 | ௧௮ | நீங்கள் உறுதிப்பட்டவர்களாயிருப்பீர்களாக. 1 கொ. 15:58. |
| செ | 2 | ௧௯ | ஆவியே உயிர்ப்பிக்கிறது. யோவா. 6:63. (ஏசா. 45:22. |
| பு | 3 | ௨0 | என்னை நோக்கிப் பாருங்கள், அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள். |
| வி | 4 | ௨௧ | இரட்சிப்பு கர்த்தருடையது. யோனா. 2.9. |
| வெ | 5 | ௨௨ | கிருபையில் வளருங்கள். 2 பே. 3:18. (எரே. 33:3. |
| ச | 6 | ௨௩ | என்னை நோக்கிக் கூப்பிடு, நான் உனக்கு உத்தரவு கொடுப்பேன். |
| ஞா | 7 | ௨௪ | கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக இருக்கிறார். |
| தி | 8 | ௨௫ | கர்த்தாவே, உமக்குக் காத்திருக்கிறேன். சங். 38:15. |
| செ | 9 | ௨௬ | ஞானவரங்களை விரும்புங்கள். 1 கொ. 14:1. (4: 23. |
| பு | 10 | ௨௭ | எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள். நீதி. |
| வி | 11 | ௨௮ | நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறீர்கள். கொலோ. 3: |
| வெ | 12 | ௨௯ | பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள். நீதி. 12: 22. |
| ச | 13 | ௩0 | தேவனுடைய ராஜ்யத்தைத் தேடுங்கள். லூக். 12:31. |
| ஞா | 14 | ௧ | விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியாயிருக்கிறது. |
| தி | 15 | ௨ | உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும். தானி. 9:17. |
| செ | 16 | ௩ | விசுவாசித்து நடக்கிறோம். 2 கொ. 5:6. (23:17. |
| பு | 17 | ௪ | உன் மனதைப் பாவிகள்மேல் பொறாமைகொள்ளவிடாதே. நீதி. |
| வி | 18 | ௫ | கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில் பலப்படு. 2 தீமோ. 2:1. |
| வெ | 19 | ௬ | என் மீட்பர் உயிரோடிருக்கிறாரென்று நான் அறிந்திருக்கிறேன். |
| ச | 20 | ௭ | எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது. 2 கொ. 3:5. |
| ஞா | 21 | ௮ | மாம்சமெல்லாம் புல்லைப்போல இருக்கிறது. ஏசா. 40 6. |
| தி | 22 | ௯ | உமது ஜனத்தை இரட்சியும். சங். 28:9. (11:30 |
| செ | 23 | ௧0 | என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது. மத். |
| பு | 24 | ௧௧ | அவருடைய காருணியம் எத்தனை பெரியது. சகரி. 9:17. |
| வி | 25 | ௧௨ | நான் எங்கேயிருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனுமிருப்பான். |
| வெ | 26 | ௧௩ | இயேசுகிறிஸ்துவை தேவனுடையகுமாரனென்று விசுவாசிக்கிறே |
| ச | 27 | ௧௪ | காலத்தைப் பிரயோசனப்படுத்திக்கொள். எபே. 5:16. (ன் |
| ஞா | 28 | ௧௫ | அவர் வரும் நாளைச் சகிப்பவன் யார்? மல்கி. 3:2. |
| தி | 29 | ௧௬ | கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாருமாயிருக்கிறார். கொலோ. 3:11. |
| செ | 30 | ௧௭ | கர்த்தருக்குக் காத்திரு. சங். 27:14. |

## விசேஷ நாட்கள்.

1. சகல பரிசுத்தவான்களின் திருநாள்.
2. அமாவாசை.
7. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 24-ம் ஞாயிறு.
14. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 25-ம் ஞாயிறு.
17. பௌர்ணமி.
21. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 26-ம் ஞாயிறு.
28. அட்வெந்தென்னும் நாட்களில், 1-ம் ஞாயிறு.
30. பரி. அப். அந்திரேயாவின் திருநாள்.

# நற்போதகம்.

மீ௨. டிசம்பர்௴. ௲அ௱௯௰.

## யோசுவாவின் புஸ்தகம்.

### VII. அதிகாரம்.

1. இஸ்ரவேல் புத்திரரில் ஒருவன் மாத்திரம் துரோகம்பண்ணியிருக்க, இங்கே எல்லாருஞ் செய்ததாக சினை ஆகுபெயராகச் சொல்லியிருக்கிறது. ஆதி. 8: 4. 19: 29. இப்படியே யூதாஸ் மாத்திரம் சொல்லியதை யோவா. 12: 4. எல்லாச் சீஷர்களும் சொன்னதாக மத். 26: 8-ல் சொல்லியிருக்கிறது.

"சப்தி." 1 நாளா. 2: 6-ல் சிமரியென்னப்படுகிறான்.

"சேராகு." இவன் யூதாவுக்கு தாமாரால் பிறந்தவன். ஆதி. 38: 30. யூதாவோடே எகிப்துக்குப்போனவன். அதுமுதல் இதுவரையும் அத்தேசம் 256-வருஷம் சென்றிருப்பதினால் அவனுடைய 3-முற்பிதாக்களும் தங்களுக்கு 60-வயதாயிருக்கையில் குழந்தை பெற்றவர்களென்று வைத்துக்கொண்டால், ஆகான் இப்போது வயதுசென்ற மனிதனாயிருக்கவேண்டியது.

2. வேவுகாரர் பட்டினத்துக்குள் அல்ல, அதற்குச் சமீபமான எல்லைக்குப்போய் பட்டினத்தின் ஸ்திதியையும், சனங்களின் நிலைமையையும் அறிந்துவரும்படி அனுப்பப்பட்டார்கள்.

பெத்தாவேன் பெத்தேலுக்கு அலாதியாயும், சமீபமாயுமிருந்த பட்டினமாம். பின்பு பெத்தேலே பெத்தாவேன் என்னப்படுகிறது. ஓசே. 4: 15. 10: 5. யோசு. 18: 12.

3. இஸ்ரவேலருடைய சாபத்தீடான காரியத்தில் செய்த குற்றத்துக்குத் தண்டிக்கப்படவும், அவர்கள் மனந்திரும்பி சீரடையவும் இப்படிப்பட்ட ஆலோசனை தேவசெயலால் நடந்தது.

4. தேவன் அவர்களைக் கைவிட்டாரென்பதற்கு இதொரு பலத்த திருஷ்டாந்தரம். தேவனையல்லாதபடிக்கு அவர்கள் எவ்வளவ பல

வீனமும் அற்பமுமான சிருஷ்டிகள் என்பதைக் காண்பிக்கவும், கானானியரையும் அவர்கள் தேசத்தையும் இஸ்ரவேலர் கையில் ஒப்புக்கொடுக்க, தேவபலத்தால் மாத்திரந் தான் கூடுமென்பதைப் படிப்பிக்கவும் நோக்கமாக இப்படிச் சம்பவித்தது. உபா. 28: 25.

5. இஸ்ரவேலர் தங்கள் கேடகமாகிய தேவன் அண்டைக்கு மனந்திரும்பவும், கானானியர் தங்களுடைய அழிவுக்குக் கடினப்படவுமாக இப்படி நேரிட்டது. லேவி. 26: 36.

6. யோசுவா, நடந்த நஷ்டத்தையும், அதினால் இனி உண்டாகும் பயங்கரமான தீமைகளையும் உணர்ந்தவராய் துக்கப்பட்டு, யூதர் வழக்கப்படி தமது வஸ்திரங்களைக் கிழித்தார். ஆதி. 37: 34. 44: 13. அப்படியே இஸ்ரவேலின் பிரபுக்களும் தங்களைத் தாழ்த்தி உபவாசத்துக்கும், செபத்தியானத்துக்குமாக தங்கள் முகங்களைச் சாய்த்து புழுதியை தங்கள் மேற்போட்டார்கள். 1 சாமு. 4: 12. 2 சாமு. 1: 2. 13: 19. யோனா 3: 16. மீகா 1: 10.

7. இதினால் யோசுவா தேவனுக்குச் செய்யவேண்டிய கனம், கீழ்ப்படிதலுக்கு குறைவாகவும் தேவவல்லமையை நம்பாதவராகவும் செபித்தபடியால், தேவனுடைய பரிசுத்த மனிதரும், மற்றவர்களைப்போல பெலவீனமுள்ளவர்களென்று அறிகிறோம்.

9. தேவன் தமது சனங்களுக்குக் கொடுப்போமென்று சொன்ன நன்மையைக் கொடாமற்போனால் கானானியர் தேவனுடைய தயவு உண்மை, வல்லமை முதலிய இலட்சணங்களைப்பற்றித் தூஷித்து நிந்திப்பார்கள் என்ற கவலையாய்ச் செபிக்கிறார். யாத். 32: 12. எண். 14: 13. உபா. 33: 27. யோவே. 2: 17.

11. இஸ்ரவேலர் தாங்கள் தேவனுடைய எல்லா கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்து, அவைகளைக் கைக்கொள்வோமென்று ஆணையிட்டபடி செய்யாமல்; யாத். 19: 8. 24: 7. சாபத்தீடான விஷயத்தில் அவருடைய உடன்படிக்கையை மீறினார்கள். யோசு. 6: 19-ல் சொல்லியபடி தேவனுக்கென்று பிரித்துவைக்கப்பட்டிருந்த பரிசுத்த பொருள்களை களவுசெய்தார்கள். அப். 5: 1, 2.

12. "உங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளுங்கள்." சாபத்தீடான விஷயத்தில் ஒருவகையாய் எல்லாரும் கறைப்பட்டிருந்த தீட்டினின்று சுத்திகரிக்கப்படவும், எல்லாரும் தேவசந்நிதானத்தண்டை சென்று, சாபத்தீடான காரியத்தில் குற்றஞ்செய்தவன் கண்டுபிடிக்கப்பட்டு தன் குற்றத்தை வெளியரங்கமாய் அறிக்கையிடும்படி செய்விக்க தேவனை வேண்டிக்கொள்ளவும் வேண்டியதால், அவர்கள் பரிசுத்தம்பண்ணிக்கொள்வது அவசியமே. இந்தச் சமயத்தில் ஆகான் தன் குற்றத்தை அறிக்கையிடாமற்போனது மிகவும் துக்கமான காரியம்.



14. தேவஉத்தரவுப்படி சீட்டினால் குற்றவாளியைக் கண்டுபிடித்தார்கள். நீதி. 16: 33. இது உடன்படிக்கைப்பெட்டிக்கு முன்பாக தேவசமுகத்தில் போடப்பட்டது. இவ்வித வழக்கம் பிற்காலத்திலும் நடந்திருக்கிறது. 1 சாமு. 14: 41, 42. யோனா 1: 7. அப். 1: 26.

15. சாபத்தீடான மனுஷர்களுக்கும் பொருள்களுக்கும் நடந்தபடி ஆகானுக்கும் நடக்கவேண்டுமே. எண். 15: 30, 35. உபா. 13: 16. நியாயப்பிரமாணத்தின்படி அவனும் அவன் பிள்ளைகளும் சொத்துக்களுடன் சுட்டெரிக்கப்பட்டார்கள்.

பாவமானது வேதத்தில் "மதிகேடு" என்னப்படுகிறது. ஆதி. 34: 7. நியா. 20: 6. பாவத்தை தங்களுக்கு ஞானமாகவும், நன்மையாகவும் மதிக்கிற பாவிகளின் தகாத எண்ணத்துக்கு எதிரிடையாக இப்படிச் சொல்லியிருக்கிறது.

17. "யூதாவின் வம்சங்கள்." (1) இது யூதாக்கோத்திரம் அல்லது யூதசனங்களாம். நியா. 13: 2. சகரி. 12: 3. அப். 3: 25. (2) வம்சங்களென்றால் அந்தக் கோத்திரத்தின் 5-வீட்டாரின் தலைவரைக் குறிக்கும். எண். 26: 20, 21.

19. யோசுவா, ஆகானை என் மகனே என்பதால், தகப்பன் மகனை நேசிக்கிறதுபோலவும், ஒரு பிரபு தன் பிரஜைகளுக்கு அன்பு பாராட்டுவதுபோலவும் வழங்குவதால் இந்தப் பயங்கர தண்டனை அவனையிட்ட பகையால் வந்ததல்ல.

"கர்த்தரை மகிமைப்படுத்து" ஆகான் கர்த்தருக்கு அதிகக் கனவீனத்தை உண்டாக்கினபடியால், தன் குற்றத்தையும் அதினாலுண்டாகிய வெட்கத்தையும் அவனே ஏற்றுக்கொண்டு, தன் பாவங்களை அறிக்கையிடுவதினால் தேவனுடைய சர்வஞானம், சருவவல்லபம், நீதி, இரக்கம் முதலிய இலட்சணங்களுக்கு மகிமைசெலுத்தச் சொல்லுகிறார்.

21. பாபிலோன் சால்வை பலவர்ணங்களுடன் சித்திரமாய்ச் செய்யப்பட்ட விலைபெற்றது. எசே. 23: 15. யோசேப்புஸ் இதை தங்கத்தாலிழைத்த இராஜவஸ்திரமென்கிறார்.

22. ஆகானுடைய அறிக்கையிடுதல் யோசுவாவுடைய பலவந்தத்தால் உண்டானதென்று சிலர் தப்பாய் எண்ணுதபடிக்கும், அது சத்தியமென யாவருக்கும் தெரியவரும்படிக்கும் ஆட்களை அனுப்பினான். இவர்கள் தங்களுக்கும் மற்றவர்களுக்கும் வந்த சாபத்தை நிவிர்த்திசெய்யும்படிக்கும், ஆகானுடைய இனத்தார் முந்திப்போய் சாமான்களை எடுத்துக்கொள்ளாதபடிக்கும் ஓடினார்கள்.

24. ஆகானுடைய குமாரர், குமாரத்திகளைத் தண்டித்தது கொடுமையும் அநியாயமாயும் தோன்றுவதல்லாமல் உபா. 24: 16-ல் தேவ

ளுல் விலக்கப்பட்டதாயுமிருக்கிறதே என்றால்; (1) அந்தப் பிரமாணம் தேவனுக்கல்ல மனிதருக்குக் கொடுக்கப்பட்டது. (2) அநேகமாயிரம் பேர் தேவனுக்கேராத குற்றத்தைச்செய்து பயங்கரமான தண்டனைக்குட்படாதபடிக்கு எச்சரிப்படைய (3) ஆகானுடைய பிள்ளைகள் அவனுடைய குற்றத்துக்குச் சம்பந்தப்பட்டவர்களாயுமிருந்தார்கள். ஆகான் யூதாவின் 5-ம் தலைமுறையில் தோன்றினவனானபடியால் இப்போது வயதுசென்றவனானதால் அவன் பிள்ளைகளும் அவன் செய்த குற்றத்தை அறிந்தும், அதை மறைத்தும் வைக்கத்தக்க வயதுள்ளவர்களாயிருக்கலாம். அப்படியே இந்தப் பாவம் அருவருப்பும் பயங்கரமுமானதென்று காட்டத்தக்கதாக மனுஷருக்குப் பிரயோசனமாகக் கொடுக்கப்பட்ட குற்றமில்லாத ஆடுமாடுகளும் அந்தத் தண்டனையே அடைந்தன.

25. அவன்மேல் கல்லெறிந்து, அவைகளை அக்கினியால் சுட்டெரித்தார்கள். தேவஉத்தரவுப்படி இருவகைத் தண்டனையையும் அடைந்தான். வா. 15. ஆகான் எப்படி இருவகையான மரணத்தையும் அனுபவிக்கக் கூடும். இப்படிப்பட்ட குற்றவாளிகள் அடையவேண்டிய தண்டனைப்படி முதலாவது கல்லெறியப்பட்டு லேவி. 24: 14. எண். 15: 35. அவன் செய்த பாவம் மிகவும் அருவருப்பானதென்று காட்ட அவனுடைய செத்த உடலும் சுட்டெரிக்கப்பட்டன.

15-ல் ஆகானை உயிரோடே சுட்டெரிக்கவேண்டுமென்பது கருத்தல்ல. உபா. 13: 16. சாபத்தீடான பொருள்களுக்கொத்தபடி செத்த உடல்களும், ஜீவனற்ற வஸ்துகளும் சுட்டெரிக்கப்பட்டன.

26. ஆகானுடைய பாவத்துக்கும் அதற்கு வந்த தண்டனைக்கும் ஞாபக அடையாளமாயிருக்கவும், மற்றவர்களுக்கு இதினால் எச்சரிப்புண்டாகவும், நிந்தைக்குரிய வடிவாயிருக்கவும் பெரிய கற்குவியலைக் குவித்தார்கள். யோசு. 8: 29. 2 சாமு. 18: 17.

ஆகோரின் பள்ளத்தாக்கென்பது கலக்கத்தின் பள்ளத்தாக்கென்றர்த்தம்.

## கேள்விகள்.

1. இஸ்ரவேலரில் ஒருவன் செய்த பாவத்துக்காக தேவன் எல்லார்மேலுங் கோபங்கொள்வானேன்?

2. ஆயி, பெத்தேல் பெத்தாவேன். இந்த இடங்களுக்கு அர்த்தமென்ன? ஏன்? அங்கே நடந்திருக்கிற விசேஷங்களென்ன?

3. யோசுவாவும் இஸ்ரவேலின் மூப்பரும் துக்கத்துக்கடையாளமாக என்னசெய்தார்கள்? அந்தப்படி நடப்பித்தவர்களார்? ஏன்?



4. "கர்த்தருக்கு மகிமையைச் செலுத்து" அதின் பொருளென்ன? இந்தப்படி புதியஏற்பாட்டில் வருகிற சங்கதியென்ன?

5. இடுக்கமான காலங்களில் நாம் செய்யவேண்டிய கடமையென்ன? அந்தப்படி நடப்பித்ததற்கு திருஷ்டாந்தம் சொல்லும்.

6. தேவன் கிருபையாய் உடனே செபத்தைக் கேட்கிறவரென்பதற்கு இந்த ஆகமத்திலும் மற்றும் ஆகமங்களிலுமிருந்து உதாரணமுரைக்கவும்.

7. இந்த அதிகாரத்தில் பாவத்தின் தன்மை, கொடுமை, பலன் இன்னதென்று ஆகானுடைய சரித்திரத்தால் ரூபியுங்கள்?

8. தேவன் ஆகானை உடனே பிடித்துக்கொடாததற்கு முகாந்தரமென்ன? அவனுக்கு வந்த தண்டனையும் நியாயமென்று காண்பியுங்கள்?

9. ஆசரிப்புக்கூடார ஆராதனையின் துவக்கத்திலும், கானானைச் சுதந்தரிக்க வந்த துவக்கத்திலும், சுவிசேஷ சபை பிரபலியமாகும் துவக்கத்திலும் நடந்திருக்கிற பயங்கரமான சங்கதிகளெவை? ஏன்?

10. ஆகானுக்கு எந்தவிடத்தில் தண்டனை நடந்தது? அதின் அர்த்தமென்ன? பிற்காலத்தில் அந்த இடம் எப்படி அழைக்கப்படுகிறது? ஏன்? ஆகானுக்கு நடந்த முடிவை நினைக்க என்ன அடையாளம் வைக்கப்பட்டது? இந்த அடையாளமே வேறென்னென்ன சங்கதிகளுக்கும் ஞாபகமாக வைக்கப்பட்டது?

---

வாரத்தின் ஒவ்வொரு நாளுக்கும் ஏற்ற
பக்திக்குரிய

## சத்த தியானங்கள்.

(தொடர்ச்சி.)

---

## ஏழாம் தியானம்.

சனி.

---

விடாமுயற்சி.

"ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான். நான் அவன் தேவனாயிருப்பேன். அவன் என் குமாரனாயிருப்பான்." வெளிப். 21: 7.

முடிவுபரியந்தம் நிலைநிற்கிற, விடாமுயற்சியுள்ள சிறுவையின் சேவகனுக்கேயன்றி; உண்மையற்ற, நிலையற்ற, தடுமாற்றமான, கோ

ழைத்தனமுள்ள, பயப்படுகிற, ஒருவருக்கும் வேதத்தில் ஒன்றும் வாக்குத்தத்தம்பண்ணப்படவில்லை.

“விடாமுயற்சி” என்கிற வார்த்தை புதியஏற்பாட்டில் ஒரே ஒருவிசை தான் வருகிறது. அதற்குச் சரியான கிரேக்கு வார்த்தையானது, ஒரே காரியத்தை நோக்கமாகக் கொண்டு, அதற்காக எவ்வகை வருத்தங்களையுஞ் சகித்து, கடைசியாக சித்திபெறும் மனுஷன் விஷயத்துக்கு பிரயோகிக்கப்படும் வார்த்தை. கிறிஸ்துவின் சீஷன் இப்படிப்பட்டவனாயிருக்கவேண்டும். பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடுகிறவன் எவனோ அவன் கிறிஸ்து ஏசுவில் தேவனுடைய அழைப்பின் பந்தயத்துக்காக ஒரே லக்ஷை நோக்கி விரைந்து செல்லுகிறான். இந்த வார்த்தை புதியஏற்பாட்டில் ஒரே விசை வந்தாலும், அதிலிருந்து படித்துக்கொள்ளவேண்டிய பாடமும் அப்படிப்பட்டதல்ல. கிறிஸ்தவனுடைய கடமைகளில் இது மிகவும் வருத்தமானதாயிருக்கிறபடியால், இதுவே மிகவும் முக்கியமானதாயுமிருக்கிறது. மோட்சபிரயாணத்தில் சொல்லப்படுகிற மென்னெஞ்சனைப்போல, கிறிஸ்தவர்களில் அநேகர் தாங்கள் ஓடவேண்டிய ஓட்டத்தின் முதல் எட்டிலேயே, சில சங்கடங்களில் அகப்பட்டு, மார்க்கத்தின் வருத்தங்களைப்பற்றி பயமடைந்து திரும்பிப்போகிறார்கள். சீயோன் தரையிலல்ல. மலையின்மேலிருக்கிறது. அதற்குப் போகிற பாதை விசாலமும், செம்மையுமாயிராமல் செங்குத்தும் கரடுமுரடுமாயிருக்கிறது; அந்தப் பரமபட்டணத்தின் வாசலைச் சேர்பவர்கள் பின்னுக்குத் திரும்பிப் பாராமல் எப்போதும் முன்னானவைகளையே நாடிப்போகவேண்டும்.

இப்பொழுது வாரத்தின் கடைசிநாளாகிய இன்றையத்தினம் நாம் இந்த வாரமுழுவதிலுஞ் செய்தவைகளைப்பற்றி யோசித்துப் பார்ப்பது நல்லது. நாம் விடாமுயற்சியுள்ளவர்களாயிருந்தோமா? அல்லது சோம்பலுக்கும் கவலையீனத்துக்கும் இடங்கொடுத்தோமா? நம்முடைய பிரயாணத்தில் பின்னிட்டுப் பார்த்து துக்கப்படுவதும், அல்லது அதிலே நின்றுபோவதும், அல்லது திரும்பிப்போவதும் நல்லதல்ல; என்றாலும் அநுபோகம் அடையும்படியாக திரும்பிப் பார்த்துக் கவனிப்பது நன்மையும் அவசியமுமாயிருக்கிறது. இதை வாசிக்கிறவனே! கடந்த வாரமுழுவதிலும் நீ செய்தவைகளை யோசித்துப் பார்க்கையில் நீ உன்னிடத்தில் கவனிக்கிறதென்ன? நீ எல்லாவற்றையும் பொறுமையோடே சகித்தாயா? ஆ! அநேக காரியங்களில் நீ குறைவாயிருந்ததாக உனக்குக் காணப்படவில்லையா? நீ நேராக முன்னுக்குச் செல்லவேண்டியதிருக்க, நீ பின்னிட்டுத் திரும்பினாய் என்றும், நீ விழித்திருக்கவேண்டியதிருக்க தூங்கினாய் என்றும் உனக்குத் தெரிகிறதில்லையா? உன்னுடைய முயற்சியைத் தடுப்பது என்ன என்று நீ தானே சோதித்துப் பார். இன்னும் உன்னால் சிலுவையிலறையப்படாததும், நீ கண்டுபிடியாததுமான பாவமோ, நாம் எந்தப் பாவத்துக்காக மனஸ்தாபப்படவில்லையோ, அது இன்னும் மன்னிக்கப்படாத பாவம் என்பதை நினைத்துக்கொள்ளவேண்டும். முழுச் சரீரத்தையுங் கெடுப்பதைவிட வலது கையையாவது வலது கண்ணையாவது பிடுங்கி எறிந்துபோடுவது நல்லது. உன் பாவங்கள் உன் முதுகில் ஒட்டிக்கொண்டிருந்தால், நீ எவ்வளவாய் விரும்பினாலும், சீயோனைச் சேரமாட்டாய். நீ ஒவ்வொரு அடி எடுத்துவைக்கும்போதும் உன்னைக் கீழே விழத்தள்ள அது போதுமான பாரமுள்ளது. சிலுவையின் பாதத்தண்டை அவை எறியப்படுமளவும் நீ லகுவடையப்போகிறதில்லை. உன் பாவத்தின் பாரத்தையும் அதன் மிகுதியையும் பார்த்துப் பயப்படாதே; இயேசுகிறிஸ்துவின் இரத்தம் எல்லாப் பாவங்களிலுமிருந்து நம்மைச் சுத்திகரிக்கும். உன் எல்லாக் கவலைகளையும் கர்த்தரிடத்தில் ஒப்புவி, அவர் உனக்காகக் கவலைப்படுகிறார். உன் பெலவீனத்தில் அவருடைய பெலன் பூரணமாய் விளங்கும்; அவருடைய பெலத்திலும் அன்பிலும் மாத்திரமே நீ நம்பிக்கையாயிருக்கவேண்டும்.



உன்னைத் தடுக்கிறது எது என்பதை நீ கண்டுபிடிக்கிறாய் என்பதைப்பற்றி நிச்சயமாயிரு; ஏனென்றால் எல்லாவற்றையும் மேற்கொள்ளுகிறவனுக்கே வாக்குத்தத்தங்கள் அருளப்பட்டிருக்கிறது. மேற்கொள்ளுகிறவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனி ஆகாரமாகும். ஆமென்.

தெய்வகிருபையைத் தேட
நீ போராடிக்கொண்டிரு
ஆவி பாரமற்று ஏற
நன்றாய் ஜாக்ரதைப்படு.

---

# இரக்ஷண்ய யாத்திரிகம்.

(தொடர்ச்சி.)

திருவருளாளர்க்கு ஜீவ வாசனை
தருவது புலைநெறி தழுவி யோர்க்குமன்
வெருவரு மரண வாசனை விளைப்பது
நிருமலன் தரு சுவிசேஷ நீர்மைகாண். 326

பாவ தாருவை யறப் படுக்குங் கோடரி
ஜீவ தாருவி லெழு தெய்வ மாக்கனி
தேவதூதரும் வியந் தேத்து செம்பொருள்,
பூவல குயவரு புனிதன் புத்துரை. 327

ஆன்மநோய் அகற்று சஞ்சீவி அன்பர்க்குத்
தேனினும் இனிய தீஞ்சுவைய தெள்ளமிர்த்
ஊன்மனத் திருள்கெட ஒளிரும் ஒண்சுடர்
வானவர் கோமகன் மதுரவாய் மொழி. 328

பாவியென் றுணர்ந்து புண்பட்ட நெஞ்சர்க்குத்
தேவநீதியில் வருந் திகிலை மாற்றிடும்
தாவரும் நித்திய ஜீவனையுந் தந்திடும்
தீவினை அறவரு செம்மல் வாசகம். 329

துன்பெனுந் தீச்சுடச் சுழன்று சோர்வுறும
அன்பருக் கவ்வனல் அவிக்கும் நித்திய பேர்
இன்ப வாரிதி விசுவாசிக் கின்னுயிர்
நம்பெரு மானிவண் நவின்ற வாசகம். 330

தீர்த்தனே டாதியில் திகழ்ந்து தெய்விக
வார்த்தையாய்ப் புவிக்கொளி மருவ மானிட
மூர்த்தியாய் விளங்கிய முனைவன் தந்தநூற்
சீர்த்தியை யாவரோ தெரிக்கு நீர்மையார். 331

மற்றிதை மனக்கொள் என்றுணர்த்தி மாடொரு
சிற்றறை புகுந்தனன் தெரியக் காட்டினன்
புற்றுறை அரவெனப் புழுங்கும் ஆத்திரன்
செற்றமில் சாந்தனென் றிருவர் சீரினை. 332

சாந்தனென் றுரைபெறு தகைமை யோன் முகம்
சேந்தொளிர் மரையெனத் திகழும் பான்மையும்
பூந்துணர் கரிந்தெனப் பொலிவிழந் தகம்
காந்தும் ஆத்திரன் முகம் கரிந்த பான்மையும். 333

கண்ணுற நோக்கினன் கருதி வேதியன்
உண்ணிகழ்வன முகம் உரைக்கு மென்னினும்
எண்ணுறுங் கலைவலோய் இவர் குணந்துணை
நிண்ணயம் புலப்பட நிகழ்த்து வாயென்றான். 334

வளம்படு கோனகர் மருவத் தீவினைக்
களம்படு முலகினைக் கடிந்து காவலன்
நளம்படு மலர்ப்பதம் நயந்த நண்பநின்
உளம்பட உரைப்பல் என்றுரைத்தல் மேயினன். 335

இருவரும் சோதர ரெனினும் ஈங்கிவர்
கருமமும் விநயமும் கருத்தும் வேறதாம்.
மருமலி வனசமும் வறிய ஆம்பலும்
ஒருவழிப் பிறப்பினும் ஒக்குமே கொலாம். 336

அத்தனு நின்றெமக் கருளும் ஆண்டவன்
சித்தமே யாகவென் றமையும் செவ்விய
உத்தமன் இவன் அவன் கனிட்டன் ஒள்ளிய
வித்தக வைதிகர்க் குவமை மேவியோன். 337

இவ்வியற் சுடுமுகன் இயல்பென் னென்றியேற்
செவ்வியர் ஒழுக்கினைச் சிதையக் கூறிமா
வெவ்வியல் தீவினை விளைக்கும் ஆத்திரன்
அவ்வியன் அரும்பொறைக் கசடனுமிவன். 338

நித்தனூர் அருட்செயற் கமைந்து நின்றிடாப்
பித்தன் எத்துணைப் பொருள் பெறினும் பாழிலே
உய்த்திடு பேதை வன்மிடி வந்தொன்றுமேல்
மத்துறு தயிரென மறுகுஞ் சிந்தையான். 339



கல்வரைப் புறங்கடல் நாடு காண் செலீஇ
ஒல்வகைப் பொறையொடும் உஞற்றி ஒள்ளிய
பல்வகைப் பொருள்குவித் தருத்தும் பண்புடைச்
செல்வராக் கண்டுகண் டெரியும் சிந்தையான். 340

தாழ்வுகண் டுவப்பதை யலது தம்மின
வாழ்வுகண் டுவக்கிலா தெரியும் வன்கணன்
பாழ்வழி ரேம்புவான் அலது பாதலத்
தாழ்வினைக் ககன்றுயும் ஆற்றை ஓம்பிடான். 341

கான்முதிர் கடுவயின் றினிய கன்னலைக்
கூன்முது கிரவணம் உவர்க்குங் கொள்கைபோல்
நூன்முறை தெரிந்தவர் நுவலும் நோன்மைசால்
ஆன்ம போதக மிவற் கருவருப்பரோ. 342

கைப்படு சுகமலாற் கரையில் பேரின்ப
மெய்ப்படு சுகமிலை மிகவும் சேய்த்தென
ஐப்படும் ஈயின்மாய்ந் தழியும் லௌகிக
மைப்படு மனத்தரா மானுமா நிவன். 343

ஆயுழி உளத்தழுக்கா றெனும் புலை
மேயுழி நற்குண விபல மார்திருப்
போயுழி அறிவரிதாகப் போக்கிடும்
தீயுழிப் புகுத்திடும் என்பர் சீரியோர். 344

தலைப்படும் உணர்விலார் உலக சாலத்து
வலைப்படு மானென மறிந்து வஞ்சகப்
புலைப்படு புவன போகத்தைப் புந்தியற்
உலைப்படும் ஆமையில் உவப்பர் ஒள்ளியோய். 345

அன்பருக் கன்பராம் அகில லோகவேந்
இன்ப துன்பங்களை இயைந்த வாறுதம்
மன்பதைக் கூட்டுவர் மரபில் தாயென
நன்புதல்வரின் அமைந் தொழுகல் நங்கடன். 346

ஈண்டிதை மறந்திடா திதயத் தோர்தியென்
றாண்டுநின் றெழுந்திள அரசற் காக்கிய
மாண்டகு கடிமனை புகுந்து மைந்த நீ
காண்டகக் கவினிய காட்சி காணென்றான். 347

சித்திர மாளிகை அகத்துத் திண்சுவர்ப்
பத்தி அங்கனல் பிடித் தெரியும் பான்மையும்
அத்தகு கொழுங்கனல் அவிக்க ஆண்டொரு
குத்திரன் விரைந்து நீர் சொரியுங் கொள்கையும். 348

அகத்தொளிர் இருங்கனல் அவிர்ந்திடா தொரு
மகத்துவன் கரந்தெதிர் மருங்கு நின்றெரி
முகத்தருள் எண்ணெயை யுகுத்து மூட்டலும்
ஜகத்தை யுள்ளுவர்த்தவன் சமையக் காண்குறு. 349

மாட்சிசால் அருமறை வகுத்து மன்னர்கோன்
ஆட்சியைத் தெருட்டிடும் அறிஞ்ஞ ஆயவிக்
காட்சியின் பொருளொது கழறுவாயெனு
நீட்சிசால் மதிவலான் நிசழ்த்து வானரோ. 350

வேறு.

நங்காவலன் திருவடித்துணை நயந்தோய்
மங்கா அழற்சிகை மகாபுனித ஆவி
இங்காதரித் தெம்இதயத் தினிதியற்றும்
பொங்காருட் கிரியை போலு மிதுகாண்டி. 351

ஆயகிரியைத் திறம் அனைத்தையும் அடர்ப்பான்
மாயஅலகைக் கிறைசெய் வன்றொழிலை மாறும்
மீயுற விளைந் திடையறாது புனல் வீசிக்
காயெரி அணைக்குமியல் காட்சி யிதுகாண்டி. 352

காந்தொருவர் எண்ணெய் சொரி காட்சி கருதுங்கால்
நிரந்தரம் அருட்குரிசில் நேர்ந்தலகை யுட்க
உரந்தரு மகாகிருபை யுள்ளுற வழங்கிப்
புரந்தருளு மாறிதுவெனப் புகறல் போலும். 353

சஞ்சல விதந்தரு சழக்குறு பிசாசம்
விஞ்சு பலமாயம் இதயத்து விளைவிக்கும்
வஞ்சனைய தீவினை நயக்க நவமேயவும்
வஞ்சனை முயன்றலவும் என்றும் நம்மருங்கில். 354

வேதாகமாதியை விரித்துணர வொட்டாத்
ஏதாகிலும் உலக வேலையிலிழுக்கும்
வாதாடி யாடிநம் மனக்கரி மழுக்கும்
சூதா விடுக்கும் அதிதுஷ்கிருத சூழல். 355

ஈட்டுபல தீவினையை உள்ளுற எடுத்துக்
காட்டும் இறைவன் பெரிய கருணையை மறைக்கும்
வீட்டுலகம் இன்றென வெருட்டுபு சந்தேகக்
கூட்டினில் அடைத்துயிர் குடித்தினி துவக்கும். 356

சீமான் அருட்குரிசில் ஜேசு திருநாமப்
பூமான் நமக்குதவு புண்ணிய நலத்துக்
ஏமாறி நித்திய இடுக்கணுற எத்திக்
காமாதுரக் குழி கவிழ்த்துற அமிழ்த்தும். 357



இம்மாநிலத் தவதரித்த குமரேசப்
பெம்மானையுங் குறுகி மும்முறை பிதற்றி
அம்மா தகைந்திட முயன்றதெனல் ஆயில்
சும்மா விடுங்கொல் நரதுர்ப்பல அரும்பை. 358

மல்லாடு வன்கணய வஞ்சமுறுமாயப்
பொல்லாத பேயினை முருக்குபு புறங்கண்ட்
எல்லாம் நலம்பெற இரக்ஷை தரும் எல்லாம்
வல்லான் மகாகிருபை உள்ளுற மதித்தி. 359

(இன்னும் வரும்.)

---

## Exposition of the Church Catechism.

## ஞானோபதேசவினாவிடை
### வியாக்கியானம்.

### ௬-ம் அதிகாரம்.

### விசுவாசப்பிரமாணம்.

### ௩-ம் பிரிவு.

### கிறிஸ்துவின் தேவிதன்மையைப் பற்றி.

(தொடர்ச்சி.)

5. தேவன் சர்வஞ்ஞர்.

கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார். 1 சாமு. 16: 7.

தேவரீர் ஒருவரோ மனுப்புத்திரரின் இருதயத்தை அறிந்தவர். 2 நாளா. 6: 31. எரே. 17: 9, 10.

இயேசுகிறிஸ்துவானவரைப்பற்றியும் அப்படியே சொல்லியிருக்கிறது.

நானே உள்ளிந்திரியங்களையும் இருதயங்களையும் ஆராய்கிறவர். வெளி. 2: 23.

இயேசு அவர்கள் நினைவுகளை அறிந்து. மத். 9: 4. 12: 25. லூக். 6: 28. மாற். 2: 6, 8. 5: 30. யோவா. 2: 24. யோவா. 6: 64. 21: 17.

6. தேவன் மாத்திரம் வணங்கப்படத்தக்கவர்.

உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனைசெய்வாயாக. மத். 4 : 10.

இரண்டாம் கற்பனை. யாத். 20: 4—6.

இயேசு மாம்சத்திலிருந்த நாட்களில் தம்முடைய சீஷர் தம்மை வணங்கும்படி இடங்கொடுத்தார். அவர் உயிர்த்தெழுந்து பரமண்டலத்துக்கு ஏறினபின் தம்முடைய அப்போஸ்தலராலே வணங்கப்பட்டார். அவர் இப்பொழுது பரமண்டலத்தில் பரிசுத்தவான்களின் மகிமையுள்ள ஆவிகளாலும், தேவதூதராலும் வணங்கப்படுகிறார்.

அவர்கள் சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்துகொண்டார்கள். மத். 2: 11.

குஷ்டரோகி ஒருவன் வந்து அவரைப் பணிந்து; ஆண்டவரே! உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் என்றான். மத். 8: 2.

மத். 14: 33. 15: 25, 28. 28: 9.

தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக: என் ஆண்டவரே! என் தேவனே! என்றான். யோவா. 20: 28.

தேவதூதர் யாவரும் அவரைத் தொழுதுகொள்ளக்கடவர்கள். எபி. 1: 6.

இருபத்துநான்கு மூப்பர்களும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து: சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக என்று சொன்னார்கள். வெளி. 5: 8, 13.

---

## விசுவாசப்பிரமாணம்.

### ௪-ம் பிரிவு.

---

### கிறிஸ்துநாதரின் உயிர்த்தெழுதலைப்பற்றி.

---

வினா. இயேசுகிறிஸ்துவைக்குறித்து விசுவாசப்பிரமாணம் இன்னம் நமக்குப் போதிக்கிறது என்ன?

விடை. மூன்றாம்நாள் மரித்தோரிலிருந்து எழுந்தருளினார்.

இந்தச் சங்கதி நம்முடைய இரட்சகராலே முன்னறிவிக்கப்பட்டது. அதைப்பற்றிய குறிப்புகளையும் அடிக்கடி அவர் தாமே காட்டியிருக்கிறார். மத். 12: 40. 16: 21. 17: 23. 20: 19. பிரதானஆசாரியர் எதிர்பார்த்திருந்த இந்தத் தீர்க்கதரிசன நிறைவேறுதல், (மத். 27: 63.) இரட்சகரைப் பின்பற்றினவர்களுடைய நம்பிக்கைக்கு அனுகூலமாயிருக்கத்தக்கதாக இவைகள் மிகவும் தெளிவாயும், வெளியரங்கமாயும் அறிவிக்கப்பட்டிருக்கவேண்டும்.



தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே. லூக். 24: 25

அவர் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவேண்டுமென்கிற வேதவாக்கியத்தை அவர்கள் இன்னும் அறியாதிருந்தார்கள். யோவா. 20: 9.

வினா. கிறிஸ்துநாதரின் உயிர்த்தெழுதலுக்கு முன்னடையாளமாயிருந்தவர்கள் யார்?

விடை. 1. யோசேப்பு—இவன் எகிப்துதேசத்தை இரட்சிக்கும்படி, சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்டு, தேசமுழுவதின்பேரிலும் அதிகாரியாக உயர்த்தப்பட்டதும். ஆதி. 41: 41—44.

2. ஈசாக்கு-இவன் பலியிடப்படும்படி கொண்டுவரப்பட்டதும். எபி. 11: 19.

3. யோனா-இவன் மூன்றுநாள் இரவும் பகலும் மீனின் வயிற்றில் இருந்ததுமே. மத். 12: 40.

நம்முடைய இரட்சகர் ஆயத்தநாளாகிய பெரிய வெள்ளிக்கிழமை சாயந்தரத்தில் ஏறக்குறைய மூன்று மணிக்கு மரணமடைந்தார். அன்று சாயந்தரத்தில் அடக்கம்பண்ணப்பட்டார். (யூதருடைய ஓய்வுநாளாகிய) சனிக்கிழமை கல்லறையிலிருந்தார். மத். 28: 1. மாற். 16: 1, 2. லூக். 23: 56. சனிக்கிழமை இரவில் பிரதானஆசாரியர் பிலாத்துவினிடத்தில் கேட்டு, மூன்றாம்நாள் முடியுமளவும் இரட்சகருடைய சரீரத்தை காபந்துசெய்ய சேவகரை வைத்தார்கள். மத். 27: 63—66. (நம்முடைய ஓய்வுநாளாகிய) வாரத்து முதல்நாள் அதிகாலையிலே அவர் உயிரோடெழுந்தார்.

யூதருடைய ஓய்வுநாள் இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டதை நினைவுகூருகிற நாளாயிருந்தது. கிறிஸ்தவர்களுடைய ஓய்வுநாள் சாத்தானுடைய நிர்ப்பந்தமான அடிமைத்தனத்திலிருந்து ஆத்துமா மீட்கப்பட்டதை நினைவுகூருகிறநாளாயிருக்கிறது. இது கர்த்தருடைய நாள் என்று அழைக்கப்படுகிறது. வெளி. 1: 10.

வினா. கிறிஸ்து மரித்தோரிடத்திலிருந்து எழுந்தருளினார் என்பதின் கருத்தென்ன?

விடை. மரணத்தினாலே பிரிக்கப்பட்டிருந்த அவருடைய ஆத்துமாவும் சரீரமும் திரும்பவும் ஒன்றாய்ச் சேர்ந்து, தாம் மரணமடைந்தபோது இருந்த சரீரத்தோடேயே எழுந்தருளினார்.

வினா. அவருடைய உயிர்த்தெழுதலுக்கு அத்தாட்சிகளெவை ?

விடை. மனிதரும் தூதரும் அதைப்பற்றி சாட்சியிட்டார்கள்.

கல்லறையைக் காத்திருந்த சேவகரும் இதை அறிக்கை டயிட்டார்கள். மத். 28: 11.

மத். 28: 6, 9, 10, 17. யோவா. 20: 12, 14, 28. அப். 1: 3-9. 4: 33. ரோமர் 1: 5. 1 கொ. 15: 5—8. 2 தீமோ. 2: 8.

அவர் தமது சீஷரோடு சம்பாஷித்து, அவர்களோடு போசனபானம் செய்தார். அவர் உயிர்த்தெழுந்தபிற்பாடு நாற்பதுநாள் உலகத்தில் இருந்தார். அப். 1: 3.

இரட்சகர் மெய்யாய் உயிர்த்தெழுந்தார் என்பதற்குரிய சாட்சிகளாவன.

1. தேவதூதர் காணப்பட்டு சாட்சியிட்டார்கள்.

ரோமப் போர்ச்சேவகருக்கும். மத். 28: 3.

மற்ற மரியாளுக்கும் சலோமேக்கும். மாற். 16: 5.

யோவன்னாளுக்கும் அவளோடிருந்தவர்களுக்கும். லூக். 24: 4, 11.

மகதலேனா மரியாளுக்கும். யோவா. 20: 11, 12.

2. கிறிஸ்து ஸ்திரீகளுக்குக் காட்சியானார்.

மற்ற மரியாளுக்கும், சலோமேக்கும். மத். 28: 9

மகதலேனா மரியாளுக்கும். யோவா. 20: 15.

3. கிறிஸ்து சீஷருக்கும் அப்போஸ்தலருக்கும் தரிசனமானார். அவர் உலகத்திலிருந்த நாற்பது நாளிலும் அநேகந் தடவை தரிசனமாயிருந்திருக்கவேண்டும். ஆனால் அவைகளில் சில தரிசனைகள் மாத்திரம் சொல்லப்பட்டிருக்கின்றன. அவையாவன;

கலிலேயாவில் பதினொருவருக்கும். மத். 28: 16.

எம்மாவு கிராமத்துக்குப்போன இரண்டு சீஷருக்கும். மாற். 16: 12. லூக். 24: 13.

போசனம்பண்ணக்கூடியிருந்த பதினொருவருக்கும். மாற். 16: 14.

சீமோனுக்கும். லூக். 24: 34.

தோமாவுக்கும். யோவா. 20: 27.

தீபேரியாக் கடலில் சீஷருக்கும். யோவா. 21: 1.

பவுல் அப்போஸ்தலனுக்கும். அப். 9: 5.

ஒருமிக்க ஐந்நூறு பேருக்கும். 1 கொரி. 15: 6.

எல்லாருக்கும் கடைசியில் (பவுல்) எனக்கும் தரிசனமானார். 1 கொரி. 15: 8.

வினா. இரட்சகருடைய உயிர்த்தெழுதலை நம்முடைய திருச்சபை எப்பொழுது கொண்டாடுகிறது ?

விடை. ஈஸ்தர் பண்டிகைநாளில் (உயிர்த்தெழுந்த திருநாளில்) கொண்டாடுகிறது.



வினா. கிறிஸ்துநாதரின் உயிர்த்தெழுதலால் உண்டாகும் பிரயோசனங்களெவை ?

விடை. 1. நம்முடைய இரட்சகரின் தேவதன்மையை ரூபகாரப்படுத்தவும்.

தேவனுடைய சுதனென்று, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார். ரோ. 1: 5.

---

# THE ANNUAL WEEK OF PRAYER.

*January* 2—9. 1881.

சுவிசேஷ ஐக்கிய சங்கத்தார், புதுவருஷத் துவக்கத்தில்
அங்கங்குள்ள கிறிஸ்தவர்கள் யாவரும் ஒன்று கூடி
ஜெபம்பண்ணவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிற

## வருஷாந்தர அறிக்கை.

1881ளு ஜனுவரிமீ 2உமுதல் 9உவரை.

---

பிரியமான கிறிஸ்தவ சகோதரரே!

நாங்கள் இந்த வருஷத்திலும், விசுவாசிகளுடைய பரிசுத்த ஐக்
கியத்தை இருதயங்களில் நன்றாய் உணர்ந்தவர்களாய், கிருபாசனத்
தண்டை சேர்ந்து, நம்முடைய கர்த்தருக்கு நன்றியறிதலான தோத்
திரங்களையும், விண்ணப்பங்களையும் செலுத்தும்படி உங்களை விரும்
பிக் கேட்டுக்கொள்ளுகிறது எங்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது.
கிறிஸ்தவ சபையின் மேன்மைபொருந்திய ஐக்கியம் நம்முடைய
அநேகவிதமான பலவீனங்களினால் இப்பொழுது மங்கலாகத் தோன்
றினாலும், அதிசீக்கிரத்தில் அது சர்வ லோகத்தாருக்கு முன்பாக வெளி
யரங்கப்படும். இப்பேர்ப்பட்ட ஐக்கிய ஜெபக்கூட்டம் வருஷாவரு
ஷம் நடந்தேறுதல் சந்தோஷமான காரியம். என்றாலும், நாம்
இதை வழக்கமான சடங்குபோல எண்ணாதபடிக்கு விழிப்பாயிருக்கக்
கடவோம். நம்மைச் சுற்றிலுமிருக்கிற ஆயிரக்கணக்கான ஜனங்கள்,
இந்த ஜெபவாரத்தை கிரமமாய் நடத்திவந்தாலும், இந்தச் செய்கை
யானது தன்னிலேயே, உயரத்திலிருந்து வரும் தேவஆசீர்வாதங்களை
நமக்குக் கொடுக்கத் திராணியற்றதாயிருக்கிறது.

கிறிஸ்துவோடே ஆவிக்கடுத்த பிரகாரமாய் சஞ்சரிக்கிற ஒவ்வொரு மெய்விசுவாசியும் இப்படி ஜெபிக்கத் திராணியுள்ளவனாயிருக்கிறான். அவருடைய திவ்விய சமுகம் நம்மோடிருக்கிறதென்று பரீட்சையினால் நாம் எவ்வளவு அறிகிறோமோ, அவ்வளவாய் அவருடைய ஆவியானவரின் தயவைப் பெற்று, தேவனுடைய ஆசனத்துக்கு எட்டத்தக்க இன்ப வாசனையுள்ள தூபவர்க்கத்தைச் செலுத்தக் கூடியவர்களாயிருப்போம்.

வெளிச்சத்தின் பிதாவானவர் இந்த உலகத்தின் பற்பல இடங்களிலும் வசிக்கிற திருச்சபையார் படுகிற பிரயாசங்களைப் பயன்படச் செய்திருக்கிறார். அதினால் நாம் அவருக்கு நன்றியறிதலுள்ள துதியைச் செலுத்தக் கடனாளிகளாயிருக்கிறோம். இது முன்னுள்ள ஜெய சங்கதிகள், அதிகத் திட்டமாய் இந்த உலகத்தின் நிற்பந்த நிலைமையையும், தேவகிருபையைக் காட்டிய சுவிசேஷத்தினாலேயேயன்றி வேறெந்த வகையிலும் அது நீங்காதென்பதையும் வெளிப்படுத்துகிறது. ஆதலால் இந்த வருஷத்தில் அதிகமான முயற்சிகளைப் பிரயோகித்து மிகுந்த வாஞ்சையுடனே தேவனிடத்தில் விண்ணப்பம்பண்ணவேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பிரிய சகோதரரே! இந்த வருஷத்தில் நடக்கப்போகிற ஐக்கிய ஜெபவாரம் மற்ற வருஷங்களைப் பார்க்கிலும் நமது தேவனும் ஆண்டவருமானவரின் பிரசன்னத்தினால் சம்பூரணமாய் ஆசீர்வதிக்கப்பட நாங்கள் கருதி உட்கருத்தாய் தேவனை நோக்கி மன்றாடுகிறோம். அவரே தம்முடைய பிள்ளைகளின் பங்குவீதமாயிருக்கிறார். அவரே சகல நன்மைகளையும் அல்லத்தட்டாமல் ஈகிறவராயுமிருக்கிறார்.

---

# ஜெபவாரத்தில் தினந்தோறும் புத்திசொல்லவும் ஜெபிக்கவும் வேண்டிய விஷயங்கள்.

### ஜனுவரிமீ 2உ ஞாயிற்றுக்கிழமை.

**பிரசங்கம்.** இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். எபிரேயர் 13: 8.

### 3உ திங்கட்கிழமை.

**தோத்திரங்கள்**;—கடந்த வருஷத்தில் நமக்குக் கிடைத்த ஆசீர்வாதங்களுக்காகத் தோத்திரம். ஜீவன், சுகம் முதலான நன்மைகளுக்காகவும்;—தனித்தனியாகவும், குடும்ப சகிதமாகவும், தேவனிடத்தில் பெற்றிருக்கிற இரக்கங்களுக்காகவும்;—தேவசிட்சை, அவருடைய மாறாத அன்பு, இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் உண்டுபண்ணப்



பட்ட மீட்பின் நிச்சயம் இவைகளுக்காகவும்; பரிசுத்தாவியின் ஈவு, துன்பப்பட்ட சகோதரருக்கு நன்மையுண்டாக கிறிஸ்தவர்கள் பிரயோகித்த எத்தனங்களின்பேரிலுண்டான தேவகிருபை இவைகளுக்காகவும்; சுவிசேஷம் பற்பல பாஷைகளில் பிரசங்கிக்கப்படுதலுக்காகவும் தோத்திரம்.

### 4உ செவ்வாய்க்கிழமை.

**பாவஅறிக்கை**; நம்மில் ஒவ்வொருவனும் தன் இருதயத்தையும், ஜீவனையும் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டுமென்ற கடமையை உணர்த்தவும்; தேவனுடைய சிஷர்களுக்குள்ளிருக்கிற பிரிவினை, ஒருவர் மற்றொருவருக்குப் பாராட்டவேண்டிய அன்பின் தாழ்ச்சி, தேசத்தாருடைய பாவங்கள், விசேஷமாய் மார்க்கவிஷயத்தில் சுயபுத்தியைச் சார்ந்து நிற்றல், தெய்வமில்லையென்று மறுத்தல், துன்மார்க்கம், வீண்பத்தி, சபைகளில் காணப்படுகிற உலக சிந்தை இவை நீங்கவேண்டுமென்றும் ஜெபம்.

### 5உ புதன்கிழமை.

**தேவனுடைய சபைக்காக ஜெபம்**;—பரிசுத்தாவியானவர் விசுவாசிகளெல்லாருடைய இருதயங்களையும் நிரப்பி, கிறிஸ்துவில் அவர்கள் நிலைத்திருந்து சகலவித நற்கிரியைகளிலும் பெருகவும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவானவருடைய பிரசன்னத்துக்கு எதிர்பார்த்திருக்கவும், அவருடைய சனங்களுக்குள்ளிருக்கிற பிரிவினையை அகற்றி, தேவனை அறிகிற அறிவு, அன்பு, தாழ்மை, பக்திவைராக்கியம் இவைமுதலானவைகளால் அவர்களை ஐசுவரியவான்களாக்கவேண்டுமென்றும்; உண்மையுள்ள சுவிசேஷ பிரசங்கிகள் அநேகரையும், மிஷனெரிமார்களையும் சீமைதேசத்திலிருந்தும், இந்தியாவிலிருந்தும் தெரிந்தெடுத்து அவர்களை அந்த உத்தியோகத்துக்குத் தகுதியுள்ளவர்களாக்கவும், கர்த்தருடைய நாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவும், வியாதிஸ்தர், மனவேதனைப்படுகிறவர்கள், துன்பப்படுத்தப்படுகிறவர்களாகிய இவர்களை ஆற்றித் தேற்றிவிடுவிக்கவும் வேண்டுமென்றும் ஜெபம்.

### 6உ வியாழக்கிழமை.

**இளைஞரையும் அவர்களைப் படிப்பிக்கிறவர்களையும் குறித்து ஜெபம்.**

தாய்தந்தைகளுக்காகவும், கல்விச்சாலைகளிலும், பள்ளிக்கூடங்களிலும், படிப்பிக்கிற வேதசாஸ்திரிமார், உபாத்திமாருக்காகவும், ஓய்வுநாள் பள்ளிக்கூடங்கள்பேரில் விசேஷித்தபிரகாரமாய் தேவ அனுக்கிரகமுண்டாகவேண்டுமென்றும்; இளைஞர் தங்கள் இளமையில் தானே, சத்தியத்தைப் பற்றிக்கொண்டு கிறிஸ்துவைப் பின்செல்லவும், உலகக் கல்வி, உலக சாஸ்திரம் தேவமகிமைக்கு உபயோகமாக பிர

திஷ்டைசெய்யப்படும்படியாகவும், கிறிஸ்துமார்க்கத்துக்குரிய புத்தகங்களாலுண்டாகிற அறிவு பரம்பி பதிதருடைய கொள்கைகளும், அவர்கள் புத்தகங்களும் நிராகரணமாகவேண்டுமென்றும் ஜெபம்.

### 7உ வெள்ளிக்கிழமை.

எல்லா ஜாதியாருக்காகவும் ஜெபம்;—இராஜாக்கள், அதிகாரிகள், சட்டமுண்டுபண்ணுகிறவர்கள், நியாயாதிபதிகள், தேசாதிபதிகள் இவர்களுக்காகவும்; நீதியான சட்டங்கள் உண்டுபண்ணப்படவேண்டுமென்றும்; சுவிசேஷத்தை சகலரும் ஏற்றுக்கொண்டு, அதை மற்றவர்களுக்கு தாராளமாய் அறிவிக்கவும்; குடிவெறி, குரூர நடக்கை, பிறரை ஒடுக்குதல், அல்லது அடிமைத்தனம் இவை நீங்கும்படியாகவும்; அபின்வியாபாரம் நிறுத்தப்படவும், பொதுவாக சகல சாதியாருக்குள்ளும் மரியாதையும் ஐக்கியமுமுண்டாகவும், யுத்தங்கள் ஓயவும்; போர்ச்சேவகர்கள், கப்பற்காரருக்காகவும்; சகல சனங்களுக்குள்ளும் கிறிஸ்துவானவராலுண்டாகுங் குணமாகுதலும், இருதயச் சுத்திகரிப்பின் வல்லமையும் விளங்கவேண்டுமென்றும் ஜெபம்.

### 8உ சனிக்கிழமை.

### கிறிஸ்தயான மிசியோன்களுக்காக ஜெபம்.

சுதேசத்திலும், புறத்தேசங்களிலுமுள்ள அஞ்ஞானிகள் நடுவில் மிசியோன்களை ஸ்தாபித்து நடத்திவருகிறவர்களுக்காகவும்; சுதேச கிறிஸ்தவர்களுக்காகவும்; கிறிஸ்துமார்க்கத்தில் நூதனமாய்ச் சேர விருப்பமாயிருக்கிறவர்களுக்காகவும்; வேதாகமங்களைப் பிரசித்தப்படுத்துகிற விஷயத்தில் தேவாசீர்வாதமுண்டாகவும்; தேவனுடைய பூர்வீக சனங்களாகிய இஸ்ரவேலருக்காகவும்; குடிவெறியை அகற்றவும், சாக்கிரதை, தெய்வபக்தி இவை பெருகவும்; அறிவீனர், வழிதப்பிப்போனவர்கள், ஏழைகள் நடுவில் பிரயாசப்படுகிறவர்களுக்காகவும்; சகல மாம்சத்தின்மேலும் தேவாவியானவர் ஊற்றப்பட்டு, பாவத்தையும், நீதியையும், நியாயத்தீர்ப்பையும் உணர்த்தவும்; பலவீனப்பட்டு கேவலமான ஸ்திதியிலிருக்கிற நூதன சபைகள் உயிர்ப்பிக்கப்படவும், எல்லா விசுவாசிகளும் தேவனுடைய மகிமைக்கென்றே பிழைக்கவும், அவர்களைப் பலப்படுத்தவேண்டுமென்றும் ஜெபம்.

### 9உ ஞாயிற்றுக்கிழமை.

பிரசங்கங்கள்; "இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு." வெளிப்படுத்தல் 3: 11.

---



## சமாசாரத்திரட்டு.

**துர்க்கியா.**—கிரேகியாவின் பிரதேச எல்லைத் தகறார் விஷயத்தில் தற்காலத்தில் தாங்கள் தலையிடுவதில்லையென்று ஐரோப்பாவின் மகா துரைத்தனத்தார் தீர்மானித்திருக்கிறதாய் சமாசாரம். விவாதத்தை முடிவுக்குக் கொண்டுவரவேண்டுமென்று கிரேகியா தனித்து ஆவலாய்ப் பிரயத்தனிக்கிறதாம்.

**ருஷியா.**—தாரமிழந்த ருஷிய சக்கரவர்த்தியானவர், ராஜகுடும்பத்தைச் சேர்ந்த பெருமாட்டி ஒருவளை, மறுவிவாகஞ்செய்துகொண்டார். இனி அவர் ராஜ்யபாரத்தை தாமே தாங்கிக்கொள்ளாமல், தமது குமாரன் வசம் ஒப்புவித்துப்போட்டு, ஏகவாசியாய் காலக்ஷேபஞ் செய்யக் கருத்துக்கொண்டிருக்கிறாராம். ராஜாங்கத்தை யெதிர்க்கும் கொள்கையுடையவர்களாகிய நிகிலிஸ்தர் என்னப்பட்டவர்களில் 5-பேர் மரண தண்டனையடையவும், 11-பேர் சிறையிருப்பிலிருக்கவும் தீர்ப்புப்பெற்றார்கள்.

**இந்தியா.**—நேபாள தேசத்து மகாராஜா, இந்திய ராஜபிரதிநிதியாகிய கவர்னர்ஜெனரல் அவர்களை இந்த மாசம் கல்கத்தாவில் கண்டு தரிசிக்கவும், அதின்பின் வடஇந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களைப் பார்வையிடவும் விருப்பங்கொண்டிருக்கிறார். பாலிய கைக்குவார் அரசனுக்காக விஸ்தாரமும் மிகச் சிறப்பும்பொருந்தியதுமான அரண்மனையொன்று பரோதாவில் கட்டப்படுகிறது. மைசூர் ராஜ்ய நிர்வாக விஷயங்கள் அடுத்த ஜனுவரிமாசத் தொடக்கத்தில் மைசூர் மகாராஜா வசம் விட்டுவிடப்படும். சென்னைக் கவர்னராகிய பக்கிங்ஹாம் டியூக்பிரபு அவர்கள் போனமாசம் உதகமண்டலத்திலிருந்து புறப்பட்டு கொச்சி, திருவாங்கோர் இந்த சமஸ்தானங்களைப் பார்வையிட்டு, திருநெல்வேலி வழிபாய் வந்து, தென்னிந்திய ரெயில்வே மார்க்கமாய்ச் சென்னை பட்டினத்துக்குப் பயணமானார்கள்.

**ஆப்கானிஸ்தான்.**—காந்தகாரிலும், அதின் அயலிடங்களிலும் எல்லாம் அமைதியாயும் திர்ப்திகரமாயுமிருக்கிறது. நூதன அமீர், அலிகுலாகான் என்பவரின் குமாரத்தியை விவாகஞ்செய்திருக்கிறாராம். கபூலில் பகைவர் கையால் மடிந்த ஸ்ரீ லூயிஸ் கவாக்நெரியின் பட்டயத்தை கைதியொருவனிடத்திலிருந்து அமீர் கைப்பற்றியிருக்கிறதாகவும், கவர்னர்ஜெனரலவர்களை அவர் தர்பாரில் தரிசிக்கும்போது அவர்களிடம் அதை ஒப்புவிக்கக் கருதியிருப்பதாகவும் செய்தி.

டிசம்பர்மீ நாள் 31-கார்த்திகைமீ 18உ-முதல், மார்கழிமீ 18உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றுடகத் தியானம். |
|---|---|---|---|
| பு | 1 | கஅ | ஆண்டவர் இன்னநாழிகையில் வருவாரென்று அறியாதிருக்கிறீர் |
| வி | 2 | ககூ | மரணபரியந்தம் நம்மை நடத்துவார். சங். 48:14. (கள். |
| வெ | 3 | உ0 | கர்த்தருடைய பெரியநாள் சமீபித்திருக்கிறது. செப். 1:14. |
| ச | 4 | உக | உன்னிடத்தில் அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்பு |
| ஞா | 5 | உஉ | பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும். எசே. 18: 4. (கூரு. |
| தி | 6 | உங | நான் கர்த்தருக்குள் மகிழுவேன். சங். 104: 34. (2 கொ. 9: 8. |
| செ | 7 | உச | உங்கள் உள்ளத்தில் புதியஆவியைக் கொடுப்பேன். எசே. 11:19. |
| பு | 8 | உரு | சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார். |
| வி | 9 | உசா | என் ஆத்துமாவினிடத்தில் வந்து அதை விடுதலைபண்ணும். சங். |
| வெ | 10 | உஎ | நான் அவரை தியானிக்கும் தியானம் இனிதாயிருக்கும். |
| ச | 11 | உஅ | நானே வழியும் சத்தியமும் சீவனுமாயிருக்கிறேன். யோ. 14: 6. |
| ஞா | 12 | உகூ | எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை அன்றன்று எங்களுக்குத் தா |
| தி | 13 | ங0 | அவரை உத்தம இருதயத்தோடு சேவி. 1 நாளா. 28: 9. (ரும். |
| செ | 14 | க | ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள். கலா. 5: 16. |
| பு | 15 | உ | ஆவியானவர் தாமே நமக்காக வேண்டுதல்செய்கிறார். ரோ. 8: 26. |
| வி | 16 | ங | அக்கிரமங்களுக்கு அவர்களை நீங்கலாக்கிச் சுத்திகரிப்பேன். |
| வெ | 17 | ச | எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணும். லூ. 17: 5. |
| ச | 18 | ரு | பாவிகள் உனக்கு நயங்காட்டினால் நீ சம்மதியாதே. நீதி. 1: 10. |
| ஞா | 19 | சா | மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும். நீதி. 15: 1. |
| தி | 20 | எ | உம்முடைய இராச்சியம் வருவதாக. லூக். 11: 2. |
| செ | 21 | அ | வேதவாக்கியங்களை ஆராய்ந்துபாருங்கள். யோவா. 5: 39. |
| பு | 22 | கூ | அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவா |
| வி | 23 | க0 | உன் நாட்களுக்குத்தக்கதாய் உன் பெலனும் இருக்கும். (ர்கள். |
| வெ | 24 | கக | அவர் வெளிப்படுகையில் நிலைநிற்பவன் யார்? மல். 3: 2. |
| ச | 25 | கஉ | அவருக்குள் சீவன் இருந்தது. யோவா. 1: 4. |
| ஞா | 26 | கங | அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்போம். |
| தி | 27 | கச | நீங்கள் பரிசுத்தராயிருங்கள். 1. பே. 1: 16. |
| செ | 28 | கரு | என்னில் நிலைத்திருங்கள். யோவா. 15: 4. |
| பு | 29 | கசா | நீதிமானோ தன் மரணத்தில் நம்பிக்கையுள்ளவன். நீதி. 14: 32. |
| வி | 30 | கஎ | உங்கள் சீவன் எப்படிப்பட்டது; புகையைப்போலிருக்கிறதே. |
| வெ | 31 | கஅ | உமது ஆண்டுகள் முடிந்துபோவதில்லை. சங். 102: 27. |

## விசேஷ நாட்கள்.

2. அமாவாசை.
5. அட்வெந்தென்னும் நாட்களில் 2-ம் ஞாயிறு.
12. அட்வெந்தென்னும் நாட்களில் 3-ம் ஞாயிறு.
16. பௌரணமி.
19. அட்வெந்தென்னும் நாட்களில் 4-ம் ஞாயிறு.
21. பரி. அப். தோமாவின் திருநாள்.
25. கிறிஸ்துவின் ஜநநதிருநாள்.
26. கிறிஸ்து ஜநநதிருநாளுக்குப் பின்வரும், 1-ம் ஞாயிறு.
    பரி. ஸ்தேவான் ரத்தசாட்சித் திருநாள்.
27. பரி. அப். யோவான் சுவி. திருநாள்.
28. குற்றமில்லாப் பாலகர் திருநாள்.

# நற்போதகம்.

161397
600 008.



## யோசுவாவின் புஸ்தகம்.

### VIII. அதிகாரம்.

1. இஸ்ரவேலர் முந்தி முறியடிக்கப்பட்டுப்போனதாலுண்டாகிய பயம் நீங்கவும், முதல் தடவையாகக் கிடைக்கப்போகிற கொள்ளைப் பொருள்களில் பங்குபெறவும், யாவரும் தங்கள் வேலையில் அதாவது, யுத்தத்தில் முயற்சிசெய்யவும், யுத்த மனுஷரெல்லாரையுங் கூட்டிப் போக யோசுவா கற்பனைபெற்றார்.

2. ஆயிப் பட்டணத்தார், முந்தியடைந்த ஜெயத்தினால் கொண்டிருந்த மேட்டிமையைக் கண்டிக்கவும், கானானியருக்கு மறுபடியும் திகில்பிடிக்கவும் இஸ்ரவேலருக்கு இன்னும் ஜெயமுண்டாகுமென்ற நம்பிக்கை அதிகரிக்கவும், எரிகோவுக்கும் அதின் இராசாவுக்கும் செய்ததுபோல செய் என்று தேவன் கற்பிக்கிறார்.

3. ஆயிப் பட்டணத்துக்கு விரோதமாய் யுத்தஞ்செய்ய, யுத்த மனுஷரெல்லாரும் போவது அவசியமற்றதும் தொந்தரவானதும், பின்வருஞ் சூழ்ச்சிக்குத் தடையாயும் இருந்தபடியால், 30 000-பேரை மாத்திரம யோசுவா தெரிந்துகொண்டார்.

"அவர்களை" என்பது 30,000-பேரைக் குறியாமல் பதிவிடைக் கனுப்பப்பட்ட 5000-பேரைக் குறிக்கும். வா. 9, 12.

4. இந்தச் சங்கதி சற்று கருகலாயும், சிக்காயும் தோன்றுகிறது. சரித்திரத்தை வாசித்தவுடனே, 3-ல் கண்ட 30,000-பேர் ஒரு பவிஞ்சென்றும் 12-ல் சொல்லிய பதிவிடைக்கனுப்பப்பட்ட 5000-பேர் ஒரு பவிஞ்சென்றும், வா. 5: 11-ல் கண்ட மற்ற யாவரும் மறு பவிஞ்சென்றும் மனதுக்குத் தோன்றும். கவனித்துப் பார்க்கும்போது ஆயி பட்டணத்தைப் பிடிக்க இரண்டு பவிஞ்சு குறிக்கப்பட்டு ஒரு பவிஞ்சு பதிவிடைக்கனுப்பப்பட்டதென்று அறியலாம். 3-ல் கண்ட 30,000-ஜன

ங்களில் 5000-பேர் பதிவிடைக்கனுப்பப்பட்டிருக்கிறார்கள். பெத்தேலுக்கும் ஆயிக்கும் நடுவே, ஆயிக்கு மேற்காக இரண்டு பதிவிடையிருப்பது கூடாத காரியம். வா: 9, 12, 13. 12, 14, 19-முதலிய வாக்கியங்களைப் பார்க்கையில் ஒரு பதிவிடையே இருந்ததாகத் தெரியவருவதோடுங் கூட, உத்தேசிக்கப்பட்ட மற்றப் பதிவிடை ஒன்றுஞ் செய்ததாகவுந் தோன்றவில்லை.

5. யோசுவாவும் அவனுடனிருந்த 25000-பேரும், பதிவிடை அனுப்பப்பட்ட மறுநாட் காலையில் புறப்பட்டுப்போனார்கள்.

10. அதிகாலையில் ஜனங்களை யோசுவா இலக்கம்பார்க்கவேண்டியதென்னவென்றால், தம்மோடிருந்தவர்களில் யாராவது இராத்திரியிலே தம்மைவிட்டுப் பிரிந்தாவது, பதிவிடைக்காவது போயிருக்குமோ என்பதை அறிந்துகொள்ளவும், இந்த யுத்தத்தில் இஸ்ரவேலரில் ஒரு சேதமுமில்லையெனக் காண்பித்து அதினால் இஸ்ரவேலர் தேவனில் அதிக உறுதியான நம்பிக்கை வைத்து யுத்தமுயற்சியில் பின்வாங்காத் தைரியங்கொள்ளவுமே.

“இஸ்ரவேலின் மூப்பர்” 3-ல் காட்டிய 30,000-ஜனங்களையும் நடத்திய யுத்தத் தலைவர்கள் அல்லது இஸ்ரவேலின் அதிபதிகளாகிய நியாயவிசாரணைக்காரராயிருக்கலாம். இந்த நியாயாதிபதிகள் தேவன் இஸ்ரவேலருக்குக் கொடுத்த கொள்ளைப்பொருள்களைக் காபந்துசெய்யவும், வா. 2, 27. யுத்தத்துக்குப்போனவர்களுக்கும் மற்றும் ஜனங்களுக்கும், எண். 31: 27-ல் கண்ட உத்தரவுப்படி கொள்ளைப் பொருளைப் பங்கிட்டுக்கொடுக்கவும் யோசுவாவோடு கூடப்போனார்கள்.

13. யோசுவாவும், அவன் ஜனங்களும், முதல்நாள் சாயந்தரமே எல்லாம் ஆயத்தஞ்செய்து இரவிலேயே பதிவிடையை அனுப்பி, வா. 3. மீதியான 25000-பேருடன் இரவில் தங்கி, வா. 9. அதிகத் தூக்கத்துக்கிடங்கொடாமல், இருட்டோடெழுந்து ஜனங்களை இலக்கமும் பார்த்து, பள்ளத்தாக்குக்கு நேரே போய், வா. 13. ஆயிப் பட்டணத்தாரை யுத்தத்துக்கு அழைக்கிறவர்களாய்த் தங்களைக் காட்டினார்கள். மறுநாளிரவில் நடந்திருக்குமென்று சிலர் நினைக்கிறார்கள். அப்படியிருக்குமானால் எதிரிகள் பதிவிடையை அறிந்து பட்டணத்தை அடைகோட்டைப்படுத்த ஏதுவிருக்குமே.

14. “குறித்த வேளையில்” முன்னாலே இஸ்ரவேலரை முறியடித்த சுபநேரம் வருகிறவரை காத்திருந்து அந்த நேரம் வந்தவுடனே ஆயியின் இராசாவும் அவன் கூட்டாளிகளும் புறப்பட்டார்கள்.

16. “எல்லாரும்” பட்டணத்திலுள்ள எல்லாருமல்ல, யுத்த மனுஷர் மாத்திரமே, பின்தொடரவும், யுத்தஞ்செய்யவும் கூடாத வயதுசென்றவர்களும், பிள்ளைகளும் பட்டினத்திலிருந்தார்கள்.



18. யோசுவாவின் ஈட்டியின் நுனியில் கொடியுமிருந்திருக்கலாம். இது அவனோடிருந்த சேனைகளை நிறுத்திப் பின்தொடருகிறவர்களை எதிர்த்துச் சங்கரிக்கவும், தூரத்திலிருந்த பதிவிடையாட்கள் தங்களுக்குக் கற்பிக்கப்பட்டபடி செய்வதற்கு அவர்களைத் தூண்டிவிடும் அடையாளமாகவுமிருந்தது. விசேஷமாய்த் தேவனுடைய பிரசன்னத்துக்கும் ஒத்தாசைக்குஞ் செயத்துக்கும் இரகசிய அடையாளமாகவிருந்தது. யாத்தி. 17: 11-ல் சொல்லியபடி மோசேயின் கை நீட்டப்பட்டிருந்த வண்ணம் ஜெயமாகும்வரை யோசுவாவின் ஈட்டியும் நீட்டப்பட்டிருந்தது.

19. பதிவிடையிருந்தவர்கள் பட்டணத்தை முற்றிலும் தீக்கொளுத்தாமல், தங்கள் காரியம் சித்தியாயிற்றென்று தங்கள் சகோதரருக்குக் காட்டும் அடையாளமாகப் புகையெழும்பும்படி பட்டணத்தின் ஓர் பாகத்தைக் கொளுத்தினார்கள். மற்றப்படி கொள்ளைப்பொருள்கள் கிடையாதே.

20. “இடமில்லாமல்போயிற்று.” மூலத்தில் வல்லபமில்லாமல் போயிற்றென்று கண்டிருக்கிறது. எண். 2: 17. நெகே. 7: 4. ஏசாயா 22: 13. சங். 104: 25.

23. மற்ற இராஜாக்களுக்குத் திகிலுண்டாகும்படி ஆயியின் இராசாவுக்கு அதிக நிந்தையும், விசேஷமுமான தண்டனையைச் செய்ய அவனை உயிரோடே பிடித்தார்கள்.

26. யோசுவாவின் நீட்டப்பட்ட கை, யுத்தத்தில் ஓய்ந்துபோகவில்லை. அல்லது சத்துருக்களைச் சங்கரிக்க இஸ்ரவேலரைத் தைரியப்படுத்த ஏதுவாயிருந்தது.

28. “என்றைக்கும்” என்பது நீடித்தகாலம். ஆதி. 6: 3. ஏசா. 42: 14. இந்தப் பட்டணம், திரும்பக் கட்டப்பட்டிருக்கிறது. நெகே. 11: 31.

29. கானானியரைப் பார்க்கிலும், அவர்களின் இராஜாக்களையே யோசுவா, கொடூரமாய் நடத்தினார். ஏனென்றால் அந்த ஜனங்களின் அருவருப்பான பாவங்களைத் தடுக்கவும், தண்டிக்கவுமான ஏற்பாடுகள் செய்யாமல், அவர்கள் அவ்வித பாவங்களைச் செய்யக் காரணராக இருந்து, அவர்களின் அழிவுக்கு முக்கிய ஏதுக்களாயிருந்தபடியினாலேயே. தேவகட்டளைப்படி உடலை மரத்தைவிட்டிறக்கினார்கள். உபா. 21: 22, 23.

30. கானான்தேசத்தில் பிரவேசித்தவுடனே செய்யக் கற்பனை பெற்றபடி ஏபால் மலையில் பலிபீடங் கட்டப்பட்டது. உபா. 11: 29. 27: 2, 3. தேவனோடு செய்த உடன்படிக்கையைப் புதுப்பித்து, அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்வதினாலே தேவனால் மாத்திரம் தங்களுக்கு ஜெயமும் ஒத்தாசையுங் கிடைக்கக் கூடுமென்பதை அறிக்

கையிடும் நோக்கமாகப் பலிபீடங் கட்டினார்கள். கெர்சீம் மலையிலும் ஏன் கட்டவில்லையென்றால் (1) தேவனுக்கென்று ஒரே இடத்தில் மாத்திரம் பலிபீடங் கட்டவேண்டியது. உபா. 12: 13, 14 (2) ஏபால் மலையே அந்த ஓரிடமென்று முன்னால குறிக்கபபட்டிருந்தது. உபா. 27: 45. அங்கே நியாயப்பிரமாணத்தின் சாபங் கூறப்பட்டது. இது பாவிகள் தங்கள் சாபத்தினின்று நீங்கி, தேவாசிர்வாதம் பெற்றுக்கொள்ள ஏவுகிற கிருபையின் எதநனத்துககுரிய அடையாளமாயிருப்பதால், ஏபால் மலை அதற்கேற்ற இடமே.

32. நியாயப்பிரமாணத்தைக் கரடுமுரடுமாயிருந்த பலிபீடத்தின் கற்களிலல்ல, மெதுவிடப்பட்டுச் சாந்துபூசின கற்களில் எழுதினான். உபா. 27: 2. இதில் மோசேயின் ஐந்தாகமங்களும் எழுதப்படவில்லை. அதற்குக் கற்களும், காலமும் போதாதே. பின்சொல்லப்பட்ட ஆசீர்வாதங்களும், சாபங்களும் எழுதப்படவில்லை. அவைகள் நியாயப்பிரமாணங்களல்ல, நியாயப்பிரமாணத்தின் விசேஷித்த பங்குகள் எழுதப்பட்டன. உபா. 27: 15 விசேஷமாய் பத்துக்கற்பனைகள் எழுதப்பட்டன.

33. ஏபால், கெர்சீம், மலைகள் எப்பிராயீம் கோத்திரத்தில் சீகேமுக்குச் சமீபமாயிருந்தன. உபா: 11: 29, 30. 27: 12. நியா. 9: 7.

“வாசித்தான்.” ஆசாரியனாயாவது, லேவியனாயாவது வாசிக்கும்படி கற்பித்தான். உபா. 27: 14.

“அதற்குப் பின்பு” பலிபீடங் கட்டி, நியாயப்பிரமாணம் எழுதப்பட்டபின்பு, சிலர் நினைக்கிறபடி கல்லில் எழுதப்பட்டவைகளையல்ல, நியாயப்பிரமாணத்திலே சொல்லிய ஆசீர்வாதமுஞ் சாபமுமான வார்த்தைகள் வாசிக்கப்பட்டன.

35 சிலர் நினைக்கிறபடி ஆசீர்வாதங்களையும், சாபங்களையும் மாத்திரமலல, உபா. 31: 10—12-ல் வாசிக்கிறபடி எல்லா இஸ்ரவேலருக்கு முன்பாக நியாயப்பிரமாணமுழுவதும் வாசிக்கப்பட்டது.

“அந்நியர்கள்” யூதமார்க்கத்தமைந்த புரோசெலுத்துகள்.

## கேள்விகள்.

1. தேவன் தமது சித்தத்தை மனிதருக்கு வெளிப்படுத்தின விதங்களெப்படி? ஒவ்வொன்றுக்கும் திருஷ்டாந்தம் சொல்லவும்.

2. ஆயியைப் பிடித்த உபாயம்போலவே வேறெந்த சமயத்திலும் இந்த உபாயம் நடந்தது? இது குற்றமில்லையென்று காண்பியும்.

3. யோசுவா தனிமையாய் இரவில் பள்ளத்தாக்குக்கு போகவேண்டியதென்ன? இந்த யுத்தத்துக்கு எல்லாரும் போக கற்பிக்கப்பட்டதேன்?



4. ஜெயமுண்டாகுமட்டும் யோசுவா செய்ததென்ன? அது எதற்கு அடையாளம்? இதினால் நாம் படிக்கிற பாடம்.

5. ஆயி இராசா தன் சேனையெல்லாம் கூட்டிப்போய் ஒருமிக்க அழிந்ததுபோல அழிந்தவனார்?

6. “பாவிகளுடைய ஆஸ்தி நீதிமான்களுக்கு வைக்கப்பட்டிருக்கிறது.” இதற்கு உதாரணம்.—எபபடி. கொள்ளைப்பொருள்கள் பங்கிடப்படும்?

7. கானானியரிலும் அவர்களுடைய இராசாக்கள் கொடுமையும் நிந்தையுமான மரணம் அடைந்தார்களென்பதற்கு குறிப்புகளுண்டா? ஏன்? அவ்வித தண்டனையும் கிறிஸ்துநாதர் அடைந்தாரா?

8. கெர்சீம், ஏபால் மலைகளைப்பற்றிய விசேஷமென்ன! அங்கே நியாயப்பிரமாணம் வாசிக்கப்பட்ட நோக்கமென்ன! இதினால் நாம் படிக்கவேண்டிய மாதிரியென்ன?

9. சாபம் கூறவேண்டிய மலையில் பலிபீடங் கட்டவேண்டியதென்ன? இது எதற்கு அடையாளமாயிருக்கலாம்?

10. இதில் இஸ்ரவேலர் சற்று நல்லவர்களென்பதற்கு குறிப்புகளுண்டா?

## IX. அதிகாரம்.

3. கிபியோன் ஏவியருக்கு இராஜதானி. தானி. 10: 2. 11: 19.

6. “இஸ்ரவேல் மனுஷர்” இவர்கள் 15, 18, 19, 21-வாக்கியங்களினால் தோன்றுகிறபடி சாதாரணமான இஸ்ரவேலரல்ல, கனமும் அதிகாரமுமுடைய பிரபுக்களாம். இவர்கள் யோசுவாவுக்கு ஆலோசனைக்காரரும், சமாதான ஏற்பாடுமுதலியன செய்வதற்குத் தகுந்தவர்களுமாம். கிபியோனர் ஏபால் மலையில் வாசிக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தைக் கேட்டுப் பயந்தும், எரிகோ, ஆயிமுதலிய பட்டணங்களில் நடந்த சங்காரத்தை அறிந்தும், இஸ்ரவேலர் இத்தேசத்துக் குடிகளையெல்லாம் அழித்துப்போட்டு, அவர்களே தனித்த ஜாதியாயிருந்து அரசாளப்போகிறார்களென்பதை விசாரித்தும் தந்திரமாய் உடன்படிக்கைசெய்ய வந்தார்கள்.

7. கிபியோனர் ஏவியரைச் சேர்ந்தவர்கள். யோசு. 11: 19. நீங்கள் சமாதான உடன்படிக்கைசெய்யக கூடாதென்று விலக்கப்பட்டிருக்கிற ஜாதியாரைச் சேர்ந்தவர்களாயிருக்கலாமென்று பிரபுக்கள் அவர்களிடத்தில் சொன்னார்கள். யாத். 23: 32, 33. உபா. 7: 2. 20: 15‘16.

9. தேவனுடைய பெரிதான நாமத்தையும், அதிசயக் கிரியைகளையும் கேள்விப்பட்டு, யூதமார்க்கத்தைச் சேர்ந்துகொள்ளவேண்டுமென்ற மனதோடே பேசினார்கள். அவர்கள் சமீபத்திலுள்ளவர்களென்று தெரியவராதபடிக்கு யோர்தான் நதி பிரிக்கப்பட்டது எரிகோ, ஆயி பிடிபட்ட வரலாறு தெரிந்திருந்தும் அவற்றைச் சொல்லாமல், வெகுகாலத்துக்கு முன்னும் தூரமான இடங்களிலும் நடந்த விசேஷங்களைத் தந்திரமாய்ச் சொன்னார்கள்.

14. அவர்கள் கொண்டுவந்த போசனபதார்த்தங்களின் பேரிலுள்ள ஆசையினால் பிரியப்பட்டு வாங்கவில்லை. ஏனென்றால் அவைகள் கெட்டுப்போயிருந்தன. சமாதான ஏற்பாட்டுக்குரிய அத்தாட்சியாக வாங்கவுமில்லை, அது இப்போது செய்யப்படவில்லை. அவர்கள் சொன்னது சத்தியமோ அல்லவோ என்பதைப் பரீட்சிக்க வாங்கினார்கள். பெரிதும் சமுசயிக்கப்படத்தக்கதுமாயிருக்கப்பட்ட சங்கதிகளைக் கர்த்தரிடத்தில் கேட்டுக்கொள்ளவதுபோல இப்போ கேளாமல் விட்டுவிட்டது அவர்களுடைய தப்பிதமே. எண். 27: 21. நியாயா. 1: 1. 1 சாமு. 22: 10. 2 சாமு. 2: 1.

15. "அவர்களோடே சமாதானம் பண்ணினார்கள்." இது யாத். 21: 32. 34: 12-ல் சொல்லியிருக்கிறபடி பிரமாணத்துக்கு விரோதமாயிற்றே என்றால் அந்தப் பிரமாணத்தின் கருத்து, இஸ்ரவேல் ஜனங்கள் கானானியரோடுகூடி வாழ்வதினால் அவர்களுடைய விக்கிரகாராதனையையும், மற்றும் பாவங்களுக்கும் உடந்தையாவார்களென்றறிந்து அந்தக் கட்டளை கொடுக்கப்பட்டது. அவர்கள் விக்கிரகாராதனையையும், மற்றும் பாவங்களையும் வெறுத்துச் சத்தியமார்க்கத்தை ஏற்றுக்கொள்ள மனமானால் அவர்கள் ஜீவன் காக்கப்படுவது பிரமாணத்துக்கு விரோதமல்ல. சங்காரத்துக்கு நியமிக்கப்பட்ட ஜனங்களை அழிக்காமல் இஸ்ரவேலர் விட்டுவிடுவார்களென்பதைத் தேவன் முன்னறிந்து பொதுச் சட்டமாய்க் கொடுத்தார். ஆனால் மெய்யாய்க் குணப்படுவோர்க்கு இப்பிரமாணஞ் செல்லாதென்பதைப் பின்வரும் நியாயங்களால் அறியலாம். இராகாப்புடைய திஷ்டாந்தரத்தாலும், தேவனுடைய பயங்கர தண்டனைகள் கூறப்படுகிற நோக்கத்தாலும், எரேமி. 18: 7, 8. யோனா 3, 4-அதி. தேவன் தாம் கூறின தீங்குகளைச் செய்யாதபடி நிறுத்துகிற அவருடைய தயவுள்ள செயலாலும் தெரியவருகிறது. ஆகையால் இந்த உடன்படிக்கை செய்யப்படவேண்டியது நியாயமே. எப்படியெனில் (1) யோசுவாவும் பிரபுக்களும் காரியங்களை யோசித்து அதின்பேரில் தான் அவர்கள் ஜீவனைக் காப்பாற்றினார்கள். 19: 20, 22, 23-வா. (2) வெகுகாலத்துக்குப்பின்பு இந்த ஆணையை மீறினவனைத் தேவன் தண்டித்தார். 2 சாமு. 21: 1. (3) இஸ்ரவேலர் கானானியரைச் சங்காரஞ்செய்யும்பொருட்டு, மற்றப் பட்ட



ணத்தாரின் இருதயங்களைத் தேவன் கடினப்படுத்தினாரென்று சொல்லியிருக்கிறது. யோசு. 11: 19, 20. இந்த அழிவு இஸ்ரவேல் ஜனங்களோடு சமாதானஞ்செய்துகொள்ளாதிருந்த அசட்டையினாலே வந்தது. அவர்கள் குணப்படாதிருந்தபடியால் தங்கள் இருதயக் கடினத்தினால் அழிந்தார்கள்.

18. இஸ்ரவேல் சபையார், கிபேயோனர் தங்கள் நடுவே குடியிருக்கிறவர்களென்று அறிந்தபோது, அவர்களோடு தங்களுடைய பிரபுக்கள் செய்த செய்கை தப்பிதமுள்ளதென்று அறிந்தபடியாலும், அவர்கள் செய்த ஆணையினிமித்தம் அவர்களைக் கொல்லவும் கூடாது, தேவனுடைய கட்டளைப்படி அவர்களை அழிக்கவும்வேணுமேயென்று கலக்கமுள்ளவர்களாயிருந்தபடியாலும், அந்தப் பட்டினங்களின் சுதந்தரங்களும் கொள்ளைப்பொருள்களும் போய்விட்டதே என்ற ஏக்கத்தாலும், பிரபுக்கள்மேல் முறுமுறுத்தார்கள்.

19. பிரபுக்கள் தாங்கள் செய்தது நியாயமும் புத்தியுள்ளதென்றும் சொல்லாமல் தாங்கள் கர்த்தர்பேரில் செய்த ஆணையை மாத்திரம் முகாந்தரமாகச் சொல்லுகிறார்கள். தொடக்கூடாது என்கும்போது சேதஞ்செய்யக்கூடாதென்பது கருத்து. ஆதி. 26: 11. சங். 105: 15. 144: 5. சங்காரம்பண்ணவுங் கூடாது. வா. 18. பக்திமான்கள் ஆணையிடுகையில் நஷ்டமிருந்தும் அதை நிறைவேற்றுவார்கள். சங். 15: 4. இந்த ஆணையை தேவனும் அங்கிகரித்து கிபேயோனரை அழித்த சவுல் வீட்டாரைத் தண்டித்தார். 2 சாமு. 21: 23. தகாத ஆணைகளோ செல்லக்கூடாது. மத். 14: 8, 11. அப். 23: 12, 22.

21. கிபேயோனர் எல்லா சபைகளுக்கும் பிரயோசனமாக, உபா. 29: 11-ல் கண்ட வேலைக்காரருக்குப் பதிலாக பொதுவான வேலைக்காரராயிருக்கும்படிக்கும், இஸ்ரவேலர் தேவனுடைய ஆலயத்துக்குச் செய்யவேண்டிய அற்பவேலைகளை வா. 23. அவர்கள் செய்யும்படிக்கும், பாளையத்திலும் பிரபுகளுக்கும் செய்யவேண்டிய அடிமை வேலைகளைச் செய்யும்படிக்கும் நியமிக்கப்பட்டார்கள். இதினால் கிபேயோனருடையப்பட்டினங்களும், சொத்துக்களும் இஸ்ரவேலர் வசமாயின. இதினால் சபையாரின் முறுமுறுப்பு நின்றுபோயிற்று.

23. "நீங்கள் சபிக்கப்பட்டவர்கள்." யோசுவா கிபேயோனரை அழைத்து நீங்கள் தேவனுடைய சாபத்துக்குத் தப்பத்தக்கவர்கள் அல்ல. நீங்கள் தேவனால் அழிவுக்கு நியமிக்கப்பட்ட கானான் சாதியாரானதால், ஒருவகையாய் நீங்கள் சங்காரத்துக்குத் தப்பினாலும் "கானான் சபிக்கப்பட்டவன், தன் சகோதாரிடத்தில் அடிமைகளுக்கு அடிமையாயிருப்பான்." ஆதி. 9: 25 என்ற சாபத்துக்குரியவர்களாயிருக்கிறீர்கள் என்றார். அவர்கள் எளிமையும், இழிவும், நிற்பந்தமுமான அடிமைகளாய் நியமிக்கப்பட்டார்கள். இவர்கள் மூர்த்தி ஆசரிப்புக்

கூடாரத்திலும், பின்பு தேவாலயத்திலும் விறகுவெட்டுகிறவர்களும் தண்ணீர் எடுக்கிறவர்களுமானதால் இவர்கள் பிற்காலத்தில் நிதினிமர் என்னப்பட்டார்கள். 1 நாளா. 9: 2. எஸ்று. 2: 43. இஸ்ரவேலர் தங்கள் தங்கள் காணியாட்சிகளுக்குப் போனபின்பு கிபேயோனர் சபைகளுக்கும் பிரபுக்களுக்குஞ் செய்த அடிமை வேலைகள் நின்றுபோயின. இவர்கள் யூதசபையில் சேர்ந்தது, இனி புறச்சாதியார் திருச்சபையில் சேருவதற்கு முன்னடையாளமாயிருந்தது.

## கேள்விகள்.

1. கானான் சாதியான 7-வகுப்பாரைப்பற்றிய வரலாறு எழுதும்?

2. இஸ்ரவேலரோடே உடன்படிக்கை செய்யவந்த பட்டினத்தார் யார்? அப்பட்டணங்களில் நடந்த விசேஷங்களென்ன?

3. இஸ்ரவேலர் கிபேயோனரோடே உடன்படிக்கைசெய்தது சரியா? அது யாத். 23: 32, 34, 12-லுள்ள பிரமாணத்துக்கு விரோதமல்லவென்று காண்பியும்?

4. கிபேயோனர் செய்த தந்திரமென்ன? அந்தத் தந்திரத்துக்காக எப்படித் தண்டிக்கப்பட்டார்கள்? இந்தத் தண்டனையினால் எந்த தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று?

5. அக்காலத்தில் கர்த்தரை கேட்கிறவிதமெப்படி? யார் யார் என்னென்ன விஷயத்துக்காக கர்த்தரைக் கேட்டார்கள்.

6. "நீதிமான் ஆணையிட்டும் தவறாதிருக்கிறான்" என்பதற்கு திருஷ்டாந்தமுண்டா? பிரபுக்கள் செய்த ஆணையை மீறினவர்கள் எப்படி தண்டிக்கப்பட்டார்கள்? தகாத ஆணைகள் பாவமானதென்று காட்டுங்கள்?

7. சுவிசேஷ நன்மைகள் சிலருக்கு ஜீவவாசனையாயும், சிலருக்கு மரணவாசனையாயுமிருப்பதுபோல, இஸ்ரவேலருடைய ஜெயமும் அப்படியிருந்ததற்கு குறிப்புண்டா?

8. புறச்சாதியார் திருச்சபையில் சேருவார்களென்பதற்கு இவ்வாகமத்தில் முன்னடையாளமுண்டா?

9. கிபேயோனருக்குப பூமிக்குரிய சுதந்தரமுண்டா? அவர்களுடைய பிழைப்பு எப்படியிருக்கலாம்? பிற்காலத்தில் எப்படி அழைக்கப்பட்டார்கள்? அதின் அருத்தமென்ன?

10. தூரத்திலுள்ள தாளுபதிகளைக் கண்டு அவர்களோடு உடன்படிக்கைசெய்வது மேன்மையென்றெண்ணினவர்களார்? உடன்படிக்கைக்கு உறுதியாகச் செய்கிற வழக்கமென்ன?

---



## The World's Birth.

## உலகப்பிறப்பு.

### I. அதிகாரம்.

"ஆதியிலே."

"ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையுஞ் சிருஷ்டித்தார்." ஆதி. 1: 1. ஆதியாகமம, மற்றெல்லாப் புத்தகங்களை விட மிகப் பூர்வீகமும், மாட்சிமையும், இன்றியமையாததுமான புத்தகம். அது மற்றெல்லா ஆகமங்களுக்கும் ஆதாரமும் உரையுமாயிருக்கிறது. அப்படியானால் இந்தப் புத்தகத்தை ஆராயத்துவக்குமுன், நாம் ஏற்ற வண்ணம் அதிலடங்கியவைகளைக் கற்றறிய, தேவன் கிருபை தரும்படி அவரை நோக்கி விண்ணப்பஞ்செய்யவேண்டும்.

இந்தப் புத்தகம், பூமியின் உற்பத்தி, அல்லது பூர்வோத்திரத்தைக் காட்டுவதால், "ஆதியாகமம" என்று சொல்லபடுகிறது. ஒளி, ஆகாயவிரிவு, வானஜோதிகள், கண்டங்கள், சமுத்திரங்கள், மலைகள், பள்ளத்தாக்குகள், விருட்சங்கள், பூண்டுகள், பறவைகள், மீன்கள், மிருகங்கள், மனிதர் உண்டான விதமும, பின்னும ஐயோ! பாவம் வந்ததும், அதால் மரணம் உலகத்தில் பிரவேசித்ததும, இயேசு இரக்ஷகருக்குள்ளான கிருபையைப்பற்றிய வாக்குத்தத்தம, ஜலப்பிரளயம், ஜலப்பிரளயத்துக்குப் பின்பு பூமியின் விருத்தாந்தம, அதல் குடியேறின ஜாதிகளின் வரலாறு, இஸ்ரவேல் வம்சத்தாரின் ஆரம்பம் ஆகிய வர்த்தமானங்களின் துவக்கமும், இந்தப் புத்தகத்தில் காட்டப்பட்டிருக்கிறது.

இந்தப் புத்தகத்தை எழுதினவன் மோசே: அவன் இஸ்ரவேலரை வனாந்தர வழியாய் அற்புதமாய் நடத்திக்கொண்டுபோனபோது, தேவன் அவனுக்கு இந்தச் சம்பவங்களையெல்லாம போதித்து, அதை எழுதும்படி செய்தார். அந்தந்தக் காலங்களிலுள்ள ஜாதியார், பாஷைக்காரர் அதைக் கற்றுக்கொள்ளும்படி அது எழுதிவைக்கப்பட்டிருக்கிறது. உபாகமம் 6: 6, 7. "இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்திலிருக்கக் கடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும, படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக்குறித்துப் பேசு." 4: 9. "ஓரேபிலே உன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நீ நிற்கும் போது, கர்த்தர் என்னை நோக்கி, ஜனங்களை என்னிடத்தில் கூடிவரச்செய்து என் வார்த்தைகளை அவர்கள் கேட்கும்படி பண்ணுவேன். அவர்கள் பூமியில் உயிரோடிருக்கும் நாளெல்லாம் எனக்குப் பயந்திருக்கும்படி அவைகளைக் கற்றுக்கொண்டு, தங்கள் பிள்ளைகளுக்கும் போதிக்கக் கடவர்கள்" என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

ஆதியாகமம், மற்றெல்லாப் புத்தகங்களை விட மிகப் பூர்வீகமுள்ளதென்று சொல்லப்பட்டதே. அது-கி-மு-1491 வருஷத்தில் எழுதப்பட்டது, உரோமை நகரி கட்டப்படுவதற்கு 738-வருஷங்களுக்கு முன்னும்,

நினிவே அழிவதற்கு 869-ஆண்டுகளுக்கு முன்னும் அதாவது, உலக இதிகாசர்கள் பொதுப்பட தங்கள் சரித்திரங்களைத் துவக்குகிறதற்கு 869-வருஷங்களுக்குமுன், எழுதப்பட்டது. இந்தப்புத்தகம் இல்லாவிட்டால் மனிதஜாதிகளுடைய சரித்திரத்தில் பாதி நமக்குத் தெரியாது. ஆதாமுதல் இயேசுகிறிஸ்துவரைக்கும் 4004-வருஷம், கிறிஸ்துமுதல் நாளதுவரையும் 1879-வருஷம் இரண்டு தொகையுஞ் சேர்க்கில் 5883-வருஷமாகிறது. ஆதியாகமத்தில் 2368-வருடச் சரித்திரம் அடங்கியிருக்கிறது.

ஆதாமுதல் ஜலப்பிரளயம்வரை 1656-வருஷங்களும், ஜலப்பிரளயமுதல் யோசேப்பின் மரணம்வரையும் 712-வருஷமுமாம். ஆதியாகமத்தில் மாத்திரம் நாளதுவரையுமுள்ளதில் இரண்டரையில் ஒரு பங்கு சரித்திரம் காட்டப்பட்டிருக்கிறது.

இந்தப் புத்தகமில்லாவிடில் வானமும் பூமியும் சிருட்டிக்கப்பட்டதையும், ஆறுநாள் சிருட்டிப்பையும், முதல் மனிதன் மனுஷியையும் அவர்கள் பாவமில்லாத நிலைமையையும் அவர்கள் ஏதேனில் வாசம் பண்ணினதையும் தேவன் அவர்களோடே பண்ணின முதல் உடன்படிக்கையையும், அவர்கள் பாவத்தில் விழுந்ததையும் இரட்சகர் வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதையும், இரத்தப்பலி ஏற்பாட்டையும், நீதிமானாகிய ஆபேலையும், நீதியின் பிரசங்கியாகிய நோவாவையும் பற்றியும், ஜலப்பிரளயம் உண்டானதையும், அதின்பின்பு ஜனங்கள் பூமியில் குடியேறினதையும், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு அழைக்கப்பட்டதையும், இரக்ஷகரைப்பற்றி அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களையும், இஸ்ரவேலர் எகிப்துக்குப்போனதையும், யோசேப்பின் சரித்திரத்தையும் அறிய ஏதுவில்லை.

நான் யார்? எங்கேயிருந்து வந்தேன்? எங்கேபோகிறேல்? ஏன் இங்கேயிருக்கிறேன்? இங்கே என்னை வைத்தது யார்! நான் செய்யவேண்டியதென்ன? நான் எங்கே போகிறவனாயிருக்கிறேன்? நான் இன்று இரவில் இறந்தால் எங்கேபோவேன்? இந்த உலகில் இவ்வளவு நிர்ப்பாக்கியங்கள் இருப்பானேன்? என்னிருதயத்தில் பாவம் இவ்வளவாய்க் குடிகொண்டிருப்பானேன்? நான் ஏன் மரணத்துக்குள்ளாயிருக்கவேண்டும்? மரணம் வந்ததோடே பாடுகளும் வேதனைகளும், பெருமூச்சுகளும் உண்டாவதென்ன என்ற இந்தக் கேள்விகளுக்கு உத்தரம் பரிசுத்த வேதத்தில் மாத்திரம் தெளிவாய்க் காணலாம். தேவன் அவைகளைப்பற்றி தெளிவாய் நமக்குக் கட்டளையிட்டதற்கு நன்றியறிதலுள்ளவர்களாயிருப்போமாக. எவ்வளவு கனபயத்தோடே அந்த விலைபெற்ற செல்வத்தை மதிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். அந்தப் புத்தகத்தை எவ்வளவு பயபக்தியோடும் ஜெபசிந்தையோடும் வாசிக்கவேண்டும். பரமகாரியங்களை நீங்கள் வாசிக்கையில் உங்கள் மனம் சிதறுதபடிக்கு, கெட்ட தோழருடன் பழகாமல், அவர்கள சகவாசத்தை நீங்கள் முற்றும் விட்டுவிடவேண்டும். தேவன் உங்களுடன் பேசும்படி, உங்கள் இருதயத்தை அடிக்கடி அவரண்டைக்கு ஏறெடுக்கவேண்டும்.

"ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையுஞ் சிருட்டித்தார்." இங்கே ஐந்து வார்த்தைகள் இருக்கின்றன. ஆதி, தேவன், சிருட்டித்தார், வானம், பூமி, இந்த வார்த்தைகளைச் சற்று விவரமாய்ப் பார்ப்போம். "ஆதி" இந்த வார்த்தையிலே ஒரு விசேஷித்த சத்தியம் அடங்கியிருக்கிறது. இதைப் பார்க்கையில் "உலகம்" நித்தியகாலமாயிருக்கவில்லை. பூமியாவது வானமாவது இராத காலமுண்டு என்று அறியலாம். அப்போது மனிதனாவது, ஸ்திரீயாவது, தூதராவது, ஆகாயவிரிவாவது, பூமியாவது, சமுத்திரமாவது ஒன்றுமில்லை. தேவன் மாத்திரமிருந்தார்.

(இன்னும் வரும்.)



## Exposition of the Church Catechism.

## ஞானோபதேசவினாவிடை

### வியாக்கியானம்.

### கூ-ம் அதிகாரம்.

விசுவாசப்பிரமாணம்.

ச-ம் பிரிவு.

### கிறிஸ்துநாதரின் உயிர்த்தெழுதலைப்பற்றி.

(தொடர்ச்சி.)

சில இடங்களில், கிறிஸ்து தமது சொந்த வல்லமையினால் எழுந்தருளினதாகவும் (யோவா. 2: 19-22. 10: 15-18.) சில இடங்களில், அவர் தேவனுடைய வல்லமையினால் எழுந்தருளினதாகவும் (அப். 2: 32. கலா. 1: 1. எபே. 1: 19. பிலி. 2: 9.) சொல்லப்பட்டிருக்கிறது.

2. கிறிஸ்துநாதர் செலுத்திய பலி போதுமானதென்று நமக்கு நிச்சயப்படுத்தவும்.

நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார். ரோ. 4: 25. அப். 2: 31—33.

3. நம்முடைய உயிர்த்தெழுதலுக்கு உறுதியாகவும்.

கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார். ரோ. 8: 11.

கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்து எழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார். 1 கொ. 15: 20. 1 தெச. 4: 14.

4. நாம் பாவத்துக்கு மரிக்கும்படி நம்மை நடத்தவும்.

அப்படியே நீங்களும் உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள். ரோ. 6: 11. 2 கொ. 5: 15. கொலோ. 3: 1.

5. சுவிசேஷத்தின் உண்மைக்கு விசேஷித்த அத்தாட்சியாகவும்.
கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா. 1 கொரி. 15: 14, 17.

6. நம்முடைய உயிர்த்தெழுதலுக்கு மாதிரியாகவும்.
மரணம் கிறிஸ்துநாதரின் தன்மையிலாவது இலட்சணத்திலாவது யாதொரு மாறுதல் உண்டாக்கவில்லை. அவர் மரணமடையுமுன் எப்படியிருந்தாரோ அப்படியே உயிரோடெழுந்தபிற்பாடும் இருந்தார். தம்முடைய சிநேகிதரில் வைத்த பட்சமும், பகைவரில் வைத்த உருக்கமும் ஒன்றுபோலவே இருந்தது. அப்படியே மரணம் நமிலும் ஒரு மாறுதலும் உண்டாக்க மாட்டாது.

அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். ரோ. 6; 5. பிரசங்கி 11: 3. வெளி. 22: 11.

அப்போஸ்தலர் கிறிஸ்துநாதரின் உயிர்த்தெழுதலை தங்கள் பிரசங்கத்துக்கு அஸ்திபாரமாக வைத்துக்கொண்டார்கள்.
அப். 1: 21, 22. 2: 31, 32. 3: 15. 4: 2, 33. 10: 40. 13: 31. 17: 18, 32. 24: 15, 21.

---

வினா. நம்முடைய இரட்சகர் உயிர்த்தெழுந்த பிற்பாடு இவ்வுலகத்தைவிட்டு எங்கே போனார்?

விடை. அவர் பரமண்டலத்துக்கேறினார்.
மாற். 16: 19. லூக். 24: 51. அப். 1: 9. எபே. 4: 8—10.

உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகளெல்லாம் நிறைவேறித் தீருங் காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும். அப். 3: 21.

இயேசு தாம் பரலோகத்துக்குப்போய், பரிசுத்தாவியை அனுப்புவேன் என்று வாக்குத்தத்தம்செய்திருந்தார். யோவா. 16: 7.

அப்படியே பெந்தேகோஸ்தேநாளில் பரிசுத்தாவியை அனுப்பினார். அப். 2: 3, 4.

நம்முடைய கர்த்தரின் பரமேறுதல் சங்கீதக்காரனாலே முன்னறிவிக்கப்பட்டது. சங். 24: 9, 10. 68: 18.

வினா. பரமண்டலத்தில் அவர் இருக்கும் இடம் எது?

விடை. அவர் சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார்.



தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார். பிலி. 2: 9.

தேவன் ஆவியாயிருக்கிறார், அவருக்கு உறுப்புகளில்லை. ஆனால் நம்முடைய சிற்றறிவுக்கு விளங்கும்படியாக, தமக்கு உறுப்புகள் இருக்கிறதாகக் காண்பித்திருக்கிறார்.

வினா. "தேவனுடைய வலதுகரம்" என்பது என்ன கருத்துக்கொள்ளும்?

விடை. 1. வல்லமையுள்ள இடம்.
மத். 26: 64. மாற். 14: 62. லூக். 22: 69.
2. கனமும், பாக்கியமுமுள்ள இடம்.
சங். 110: 1. யோவா. 17: 4, 5. எபே. 1: 20, 21. 1 பேது. 3: 22.

கிறிஸ்துவானவர் தம்முடைய மேலான ஸ்தானத்தில் நிலையாயிருக்கிறார் என்பதைக் குறிக்கும்படி, சில சமயங்களில் அவர் உட்கார்ந்திருக்கிறவராகச் சொல்லப்பட்டிருக்கிறார்.

பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார். மாற். 16: 19.
அப். 2: 32—34. எபி. 1: 3. 8: 1.

அவர் நமக்காக எப்பொழுதும் மத்தியஸ்தம் செய்கிறார் என்பதைக் காண்பிக்கும்படி, சில சமயங்களில் அவர் நிற்கிறவராகச் சொல்லப்பட்டிருக்கிறார்.

ஸ்தேவான் இயேசுவானவர் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதாகக் கண்டான். அப். 7: 55.

அவர் தங்கியிருக்கிற இடம் பரமண்டலம். அது நித்திய ஆனந்தமுள்ள இடம்.

வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறார். எபி. 4: 14.

வினா. பரமண்டலத்தில் அவருடைய உத்தியோகமென்ன?

விடை. அவர் பிதாவுக்குமுன்பாக நம்முடைய மத்தியஸ்தராகவும், நமக்காக வேண்டுதல்செய்கிறவராகவும், பரிந்துபேசுகிறவராகவும் விளங்குகிறார். அவர் தம்முடைய புண்ணியங்களை எடுத்துக்காட்டி, தம்முடைய சபையின் நன்மைகளெல்லாவற்றிற்காகவும் கவலைப்படுகிறவராயிருக்கிறார்.

1. நமக்காகப் பரிந்துபேசுகிறவராயிருக்கிறார்.
என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். யோவா. 14: 6.

நமக்காக வேண்டுதல்செய்கிறவரும் அவரே. ரோ. 8: 34. எபி. 7: 25. 9: 24.

ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு

கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்துபேசுகிறவராயிருக்கிறார். 1 யோ. 2: 1.

2. நமக்குத் தேவையானவைகளைக் கொடுக்கிறவராயிருக்கிறார்.

நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன். யோவா. 12: 32.

என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவை எல்லாம் கிறிஸ்து ஏசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார். பிலி. 4: 19. எபி. 4: 16.

3. நமக்காக ஒரு இடத்தை ஆயத்தப்படுத்துகிறவராயிருக்கிறார்.

நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணின பின்பு நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்வேன். யோவா. 14: 3.

4. நம்மைப் பொல்லாங்கினின்று திருப்புகிறவராயிருக்கிறார். அப். 3: 26.

5. மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக இருக்கிறார்.

இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலதுகரத்தினாலே உயர்த்தினார். அப். 5: 31.

அவரை நாம் காணக்கூடாதபடி அவர் இவ்விதமாய்ப் போய்விட்டாலும், அவருடைய நாமத்தினாலே இரண்டுபேராவது மூன்றுபேராவது எங்கே கூடிவருகிறார்களோ அங்கே அவர்கள் நடுவில் அவர் இருக்கிறார். அவர் தமது ஜனங்களோடு எப்போதும் உலகமுடிவுபரியந்தம் கூட இருப்பேன் என்று விளம்பியிருக்கிறார்.

நம்முடைய ஆண்டவர் தமது உயிர்த்தெழுதலினாலும், பரமேறுதலினாலும் எவ்வளவு சிறந்த ஈவுகளை மனிதருக்காக வாங்கி இருக்கிறார். அந்த ஈவுகளை எவ்வளவு தாராளமாய்ப் பாவிகளில் பிரதானமானவர்களுக்கும் கூட ஈகிறார். அவர் உயர்த்தப்பட்ட இந்தப் புண்ணியத்தினாலே பாவத்தை உணர்த்தவும், மனந்திரும்புதலுக்கு நடத்தவும், பாவமன்னிப்பை நிச்சயப்படுத்தவும், கிருபையில் வளரும்படி நம்மை பலப்படுத்தவும், விழாதபடி நம்மைக் காக்கவும், நித்திய மகிமைக்காக நம்மை ஆயத்தப்படுத்தவும் தம்முடைய பரிசுத்தாவியை அனுப்புகிறார். அவர்மூலமாய் நாம் நம்முடைய ஜெபங்களுக்கு கிருபையான உத்தரவுகளைப் பெற்று, நம்முடைய ஆத்துமாக்களுக்கும் சரீரங்களுக்கும் தேவையான எல்லா நன்மைகளையும்



அடைகிறோம். விலைமதிக்கப்படாத இரத்தத்தினால் சம்பாதிக்கப்பட்டதும் அளவிடப்படக்கூடாததுமான இந்த ஈவுகளுக்காக நம்முடைய மீட்பரிடத்தில் நம்முடைய ஆத்துமாக்கள் ஏற்ற நன்றியறிதல் உள்ளவைகளாயிருக்குமென்றால், நாம் நிச்சயமாகவே பாவத்துக்கு மரித்து, மாம்சத்தை அதன் பலவித இச்சைகளோடுங்கூட சிலுவையில் அறைந்து, ஆவிக்குரிய மரணத்தினின்று உயிர்ப்பிக்கப்பட்டு, தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் நிலைத்திருப்போம்.

## இரக்ஷணிய யாத்திரிகம்.

(தொடர்ச்சி.)

மாதர்வி னின்றமை வளர்க்கும் மதியூட்டித்
தாதாவி னின்று சமரக்ஷணை சமைக்கும்
வேதாவு மாகியுயர் வீட்டுலகம் உய்க்கும்
நீதாதியன் கிருபை நெஞ்சுற நினைத்தி. 360

நஞ்சிவியத்தின் இடை எத்தனைகொல் நாசம்
வெஞ்சீய மாமலகை எத்தனை விதத்தில்
துஞ்சிடு பாடுகள் தொகுத்தன துகைத்திட்
டஞ்சியொரு வுதவிற் றாண்டை யருளன்றோ. 361

தன்னிருதய த்தருள் தரித்தியலு மாறும்
பின்னர் அது நன்று நிலைபெற்று வளர்சீரும்
என்னபரி சென்றொருவன் எண்ணி யினிதாயில்
இன்னபரி சென்றளவிடற் கெளிய தன்றால். 362

இத்தகைய காட்சியை உன்னெண்ணிடை யிருத்திப்
பத்தபரி பாலன பரஞ்சுடரை நாடி
முத்தியுலகத்து நெறி முன்னிடுக முற்றும்
சித்த சலனத்தை யொழிகென் றினிது செப்பும். 363

நன்றுடன் நடத்தியினும் நல்லுணர்வு நல்கும்
துன்றுசில காட்சியுள தொக்கறிதி யென்னாச்
சென்றெழில் குலாவுமொரு திவ்விய விநோத
மன்று செறி மாளிகையின் மாடணுகி நின்றான். 364

பானிலவினாற் றிகழ்பருப்பத மிதென்னத்
தூநிலவு வெண்சுதை குயிற்றி ஒளிதுன்னும்

வானிலவு மேனிலைய மாடமது கண்டான்
கோனிலவு நாடுகுடி கொள்ளுமன முள்ளான். 365

கண்டு மனமும் கணும் வியப்பொடு களிப்புக்
கொண்டது தனித்தனி குறித்துவரு போழ்தில்
விண்டொட நிவந்த அதன் மேலரமியத்தில்
வெண்டுகில் புனைந்துலவு வித்தகனை நோக்கா. 366

ஆசறு குணத்த தொருசிந்தையர் அபேதர்
மாசறு மெய்யன்புடையர் என்று மகிழ்பூத்துத்
தேசுற மலர்ந்த முகமே கனிசொரிக்கும்
ஈசனுல கெய்திய இருங்குரவர் போலாம். 367

எட்டரிய மேனிலை யிசைய்த வருமாயில்
கிட்டரிய மாபுனித வெண்டுகில் கிடைக்கும்
சிட்டரிவ ரோடளவளாவு நிலை சேரும்
விட்டொழியு மிச்சுமை விடாயெவையு மேவா. 368

கூடுமெனில் நன்றென வுளத்திடை குணித்து
மாடணுகி நின்றமறை வாணன் முகநோக்கிப்
பீடுபெறு மேனிலை பிறங்கரமியத்தை
நாடியவரோடுரிமை நான்பெறுவ தாங்கொல். 369

ஐய எதுசித்தம் அறியேனென விளுவக்
கையுற அணைத்து வருகென்று கடிகாவல்
மையற விளங்கு மணிவாயிலின் மருங்குற்
றையமறவே நிகழ்வ கண்டறிதி யென்றான். 370

வேறு.

கரையில் பேரின்ப மாளிகை அகம்புகக் கருதும்
புரையிலா மனத்தவர் பெயர் புத்தகச் சுருளில்
வரையு மாறொரு தூதமகன் வாயிலின் மருங்கே
நிரையி லிட்ட பொன்னாசனத் திருந்தனன் நிலவி. 371

மாயவேதிகள் ஆயிரம் ஆயிரம் வழங்கி
ஆயவில்லகம் புகாவகை இயன்றமட் டடர்க்கத்
தீயரோர் சிலர் வெங்கதம் திருகினர் செறிந்து
பேயெனுத் திரிந்துலவினர் வாளொடு பிறங்கி. 372

சுத்தசுப்பிர சுமங்கல சுகுண மாசுயம்பு
நித்த நிர்வய நின்மல நிராமய நிருபர்
உத்தரம் இலாதுட்புகப் பெருமையில் உலவிப்
பத்தரோர்சிலர் முன்றில் வாய்நின்றனர் பரிந்து. 373

உற்ற மெய்த்திருவசனமாம் பட்டய முருவிச்
செற்றமிக்க அச்செறுநரைச் செகுத்திடார் நியங்கிக்



கொற்ற வாழ்மனை முன்றினில் வயின்றொறுங் குழுமித்
தெற்றி நின்று பின்னிடைந்தனர் சிலருளந் திகைத்து. 374

கானவேடுவர் கையகன் றறவிடாய் கதுவி
தூநறும் புனல்துருவியோர் வாவியிற்றுன்ன
வானகப் புலியாங்கெதிர் மறித்திட மலங்கு
மானினத்தை யொத்தலம் வந்தார் சிலர் சிலர் மயங்கி. 375

கோம்பி முற்படு தோகையிற் குறுகி யுள்ளுடைந்து
பாம்பின் வாய்ப்படு தேரையிற் பரிவுறீஇப் பதைத்துச்
சாம்பி யுட்புகுந் தருக்கிலராகி மெய்தளர்ந்து
தேம்பி நன்னிலை கலங்கினர் சிலர் செயலழிந்தே. 376

ஆயகாலை யெம்மாண்டகைக் கன்பருச்சனை செய்
தூயசிந்தையன் நெறி தவறாதுசெல் சூரன்
காயமாதி முப்பகையறக் கடிந்தவன் ககோள
நாயகற் கிதயாசனம் அளித்தவோர் நம்பன். 377

ஸ்ரீ வரகைஷயைச் சென்னியிற் றிருத்தி மெய்யென்னும்
ஒலில் கச்சினை அரையிலிட்டிறுக்கி ஒண்ணீதி
மேவுமோர் கவசத்தினை மெய்யுறப் புனைந்து
தீவினைத் தொடர் தேய்த்திடு கழலையுஞ் சேர்த்தி. 378

பயில்தரும் விசுவாசமாம் பரிசையைப் பற்றி
செயிரிலா திருகூரொடு திகழ் திருமந்த்ர
வயிர வாட்படை வலக்கையில் வாங்கி மன்னருளால்
தைரியத்தொடு வாயிலின் அருகுறச் சார்ந்தான். 379

போதிந்திருந்தவற் கஞ்சலி வரன்முறை புரிந்து
குறித்தி யென்பெயர் ஐய புத்தகத்தெனக் கூறி
மறித்து நின்றவம் மள்ளரோ டெதிர்ந்தமர் மலைந்தான்
வெறித்த சிந்தையார் வீசினர் வெருட்சியாம் விசிகம். 380

தழுமி நாய்க்கணங் குரைப்பினும் கோளரிக் கென்றோ
பழுது நேரு மீதறிகிலார் பலபடப் பிதற்றிக்
கழுது நல்கிய கருவிகள் கடிந்தறுகண்ணோர்
முழுது மேலெறிந் தார்த்தனர் முறைமுறை முடுகி. 381

பொன்குலா நகராதிபன் அருளிய புனித
மின்குலாவிய படைக்கலம் வீணெனப்படுமோ
வன்குலாமரோ வெற்றி பெற்றுய்வர் இவ்வண்ணம்
என்கொலாமென அயிர்த்தனர் முன்றில்வாய் எவரும். 382

எய்த வீசிய எறிந்தன வேதிநள் எவையும்
நொய்து கேடகப் புறத்தினால் தூக்கினன் எனினும்

கைதவத்திறும் சிற்சில ஆக்கையிற் காந்து
செய்த காயமென்றுணர்ந்தும் அங்கிடைந்திலன் தீரன். 383

காற்றுக் கோடுபுன் பூளையிற் கருவி கைபோக்கித்
தோற்றுக் கூளியும் பின்னிடும் இவர்வலி தொலைத்துக்
கூற்றுக்கே விருந்தாக்குவல் என்பது குறியா
வேற்றுக் காலமொன் றின்றெண நெடுங்கைவாள் விதிர்த்தான். 384

மந்திரத் தனிவாளினை விதிர்த்தலும் மறவோர்
தந்திரம் படவெமக்கினித் தரிப்பிலை யென்னுச்
சிந்தி யோடினர் இரவிமுன் இருளெனத் திகழ்ந்தத்
இந்தியங்களை அவித்தவன் எழின் முகவிந்து. 385

வண்டர் தோல்வியுந் தொண்டன்வாள் வலிமையும் மருங்கு
கண்டு நின்றவர் யாவருங் கைகுவித் திறைஞ்சி
அண்டர் நாயகன் அருட்செயல் இதுவென அவர் வாய்
விண்டு சிந்தினர் ஆனந்த வாரியாம் விழிநீர். 386

கருகு சிந்தையர் உடைந்து வெருவிட்ட அக்கணமே
பெருகு பேரின்ப மனைக்குளும் பிறங்கரமியத்தும்
உருகு காதலின் ஒள்ளியோய் உள்ளுறவருக
வருக வென்றுநன் மங்கலவாழ்த்தொலி மலிந்த. 387

அலகை தோற்றன உட்பகை அவிந்தன ஆத்த
உலக பாசமும் ஒழிந்தன இனியொரு போதும்
கலகம் இன்றெனக் கைமலர் சென்னியிற் கவின
அலகில் ஆனந்தபரவசம் அடைந்தனன் அறிஞன். 388

சத்தியங் கடைப்பிடித்து நந்தம்பிரான் அருளால்
பத்தி மார்க்கத்து நிலைநின்ற பவித்திரன் பலஞ்சப்
பித்தி யாவையும் புறம்நிறீஇப் பேரின்ப மல்கு
முத்தி வீட்டினுட் புகுந்தனன் ஜெயத்தொனி முழங்க. 389

இன்ப வீட்டினுட் புகுதலும் எம்பிரான் அடியர்
அன்பு மீக்கொளத் தழுவினர் ஆதரம் புரிந்தார்
நன்புலத்து வைத்தாசிகள் பற்பல நவின்றார்
துன்பம் இங்கிலை இலையொரு சோதனை யென்றார். 390

தலையில் ஆனந்த தைலமிட் டாட்டினர்தயங்கும்
உலைவிலாத பீதாம்பர முடுத்தனர் உவந்து
விலைவரம்பிலா வெண்ணிலை அங்கிமேலிட்டார்
தொலைவிலா நலந்துய்த்தினி திருந்தனன் தூயோன். 391

(இன்னும் வரும்.)

---



## சமாசாரத்திரட்டு.

**ஆஸ்திரியா.**—ஆஸ்திரியாவின் தென்பாகத்தில் மீளவும், பூமியதிர்ச்சி உண்டாயிற்று. சென்றமீ 9௳யில் மிகவும் பயங்கரப்படத்தக்கவிதமாய், எட்டுவிசை பூமி யதிர்ந்தது. முதல் அதிர்ச்சி, நடுச்சாமத்தில் யாவரும் அயர்ந்த நித்திரைசெய்யும்போது உண்டானபடியால் புருஷர், ஸ்திரீகள், பிள்ளைகள் எல்லாரும் வெளியே வந்து நின்று கத்திக் கதறி ஓலமிட்டழுதார்கள். அதிர்ச்சி நின்றபின்பு ஜனங்கள் யாவரும் கண்ட கண்ட வெளிகளில் படுத்துக்கொண்டார்கள். 10௳ காலையில் மறுபடியும் அதிர்ச்சி உண்டாயிற்று. பூமி அடியோடே பல தடவை குலுங்கினதுமன்றி, இடிமுழக்கம்போன்ற சத்தங்கள் பக்கத்திலுள்ள மலைகளிலுண்டானதுபோல தொனித்தது. இந்த அதிர்தல்களினால் உண்டான நஷ்டம் அதிகம். அநேக லட்சம் ரூபாய்க்கு வருமாம். உயிர்ச்சேதங்களுமுண்டு. பவேரியா, இன்ஸபிரோக்கு முதலிய விடங்களிலும் இவ்வதிர்ச்சிகள் உண்டாயிற்று.

**ஜர்மனி**—இங்குள்ள யூதரையிட்டு ஒரு பெருங்கலகம் சில நாட்களுக்கு முன் நடந்தது. யூதர்கள் மிகத் தனவான்களாயிருப்பதினால் மிகவும் செல்வாக்குள்ளவர்களாய் நாடு நகரங்களில்வாசம்பண்ணுகிறார்களென்றும், அவர்கள் மேல் போகாமலிருக்கும்படி துரைத்தனத்தார் ஏதேனும் ஒரு பிரமாணமேற்படுத்தவேண்டுமென்றும் ஒரு கட்சியேற்பட்டிருக்கிறது. எல்லாரும் சுயாதீனராயிருக்கவேண்டுமென்பது சக்கரவர்த்தி, இளவரசர், அவர் பத்தினியார் இவர்கள் அபிப்பிராயம். இதினால் யூதர்களுக்கும் மற்றப் பிரஜைகளுக்கும் இடையில் பெருங்கலகங்களும் பிரிவினைகளும் உண்டாயிருக்கிறது. முடிவு பிந்தித் தெரியும்.

**இந்தியா**—சென்னை ராஜதானியின் புதிய கவர்னராகிய மாட்சிமை தங்கிய ஆடாம் துரையவர்கள் பெம்பாய் நகரம் வந்திறங்கினார்கள். சென்ற மாசம் 20௳வரை சென்னை சமஸ்தானம் சேர்ந்திருப்பார்கள்.

கைபர் கணவாயிலுள்ள மலைநாட்டார் துரைத்தன பட்சமாய்க் கணவாய்ப்புறத்தைக் காத்துக்கொள்ளவும், ஏதாவது கில்லறை நடக்கவிருக்கையில் அதைப்பற்றி முன்னாடி எச்சரிக்கவும் அபிப்பிராயங்கொண்டிருக்கிறார்களாம்.

**ஜாப்பான்**—ஜாப்பான் பாஷையில் திருப்பி பிரசித்தம் செய்யப்பட்டிருக்கிற புதியேற்பாட்டைப் பள்ளிக்கூடங்களில் வழங்கி வரவேண்டுமென்று யோக்கோபா நகர அதிகாரிகள் ஏற்பாடு செய்திருக்கிறார்களாம்.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| | | | ஜனுவரி௴ நாள் 31-மார்கழி௴ 19உ முதல், தை௴ 20உ வரை. |
| ச | 1 | ௧௯ | கர்த்தர் ஞானத்தைத் தருகிறார். நீதிமொழி 2: 6. |
| ஞா | 2 | ௨௦ | உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள். 3: 6. |
| தி | 3 | ௨௧ | துன்மார்க்கருடைய வழியில் நடவாதே. 4: 14. |
| செ | 4 | ௨௨ | உன் ஊற்றுகள் வெளியில் பாய்வதாக. 5: 16. |
| பு | 5 | ௨௩ | வேதமே வெளிச்சம், போதக சிட்சையே ஜீவவழி. 6: 23. |
| வி | 6 | ௨௪ | உன் இருதய பலகையில் எழுதிக்கொள். 7: 3. |
| வெ | 7 | ௨௫ | ஞானம் கூப்பிடுகிறதில்லையோ. 8: 1. |
| ச | 8 | ௨௬ | புத்தியின் வழியிலே நடவுங்கள். 9: 6. |
| ஞா | 9 | ௨௭ | கர்த்தரின் வழி உத்தமர்களுக்கு அரண். 10: 29. |
| தி | 10 | ௨௮ | உத்தமனுடைய நீதி அவன் வழியைச் செவ்வைப்படுத்தும். 11: 5. |
| செ | 11 | ௨௯ | நீதியின் பாதையில் ஜீவனுண்டு. 12: 28. |
| பு | 12 | ௧ | துரோகிகளுடைய வழியோ கரடுமுரடானது. 13: 15. |
| வி | 13 | ௨ | விவேகியோ தன் நடையின்மேல் கவனமாயிருக்கிறான். 14: 15. |
| வெ | 14 | ௩ | சீவவழியானது உன்னதத்தை நோக்கும் வழியாம். 15: 24. |
| ச | 15 | ௪ | கிருபையினாலும் சத்தியத்தினாலும் பாவம் நிவிர்த்தியாகும். 16: 6. |
| ஞா | 16 | ௫ | இருதயங்களைச் சோதிக்கிறவரோ கர்த்தர். 17. 3. |
| தி | 17 | ௬ | கர்த்தரின் நாமம் பலத்திருக்கும். 18: 10. |
| செ | 18 | ௭ | ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான். 19:17. |
| பு | 19 | ௮ | கர்த்தருக்குக் காத்திரு, அவர் உன்னை இரட்சிப்பார். 20: 22. |
| வி | 20 | ௯ | துன்மார்க்கருடைய பலி அருவருப்பானது. 21. 27. |
| வெ | 21 | ௰ | அநியாயத்தை விதைக்கிறவன் வருத்தத்தை அறுப்பான். 22: 8. |
| ச | 22 | ௧௧ | நீ நாடோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிரு. 23: 17. |
| ஞா | 23 | ௧௨ | துன்மார்க்கருக்கு நல்முடிவு இல்லை. 24: 20. |
| தி | 24 | ௧௩ | இராசாவின் முன்னின்று துஷ்டனை நீக்கிவிடு. 25: 5. |
| செ | 25 | ௧௪ | மூடன் தன் மூடத்தனத்துக்குத் திரும்புகிறான். 26: 11. |
| பு | 26 | ௧௫ | நாளைத்தினத்தைக் குறித்துப் பெருமைபாராட்டாதே. 27: 1. |
| வி | 27 | ௧௬ | எப்பொழுதும் பயந்திருக்கிறவன் பாக்கியவான். 28: 14. |
| வெ | 28 | ௧௭ | மனத்தாழ்மையுள்ளவனே கனமடைவான். 29: 23. |
| ச | 29 | ௧௮ | பூமியின் எல்லைகளையெல்லாம் ஸ்தாபித்தவர் யார். 30: 4. |
| ஞா | 30 | ௧௯ | மதுபானம் பிரபுக்களுக்குத் தகுதியல்ல. 31: 4. |
| தி | 31 | ௨௦ | மாயை, மாயை, எல்லாம் மாயை. பிரசங்கி. 1: 2. |

## விசேஷ நாட்கள்.

1. விருத்தசேதனத் திருநாள்.
2. கிறிஸ்து ஜநநதிருநாளுக்குப் பின்வரும், 1-ம் ஞாயிறு.
6. பிரசன்னத் திருநாள்.
9. பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும், 1-ம் ஞாயிறு.
15. பௌர்ணமி.
16. பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும், 2-ம் ஞாயிறு.
23. பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும், 3-ம் ஞாயிறு.
25. பரி. பவுல் குணப்பட்ட திருநாள்.
30 பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும், 4-ம் ஞாயிறு. அமாவாசை.

# நற்போதகம்.

உ. பெப்புருவரி௴. ௲௮௱௮௰௫.

## யோசுவாவின் புஸ்தகம்.

## X. அதிகாரம்.

1. "அதோனிசேதேக்" நீதியினுண்டவன். இவன் மெல்கிசெதேக்கின் வம்சமாயிருக்கலாம். அவனுக்குரிய பத்தியில்லாதிருந்தாலும், அவன்பெயரைத் தரித்தவனாயிருந்தான். ஆதி. 14. எருசலேமுக்கு சாலேம் என்பது முந்திய பெயர். இஸ்ரவேலர் கானானைப் பிடித்ததின் பின்னுலே இந்தப் பெயர் வந்ததாகச் சிலருடைய அபிப்பிராயம்.

2. யாத்திரை 15: 14—16. உபா. 11: 25.

3. அதோனிசேதேக் மற்ற நாலு இராஜாக்களைவிடப் பலத்திலும் கனத்திலும் அதிகப்பட்டவன். இப்போது இவனுக்குச் சமீபத்தில் சத்துருக்கள் வந்திருப்பதால், இவனே மற்றவர்களுக்குச் செய்தி அனுப்பினான்.

5. எபிரோன் பட்டணத்தார் ஏத்தியராயும், கிபியோனியர் ஏவியராயும், யோசு. 11: 19. இருந்தாலும, இவ்விடத்தில் எமோரியர் என்னப்படுகிறார்கள். 2 சாமு. 21: 2. இது கானானியருக்குப் பொதுப்பெயர். எமோரியர் யோர்தானுக்குக் கிழக்கே திரளாயும், ஜெயவீரராயுமிருந்தபடியால், கானான்தேசத்திலும் தங்கள் சேனைகளை அனுப்பி பல இடங்களை ஜெயித்துத் தங்களுக்குக் குடியிருப்புச் செய்துகொண்டதைவிட்டு கானானியர், எமோரியரென்றழைக்கப்படுவது நியாயமே.

7. 8 வா-ல் தேவன் சொல்லுகிற உத்தரவைக் கவனிக்குங்கால், யோசுவா முதலாவது தேவனிடத்தில் ஆலோசனை கேட்டிருப்பாரென்பது தெரியவருகிறது.

10. நியாயாதி. 4: 15. 1 சாமு. 7: 10. சங். 18: 14. ஏசா. 28: 21.

11. "பெரிய கற்கள்" பின்தொடர்ந்த இஸ்ரவேலர் மேலல்ல, ஓடுகிற கானானியர்மேல் பெரிதும், உரமுமான கல்மழை பெய்து

அவர்களைக் கொன்றது. கல்மழையோடே இடியும் மின்னலும் வந்ததாக யோசேப்புஸ் சொல்லுகிறார். அப்படியே, ஆபகூக். 3: 11-லும் தெரியவருகிறது.

12. யோசுவா கர்த்தரோடு பேசினார். தேவஆவியினால் நடத்தப்பட்டவராய்ச், சத்துராதிகளை அழிக்கவேண்டுமென்ற வைராக்கியமுடையவராய் இந்த விண்ணப்பஞ் செய்கிறார். எப்படியும் ஜெயங் கிடைக்குமென்ற நம்பிக்கையினால், இஸ்ரவேலர் அந்த ஜெயத்துக்குச் சாட்சிகளாயிருக்கும்பொருட்டு, அவர்களுக்கு முன்பாக இந்த வாக்கியத்திலுள்ள வார்த்தைகளைச் சொன்னார்.

“கிபியோன் மேலே” கிபியோனுக்கு எதிராக, கிபியோனுக்கு மேலாக இப்போது சூரியனிருக்கிற நிலையில் நிற்கவும், கிபியோனை விட்டு படிப்படியாய் இறங்கிக், காணப்படாமல் போகாதபடிக்கும் கேட்கிறார். சூரியன் இறங்குகிற நேரமாயிருந்தபடியால், தமது வேலை பெரிதும், காலம்பிடிக்கத்தக்கதுமாயிருந்ததை அறிந்து, போதுமான நேரமிருக்கும்பொருட்டாக, சூரிய சந்திரர்கள் அதினதின் நிலையில் தங்கள் ஓட்டத்தை நிறுத்தினவைகளாய்த் தாமதிக்கும்படி பிரார்த்திக்கிறார்.

“ஆயலோன்” கிபியோனுக்கு வடக்கே செபுலோன் கோத்திரத்தில் ஒன்றும், நியாயா. 12: 12. கிபியோனுக்கு மேற்கே தாண் கோத்திரத்தில் ஒன்றும் உண்டு. யோசு. 19: 42. நியாயா. 1: 35. இதில் (1) பிந்தினதே சமீபமானதாலும், (2) சூரியனும், சந்திரனும் கிழக்கிலிருந்து மேற்காக ஓடுகிற ஓட்டத்துக்கு இசைவாயிருப்பதாலும், (3) யுத்தமானது கிபியோனுக்கு மேற்காக இருக்கிற ஆயலோனுக்கும் பின்பு மேற்காக இருக்கிற லாகீஸ்வரை எட்டினதாலும், பிந்தினதே இதில் குறிக்கப்படுகிறது. .

இங்கே கிபியோன், ஆயலோன் என்ற இரண்டு இடங்களைப் பற்றிப் பேசுவதில், ஒன்று கிபியோன் மேலும், மற்றது ஆயலோன் மேலும் நின்றதாக நாம் நினைக்கக்கூடாது. இரண்டு இடங்களும் வெகு சமீபமாயிருந்தபடியால் இது கூடாத காரியம். இது செய்யுள் நடையான வாசகமானதாலும், கிபியோனிலிருந்து ஆயலோனுக்குச் சத்துருக்களைப் பின்தொடருகிற மார்க்கமானபடியாலும் இப்படிச் சொல்லுகிறார். சூரிய வெளிச்சமிருக்கும்போது சந்திரப்பிரகாசம் தேவையில்லை. வானசோதிகளின் ஓட்டத்தில் குழப்பம் வராதபடி சந்திரனையுஞ் சேர்த்துச் சொல்லியிருக்கிறது.

13. “சூரியன் நின்றது.” ஆபகூக். 3: 11. சீராக். 46: 5, 6. இச்சங்கதி உண்மையென்று சாட்சி பகருகிறது. இஸ்ரவேலின் தேவனே மெய்யானவரென்று எல்லாருக்கும் பிரத்தியட்சமாய் விளங்கவும், கானானியர் தெய்வமென வணங்கின சூரிய சந்திரர்களெல்லாம் தெய்



வமல்ல, அவைகள் இஸ்ரவேலின் தேவனின் கட்டளைப்படி நடக்கும் சிருஷ்டிகளெனத் தெரிவிக்கும்படியாகவும் இவ்வற்புதம் நடத்தப்பட்டது. சங். 46: 8 இஸ்ரவேலர் வானஜோதிகளை வணங்கும் சோதனைக்குட்படாதபடிக்குத் தடுக்கிறதாயுமிருக்கிறது. உபா. 4: 19. எந்த யுத்தமும் இருட்டாரம்பமான உடனே நின்றுபோம். இந்தப் போர் அப்படியல்ல, சத்துருக்களை முழுவதுமாய் அழியச்செய்ய பகல் இரட்டித்தது.

“யாசேரின் புஸ்தகம்.” யாசேரென்று பெயர்கொண்டவனாவது அந்த வார்த்தையின் கருத்துக்கேற்க நீதியுள்ள எந்த மனிதனாவது அக்காலத்து நடவடிக்கைகளை எழுதிய ஆகமமாம். எண். 21:14-ல் கர்த்தருடைய யுத்தங்களின் புத்தகமெனக் கண்டிருக்கிறது. யூதரால் நடத்தப்பட்ட யுத்தங்களைக் காட்டிய பாட்டாகமம். 2 சாமு. 1: 18. யோசுவாவின் புஸ்தகமெழுதப்படுமுன்னே இந்தப் புத்தகமெழுதப்பட்டுப் பிரசித்தமாயிருந்தது. இதுவும், இதுபோன்ற சில சரித்திர ஆகமங்களும் கனோன் புஸ்தகங்களல்லாதபடியால் யூதர்களால் காக்கப்படாதழிந்தன.

14. பூமியின் வடமுனை தென்முனைகளில் சில காலங்களில் இயற்கையாய் நாட்கள் நீடித்திருக்கிறபிரகாரம் இதுவும் நடந்திருக்கலாமென்ற ஆக்ஷேபனை வீணென்று இந்த வாக்கியங் காட்டுகிறது.

15. யோசுவா அந்நாளில் பாளயத்துக்குத் திரும்பவில்லை. வா. 43, 10 வா-ல் தொடங்கிய யுத்தவரலாற்றின் முடிவைக் காட்டுகிறதாயிருக்கிறது. 5-இராஜாக்களின் பட்டணங்களை அவர் இன்னும் பிடிக்கவில்லை. கொள்ளைப்பொருள்களைப் பங்கிடவுமில்லை.

19. சத்துருக்கள் தங்கள் பட்டணங்களுக்குள் புகுந்து புதுப்பெலனடைந்து யுத்தத்தை-ஆரம்பிக்காதபடி பின்தொடர்ந்து சங்கரித்தார்கள்.

21. இஸ்ரவேலருக்கு விரோதமாக ஒரு நாயாகிலும் தன் நாவை அசைக்கவில்லையென்று வாசிப்பது நல்லதென்று சிலர் நினைக்கிறார்கள். யாத். 11: 7. இஸ்ரவேலருடைய ஜெயவிர்த்தியைத் தடுப்பதற்கான அற்பக்குதாவிடை முதலாய் நடக்கவில்லையென்று காட்டுகிறது. யுத்தத்தில் இஸ்ரவேலரிலொருவனாவது சேதப்படவில்லை. ஆயிப் பட்டணத்தில் இஸ்ரவேலர் முறியடிக்கப்பட்டபோது கானானியர் அவர்களை நிந்தித்ததுபோல இப்போது செய்யத் துணியாமல் அவர்கள் நாவடைபட்டது.

24. ஐந்து இராஜாக்களின் கழுத்துகளில் கால்களை வைக்கச்செய்தது தன் பெருமைக்காகவுமல்ல, அவர்களைக் கனக்குறைச்சல் செய்யவேண்டுமென்றுமல்ல. ஆனால் (1) தேவனுக்கு விரோதமாய் நடப்

பித்த அவபத்தியான கலகத்துக்குத் தண்டனையாகவும், (2) ஆதி. 9: 25-ல் காட்டிய அடிமைத்தனத்தின் சாபம் நிறைவேற்றவும், (3) தம்முடைய படைத்தலைவர்களுக்கு, தேவன் எப்பேர்ப்பட்ட சத்துருக்களையும் அவர்கள் காலின்கீழ் நசுக்க வல்லவராயிருக்கிறாரென்று தெரிவிக்கவும், (4) சவுல் ஆகாகை உயிரோடு வைத்ததுபோல, இவர்களுஞ் செய்யாமல் தேவகட்டளையை நிறைவேற்ற ஜனங்களுக்குப் படிப்பிக்கவுமே இப்படிச்செய்தார்.

27. காட்டுமிருகங்களால் பட்சிக்கப்படாதபடிக்கும் அவர்களுடைய ஜனங்கள் வந்து மரியாதையாய் அடக்கஞ்செய்யாதபடிக்கும், பெரிய கற்களைக் கெபிவாயில் வைத்தார்கள்.

28. சூரியன் நின்ற நாளிலே அல்லது 5-இராஜாக்கள் தூக்கப்பட்ட நாளிலே மக்கெதா பிடிபட்டது. எரிகோவின் இராஜா தூக்கப்பட்டிருப்பான், அல்லது கொல்லப்பட்டிருப்பான்.

33. கேசேர், இது எப்பிராயீம் கோத்திரத்திலுள்ளதென்றால் யோசு. 16: 3. நியாயாதி. 1: 29. மற்ற இடங்களுக்குத் தூரமானதாம். லாகீசுக்குச் சமீபமானதும் யூதாக்கோத்திரத்திலுள்ளதுமான கேசேர். 1 நாளா. 14: 16.

36. குடிகளைச் சங்கரித்ததே தவிர, பட்டணத்தைத் தங்கள் வசப்படுத்தாமல் கில்காலுக்குப் போய்விட்டபடியால், இராட்சதரும் ஓடிப்போன கானானியரும் வந்து திரும்ப அரண்செய்துகொண்டதாகத் தோன்றுகிறது. அதினால்தான் காலேப், திரும்பவும் எபிரோனைப் பிடிக்க அவசியம நேரிட்டது. யோசு. 15: 14.

41. காதேஸ் பர்னேயா கானானுக்குத் தெற்கேயுள்ளது. எண் 34: 4. உபா. 1: 19. யோசு. 15: 3.

கோசேன் எகிப்திலுள்ளதல்ல, யூதாவிலுள்ளது. யோசுவா. 11: 16. 15: 51.

## கேள்விகள்.

1. இதில் யோசுவாவுடைய செபமென்ன? அது பலத்த விசுவாசமுள்ள செபமென்று காண்பியும்?

2. சூரியனும் சந்திரனும் நின்றது அற்புதமென்று ரூபியும்? இதைப்பற்றி பலர் கொண்டிருக்கிற ஆட்சேபனைகளையும், அதற்கு உம்முடைய யோசனையுஞ் சொல்லும்?

3. தேவன் யோசுவாவுடைய கேட்டுக்கொள்ளுதலின்படி சூரியனை நிற்கப்பண்ணின நோக்கமென்ன?

4. இஸ்ரவேலர் தங்கள் பட்டயத்தால் தேசத்தைக் கட்டிக்கொள்ளவில்லை. அவர்கள் புயமும் அவர்களை இரக்ஷிக்கவில்லையென்ற வாக்கியத்தை ரூபியும்?



5. யோசுவாவும் அவன் மனுஷரும் இராமுழுவதும் நடந்தும், பகல்முழுவதும் யுத்தஞ்செய்தும், இளைத்துப்போகாமல், சத்துருக்களை அழிப்பதில் விடாமுயற்சியாயிருந்தார்களே. இதினால் எந்த வாக்கியம் உண்மை பெறுகிறது?

6. எபிரோன், தெபீர், லாகீஸ், லிபனா, கோசேன் இவைகளெங்கேயிருக்கிறது? இந்த இடங்களைப்பற்றி உமக்குத் தெரிந்தவைகளை எழுதும்?

7. இஸ்ரவேல் புத்திரர்மேல் ஒருநாவும் அசையவில்லையென்பதின் பொருளென்ன?

8. யோசுவா 5-இராசாக்களின் கழுத்தின்மேல் கால்களைப் போடச்சொன்னதற்கு முகாந்தரமென்ன? அதினால் நாம் படிக்கிறதென்ன?

9. யோசுவா சுவாசமுள்ளதெல்லாவற்றையும் சங்காரம்பண்ணினதினால் நாம் அறிந்துகொள்ளுகிறதென்ன?

10. யாசேரின் புஸ்தகத்தைப்பற்றி உமக்குத் தெரிந்தவைகளை எழுதும்? இதுபோல்வன கனோன் அட்டவணையில் சேராத வேறே புஸ்தகங்களிலிருந்து வேதத்தில் வருகிற வாசகங்களைச் சொல்லும்?

# XI. அதிகாரம்.

1. பற்பல சிற்றரசுகளாலாளப்பட்ட கானானியர் இப்போது ஒரே அரசனுடன் குழாங்கூடிப் போருக்கு வரச்சேர்ந்ததும், இஸ்ரவேலர் கானானில் பிரவேசித்த துவக்கத்தில் இவ்வித ஒற்றுமையோடு திரள் கூட்டமாய் யுத்தத்துக்கு ஆரவாரஞ்செய்யாதிருந்ததும் தேவபராமரிப்பின் ஞானமென்னலாம்.

2. "மலைகளிலுள்ள" லீபனோன் மலையடிவார நாடுகளிலுள்ள.

"கின்னரோத்." இப்பெயரால் அழைக்கப்பட்ட பட்டணம். யோசு. 19: 35.

கின்னரோத் தேசமுமுண்டு. யோசு. 11: 2. 1 இரா. 15: 20.

கின்னரோத் ஏரியுமுண்டு. யோசு. 12: 3. லூக். 5: 1.

3. "கிழக்கேயும் மேற்கேயுமிருக்கிற" யோர்தானுக்குக் கிழக்கேயுள்ள கானானியரும், யோர்தானுக்கு மேற்கே சமுத்திரக் கரையோரமிருந்த கானானியரும் ஏகமாய்க் கூடினார்கள்.

"எர்மோன் மலையடியிலுள்ள ஏவியர்." யோசுவா 9-ல் சொல்லிய ஏவியரான கிபேயோனியரிலிருந்து வேறுபடுத்தும் நோக்கமாய் இப்படிச் சொல்லியிருக்கிறது.

"மிஸ்பா." கீலேயாத்தின் வடபக்கிலுள்ளது. ஆதி. 31: 49. நியாயாதி. 11: 29. யூதாக்கோத்திரத்தில் ஒரு மிஸ்பா உண்டு. யோசு. 15: 38. பென்யமீன் நாட்டில் ஒன்றுண்டு. யோசு. 18: 26. மோவாப் தேசத்தில் ஒன்றுண்டு. 1 சாமு. 22: 3. மிஸ்பா என்றால் சாமங்காக்கிற இடம் என்று பொருள்.

4. ஆதி. 32: 12. நியாயாதி. 7: 12. 1 சாமு. 13: 5. 3 இலட்சம் காலாட்கள், 10,000 குதிரை, 20,000 இரதங்கள் வந்ததாக யோசேப்புஸ் சொல்லுகிறார்.

6. குதிரைகள் இனி யுத்தத்துக்கு உதவாமற்போகவும், இஸ்ரவேலர் தங்களுக்குக் குதிரைகளை வைத்துக்கொள்ளாதிருக்கவும் உபா. 17: 16. மற்றமனிதர் செய்வதுபோல் இஸ்ரவேரும் குதிரைகளின் பேரில் நம்பிக்கை வைக்காமல், இரட்சிப்பு கர்த்தராலே கிடைக்குமென்று தேவன் பேரிலே நம்பிக்கை வைக்கவும், அநேகமாயிரம் இரதங்கள், குதிரைகளை விடத் தேவ வல்லமையே ஜெயத்துக்கு அனுகூலமென்று காட்டவும் நோக்கமாய்க் குதிரைகளின் குதிகால் நரம்புகளை அறுக்கச்சொன்னார். 2 சாமு. 8: 4-ல் தாவீதும் அப்படியே செய்ததாகக் கண்டிருக்கிறது.

8. "மிஸ்ரபோத்மாயீம்." சீதோனுக் கருகான உப்புக்கேணி. சீதோன் மேற்கேயும், மிஸ்பே பள்ளத்தாக்கு கிழக்கே எர்மோன் மலையடிவாரத்திலுமிருப்பதால், சத்துருக்கள் மேற்குங் கிழக்குமாயோட இஸ்ரவேலரும், இருபவுஞ்சாய்பிரிந்து துரத்தினதாகத் தோன்றுகிறது.

13. ஆத்சோர், இராஜநகரமும், இப்போது யுத்தம் ஆரம்பித்த இடமுமானதால், மறுபடி கானானியர் கூடியுத்த முயற்சிசெய்யாதபடிக்கு அதைச் சுட்டெரித்தார்கள். இஸ்ரவேலர் தாங்கள் கட்டாத பெரிதும் வசதியுமான பட்டணங்களில் குடியிருப்பதற்காக அரணிப்பானபட்டணங்கள் அழிக்கப்படவில்லை. உபாகமம் 6: 10.

16. "முழுத்தேசமாகிய மலைகளையும்" யூதாவிலுள்ள மலைநாடுகளாம். ஏனென்றால் (1) கானானின் தெற்கெல்லையிலிருந்து துவக்குகிறார். அங்கே முக்கியமான ஓர் மலையுண்டு. எண். 13: 17. (2) யூதாவிலுள்ள மிச்சமான பங்குமலைநாடு லூக். 1: 39, 65. யோசுவாவினால் பிடிபட்ட இடங்களில் எபிரோன் யூதாவின் மலைகளிலிருந்தது. யோசு 20: 7. (3) இஸ்ரவேலின் மலைகளிலிருந்து வித்தியாசப்படுத்த இப்படிச் சொல்லியிருக்கிறது.

"இஸ்ரவேலின் மலைகள்" 1 இராசா. 16: 24-ல் கண்ட சமாரியாவின் மலைகளாயிருக்கலாம் (2) இஸ்ரவேலிலுள்ள மலைத்தேசங்களாயிருக்கலாம்.



18. பிந்தின சரித்திரங்களாலும், உபா. 2: 14ஐ யோசு. 14: 7. ஓடு ஒத்துப்பார்ப்பதாலும், யோசுவா நெடுநாளாய் யுத்தம் நடத்தினானென்பது தெளிவாயிருக்கிறது. யுத்தவரலாறு சுருக்கமாய்ச் சொல்லப்பட்டிருப்பதால் யுத்தமுஞ் சிறிதுகாலந்தான் நடந்ததென்றெண்ணங்கொள்ளாதபடி இப்படிச் சொல்லியிருக்கிறது தேவன் விசேஷித்த முகாந்தரங்களையிட்டு, படிப்படியாய்க் கானான்தேசத்தைச் செயிப்பதற்குச் சித்தங்கொண்டார். அவையாவன (1) ஒருமிக்கச் சத்துருக்களை அழித்தால், தேசம் பாழாகிக் காட்டுமிருகங்கள் பெருகுவதற்கிடமாகும். உபா. 7: 22. (2) சடிதியாயும், சுளுவாயும் யுத்தம் நடந்திருக்குமென்றால், மனுஷருடைய இயற்கைப்படி மறக்கப்பட்டு அசட்டையாயெண்ணப்படுமே. (3) நெடுநாளான யுத்தத்தினாலே இஸ்ரவேலர் யுத்தப் பயிற்சியடைய. (4) அவர்களுடைய பொறுமை, தைரியம், தேவன்பேரில் வைத்த நம்பிக்கை முதலியவற்றைச் சோதிக்க. (5) சத்துருக்களைச் செயிக்கத் தேவனுடைய ஒத்தாசை தங்களுக்கு எப்போதும் தேவையாயிருக்கிறதென்று இஸ்ரவேலர் அறிந்து அவருக்குப் பயந்து கீழ்ப்படிதலுள்ளவர்களாயிருக்கவுமே.

19. யுத்தம் நெடுநாளிருந்த தென்பதற்கு இந்த வாக்கியமே, அத்தாட்சியாம்.

20. கானானியர், இஸ்ரவேலரோடு சமாதானஞ் செய்துகொள்ளும்படியாய் அவர்கள் இருதயத்தைத் தேவன் இளகச் செய்யாமல் அவர்கள் தங்கள் பகை, பெருமை, முரட்டாட்ட முதலான பாவங்களிலே நிலைத்திருக்க விட்டு விட்டார். இதினால் அவர்கள் தங்கள் பாவங்களுக்காக முழுவதுஞ் சங்கரிக்கப்படவும் இஸ்ரவேலர் அவர்களோடு கலந்து குடியிருக்க ஏதுவில்லாமலும் போயிற்று உபா. 2: 30. யாத். 7: 13.

21. "ஏனாக்கியர்." இராட்சத ஜாதியார். எண். 13: 33. இவர்கள் அவ்விடங்களிலுள்ள கெபிகளில் வாசம்பண்ணின முரடரான துஷ்ட ஜனங்கள். இஸ்ரவேலர் யுத்தம் நடத்தின காலத்தில் அவர்களுக்குப் பயந்து மலைநாடுகளுக்குப் போயிருக்கலாம். யூதாவின் மலையென்றும் இஸ்ரவேல் மலையென்றும் சொல்லியிருப்பதை வைத்துக்கொண்டு, இப்புஸ்தகம் யோசுவாவின் மரணத்துக்கு வெகு காலத்துக்குப் பின்னும், இஸ்ரவேல் இராட்சியமென்றும் யூதா இராட்சியமென்றும் பிரிந்த பின்பும் எஸ்றாவின் காலத்துக்குரிய பாஷை நடைப்படி இந்தப் பிரிவு கூட்டப்பட்டும், மாற்றப்பட்டுமிருக்கிறதென்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால், ஆதி. 49: 9, 10. முதலிய வாக்கியங்களினால் மற்றக் கோத்திரங்களிலும், யூதாக் கோத்திரம் சிரேஷ்டம் பெற்றதென்று தோன்றுகிறபடி இக்காலத்திலும், கானான்தேசம் பங்கிடப்பட்டதில் முதல் சீட்டு அதன்பேருக்கே விழுந்தபடியாலும், யோசு. 15: 1.

விஸ்தாரமான சுதந்தரங்கிடைத்திருப்பதாலும், யோசு. 19: 9. யூதாவின்மேன்மை யோசுவாவுக்குத் தெரிந்தது தான். இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களில் இதுவுமொன்றாயினும், மேற்கண்ட முகாந்தரங்களினால், பிரித்துச் சொல்லப்படுவது ஆச்சரிய மல்ல. அந்நியஸ்திரீகளிலிருந்து பார்வோனுடைய குமாரத்தியையும், 1 இராசா. 11: 1. தாவீதின் சத்துருக்களிலிருந்து சவுலையும், சங். 18. சீஷர்களிலிருந்து பேதுருவையும் மாற்கு. 16: 7. வித்தியாசப்படுத்திச் சொல்லியிருப்பது போல், இவ்விடத்தில் யூதாவையும் பற்றிச் சொல்லியிருக்கிறது.

காலேபும், ஒதனியேலும், யோசுவாவின் மரணத்துக்குப் பின் ஏனாக்கியரில் சிலரையழித்ததாகச் சொல்லியிருக்க, யோசு. 14: 12. நியாயா. 1: 10—13. இங்கே அவர்களை முற்றிலும் யோசுவா அழித்தானென்று சொல்லலாமா? ஒருவேளை இந்த இடங்களிலோர் பாகம் அழிக்கப்பட்டு யோசுவாவின் காலத்திலாவது அவருடைய மரணத்துக்குப்பின்பாவது இராட்சதர்களால் திரும்பவும் வசப்படுத்தப்பட்டிருக்கலாம். (2) காலேபின் முயற்சியாலும் பலத்தாலும் இவைகள் அழிக்கப்பட்ட போதிலும், சரித்திரக்காரரின் வழக்கப்படி படைத்தலைவனாயிருந்த யோசுவாவால் நடந்ததென்று சொல்லியிருக்கலாம். ஆதலால் இங்கே யோசுவாவைப் பற்றிச் சொல்லியிருந்தாலும், யோசு 4. நியாயா. 1-ல் அதைப் பிடிப்பதில் முயற்சி செய்த காலேபின் பெயருக்குக் கனமாகச் சொல்லியிருக்கிறது.

22. ஏனாக்கியர் பெலிஸ்தரின் 3 பட்டணங்களிலிருந்ததாக இங்கே குறிப்பிக்கப்பட்டிருக்கிறது. இவர்களில் சிலர் பிற்கால சரித்திரங்களில் சொல்லப்படுகிறார்கள் 1 சாமு. 17: 4. 2 சாமு. 21: 16. பெலிஸ்தரின் தேசம் இஸ்ரவேலரால் சுதந்தரிக்கப்படவேண்டியதாயிருந்தாலும், ஏனாக்கியர் அவ்விடத்திலிருந்தபடியால், அதின்மேல் இஸ்ரவேலர் யுத்த முயற்சி செய்யவில்லையென்றெண்ணலாம்.

## கேள்விகள்.

1. இந்த சமையத்தில் யுத்தஞ்செய்ய வந்தவர்களின் தொகையென்ன? இப்படியே எந்த சமையத்திலும் சத்துருக்கள் இஸ்ரவேலருக்கு விரோதமாகக் கூடினார்கள்?

2. கானானியருடன் யுத்தஞ்செய்வதில் தேவன் தம்மில் நம்பிக்கை வைக்கத்தக்கதாக இஸ்ராவேலருக்குக் கொடுத்த கட்டளை யென்ன? ஏன்? அந்தப்படி பிற்காலத்தில் செய்தவருமார்?

3. கின்னரோத் மிஸ்பே, மேரோம் இவைகளைப் பற்றித் தெரிந்ததை எழுதும்?



4. இந்த அதிகாரத்தில் காட்டிய யுத்தத்தில் விளங்கிய தேவ ஞானத்தையும், வல்லமையையும் காட்டும்.

5. தேவன் கானானியருடைய இருதயத்தைக் கடினமாக்கினாரென்பதின் பொருளென்ன? ஏன் அப்படிச் செய்தார்? இதுக்குட்படாத பாவிகளுக்கு எச்சரிப்பாயிருபபதெப்படி?

6. யூதா, இஸ்ரவேல் என்று இராச்சியம் இரண்டாகப் பிரியுமுன் இப்படிப்பட்ட பிரிவுக்கு ஆதாரமாக வருகிற சங்கதிகளெவை! யூதாக் கோத்திரம் மற்றக் கோத்திரங்களிலும் மேன்மையடைந்திருந்ததைப் பற்றிக்குறிப்புண்டா?

7. இஸ்ரவேலர் கானான் தேசத்தில் யுத்தஞ்செய்த காலம் எவ்வளவு? இவ்வளவு காலம் நீடித்திருப்பதற்கு நியாயங்களென்ன?

8. ஏனாக்கியரைப் பற்றி உமக்குத் தெரிந்ததை எழுதும்! காலேப், ஒதனியேல், யோசுவாவின் மரணத்துக்குப் பின் ஏனாக்கியரை அழித்ததாக நியாயாதி. 1: 10, 13. சொல்லியிருக்க இங்கே யோசுவா முற்றிலும் அவர்களை யழித்துப் போட்டதாகச் சொல்வது சரியா!

9. யோசுவாவைப் பற்றி இங்கே புகழ்ச்சியாய்ச் சொல்லியிருப்பதென்ன?" அவர் எப்படி தேவனுடைய கட்டளையை நிறைவேற்றினார்?

10, பெலிஸ்தியர் தேசத்தின் வரலாறு என்ன? அங்கேயுள்ள விசேஷித்த 5 பட்டினங்களில் நடந்த விசேஷ மென்ன?

---

## The World's Birth.

## உலகப்பிறப்பு.

### I. அதிகாரம்.

"ஆதியிலே."

(தொடர்ச்சி.)

பூமியின் பூர்வோத்திரத்தைப்பற்றி தேவன் 33-நூற்றாண்டுகளுக்குமுன் மோசேக்குத் தெரியப்படுத்தினபோது, வையகத்தோர் எல்லாரும் இந்தச் சத்திய சங்கதியைப்பற்றி, மெத்த அறிவீனராயிருந்தார்கள். இஸ்ரவேலரைத்தவிர மற்றத் தேசத்தார் எல்லாரும் இருளில் நடக்கிறவர்கள்போல் நித்தியத்துக்குட் சென்றார்கள். தங்கள் மூற்பிதா தேவனைப்பற்றி அறிந்திருந்த சத்தியத்தை அவர்கள் மறந்துவிட்டார்கள். தாங்கள் உண்டாக்கப்பட்ட வகையின்னதென்றும், தாங்கள் போகிறதெங்கே என்றும் தெரியாதவர்களாயிருந்தார்கள். சிருட்டிப்பில் விளங்கிய தேவனுடைய மகிமையைப் பாராத குருடராயிருந்

தார்கள். "தங்களை ஞானிகள் என்றெண்ணி, பைத்தியகாரரானார்கள்." ரோமர் 1: 19—22. "தேவனைக்குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது தேவனே அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். எப்படியென்றால் காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை, தேவத்துவம் என்பவைகள் உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே உலகமுண்டானது முதற்கொண்டு தெளிவாய்க் காணப்படும். ஆகையால் அவர்கள் போக்குச்சொல்ல இடம் இல்லை. அவர்கள் தேவனை அறிந்தும் அவரைத்தேவன் என்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து தங்கள்சிந்தனைகளினாலே வீணரானார்கள். உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பைத்தியகாரரானார்கள் என்ற சத்தியம் எவ்வளவு நுட்பமாய் அவர்களில் நிறைவேறியிருக்கிறதென்று அறியலாம்.

வேதசாஸ்திரமின்றி, மனிதர் நிலைமை அநேக நூற்றாண்டுகளாய் இவ்வண்ணமாகவேயிருந்தது. இவ்வுலகப்படிக்கு அவர்களுக்குள்ளே ஞானிகள் என்னப்பட்டவர்களிருந்தார்கள். அவர்கள் இந்த ஞான விஷயத்தில் அறிவீனராயிருந்தார்கள். பிளேற்றோ, அரிஸ்றாட்டல், பிளினி, புளூற்றார்க் என்பவர்கள் உலகம் நித்தியமாயுள்ளதென்று சொன்னார்கள். மேற்சொல்லியவர்களுக்குள் தேறின ஞானி என்று பேர்பெற்ற பிளேற்றோ என்பவன் மோசேக்கு 1100-வருஷங்களுக்குப் பின்பு இருந்தான். அவன், நட்சத்திரங்கள் தேவர்கள் என்று சொன்னான். யோவான் அப்போஸ்தலன் காலத்திலிருந்த பிளினி என்பவன் உலகமும் தெய்வம் என்று எண்ணினான். நாம் முன் பாராத காரியங்களைப்பற்றி மேற்படி ஞானிகள் சந்தேகத்தினால் திகைத்துக்கொண்டிருந்தார்கள். தாங்கள் இன்னதைப்பற்றி யோசிக்கவேண்டும் என்பதை அறியாதவர்களாயிருக்கிறோம் என்று தாங்களே அறிக்கையிட்டிருக்கிறார்கள். இந்த ஞானிகள் எல்லாரும் ஒன்றுகூடி ஒரு வீட்டிலிருக்கையில், ஒரு யூதப்பையன் தன் கையில் ஆதியாகமத்தைக் கொண்டுபோய், அவர்கள் நடுவே நின்றால், என்னசொல்லியிருப்பான்? கனவான்களே நீங்கள் சொல்வது இன்னதென்று உங்களுக்கே தெரிகிறதில்லை. நீங்கள் சந்தேகமுள்ளவர்களாயிருக்கிறீர்கள். இன்னது சத்தியம் என்று சொல்ல உங்களால் கூடுகிறதில்லை. எங்கள் பள்ளியில் படிக்கிற ஒரு சிறு பையனும் இந்தச் சத்தியத்தைத் தெளிவாய் அறிந்திருப்பான். அதைத் தேவன், தமது புத்தகத்தில் காட்டியிருக்கிறார். "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருட்டித்தார்." என்று விளம்பியிருப்பான். வேதசாஸ்திரத்தைப் படித்திருக்கிற பிள்ளை, உலகத்தில் ஞானிகள் என்று பேர்பெற்றிருக்கிறவர்களைவிட ஞானியாயிருக்கிறான். இந்தச் சத்தியங்கள் "கல்விமான்களுக்கும், ஞானிகளுக்கும் மறைக்கப்பட்டு பாலகருக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தச் சத்தியங்களை வேதாகமத்தினாலே மாத்திரம் அறியலாமென்று பார்க்கிறோம்." எபி. 11: 3. "விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய்க் காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லை என்றும் அறிந்திருக்கிறோம்."

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையுஞ் சிருட்டித்தார். இந்த ஆதி எப்போதுள்ளது. ஆதிக்குமுன்னான அநாதியைப் பற்றி மோசே ஒன்றுஞ் சொல்லுகிறதில்லை. அந்தக் காலத்தைப்பற்றிநமக்கு ஒன்றுந்தெரியாது. அது நம்முடைய எண்ணத்துக்கும் மிஞ்சினகாரியம்



என்பதை மாத்திரம் அறியலாம். வானத்துக்கும் பூமிக்கும் ஒரு துவக்கமுண்டு, தேவனைத் தவிர மற்ற யாவற்றுக்கும் ஆரம்பமுண்டு. திரித்துவமானவர் நித்தியகாலமாயிருக்கிறார். தலைமுறைதலைமுறையாக அவர் தேவனாயிருக்கிறார் சங் 95: 2. அவர் "இருக்கிறேன்" என்பவர் "அவர் இருக்கிறவரும் இருந்தவரும், வருகிறவருமான கர்த்தர். நித்தியவாசகரும், பரிசுத்தரும் என்ற நாமமுடையவர்."

ஆதியிலே என்கிற வார்த்தை ஆதியாகமம் 1: 1. ஒரு காலத்தின் துவக்கத்தையும், யோவான் சுவிசேஷம் 1: 1-3-ல் ஆதிக்கு முன்னான அநாதி காலத்தையும் குறிக்கும், கிறிஸ்துவானவர் ஆதியிலே உலகம் உண்டாக்கப்படுவதற்கு முன்னிருந்தார். ஏனென்றால் உலகம் அவரால் உண்டாயிற்று; அவர் பண்ணிய கடைசி ஜெபத்திலும் அவர் அநாதியாயிருந்தார் என்று விளங்கும் யோவான் 17: 24.

இப்போது "சிருட்டித்தார்" என்ற வார்த்தையைப் பற்றிப் பார்ப்போமாக. இந்த வார்த்தை எபிரேயு மூலத்திலே இரண்டாம் வார்த்தையாக வருகிறது. சிருட்டித்தார் என்பது ஒன்றுமில்லாமையிலிருந்து உண்டாக்குதல் என்று அர்த்தம். காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லை" என்று அறிந்திருக்கிறோம். எபி. 11: 3. மோசே, சிருட்டித்தல், உண்டாக்குதல் என்ற இரண்டு வார்த்தைகளையும் வெவ்வேறே அர்த்தமுள்ளதாய் உபயோகப்படுத்தியிருக்கிறார். தேவன் சிருட்டித்து உண்டுபண்ணின கிரியைகள் என்று ஆதி. 2: 3. சொல்லியிருக்கிறது மனுஷன் ஒரு பொருளை உண்டாக்கலாம், ஆனால் அதைச் சிருட்டிக்கக்கூடாது, தட்டான் தங்கத்தைக் கொண்டு நகைகளை உண்டாக்கலாம். ஆனால் தங்கமில்லாமல் தங்க நகைகளை சிருட்டிப்பது அவனால் கூடாத காரியம். வானத்தின் தூதர் முதலாய் அற்பமான மணலைச் சிருட்டிக்கச் சக்தியற்றவர்கள். தேவன் சிருட்டித்தார் என்பது நமது இருதயத்தை அதிசயத்தில் மூழ்கிப் போகப்பண்ணுகிறதாயிருக்கிறது சிருட்டிகருக்கும் சிருட்டிகளுக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறதென்று தெரியப்படுத்துகிறது. அவர் நம்மெல்லாருக்கும் மேலானவர். சிரேஷ்ட தூதருக்கும் உன்னதமானவராயிருக்கிறார். ஒரு அணு அசிக்கும், சிரேஷ்ட தூதனுக்கும் இருக்கிற வித்தியாசத்தை விட எண்ணிறந்த பங்கு சிரேஷ்ட தூதனுக்கும் தேவனுக்கும் வித்தியாசமுண்டு, அந்த வித்தியாசத்துக்கு ஒப்பிடுதலில்லை. அற்பமான ஊர்வனமும், உன்னதமான தூதனும், ஜோதிமண்டலங்களும், அவருடைய சிருட்டிகள். தேவதூதர்கள் தங்களைச் சிருட்டித்த நித்தியரான 'தேவகுமாரனை வணங்கும்படி கட்டளையிடப்பட்டிருக்கிறார்கள். "தேவதூதர்கள் யாவரும் அவரைத் தொழுதுகொள்ளக் கடவர்கள்" என்றார். எபி. 1: 6. கொலோ. 1: 16.

தேவனைப் பற்றிச் சிந்திக்கையில், "இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும் எனக்கு எட்டாத உயரமுமாயிருக்கிறது கர்த்தர் பெரியவரும் மிகவும் புகழப்படத்தக்கவருமாயிருக்கிறார். அவருடைய மகத்துவம் ஆராய்ந்து முடியாது" "அவர் ஆதிமுதல் அந்தமட்டும் செய்துவரும் கிரியையை மனுஷன் கண்டுபிடியான். அவருடைய வழிகள் ஆராய்ப்படாதவைகள், அவரைக்குறித்துக் கேள்விப்பட்டது எவ்வளவு கொஞ்சம், அவருடைய வல்லமையின் இடிமுழக்கத்தை அறிந்தவன் யார் "என்று ஒவ்வொருவரும் சொல்லவேண்டியவர்களாயிருக்கிறோம். சங். 139: 6; 145. 3; பிரச. 3: 11; ரோ. 11: 33; யோபு 26: 14.

தேவன் சிருட்டித்தார் என்றதை ஆழமாய்ச் சிந்திக்கையில தேவன் எத்தன்மையுடையவராயிருக்கிறார் என்பதையும், நாம் அவ

ருக்கு முன்பாக எப்படிப்பட்டவர்களாயிருக்கவேண்டும் என்பதையும், உணரவேண்டியவர்களாயிருக்கிறோம். தேவன் எல்லாமுமாயிருக்கிறார் நாமோ ஒன்றுமில்லாதவர்கள் ஒன்றுமில்லாமையிலிருந்து எல்லா வஸ்துகளையும் உண்டுபண்ணினவர் எவற்றையுஞ் செய்யவல்லவராயிருக்கிறார். அவரால் சகலமும் நிலைத்திருக்கிறது, தமது வல்லமையுள்ள வசனத்தின்படி எல்லாவற்றையும் தாங்குகிறவராயிருக்கிறார். அவர் சகலத்தையும் உண்டுபண்ணினவரானதால், சகலத்தையும் அறிகிறவராயிருக்கிறார். அகண்ட ஆகாச வெளியில் ஓடுகிற எண்ணிறந்த உலகங்கள், மனிதருடைய உள்ளிந்திரியங்கள், தேவதூதரின் இருதயங்கள் அவருக்கு முன்பாக வெளியரங்கமாயிருக்கிறது. நமது தலையின் ரோமத்தை எண்ணியிருக்கிறார். சமுத்திரத்தின் மணலைத் தொகையிட்டிருக்கிறார். பூமியின் தூளை அளவிட்டிருக்கிறார். நமக்குத் தலைமேலேயிருக்கிற நட்சத்திரங்களின் தொகையை அறிவார் "உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள் அவைகளைச் சிருஷ்டித்தவர் யார், அவர் அவைகளின் சேனையை இலக்கத்திட்டமாகப்புறப்படப்பண்ணி அவைகளை எல்லாம் பேர் பேராக அழைக்கிறவராமே. அவருடைய மகா பெலத்தினாலும், அவருடைய மகா வல்லமையினாலும் அவைகளில் ஒன்றுங்குறையாமலிருக்கிறது என்று ஏசாயா 40: 26-ல் சொல்லியிருக்கிறது. தேவன் இவைகளெல்லாவற்றையுஞ் சிருட்டித்தார். அவைகளை ஆண்டு, தமது சர்வ வல்லபத்தால் தாங்கிக்கொண்டுவருகிறார். அவர் அவைகளைத் தாங்காவிடில் அவைகள் நாசமாகிவிடும் "நீர் உமது முகத்தைமறைக்க, திகைக்கும், நீர் அவைகளின் சுவாசத்தை வாங்கிக்கொள்ள அவைகள் மாண்டு, தங்கள் மண்ணுக்குத் திரும்பும். நீர் உம்முடைய ஆவியை அனுப்பும்போது அவைகள் சிருஷ்டிக்கப்படும். நீர் பூமியின் ரூபத்தையும் புதிதாக்குகிறீர்" என்று. சங். 104: 29—30 சொல்லியிருக்கிறது. நாம் தேவனால் உண்டாக்கப்பட்டவர்களானபடியால், நம்மை முழுவதுமாய் அவருக்கு ஒப்புக்கொடுக்கவேண்டியவர்களாயிருக்கிறோம் "யாக்கோபின் தேவனைத் தன் துணையாகக் கொண்டிருந்து தன் தேவனாகிய கர்த்தாமேல் நம்பிக்கைவைக்கிறவன் பாக்கியவான். அவர் வானத்தையும்பூமியையும்சமுத்திரத்தையும் அவைகளிலுள்ளயாவையும் உண்டாக்கினவர். அவர் என்றென்றைக்கும் உண்மையைக்காக்கிறவர். அவர் ஒடுக்கப்பட்டவர்களுக்கு நியாயஞ்செய்கிறார், பசியாயிருக்கிறவர்களுக்கு ஆகாரங்கொடுக்கிறார்" சங். 146: 5-7. தேவன் சிருட்டித்தார் என்ற வாசகம் தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர், ஒளியின் தூதர், தேவகுமாரன் இவர்களால் அடிக்கடி வழங்கப்பட்டிருக்கிறது. மோசே அடிக்கடி இதைப்பற்றி எழுதியிருக்கிறார். சங்கீதத்தில் தாவீது நிறைவாய்ச் சொல்லியிருக்கிறான். யோபு அதைப்பற்றி அதிசயத்தோடே பேசியிருக்கிறான். அப்போஸ்தலர் ஜெபத்திலும இதை எடுத்துக்காட்டிப போராடியிருக்கிறார்கள். அவர்கள் ஒருமனப்பட்டு தேவனை நோக்கிச் சத்தமிட்டு "கர்த்தாவே நீர் வானத்தையும் பூமியையும், சமுத்திரத்தையும், அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனாயிருக்கிறீர் அப்போஸ். 4: 24. என்றார்கள்.



## Exposition of the Church Catechism.

## ஞானோபதேசவினாவிடை

வியாக்கியானம்.

## ௯-ம் அதிகாரம்.

விசுவாசப்பிரமாணம்.

௫-ம் பிரிவு.

### கடைசி நியாயத்தீர்ப்பைப் பற்றி.

வினா நம்முடைய இரட்சகரைப்பற்றி விசுவாசப்பிரமாணத்தில் கடைசியாகச் சொல்லியிருக்கிறதென்ன ?

விடை. அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்கவருவார்.

பரமண்டலத்தில் கிறிஸ்துவானவர் மத்தியஸ்தராகச் செய்கிற உத்தியோகத்தைக் கவனித்தோம். அவருடைய எல்லாச் சத்துருக்களும் கீழ்ப்படுத்தப்பட்டு (எபி. 10: 12, 13) தம்முடைய ஜனங்களெல்லாருஞ் சேர்க்கப்படும் காலமளவும் (1 கொரி. 15: 24—28.) அவர் தமது ஊழியத்தை நிறைவேற்றுவார். அப்பொழுது முடிவுவரும். பின்பு அவர் நியாயந்தீர்க்கவந்து, மகிமையான வெண்மையாசனத்தில் வீற்றிருந்து, தமது பரிசுத்த தூதரால் சூழப்பட்டு, எல்லாமனிதருக்கும் அவரவர் செய்த நன்மை தீமைக்குத் தக்கதாக பலா பலனளித்து, நீதிமான்களைத் தமது பிதாவின் இராயச்சியத்தில் சேர்த்து, தேவனை யறியாமலும் அவருடைய சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியாமலும் போனவர்களிடத்தில் பழிவாங்குவார். இந்தப் பயங்கரமான சங்கதி நடக்கப்போகிற சமையம் அறியப்படக்கூடாததாயிருக்கிறது. தேவதூதர்களும் அறியார்கள். (மத். 24: 36.) ஆனால் இப்படி நடப்பது நிச்சயம். இந்த ஜீவகாலத்தில் பொல்லாதவர்கள் வாழ்ந்து, தங்கள் இருதயத்தில் பெருமையினாலே "தேவன் எப்படி அறிவார்" என்று சொல்லிக்கொண்டிருக்கையில் தேவனுடைய பிள்ளைகளோ அநேக துன்பங்களையும் வருத்தங்களையும் உடையவர்களாயிருக்கிறார்கள். ஆகையால் இந்த நிலைமையானது, தேவனுடைய நீதி விளங்குகிறதாகக் காணப்படும் இன்னொரு நிலைமையுண்டென்

பதையும், அங்கே நீதிமான்களுக்கு பாக்கியமும் பொல்லாதவர்களுக்கு நிர்பாக்கியமும் பங்காயிருக்குமென்பதையும் சுட்டிக் காட்டுகிறது. வேதாகமமும் இந்த சத்தியத்தை உறுதிப்படுத்துகிறது.

சங். 10. 17: 14. 37: 10, 35, 36. 73: 4, 11, 12.

அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும்மழையைப் பெய்யப்பண்ணுகிறார். மத். 5: 45.

மத். 13: 24—30, 40.

---

# இரக்ஷணிய யாத்திரிகம்.

(தொடர்ச்சி.)

ஈது சம்பவம் யாவையும் வேதியன் எதிர்ந்து
காதலா யிருகண் கணீர் மல்கிடக் கனிந்து
வேதநாயகன் கருணையை வியந்துளத் தேத்தி
ஓது சீர்த்தியாய் விடையுதவுட்புக வென்றான். 392

காலங் காட்டிய கதிர்களும் உடுக்களுங் கவினி
ஞாலங் காட்டிய பூதபௌதிகங்களும் நம்பன்
மூலங் காட்டிய இயல்விதி முறைதவறாது
சீலங் காட்டிய சீர்மையைக் கண்டனை செய்யோய். 393

இயல் முறைக்கமைந் தொழுகல்போ லெம்மையீடேற்றும்
செயல் முறைக்கமைந் தொழுகலும் நங்கடன் றீய
மயல் முறைப்படு மனஞ்செலும் நெறிப்படல் மதியன்றா
உயல் முறைக்கிறை சித்தமே நலனென வோர்தி. 394

தமரநீர் உலகத்தவதரித்த சற்குருமுன்
உமது சித்தமே சித்தமென் றுவப்புடன் பணியும்
அமர நாட்டை யொத்தகனிலம் அமைக வென்றாளித்த
விமல மந்திரம் ஜெபித்துமென் வேறொன்று விழைதல். 395

பித்தனேந்த இப்பாத்திரம் பிரித்து நீரொடுக்கச்
சித்தமேல் அஃதாக என் சித்தமன் றென்று
வித்தகத்திரு மைந்தன் ஆத்துமத்துயர் மேவிக்
கெத்தசேமில் வாய்விண்டமை கேட்டிலை கொல்லோ. 396

நல்குங்கேடென நன்மையை ஒருவுவம் நாசம்
பல்குந் தீமையை நன்மையாப் பற்றுவம் மதியற்



றல்கு சிந்தையேம் ஆதலின் அளவிலா ஞானம்
மல்கு தந்தையார் நமக்கறிந் தூட்டலே மரபாம். 397

சுருதி நாயகன் திருவுளங் கூட்டு நாள்த்தோழ
கருதி யாங்கு வீடடைதலே கடனெனக் கழறி
வருதி நீயெனச் சென்றிருள் மலிந்தவோர் அரங்கைக்
குருதிவாகர தாஸற்குக் காட்டினன் கூறும். 398

கூர்த்த நோக்குதி இரும்பினால் இயன்ற அக்கூட்டுள்
வேர்த்து விம்மி நெட்டுயிர்த்துடல் விதிர்ப்புற வெருண்டு
பார்த்திறங்கு சென்னிய னொருபதிதனை வினவி
வார்த்தை யாடுதி யென்றனன் மறை வியாக்கியானி. 399

நன்று நன்றெனக் கிறிஸ்தவன் நன்னிலைதவறி
வன்றுயர்க் குறிமல்கிய வறுமுக நோக்கிக்
கன்று சிந்தையாய் யாரை நீ? கவலுமாறெவன் ஈண்டு
ஒன்ற வந்த காரணமியா? துரைத்தியா லென்றான். 400

வினவு வாசகம் கேட்டலும் வெஞ்சிறை மறிந்த
வனவிலங்கெனத் தரிப்பிலா துழல்பவன் மறைதேர்
பனவ யானொரு கிறிஸ்தவன் பண்டெனைப் பலரும்
கனவிலும் பிழைகண்டிலர் கண்டிலேன் யானும். 401

பிழையை யோர்பிழை யென்றுணராக் கொடும் பிழையார்
பிழையிலானெனப் பிழைபடப் புகழ்ந்திடும் பிழையை
பிழையென் றெள்ளிடாப் பித்தன்யான் பிழைபடப் பிழைத்த
பிழைபொறுப்பரோ பிழையிலா நீதியம் பெருமான். 402

வீடடைந்துய விரும்பியோய் வியன் பிரபஞ்சக்
காடடைந்தனன் சிற்றினப்ப படுகரிற் கவிழ்ந்தேன்
மாடடைந்து வந்தலகையுங் கெடுத்தது வலயக்
கூடடைந்து கெட்டேன் இனிக்கூறுவ தெவனோ. 403

பன்றிமாசறப் பன்முறை கழுவவே படினும்
சென்று சேற்றிடைப் புரள்வது போலும்வெந்தீய
வன்றொடர்ப் படுஞயலிதான் கான்றதை மறுத்தும்
தின்று தேக்கெறிந் துழல்வது போலுமென் சீர்மை. 404

ஐயமின்றொரு நாள் அருவருத்தெனை அயலே
வையந் தள்ளும் இம்மாறுவேல் வழி பிழைத்ததனால்
தெய்வ வாணமும் சீத்திடும் யாதினிச் செய்வல்
வெய்யபாதலம் அலதொரு புகலிலை மேலோய். 405

போந்த பாவியெவனையும் புறக்கணியாத

சாந்தமூர்த்தி தண்ணருட்கடல் தயாநிதி தகைசால்
வேந்தனோர் திருக்குமா னென்றுரைப்பது மெய்ம்மை
ஆய்ந்த கேள்வியாய் ஐயமெட்டுணையிலை அதற்கே. 406

அனையதாயினும் நன்றிலேன் அறநெறி திறம்பி
நினைவிற் செய்கையில் ஈட்டிய நீச வெவ்வினைகள்
இனையதித்துணை யென்றுரை யாடுதற் கெளிதோ
கனைகடற் கரை மணலினுக் கதிகமாங் காண்டி. 407

வான நாயகன் இதய மாளிகையினில் வைத்த
ஞானதீபத் தையணைத்தனன் நல்லிளங் கோமான்
மேனிவார்ந்த செங்குருதியை மதித்திலன் வெறுத்தேன்
ஊனமில் மனச்சான்றையும் உள்ளுறப் புதைத்தேன். 408

ஈசன் மைந்தனைத் தினந்தினஞ் சிலுவையில் ஏற்றி
நீசவெவ்வினை உஞற்றினன் நிமல வீட்டியக்கும்
மாசில் நீதியை வனாந்தனன் மதிதலத் தெவர்க்கும்
நாசகாலத்து மதிவிபரீதமாம் நல்லோய். 409

ஆவலாய் அகத்தமர்ந்து போராடிய அருள்கூர்
தேவ ஆவியும் முனிந்தெனை விடுத்தனர் சிதையா
ஜீவவாக் கெலாம் எனக்கலவென்பது திண்ணம்
பாவகாரியேன் இதயமும் வைரக்கற்பாறை. 410

வேறு யானினிப் புகல்வதென் விபுதவேந்தருத்துக்
கூறுசாபமும் கோபமும் வானிடைக் குமுறி
வீறவீறுறக் கணந்தொறும் கதித்தெனை வெருட்டும்
ஈறில் ஜீவனுக் கிரக்ஷைமற் றினியிலை யென்றான். 411

வேறு.

கூட்டுளான் இனையகூறக் கொற்றவன் அருள்பெற்றுய்யும்
வீட்டுளானாக நின்ற வேதியன் விரைந்து பாவத்
தீட்டுளாய் எனினும் நம்பன் திருவருட் செயலோராதிக்
கேட்டுளானாக உன்னைக் கெடுத்ததென் மதிகொண்டென்றான். 412

நல்குமெய்ம் மகிழ்ச்சி யென்று நனிமதி மருண்டு தீமை
மல்கு சிற்றின்ப போகம் வரைவின்றி நுகர்ந்து வாணாள்
அலக நின்றயர்ந்தேன் இந்த அருஞ்சிறைப்பட்டேன் அந்தோ
புல்குதீவிடத்திற் ஜீவன் போமெனும் பொறியிலாதேன். 413

என்னுறு மதியீனத்தால் இயைந்த துர்க்கரும மாய
கொன்னுனைப் பகழிமாரி உளத்திடைக் குளிப்ப ஏவிக்
கன்னலுற் றேனைவாளாக் கடிந்து புண்படுத்தென்னுள்ளே
மன்னி நின்றுயிரை வாட்டும் வழுவறு ஜீவசாக்ஷி. 414



இலகு செந்நீதிப் பெம்மான் இருஞ்சிறைப் படுத்தெஞ்ஞான்றும்
விலகுறுந் தளையைப் பூட்டி விடுத்தனர் ஆதலாலே
உலகெலா மொருங்குகூடி உஞற்றினும் மீட்டற்கொல்லா
அலகில் வெஞ்சிற்றச் செந்தீ யவிக்குமோ அளியகீடம். 415

இனிவரும் நியாயத்தீர்ப்புக் கென்செய்கேன் ஈறின்றாகி
நனிவரு சதாநிர்ப்பந்த நாசத்தை உள்ளியுள்ளிப்
பனிவருமிதயத்தேன் மற்றென்னினிப் பகர்வலென்றாத்
துனிவருமுயிர்ப்பன் அஞ்சித் துடிதுடித் தலறிச் சோர்ந்தான். 416

நன்னிலை தவறியுற்ற நடுக்கமுந் திகிலுங் கண்டான்
பன்னிய மாற்றங் கேட்டான் வேதியன் பரிந்து நெஞ்சில்
கன்னில வெழுத்துப் போலக் காட்சியைக் கவினத் தீட்டி
மன்னிய குரவ எற்குன் பணியெது வழுத்து கென்றான். 417

தொண்டரைத் தெருட்டுந்தூய சுருதிநூல் வலவனீண்டு
கண்டு கேட்டறிந்த விந்தக் காட்சியைக் கருத்துள் ஊன்றிக்
கொண்ட நற்றவத்தை ஞான சீலத்தைக் கொளுத்துங் காம
மண்டெரி கனலா றதவாய் வழியினைச் செறித்தி மைந்த. 418

மதிநலங் கெடுந்தூர்ச் சீலம் மலியும் தீவினைகள் மல்கும்
பதிபரகவிஞ்சும் நிந்தைபலுகும் வெம்பழியும் சேரும்
கொதிநரகமும் அங்காக்கும் குவலயங் கூவுங் கூற்றைக்
கதி திருக்காப்புக் கொள்ளுங் காமப்பேய் கதுவுங்காலை. 419

விள்ளருங் கேட்டுக்கெல்லாம் வித்திது வாதலாலே
கள்ளமின்றாகி யுள்ளங் கனிந்துசெய் ஜெபத்தினாலும்
உள்ளுறு விரதத்தாலும் ஒருங்கறச் சிதைத்தல் வேண்டும்
தெள்ளியோய் பிறிதொன்றானும் சிதைபடாதாகு மன்றே. 420

சிற்றின்பப் பயன்கை நெல்லிக்கனி யெனத் தெரியக்கண்டாய்
பற்றறுத்தியோடுசெய்யும் பவித்திரான் மிகளே தூய
கொற்றவனுலகபோகங் கூட்டுண்டுகளிக்கும் நீரார்
இற்றிதை மறாது சேறி இறைவழியிறுதிகாறும். 421

அயலொரு காட்சி யுண்டங் கதனையும் அணுகி ஆய்ந்து
மயலறத் தெருண்டு சீவ மார்க்கம் நீ வழிக்கொளென்று
இயல் மனமயங்கி யாக்கைவிதிர்ப்புற இரங்கியேங்கித்
துயருறும் ஒருவனின்ற சூழலைக்குறுகிச் சொல்லும். 422

(இன்னும் வரும்.)

## சமாசாரத்திரட்டு.

**இங்கிலந்து.**—இங்கிலந்து தேசம் எங்குமுள்ள வர்த்தகக் கூட்டத்தாரின் பிரதிநிதிகள் லண்டனில் ஐக்கிய சபை கூடவிருக்கிறார்கள். அவர்கள் ஆலோசித்துத் தீர்மானிக்கும் விஷயங்கள் சுயாதீன வர்த்தகம், சம தீர்வை ஏற்பாடு இவைகளாம். மஹா ராணியவர்களின் சேஷ்ட குமாரத்தியை ஜர்மானிய சக்கரவர்த்தியின் புதல்வராகிய ஜர்மானிய இளவரசருக்கு மணம் புரிந்திருப்பது நமதிஷ்டருக்குத் தெரிந்த விஷயமே. அந்த இளவரசரின் சிரேஷ்ட குமாரராகிய பிரடிரிக் உல்லியம் விக்தோர் ஆல்பர்ட் என்னும் ராஜ பிரபுவுக்கு நாளது மாசம் பர்லின் நகரத்தில் விவாகம் நடக்கபோகிறதால் மஹா ராணியவர்களும் அந்த மங்களோற்சவத்துக்குப்போயிருந்து சிறப்பிக்கவிருக்கிறார்கள். பிரடிரிக் ரார்பட்ஸ் தளபதிக்கு நைட் பட்டம் சூட்டப்பட்டது. சூட்டும்போது காருண்ய ராணியவர்கள், தமது அரசாட்சி காலத்தில், தகப்பனுக்குக் கொடுத்த அப்பட்ட அந்தஸ்தை மகனுக்கும் தாமே கொடுத்தது இதுதான் முதல் தடவை என்று மொழிந்தார்களாம்.

**இந்தியா.**—சுகவீனமாயிருந்த இந்திய தேசாதிபதியாகிய கவர்னர் ஜெனரலவர்கள் இப்போது சுகமாயிருக்கிறார்கள். சென்னை ராஜதானிக்கு கவர்னராக நியமகம் பெற்ற கௌரவ ஆதாம் துரையவர்கள், சென்ற டிசம்பர் மாசத்தில் வந்து டியூக் ஆப்பக்கிங்காம் பிரபு அவர்களிடத்திலிருந்து ஆளுகையையொப்புக்கொண்டார்கள். பக்கிங்காம் பிரபு அவர்கள் சீமைக்குப் பிரயாணமானார்கள். வழியில் கயிரோ நகரத்தில் சிறிதுநாள் தங்கி, பெரிய பலபுஜக்கோபுரத்தைப் பார்வையிட்ட பின்பு, சென்ற மாசத்தின் அறுதியில் சீமைக்குப்போய்ச் சேர்ந்திருப்பார்கள். நாளது மாசம் 18௳யில் இந்துதேசமுழுவதிலும், இலங்கையிலும் குடிமதிப்புச் செய்யும்படி கவரண்மெந்து உத்தரவு பிறந்திருக்கிறது

**துர்க்கி.**—துர்க்கிக்கும் கிரேக்கை ராச்சியத்துக்குமுள்ள பிணக்கு இன்னும் தீரவில்லை. இவ்விரண்டு இராச்சியத்துக்குமுள்ள எல்லைவிவாதத்தைத் தீர்க்கும்படி ஐரோப்பாவின் முக்கிய இராஜாங்கத்தாரை துர்க்கி கேட்கின்றது. இராணுவங்களைக் குறைக்கும்படி ஐரோப்பா ராஜாங்கத்தார் சொல்லிய யோசனையை கிரேக்கை மறுத்துவிட்டு, துர்க்கியோடு யுத்தஞ்செய்யத் தீர்மானித்திருக்கிறது.

**சீனா.**—சீனாவுக்கும் ருஷியாவுக்கும் குல்ட்ஜா பிரதேசத்தையிட்டு உண்டான விவாதம் சமாதானமாய்த் தீர்மானமாகிறதற்கிடமில்லாதிருக்கிறபடியால் அவ்விரு இராஜாங்கத்தாருக்குள்ளும் யுத்தமுண்டாகுமென்று நினைக்க ஏதுவாயிருக்கிறது.

---



## நோட்டீஸ்.

மகா கனம்பொருந்திய சென்னை அத்தியக்ஷரவர்களின் வேதாகம பந்தைய பரீக்ஷை

### 1881.

திருநெல்வேலி ஜில்லாவில் 1881-ம் ௵ ஜூலை மாசத்தில் நடக்கும் பந்தயபரீக்ஷைக்குப்போக விரும்புகிறவர்கள் நாளது வருஷம் ஏப்பிரல்௴ 30௳க்குள்ளாக, இடையன்குடியிலிருக்கும் கனம்: தானியேல் சாமுவேல் ஐயரவர்களுக்கு தங்கள்பெயரை எழுதியனுப்புகிறதுமல்லாமல், நபர் 1-க்கு நாலணாகட்டணமும் அனுப்புவிக்கவேண்டும்.

அப்படி பேர் எழுதியனுப்புகிறவர்கள் தங்கள் பேர்களைத் தெளிவாயும் பூரணமாயும் எழுதவேண்டியது மன்றி, தங்கள் உத்தியோகமின்னதென்பதையும் வாசஞ்செய்கிற மிஷியன் சேகரத்தின் பேரையும், இது முன் நடந்த பரீக்ஷைகளில் தாங்கள் ஏதாவது பந்தயம் பெற்றிருந்தால் இன்னின்ன வகுப்பில் இவ்விதபந்தையம் பெற்றிருக்கிறோமென்கிற விபரத்தையும் எழுதியனுப்பவேண்டும்.

### 1881-வருஷத்துக்கு பாடங்கள்.

கிரேக் புதியஏற்பாடு. (1) பரி. யோவான் சுவிசேஷம் II. அதிகார முதல் முடிவுரை.
(2) தெசலோனிக்கரின் 2 நிருபங்களும்.

தமிழ் ... .... (1) யோசுவாவின் புஸ்தகம்.
(2) ரோமர் நிருபம்.
(3) அற்புதங்களின் வியாக்கியானம் திரெஞ்சு என்பவரியற்றிய புஸ்தகம் XV. முதல் முடிவுவரை.
(4) கொலோசியர் நிருபம், மனப்பாடம்.

1882-ம் வருஷத்து பரீக்ஷைக்குரிய பாடங்கள் நாளது வருஷ மத்தியில் பிரசித்தப்படுத்தப்படும்.

---

மகா கனம் பொருந்திய சென்னை அத்தியக்ஷரவர்களின் வேதாகம பந்தைய பரீக்ஷை

1881௵ ஜூலை௴ 12-ம் 13-ம் தேதிகளில் நடக்கும்.

பெபுருவரிமீ நாள் 28-தைமீ 21உ-முதல், மாசிமீ 18உ-வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ் தேதி. | அன்றுடகத் தியானம். |
|---|---|---|---|
| செ | 1 | உக | சூரியனுக்குக் கீழே பலன் ஒன்றுமில்லை பிரசங்கி. 2: 11. |
| பு | 2 | உஉ | நகைக்க ஒருகாலமுண்டு; புலம்ப ஒருகாலமுண்டு. 3: 4. |
| வி | 3 | உ௩ | இதோ ஒடுக்கப்பட்டவர்களின் கண்ணீரைக்கண்டேன். 4: 1. |
| வெ | 4 | உச | தேவன் வானத்திலிருக்கிறார்; நீ பூமியிலிருக்கிறாய். 5: 2. |
| ச | 5 | உரு | எல்லாரும் ஒரே இடத்துக்குப்போகிறார்களல்லவா ? 6: 6. |
| ஞா | 6 | உசா | தேவனுடைய செயலைக் கவனித்துப்பார். 7: 13. |
| தி | 7 | உஎ | துன்மார்க்கரைத் துன்மார்க்கம் விடுவிக்கமாட்டாது. 8: 8. |
| செ | 8 | உஅ | யுத்த ஆயுதங்களைப் பார்க்கிலும் ஞானமே நலம். 9: 18. |
| பு | 9 | உகூ | படுகுழியை வெட்டுகிறவன் அதிலே விழுவான். 10: 8. |
| வி | 10 | ௩0 | விழுந்த இடத்திலேயே மரம் கிடைக்கும். 11: 3. |
| வெ | 11 | க | நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை. 12: 1. |
| ச | 12 | உ | உமது நாமம் ஊற்றுண்ட பரிமளதைலம். உன்னதப்பாட்டு 1: 3 |
| ஞா | 13 | ௩ | என் நேசர் என்னுடையவர்; நான் அவருடையவள். 2: 16. |
| தி | 14 | ச | என் ஆத்துமநேசரைக் கண்டீர்களா ? 3: 3. |
| செ | 15 | ரு | லீபனோனிலிருந்து என்னோடேவா. 4: 8. |
| பு | 16 | சா | அவரைத் தேடினேன்; அவரைக்காணவில்லை. 5: 6. |
| வி | 17 | எ | நாங்களும் அவரைத் தேடுவோம். 6: 1. |
| வெ | 18 | அ | உன்பாதங்கள் மிகவும் அழகாயிருக்கிறது. 7: 1. |
| ச | 19 | கூ | என் நேசரே! தீவிரியும். 8: 14. |
| ஞா | 20 | க0 | என் ஜனம் உணர்வில்லாமலும் இருக்கிறது. ஏசாயா. 1: 3. |
| தி | 21 | கக | கர்த்தரின் வெளிச்சத்திலே நடப்போம் வாருங்கள். 2. 5. |
| செ | 22 | கஉ | துன்மார்க்கனுக்கு ஐயோ! 3: 11. |
| பு | 23 | க௩ | மகிமையானவைகளின் மேலெல்லாம் காவல் உண்டாயிருக்கும். |
| வி | 24 | கச | எனக்கும் என் திராட்சத்தோட்டத்துக்கும் நியாயந்திருங்கள் 5:3 |
| வெ | 25 | கரு | உன் பாவம் நிவிர்த்தியானது. 6: 7. |
| ச | 26 | கசா | நீங்கள் விசுவாசியாவிட்டால் நிலைபெறமாட்டீர்கள். 7: 9. |
| ஞா | 27 | கஎ | இதோ! நானும் கர்த்தர் எனக்குக் கொடுத்தபிள்ளைகளும். 8: 18. |
| தி | 28 | கஅ | அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை. 9: 7. |

## விசேஷ நாட்கள்.

2. பரி. கன்னிமரியாள் சுத்திகரிப்புத் திருநாள்.
6. பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும், 5-ம் ஞாயிறு.
13. செப்துவகெசிமா ஞாயிறு.
14. பௌரணமி.
20. செக்சகெசிமா ஞாயிறு.
24. பரி. அப். மத்தியாவின் திருநாள்.
27. கின்குவகெசிமா ஞாயிறு.
28. அமாவாசை.


# நற்போதகம்.

மார்ச்சுமீ. ௲அஅக வு.


## யோசுவாவின் புஸ்தகம்.

### XII. அதிகாரம்.

இஸ்ரவேலர் மோசே, யோசுவா காலத்தில் பிடித்த தேசங்களின் அட்டவணை.

2. எமோரியரின் இராசாவாகிய சீகோனின் இராச்சியம் ஆர்னோன் ஆற்றின் நடுமையமட்டும் எட்டியிருந்தது. பொதுப்பட ஆறானது இரண்டு அதிபதிகளுக்கும் பாதியாக பிரிக்கப்படுவது எக்காலத்திலும் வழக்கம். சீகோன் இராச்சியத்தைச் சேராததும் மோவாபியருக்குச் சொந்தமுமான ஆக்ரோவேர் பட்டினம். உபா. 2: 9, 18 ஆர்னோன் ஆற்றின் நடுமையத்திலிருந்தது. உபா. 2: 36. 3: 16. ஆதலால் சீகோன் இராச்சியத்தின் எல்லையை திட்டமாகக் காண்பிக்கும்படியாக அப்படிச் சொல்லியிருக்கிறது.

3. சீகோன் இராச்சியத்தின் மேல் எல்லை கின்னரோத் கடலுக்கும், உப்புக்கடலுககும் கிழக்காகவிருந்தது.

“சமனான வெளியின் கடல்” முன் சமனானதும், செழிப்புமுள்ள வெளியானது இக்காலத்தில் உப்புக்கடலாய் மாற்றப்பட்டுப்போயிற்று.

4, 5. பாசான் இராச்சியம், யாபோக் நதிக்கும் எர்மோன் மலைக்கும் நடுவிலுள்ளது. இது 3-பங்காகப் பிரிக்கப்படும். வடக்கே அர்கோப் சீமை நடுவில் பாசான், தெற்கில் கிலேயாத் தேசமே. இதுவே செழிப்பும் கன்றுகாலிகளுக்கு நல்ல மேய்ச்சலுமான பூமி. இதில் நல்ல கர்வாலி மரங்களுண்டு. ஏசா. 2: 13. சகரி. 12: 2.

7. ஆலாக் மலை அதாவது (Smooth) மொட்டை மலை. சிலர் லீபனோன் மலைகளில் ஒரு பங்குக்குப் பேர் என்பார்கள். சிலர் ஏதோமி

துள்ள சேயீர் மலையைக் குறிக்கிறதென்பார்கள். எர்மோன் மலையை சீதோனியர் சிரியோன் என்றும், எமோரியர் அதை சேனீர் (பனிக்கட்டி) என்றும் சொல்வார்கள்.

8. வனாந்தரமென்பது முழுவதுமாய் சனசஞ்சாரமில்லாத இடமென்று பொருள் கொள்ளக்கூடாது. அதிகக் குடியிருப்புகளில்லாத கொஞ்ச சனமுள்ள கிராமங்களிருக்கிறதற்கு வழக்கமாய்ச் சொல்லப்படும். 1 இராசா 2: 34. 9: 18. மத். 1: 3.

18. ஆலேக் ஆசேர் கோத்திரத்தில் ஒரு பட்டினம். யோசு. 19: 30. யூதாக்கோத்திரத்தில் ஒன்று இருக்கிறது. 1 சாமு. 4: 1. 29: 1 சூரியா நாட்டில் ஒன்றிருக்கிறது. 1 இராசா 20: 26. 2 இரா. 13: 17.

"லசரோன்" அப். 9: 35-ல் சொல்லப்படுகிற உலிதா என்னும் கிராமத்துக்குச் சமீபமான சாரோன் பட்டினமாயிருக்கலாம்.

23. கில்காலுக்கடுத்த சாதிகளின் இராசாவென்பது, இஸ்ரவேலர் கானானில் முதலாவது பாளையமிறங்கின இடமல்ல, அங்கே பட்டினமுமில்லை, இராசாவுமில்லை. அநேகர் நினைக்கிறபடி, வியாபாரத்துக்கும் பற்பல தொழிலுக்குமாக அநேக சனங்கள் போய்க் குடியிருந்த சமுத்திரக் கரைக்குச் சமீபமான கலிலேயாவாயிருக்கலாம். ஆதி. 14: 1. சாதிகளின் இராசாவாகிய திதியால் இருந்தான்.

24. கானான்தேச முழுவதிலும் 31-இராசாக்களிருந்தார்கள். இவர்கள் கொஞ்சமான தேசத்தில் ஆண்டபடியால் இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு பட்டினமும் அதைச்சேர்ந்த சிறு பட்டினங்களும் மாத்திரம் இருந்திருக்கலாம். இந்த தேசம் ஒன்றின்பின் ஒன்றாய் லகுவாய் செயிக்கப்படும்படிக்கு ஞானமுள்ள தேவன் முன்னறிந்து இப்படித் திட்டம்பண்ணியிருக்கிறார். ஆயியின் இராசாவுக்கும், பெத்தேலின் இராசாவுக்கும் மொத்தமாய்க் குடிகள் 12,000 மாத்திரந் தானே. ஒவ்வொரு பட்டினத்துக்கும் ஒரு அதிபதியிருந்தான். இதுவே எத்தேசத்திலும் பூர்வீக வழக்கமென்பதற்கு உலக சரித்திரங்களில் விபரங் காணலாம்.

## கேள்விகள்.

1. மோசே பிடித்த தேசங்களின் எல்லையைச் சொல்லு? அவைகள் யாருக்குக் கொடுக்கப்பட்டது? இஸ்ரவேலர் செய்த பாவத்தினிமித்தம் வந்த தண்டனையும் முதலாவதாக, மூந்தி சுதந்தரம்பெற்றவர்களுக்கு சம்பவித்ததென்று காட்டுங்கள்?

2. யோசுவா பிடித்த தேசங்களின் எல்லையெது? அதை தேவன் முன்னமே குறித்திருந்தாரா, ஏன்?



3. கானானின் வங்கிஷத்தாரை, ஆதி. 10: 15—18. அதிகமாயும். ஆதி. 15: 19—21. 10-சாதியாரும் உபா. 7: 1-ல் 7-சாதியாரும், இங்கே 6-வகுப்பார் மாத்திரம் சொல்லியிருப்பதென்ன?

4. கானான்தேசம் வெகு செழிப்புள்ள தேசமென்பதற்கு இந்த அதிகாரத்தில் வருகிற குறிப்பென்ன? இந்தக் காலத்தில் அதின் ஸ்திதி எப்படி, ஏன்?

5. கெசூரியர், மாகாத்தியர் இவர்களுடைய வரலாறு என்ன?

6. ஓர்மா, லாகீஸ், மெகிதோ, தோர், திர்சா, தப்புவா இப்பட்டினங்களைப்பற்றி உமக்குத் தெரிந்ததை எழுதும்.

7. யூதாக்கோத்திர நாட்டுக்குள் எத்தனை இராசாக்களிருந்தார்கள்? அவர்களிருந்த பட்டினங்களில் நடந்த விசேஷங்களென்ன?

---

## XIII. அதிகாரம்.

1. யோசுவா மரிக்கையில் 110-வயதுள்ளவராயிருந்தபடியால், தேசம் ஜெயிக்கப்படவும், பிரித்துக்கொடுக்கவுமாக 10-வருஷம் சென்றிருக்கும். ஆகையால் இப்போது அவருக்கு வயது 100-இருக்கும். தேவன் யோசுவாவுக்கு நியமித்ததும் கற்பித்ததுமான வேலையை, தாமதமில்லாமல் நிறைவேற்றச் சொல்லுகிறார்.

2. யோசுவாவால் ஜெயிக்கப்படாமல், இஸ்ரவேலரால் செயிக்கப்படும்படிக்கு மீதியாக விட்டிருந்த தேசங்களின் அட்டவணை இது முதல் சொல்லப்படுகிறது. நியாயா. 3: 1—5.

3. சீகோர். ஏசா. 23: 3. எரே. 2: 18.

பெலிஸ்தியர் பூர்வீகக் குடிகளாகிய கானானியரைத் துரத்திவிட்டு, அவர்கள் தேசத்தைச் சுதந்தரித்துக்கொண்டிருந்தபடியால், உபா. 2: 23. ஆமோஸ். 9: 7. பெலிஸ்தியர் தேசமும், இஸ்ரவேலருக்குச் சேரவேண்டிய சுதந்தரமே. ஆவியரென்ற வகுப்பார், பெலிஸ்தரென்று அழைக்கப்படுகிற கப்தோரியரால் தங்கள் ஆதி ஸ்தானத்தைவிட்டுத் துரத்தப்பட்டாலும், அவர்களில் மிச்சமானவர்கள் பெலிஸ்தியர் தேசத்துக்குச் சமீபமாய் குடியிருந்தார்கள். உபா. 2: 23.

4. இப்போது பெலிஸ்தியர் வசமாயிருக்கிற சமுத்திரக் கரையோரமான தென்திசை தேசம் துவக்கி, சீதோன்வரைக்குமுள்ள கரைதுறைத் தேசங்கள் யாவும் ஜெயிக்கப்படாமல் கானானியர் வசமிருந்தன. கானானியர் கடல் அருகே குடியிருந்தார்களென்று வேவுகாரர் வந்து சொன்னார்களே. எண். 13: 29.

"ஆபேக்" யூதேயாவிலுள்ளதல்ல, யோசுவா. 15: 53. ஆசேர் கோத்திரத்திலுள்ளதாம். நியாயாதி. 1: 31.—எமோரியர் திரள் சாதி

யாயும், வல்லபசாலிகளுமானதால் யோர்தானுக்கு அப்புறத்திலும் இப்புறத்திலும், வடக்கும் தெற்கும், கிழக்கும் மேற்குமாக சிதறி பல இடங்களில் வாசம்பண்ணினார்கள்.

5. கிபிலியர் என்ற சனங்கள் சீதோனுக்கருகான கேபாலில் குடியிருந்தவர்களாம். இவர்கள் சாலொமோன் கட்டின தேவாலயத்துக்கு மரங்களையும், கற்களையும் சவுக்கித்துக் கொடுத்த தீரியரோடே கூடவிருந்தவர்கள்: 1 இராசா 5: 18. எசேக். 27: 9.

யோசுவாவின் மரணத்துக்குப்பின்பு, இஸ்ரவேலர் அவிசுவாசமும் அக்கிரமக்காரருமாயிராவிட்டால் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக அவர்களைத் துரத்திவிடுவேன் என்பதாக கர்த்தர் சொல்லுகிறார். இப்படி தேசங்கள் ஜெயிக்கப்படாமலிருக்க, யோசுவா பங்கிட்டுக் கொடுக்கும்படி தேவன் சொல்வதற்கு முகாந்தரமென்ன? பிற்காலத்தில் இஸ்ரவேலர் அந்த தேசங்களை ஜெயிப்பதற்கு, தேவன் உதவியாயிருப்பாரென்பதற்கு அடையாளமாகவும்,—கானானியரை ஜெயிக்கிற வேலை இஸ்ரவேலர்மேல் விழுந்த கடமையென்றும், அப்படிச் செய்யாவிட்டால் இஸ்ரவேலர் அதற்கு குற்றவாளிகளென்று அறியச் செய்யவும்,—இஸ்ரவேலர் கானானியரோடே எவ்வளவென்கிலும் உடன்படிக்கைகளும், ஒப்பந்தங்களும், கட்டுறவுகளும் செய்யக்கூடாதபடிக்கு இவர்களுக்கும் அவர்களுக்கும் நடுவே பிரிவினையின் சுவரை வைக்கவும் நோக்கமாய் அந்தக் கட்டளை செய்தார்.

8. மோசே தேவஉத்தரவுப்படி 2½ கோத்திரத்துக்கும் பங்கிட்டுக் கொடுத்ததைக் கெடுக்காதபடிக்கு யோசுவா எச்சரிக்கப்படுகிறார்.

9. தீபோன், மெதேபா என்ற 2-பட்டணங்களும், மோவாபியர் வசமாயிருந்ததை எமோரியர் பிடுங்கிக்கொண்டார்கள். எண். 21: 30. இவர்களிலிருந்து இஸ்ரவேலர் பறித்துக்கொண்டார்கள். இஸ்ரவேலர் சிறைப்பட்டுப்போனபின்பு மோவாபியர் அவைகளை தங்கள் வசப்படுத்திக்கொண்டார்கள். ஏசா. 15: 2.

13. மோசே ஜெயித்த தேசம் இஸ்ரவேலருக்குப் போதுமானதாலும், இஸ்ரவேலர் சத்துருக்களைத் தேடித் துரத்த வேலையாயிராமல் யோர்தானைக் கடந்துபோய் கானான்தேசத்தைப் பிடிக்க ஆயத்தம்பண்ணவேண்டியதாலும், இந்தச் சாதியார் செயிக்கப்படாமல் விடப்பட்டிருந்தார்கள்.

14. மோசே லேவியருக்கு யோர்தானுக்கு அப்புறத்தில் சுதந்தரம் கொடுக்கவில்லை. (வா. 33) மோசே என்பர் அந்தத் தேசங்களை எல்லாம், ரூபனியருக்கும், காதியருக்கும், மனாசேயின் பாதி கோத்திரத்தாருக்கும் பங்கிடவேண்டிய முகாந்தரமும், யோசுவா (வா. 7) 9½ கோத்திரத்தாருக்கு தேசத்தைப் பங்கிடும்படி கற்பிக்கப்பட்ட முகாந்தரமும் காட்டியிருக்கிறது. லேவியருக்குச் சுதந்தரம் கொடுக்கப்



படாததே அந்த முகாந்தரம்.—இஸ்ரவேலருடைய எல்லா வகைப் பலிகளும் முதற்பலன்களும், தசமபாகமும், எல்லாவித காணிக்கைகளுமே லேவியருடைய சுதந்தரம். லேவியர் தங்கள் சகோதரர் காணியில் சுதந்தரம் அடைகிறதைப் பார்த்து, பகை, பொறாமை, வன்கண்மை, எரிச்சல் முதலிய பாவங்களில் சிக்கிக்கொள்ளாதபடி இந்த வாக்கியம்போல் அநேக இடங்களில் அவர்களுக்கு ஆறுதல்சொல்லப்படுகிறது. எண். 18: 20. 23: 24. யோசு. 14: 3, 4. 13: 32, 33.

15. மோசே ரூபன் புத்திரருக்கு அவர்கள் வம்சங்களுக்குத்தக்கதாகச் சுதந்தரம் கொடுத்தானென்கும்போது, பெரிய வம்சங்களுக்கு மாத்திரம் கொடுத்தானென்றும், மோசேயுடைய சட்டப்படி சாழ்ந்த உத்தியோகஸ்தர் பற்பல வம்சங்களுக்கும், வம்சங்களின் உட்பிரிவுகளுக்கும் பங்கிட்டுக்கொடுத்தார்கள் என்றும் எண்ணவேண்டியது.

17. எஸ்போன், தீபோன், ஆதரோத் என்ற பட்டினங்கள் ரூபன், காத் கோத்திர எல்லை நடுவிலிருப்பதால், சிலவேளை ரூபனியரைச் சேர்ந்த நாடுகளாகவும், யோசு. 14: 17: எண். 32: 37. சிலவேளை காதியரைச் சேர்ந்ததாகவும், எண். 32, 34. 1 நாளா. 6: 80, 81-லும் சொல்லியிருக்கிறது. எஸ்போன் பட்டணம் லேவியருக்குக் கொடுக்கப்பட்டது. யோசு. 21: 39. எருசலேம் பட்டணம் யூதராலும், பென்யமீனராலும் சேர்த்துக்கையாய் சுதந்தரிக்கப்பட்டதுபோல் இவைகளுமிருக்கலாம்.

19. பள்ளத்தாக்கின் மலையானது இஸ்ரவேலரால் கனமாயெண்ணப்பட்டது. மோசே அடக்கம்பண்ணப்பட்ட இடம் அதற்குச் சமீபம். உபா. 24: 1, 6.

21. எமோரியருடைய இராசாவின் இராச்சியம் முழுவதும் என்கும்போது அதின் மிகுதியான பங்கு என்றருத்தமாம். இந்தக் கருத்தாகவே மத். 3: 5-ல் "யோர்தானுக்கடுத்த சுற்றுப்புறத்தார் யாவரும்" என்றும் மத். 4: 23-ல் "கலிலேயா எங்கும்" என்றும் சொல்லியிருக்கிறது. எண். 21: 23, 24 ஐ எண். 31: 8 ஓடே ஒத்துப் பார்க்கையில், நமக்குத் தோன்றுகிறபடி ஒரேகாலத்தில் அல்லது ஒரே யுத்தத்தில் மீதியான பிரபுக்கள் வெட்டப்பட்டார்களென்றல்ல, முந்தின யுத்தத்தில் நடந்த மாதிரிப்படி நடந்திருக்கிறது. மீதியானின் பிரபுக்கள் இஸ்ரவேலர்மேல் பகையிருந்த அக்காலத்திலே கொல்லப்பட்டதாலும், அவர்களும் சீகோனுக்குச் சம்பந்தப்பட்டவர்களாயும், அவனுக்குக் கீழ் அதிபதிகளுமாயிருந்தபடியாலும், அவர்களுடைய பேர் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. மீதியானில் இராசாக்களிருந்தபோது, எண். 31: 8. மீதியானின் பிரபுக்கள் சீகோனுக்குக் கீழ் அடங்கியிருப்பதெப்படி? அக்காலத்தில் அநேகம் சிற்றரசுகள் பெரிய இராசாக்களுக்குக் கீழாகவிருப்பார்கள். அந்தப்படி இந்தப் பிரபுக்கள் சீகோனுக்கு கப்பங்

கொடுக்கிறவர்களானதால் சீகோனுக்கு யுத்தத்தில் உதவிசெய்திருப்
பார்கள். அவர்கள் இந்தக் காலத்தில் கொல்லப்படவில்லை. சீகோன்
இராசா அந்தத் திசைகளிலுள்ள மோவாபியரை அழித்தபோது, மீதி
யானவர்களையும் அவர்களோடே சம்பந்தப்பட்ட மீதியானரையும்
பயப்படுத்தி இப்படிப்பட்ட கப்பங்கொடுக்கும்படி அடக்கியிருப்பான்.

22. பிலேயாம் குறிகாரன். எண். 22: 5. 31: 8. தீர்க்கதரிசியென்
னப்படுகிறான். 2 பேது. 2: 16.

24. "அம்மோன் புத்திரரின் பாதி தேசமும்" இந்தப் பாகம்
முன் எமோரியர் வசமானதால், எண். 21: 26. இஸ்ரவேலருக்குப்
பாத்தியப்பட்டதுதான். நியாயாதி. 1: 5. அம்மோனியருடைய சுதந்
தரத்தில் இஸ்ரவேலருக்குப் பாத்தியமில்லையென்று முன்னமே எச்ச
ரிக்கப்பட்டிருக்கிறார்கள். உபா. 2: 9.

29. ரூபேனியர், காதியரைப்போல மனாசேயரும் விரும்பவில்லை.
எண். 32: 1. ஓகை செயிப்பதில் மனாசேயின் கோத்திரத்தானாகிய மா
கீர் வெகு வல்லபத்தைக் காட்டினதாலும்,—தேசம் அந்த 2-கோத்தி
ரத்துக்கு மிஞ்சியிருந்தபடியாலும், மற்ற 2-கோத்திரத்தாருக்கு உத
வியாயிருக்கும்படியாகவும் மனாசேயின் கோத்திரத்துக்கும் பங்கு
கொடுக்கப்பட்டது.

30. யாவீர் தகப்பன் வழியில் யூதாக்கோத்திரமாயினும், 1 நா
ளா. 2: 21, 22. மனாசேயின் மகனாக அழைக்கப்படுகிறார். எண். 32: 41.
யாவீர் மனாசேயின் மகளைக் கலியாணஞ்செய்து மனாசேயின் கோத்
திரத்தாரான வீரரோடே சேர்ந்து அவர்கள் உதவியால் 60-பட்ட
ணங்களைப் பிடித்தார். உபா. 3: 4, 14.

31. மனாசேயின் புத்திரர் இங்கே மாகீரின் பிள்ளைகள் என்னப்
படுகிறார்கள். மாகீரே விசேஷித்தவனும் மனாசேக்கு மீதியான ஒரே
மகனுமாயிருந்தவன். எண். 26: 29. 1 நாளா. 7: 14—16.

## கேள்விகள்.

1. செயிக்கப்படாத தேசங்களும் சாதிகளுமேவை? அவைகளைப்
பற்றித் தெரிந்ததை எழுதும். பெலிஸ்தியர் தேசம் எப்படி இஸ்ரவே
லரைச் சேரவேண்டியது?

2. யோசுவாவை சீக்கிரம் தேசத்தை இஸ்ரவேலருக்கு பங்கிட்
டுக்கொடுக்கச் சொன்ன நோக்கமென்ன? இதினால் நாம் என்ன படிக்
கிறோம்.

3. தேவன் 2½ கோத்திரத்துக்கும் மோசேயைக்கொண்டு கொ
டுத்த தேசத்தை இங்கே யோசுவாவுக்குச் சொல்லவேண்டியதென்ன?



4. பிலேயாமைப்பற்றி உமக்குத் தெரிந்ததை எழுதும். அவனைப்
பற்றிப் புதியஏற்பாட்டில் சொல்லியிருப்பதென்ன? இவனைப்போல
பொல்லாதவர்களும் தீர்க்கதரிசனம் சொன்னதற்கு உதாரணங்களுண்
டா?

5. காத் கோத்திர நாட்டிலுள்ள விசேஷித்த பட்டினங்களையும்
அவைகளில் சம்பவித்த விஷயங்களையும் எழுதும்.

6. லேவியருக்குரிய சுதந்தரமென்ன? மற்றக் கோத்திரங்களுக்
கொத்தபடி லேவியருக்குச் சுதந்தரங் கொடுக்கப்படாத முகாந்தர
மென்ன?

7. பெலிஸ்தியருடைய 5-பட்டினங்களை எழுதி, அவைகளின்
விசேஷங்களை எழுதும். பெலிஸ்தியர் இஸ்ரவேலருக்கு வெகுநாளாய்
சத்துருக்களாயிருந்தார்களென்பதற்கு விபரமுரைக்கவும்.

8. பெத்பெயோர், அஸ்தரோத், எதிரோயி, கீரியாத்தாயீம், கீலே
யாத், எஸ்போன், மக்னயீம் இந்தப் பட்டினங்களிருக்கிற இடத்தைக்
காட்டுகிற ஒரு சிறு படத்தை எழுதி, அதின் விசேஷங்களில் ஒவ்
வொன்றுக்கும் 3-காரியங்கள் எழுதவும்.

## XIV. அதிகாரம்.

1. ஆசாரியனாகிய எலியேசர். யோசு. 8: 33. 9: 15, 18. 19: 51.
இவர் தேவனுடைய நியாயப்பிரமாணத்தில் நன்றாய்த் தேறினவர்.
அந்தப் பிரமாணங்களைக்கொண்டு தான் தேசமும் ஒழுங்காய்ப் பங்
கிடப்படவேண்டியது. வருத்தமான சமயங்களில் தேவனிடத்தில்
ஆலோசித்துக்கொள்வார். கோத்திரப் பிதாக்களின் தலைவர்கள் தே
சம் பங்கிடுவதற்கு ஒவ்வொரு கோத்திரத்திலிருந்து ஒருவராக தேவ
னால் நியமிக்கப்பட்டும், பேரிடப்பட்டும், முன் குறிக்கப்பட்டுமிருக்கிற
வர்களே. எண். 34: 19. அவர்களில் யாராவது ஒருவர் இறந்துபோயி
ருப்பார்களானால், யோசுவாவும் எலியேசரும், தேவஉத்தரவுப்படி
பதிலாட்களை நியமித்துக்கொள்வார்கள்.

2. தேசம் சீட்டுப்போட்டுப் பங்கிடுவதற்கு தேவன் மோசேயைக்
கொண்டு கட்டளையிட்டிருந்தார். எண். 26: 55. 33: 54. இஸ்ரவேலர்
தங்களுடைய பங்குகளுக்குரிய வித்தியாசங்களைக்குறித்து, பொரு
மையும், பகையும், திருப்தியில்லாமையும் ஒருவருக்கொருவர் சண்
டைகளுமில்லாதபடிக்குமிருக்க சீட்டினால் பங்கிடப்பட்டது. மோசே
யும், இயாக்கோபும் சொன்ன தீர்க்கதரிசனப்படி ஒவ்வொரு கோத்தி
ரத்துக்கும் சுதந்தரம் கிடைத்ததைப் பார்க்கும்போது தேவனுடைய
ஞானமும், சத்தியமும் உறுதிப்படுகிறது. தங்களுக்குக் கிடைத்த சுதந்

தரத்தைப்பற்றி யாராவது முறைப்பாடு செய்வார்களானால் அவர்கள் தேவகரத்துக்கு விரோதிகளாக எண்ணப்படுவார்கள். இந்தச் சீட்டு ஒவ்வொரு கோத்திரத்துக்குமுரிய பங்கை தீர்மானிக்கும். ஆனால் அந்தக் கோத்திரத்துக்குரிய எல்லையை திட்டமாய்த் தீர்மானிக்கமாட்டாது. இந்தப் பங்குகள் கோத்திரங்களின் பெருக்கத்துக்குத்தக்கதாக பிற்காலத்தில் விஸ்தாரமாக்கப்பட்டும் குறைக்கப்பட்டும் போயின. எண். 26: 53—56. 33: 54. அதுவும் முன் குறிக்கப்பட்ட தலைவர்களால் மாத்திரம் நடத்தப்பட்டது. யோசு. 17: 14—18.

சீட்டுப்போடப்பட்ட விதமாவது. (A. Clark.)

1. தேசம் 10-பங்காகப் பிரிக்கப்பட்டது.

2. ஒவ்வொரு பங்கும் ஒவ்வொரு விசேஷித்த பேராக அழைக்கப்பட்டது.

3. ஒவ்வொரு பங்கின் பேரும் தோற்கடுதாசித் துண்டிலாவது, மரக்கட்டைத் துண்டிலாவது எழுதப்பட்டது.

4. ஒவ்வொரு கோத்திரத்தின் பெயரும் அப்படியே 10-துண்டுகளில் எழுதப்பட்டது.

5. ஒவ்வொரு பங்கின் பேரும், ஒவ்வொரு கோத்திரத்தின் பேரும் 2-பாத்திரங்களில் போடப்பட்டன.

6. யோசுவா கோத்திரத்தின் பேர்களிருக்கிற பாத்திரத்தில் கைபோட்டு ஒன்றையெடுக்க, எலியேசர் பங்குகளின் பேர் போட்டிருக்கிற பாத்திரத்தில் ஒன்றையெடுத்தார்.

7. எடுக்கப்பட்ட பேரையும் பங்கையும் எல்லாருக்கு முன்பாகத் தெளிவாய் வாசிக்க அதுவே ஒவ்வொரு கோத்திரத்துக்கும் தேவன் தீர்மானித்த பங்கென்று தீர்மானிக்கப்பட்டது.

4. யோசேப்புக்கு 2-கோத்திரத்துக்குரிய பங்கு கிடைத்தது. ஆதி. 48: 5. 1 நாளா. 5: 1, 2. லேவி நீங்கலாக கானான்தேசம் 9½ கோத்திரத்துக்குப் பங்கிடப்பட்டது.

6. யூதாவின் புத்திரர், யோசுவாவும் மற்றவர்களும் தேசம் பங்கிடுவதைப்பற்றி ஆலோசிக்கும் காலத்திலாவது, யோசுவாவும் காலேபும், இஸ்ரவேலரும் யோசு. 10: 36-ல் எபிரோனுக்கு விரோதமாய் யுத்தஞ்செய்யப்போகும் காலத்திலாவது வந்திருப்பார்கள். பொதுப்பட இந்தக் காரியம் சத்துருக்களைப் பின்தொடருகையில் அல்ல, யோசுவா கில்காலிலிருந்தபோது சம்பவித்தன. இவர்கள் காலேபுக்காக பரிந்து பேசும்படிக்கல்ல, தேவனால் அவனுக்கு வாக்குத்தத்தஞ் செய்யப்பட்டதை யோசுவா நிறைவேற்றுவதைப் பார்க்கவும், காலேபுக்குப் பிரியமுண்டாக்கவும் கூடிவந்தார்கள். கில்காலில் தேசம பங்கிடுகிற வேலை துவக்கினாலும், சீலோவில்தான் அது முற்றுப்பெற்றது



யோசு. 18: 1. காலேப் எபுன்னேயின் குமாரன் என்னப்படுகிறான். 1 நாளா. 4: 15. எஸ்ரோனின் குமாரனாகிய காலேபுக்கு வேறுபடுத்த இப்படி அழைக்கப்படுகிறான். 1 நாளா. 2: 18. இவன் கேனாசியன் வம்சத்தான். நியாயாதி. 1: 13. 1 நாளா. 4: 13, 15.

7. காலேப் வேவுபார்க்கப்போனபோது 40-வயது. யோசு. 11: 18. இவர் மற்ற வேவுகாரர் கானானியருக்குப் பயந்துபோய் அவிசுவாசத்தினால் துர்ச்செய்தி சொன்னதுபோல சொல்லாமல் விசுவாசமுள்ளவராய் உண்மையைப் பேசினார். எண். 13: 30—32. 14: 36.

9. எண். 14: 24. உபா. 1: 36.

10. இப்போது காலேபுக்கு 85-வயது. வனாந்தரத்தில் 38-வருஷமும் கானானைச் செயிப்பதில் 7-வருஷமுஞ் சென்றிருப்பதால் அவருக்கு வயது 85-சரி.

12. மலைநாட்டில் தான் எபிரோன் நகரமிருக்கிறது. யோசு. 11: 21. 20: 7. காலேப் பட்டினங்களைப் பார்க்கிலும் நாட்டைப் பேர் சொல்லி அழைப்பதற்கு முகாந்தரமுண்டு. (1) இங்கே சொல்லப்பட்ட இராட்சதர்கள் பட்டினங்களிலிருந்து துரத்தப்பட்டதால் மலைகளின் கெபிகளிலிருந்துகொண்டு இஸ்ரவேலரை இடைஞ்சல்பண்ணினார்கள். (2) பட்டினங்கள் லேவியருக்குக் கொடுக்கப்பட்டது. யோசு. 21: 11, 13. காலேப் விசுவாசமுள்ளவராய் தேவஉதவியினால் சத்துருக்களைச் செயிக்கலாமென்று தைரியமாய்ப் பேசுகிறார்.

13. யோசுவா காலேப்பை ஆசீர்வதித்தான். (1) காலேப்புடைய விருப்பத்தின்படி தேவன் அவனை ஆசீர்வதிக்கவும், அவனுக்கு உதவிசெய்யவும் யோசுவா தேவனை மன்றாடியிருப்பார். (2) வேவுகாரர் சங்கதியில் அவன் சொன்னதை அங்கீகரித்து அவன் கேட்டுக்கொண்டது நியாயமென்று காட்டினார். (3) காலேப்புடைய விருப்பத்துக்கிசைந்து எபிரோனை அவனுக்குக் கொடுத்தார்.

15. அர்பா பெரிய மனுஷன். வளர்த்தியிலும், பெலத்திலும், கனத்திலும், அதிகாரத்திலும் பெரியவன்.—யுத்தம் ஓய்ந்துபோனதால் தேசம் பங்கிடுவதற்கு நல்ல சமயமாயிருந்தது.

## கேள்விகள்.

---

1. இஸ்ரவேலருக்குத் தேசத்தைப் பங்கிட்டவர்களார்? எப்படிப் பங்கிடப்பட்டது? ஏன்?

2. காலேப்புடைய சரித்திரமென்ன? அவருடைய விசுவாச பலத்துக்குத் திருஷ்டாந்தம் சொல்லும்.

3. ரூபேனுடைய முதற்பிறப்பு சுதந்தரம் யாருக்கெல்லாம் பகிடப்பட்டது. ஏன்?

4. தேவன் யோசுவாவுக்கு கானான்தேசமுழுவதையுஞ் செயிப்பாயென்று வாக்குத்தத்தம்பண்ணியிருக்க, இஸ்ரவேலர் கானானியரில் சிலரைத் துரத்திவிடாமற்போனதால், தேவனுடைய வல்லமையைப்பற்றி சிலர் ஆட்சேபித்தால் என்ன சொல்வீர்?

5. "கிரியாத் அர்பா" அர்த்தமென்ன? அதில் நடந்த விசேஷங்களென்ன? இதை காலேப் விரும்பவேண்டியதென்ன?

---

## The World's Birth.

## உலகப் பிறப்பு.

(தொடர்ச்சி.)

### II. அதிகாரம்.

### தேவன்.—வானம்.—பூமி.

---

"ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையுஞ்சிருட்டித்தார்."

எண்ணிறந்த யுகங்களுக்கு முன்னமே, இல பொருளிலிருந்து பூமியும், வானங்களும், வானங்களின் வானங்களும் உண்டானதைப் பற்றி முந்தினபாடத்தில் பார்த்தோம். நாம் இந்தப் பொருளைப் பற்றிச் சிந்திக்குமுன் எட்டாம் சங்கீதத்தில் ஒருபாகத்தை வாசித்து, நமது இருதயம் துதிதோத்திரங்களால் நிறையப்படும்படி விண்ணப்பம்பண்ணுவோமாக.

"எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது. உம்முடைய மகத்துவத்தை வானங்களுக்கு மேலாக வைத்தீர்: உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும நான் பார்க்கும்போது மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன." சங். 8: 1, 3 4.

பிரியமானவர்களே வானத்தையும் பூமியையும் பார்க்கையில், நாம் ஆச்சரியப்பட்டால், நாம இன்னமும் அதிகமாய் ஆச்சரியப்படத்தக்கதான ஒன்றுணடு. அதாவது மகா பெரியதேவன் பூச்சிகளாகிய நம்மை நினைத்து மனுஉருவாகி நமது நடுவில் சஞ்சரித்ததே. முந்தின பாடத்தில் 'ஆதியிலே' சிருட்டித்தார், என்ற இரண்டுவார்த்தைகளைப் பற்றிமாத்திரம் பார்த்தோம். அந்த வார்த்தைகளினால் இரண்டு சத்தியங்களை அறியலாம். ஆதியிலே தேவனைத்தவிர வேறொன்றும் இருந்ததில்லை. ஆவிகளாவது சடப்பொருளாவது தேவதூதராவது பிரதான தேவதூதராவது வானமாவது பூமியாவது இல்லவேஇல்லை,



இரண்டாவது தேவன் இல் பொருளிலிருந்து சகலத்தையும் உண்
டாக்கினார். அவர் உத்தரவுகொடுக்க இன்மையிலிருந்து பூமியும, அதி
லுள்ளயாவும் உண்டாயின. இன்மையிலிருந்தே வானுதி வானங்களும்
காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளும், ஆசனங்களும், அதி
காரங்களும், கர்த்தத்துவங்களும், வல்லமைகளுமுண்டாயின.

இப்போது தேவன், வானம், பூமிஎன்ற மூன்றுவார்த்தைகளைப்
பற்றிச் சிந்திப்போம். தேவன் தமது திருவசனத்தை நமக்குத் தந்தி
ருப்பதால், அதில் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற பெயர்களை
நாம் கவனத்தோடே பார்க்கவேண்டும். இங்கே தேவன்என்று திருப்
பப்பட்டிருக்கிற வார்த்தை எபிரேயு மூலத்தில் ஏலோயீம் என்றிருக்கிற
து. வேதாகமத்தில் தேவன் சில தருணங்களில் தம்மை எகோவா (அதா
வது இருக்கிறவர் அல்லது நித்தியர் என்றும) சில வேளைகளில் தேவன்எ
ன்று வழக்கமாய்த் திருப்பப்பட்டிருக்கிற ஏலோயீம்என்றும் சொல்லு
கிறார். ஆதியாகமம்முதல் வாசகியதிலே ஏலோயீம்என்கிற வார்
த்தை வழங்கப்பட்டிருக்கிறது. எபிரேயு பாஷை ஒருமை இருமை பன்
மை என மூவகை எண்கள் உண்டு. உதாரணம் ஒருமைக்கு அவன்.
இருமைக்கு இருவர் பன்மைக்கு அவர்கள் மாவகள் ழி. ஏலோயீம்என்ற
வார்த்தை ஒருமையுமல்ல இருமையுமல்ல பன்மைச் சொல்லாயிருக்கி
றது. இதற்குப் பயனிலை ஒருமையாகவிருக்கிறது. ஏலோயீம சிருட்
டித்தார்கள் என்றிருக்கவேண்டியதற்குப் பதிலாக சிருட்டித்தான்
என்றிருக்கிறது. இதினாலே நாம் என்ன அறியலாம. நித்தியரான வல்ல
மையுள்ள ஒரேதேவனுண்டு. அவர் பிதா, குமாரன், பரிசுத்தாவி என
மூவராயிருக்கிறார் என்பதே.

"பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர். பிதா வார்த்தை
பரிசுத்தாவி என்பவர்களே. இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்." 1 யோ
வான் 5: 7.

ஏலோயீம்என்ற வார்த்தை உபாகமம் 6ம் அதிகாரம் 4ம் வாக்கி
யத்தில் வருகிறது. இஸ்ரவேலே கேள் நம்முடைய தேவனாகிய கர்த்
தர் ஒருவரே கர்த்தர்என்றும் எபிரேயில் இஸ்ரவேலே கேள் எகோவா
வாகிய நம்முடைய ஏலோயீம ஒரே எகோவாஎன்றும் இருக்கிறது.

திரித்துவத்தில் மூவரும் ஒரே தன்மையுடையவராகவிருக்கிறார்
என்பதற்குக் குறிப்பாக இப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப்
பற்றி இப்போது விஸ்தாரமாய் எழுத இடம்போதாது. மற்றவை
களைப் பற்றியுஞ் சொல்லவேண்டியதிருக்கிறது.

ஆதியிலே, தேவன் சிருஷ்டித்த வானம் பூமியும் என்னவென்று
பார்ப்போம். வானம் என்பது பூமியைத்தவிர சமஸ்தத்தில் மற்றெல்
லாவற்றையுங் குறிக்கும், பூமியென்பது, நாம வாசம்பண்ணுகிற
இந்தச் சிறு கிரகத்தைக் குறிக்கும். இந்தக் கிரகததை மனிதனும் ஒப்
பிட்டுப் பார்க்கையில், அது பெரிதாயும் சமஸ்தத்தோடு ஒப்பிடுகை
யில், அற்பமாயும் காணப்படும். நமது தலைக்குமேலே ஓடுகிற இலக்க
மற்ற நட்சத்திர உலகங்களைப் பார்க்கையில், நம்முடைய உலகம் ஒரு
சிறு அணுவைப்போலிருக்கிறது. ஆனாலும் மற்றெல்லா உலகங்களை
யும்விட நாம் வாசம்பண்ணுகிற பூமி, நமக்கு அதிகமாய்ச் சம்பந்தப்ப
ட்டிருக்கிறது. பூமிஎன்பது இந்தவையகம் முழுவதையும் குறிக்கும்.
ஏசாயா 40: 22. சிலவேளைகளில்த் தரையைக் குறிக்கும்.

# இரக்ஷணிய யாத்திரிகம்.

(தொடர்ச்சி.)

பூவலயத்தை ஆளும் புரவலன் புதல்வன் தூய
சேவடித் தொழும்பு பூண்ட செவ்வியோய் தெரி இந்நின்ற
பாவகாரியை மற்றெனைப் பணித்து மெய் பதறும் பான்மை
மேவரப் புகறி உற்ற வேதியற் கறிய வென்றான். 423

நலங்கிளர் குரவன் கூற நடுங்கி மெய்பதறி உள்ளங்
கலங்கி வெய்துயிர்த்துச் சென்னி கவிழ்த்தர்க்கக் கரணம் யாவும்
மலங்கி உள்ளழியும் அந்த மதியிலான் மறைவலாளன்
இலங்கெழின் முகத்தை நோக்கி இனையன பகரலுற்றான். 424

ஆத்தமக் கவலை கொள்ளா அறிவிலி அகோர பாவத்
தீத்தொழின் மறவன் தேவச் செயலெலாம் இகழ்ந்துபேசும்
நாத்திகப் புலையன் அந்தோ நாசதேசத்தை நச்சி
ஆத்திக நெறியிற் செல்லா அசடர்க்குள் அசடனேயான். 425

கருதிலென் ஜீவகாலம் கமரிடைக் கவிழ்த்த பால்போல்
ஒருதிறத் தானும்ஐய பயன்படா தொழிந்த தன்மைச்
சுருதி கூறிய வாறுசத் துயிலிலோர் கனவு கண்டு
வருதிகிற் கணங்கள் முன்னின் றுருத்தெழ வருந்துகின்றேன். 426

திருக்கிளர் ஞான செல்வர் திருத்தியோய் இகாந்தங் காறும்
கருக்கிளர் மேகசாலங் கதமெனத் திரண்டு வானத்
துருக்கிளர் ஜோதியெல்லாம் புதைபட உயிர்கள் யாவும்
வெருக்கொளீஇ அலமந் தேங்க இருண்டது மேலுங்கீழும். 427

இருநிலம் புதைப்ப மல்கிப் புயல்பரந் திருண்ட தோற்றம்
ஒருமகவின்றி யூழி உடற்றும் நாளுற்ற தென்னப்
பெருநில மடந்தை உள்ளம் பேதுறீஇ யிழவுகாட்டும்
கருநிறப் போர்வை போர்த்த காட்சியைக் கடுக்கு மாதோ. 428

நஞ்சினிற் கரிய வாகி நளிர் நெடுங் கடலிற் பொங்கிச்
செஞ்சவே உலகை மூடித் திசைதோறுஞ் செறிந்த கொண்மூ
எஞ்சுறுப் புனித நீதி இறைவன் வெஞ்சினத்தீ யாவுந்
துஞ்சிட இறந்த தென்னத் தடித்தது துருவங் காறும். 429

தடித்தொளி தழைக்குந் தோறும் தமர வாரிதி நீர்சூழ்ந்த
படித்தலம் நடுங்கி யேங்கப் பருவரைக் குலங்கள் யாவும்



முடித்தலை தகர்ந்து சாய முடுகி மூதண்ட கோளம்
வெடித்திட அசனிக் கூட்டம் வெய்துற இடித்ததன்றே. 430

நெருங்கு காரிருந்தை யூடு நிலவுமின் நெருப்பை உய்த்து
மருங்கு வந்தலவும் ஊழைத் துருத்தியான் மலிய மூட்டி
இருங்கடை ஊழியென்னும் இகலுறு கருமான் வேலை
ஒருங்குடன் தழுவலாலே உலைக்களம் ஆயதும்பர். 431

மைக்கரு முகில்வாய் விண்டு வயங்கொளி மருவ மின்னி
ஒக்கநின் றாறுங் காட்சி உம்பர் நாயகனை நீத்துப்
பக்கமே இரிந்து சோரம் பயின்ற பாழுலகைப் பல்கால்
திக்கவ மதித்துப் பேசிச் சிரிப்பது சிவணு மாதோ. 432

அடுத்தடுத் துலகம் அஞ்ச அசனி நின் றிடிக்கும் ஓசை
வடுத்திகழ் மேனி வள்ளல் வருகின்றார் மழையிற் றோன்றி
நடுத்தர வென்று வானோர் நயந்து பல்லாண்டு கூறித்
தொடுத்திடை யறுது தேவ துந்துமி முழக்கல் போலும். 433

வருதுமரேசன் தூய மலரடிக் கன்பு செய்த
திருவுடையாரே யன்றி ஜெகத்துளா ரெவரும் அஞ்சி
வெருவி உள்ளுடைந்து சோர்ந்தார் விதி நிடேதத்தை வீசிப்
பெருவழி துணிந்து சென்று பேதுற்றுப் பிழைப்புண்டாமோ. 434

வேறு.

புத்தேள் மறைதேர் புங்கவவிப் புதுமை நிகழும் பொழ்தத்தே
செத்தேன் செத்தேன் யானென்னுச் சிந்தை கலங்கித் திடுக்கிட்டேன்
பித்தேறினர் போல் வாயுழறிப் பேதுற்றுயங்கிப் பிழை நினைந்து
கைத்தேன் அழுதேன் கதறினேன் கண்டேன் மரணக் கடுஞ்சூழல். 435

அடுக்கும் மரணம் நினையாத அமையத் தென்று கருதாது
கெடுக்கும் புன்மைச் சிறுமதியாற் கெட்டேன் அந்தோ கிளரொளிவாய்
மடுக்கும் கடிகை வந்ததினி யென்னே யென்று வானோக்கி
நடுக்குற் றுலைந்தேன் திகிற்காட்சி நனிவிஞ்சியது கணந்தோறும் 436

மன்னுங் கருங்கொண்மூ வயிறு வகிரப் பிடித்த பொன்னூலீத்
என்னத் தடித்த தொருமின்னல் இடித்தவோசை யெண்டிசையும்
துன்னச் சுவர்க்க வாசிகளும் துணுக்குற் றிரியத் தொலையாத
இன்னற் கடலின் கரைகாணு திருந்தேன் இருந்த எல்லைதனில். 437

பேசும் படித்தன் றுலகுநிலை பெயரப் பெருநீர் தத்தளிக்க
மாசு படிந்த மனுக்குலங்கள் வதைப்புண் டுழல வரையிடிய
மூசுந் தருக்கள் வேர் பறிந்து முறிந்து துணிய முறைபிறழ
வீசுங் கொடிய பிரளயக்கால் வீங்கிற் றண்டம் விதிர்ப்புற்ற. 438

வருமோர் ஊழி மாருதமாம் வயவெஞ் சீயம் வந்தலவ
உருமே றஞ்சப் பிளிறொலிய ஒளிர்மின் ஓடைப் புகர்முகத்த
கருமா மேக காத்திரத்த கவின்கொள் யானைக் குழூஉக் கலங்கி
வெருவா நடுங்கித் திசைதொறுங்கூ விளிக்கொண்டோடிச் சிதறின
(வால்) 439

மெய்யாய் அந்த வேளையிலே விசுவாசிகளும் மெய்பதறப்
பொய்யாமொழி கூறியவண்ணம் புனைதீர் கடைசி எக்காளம்
மையார் கலிசூழ் வையகமும் வானுந்துளங்க வலிந்துதொனி
செய்யா முழங்கிற் றினியென்னே செயலென் றழிந்தேன் சிறுமதி
(யேன்) 440

இரவிதானோ கனற்பிளம்பில் இயைந்த கொல்லோ எழிலியிடை
விரவித்தடித்த மின்னொளியை விசித்துச் சமைத்த விதமேயோ
கரவொன் றறியேன் பன்மணிகள் கஞலுங் கனகாசன உருவொன்ற
உரவுசெழுங் கொண்டலினுப்பன் உற்றதமரர் உவப்பெய்த. 441

அருளும் பொருளும் கனிதெரிக்கும் ஆன்மபோதச் சுடர்தழைப்ப
மருளுந் தெருளும் விரவி அருள் மலியப் பொலியு மிதயம்போல்
வெருளுமிருளும் மின்னொளியும் விரவி யிருள்போய் விடிவெய்தத்
தெருளும் பொருள் சேர் பொற்பீடந் திகழத்திகழ்ந்ததிருவிசும்பே. 442

ஊழிக்கதிரைப் புடைசுற்றி ஊர்கோள் வளைந்த பரிசாகத்
தாழிப் புவனம் நடுத்தீர்க்கச் சமைந்த நியாயா சனத்தை வளைத்
தூழிக்கனல் செய்த்துற வெழும்பி உலவாக் கோட்டை யாயமைந்தத்
தாழிப்பெருமான் ஆசனத்தை அடுக்க அளியேற் காவதுகொல். 443

ஆயகாலை நடுப்புரிவான் அமலன் வருகை யெதிர்நோக்கி
நேயமிகுவானவர் சேனை நெருங்கி இறைஞ்சித் தொழுதேத்தப்
போயெவ்வுலகுந் திரிந்து வரு புனிதத்தூதர் போற்றிசைப்ப
மாயமறு வேதியர் குழுமி வணங்கி வழுத்தி வாழ்த்தெடுப்ப. 444

கின்னரந் தம்புரு வீணை கிளருஞ் சுரமண்டலமாதி
கன்னர் நவிலும் இசைக்கருவி நாதகீத நயம்பொழியத்
துன்னும் அசனி இடித்ததெனத் தொனிக்கும் ஜெயபேரிகை முழங்கப்
பன்னும் சுரதுந்துமியோடு பலவாச்சிய கம்பலைபம்ப. 445

தேவதேவ திரியேக தேவசுதன் வந்தார் கொடிய
பாவ உலகை நடுத்தீர்க்கும் பரமன் வந்தார் பரலோக
ஜீவபாதை திறந்து வைத்த செல்வன் வந்தார் வந்தாரென்ற
ஆவலோடு கட்டியங்கூறி அடியார் சங்கம் ஆர்ப்பரிக்க. 446

ஆதிமூலப் பரம்பொருளின் அருமைச் சுதனுங் கிறிஸ்தியேசு
நாதன் வித்தாய் அவதரித்த வடிவத்திரு மேனியிற் றோன்றி
ஜோதி முகமண்டலச் சேவை தரிசித்தெவருந் தொழுதிறைஞ்ச
நீதியாதிபதியாகி நியாயாசனத்து வீற்றிருந்தார். 447



வேறு.

ஆண்டிருந்த அரசிளங் கோமுகம்
மூண்ட கோடை முதிர்கடு நண்பகல்
சேண் டயங்கிய செஞ்சுடர் போன்மெனக்
காண்டல் செய்தனென் உள்ளுறக் கன்றியே. 448

ஆதி அம்பரஞ் ஜோதி அடுக்கவும்
பூதியங்கள் எரிந்து புகைந்தன
மீதியங்கிய மீன்கணம் வீழ்ந்தன
மாதிரங்கள் குலைந்த மறுகியே. 449

பொரிவ தீவ புகைவ புழுங்குவ
எரிவ காந்துவ வேங்குவ தேங்குவ
இரிவ சோருவ ஏகுவ மீளுவ
திரிவ நிற்ப திகைப்ப சராசரம் 450

இருளடைந்த இருசுடர் எங்கணும்
மருளடைந்து கலங்கின மாமறை
தெருளடைந்தவருந் திகைத்தார் உளம்
உருளடைந்தில தாலிவ் வுலகமும். 451

வையகத்து மடிந்தனிர் யாவரும்
நொய்தெழுந்து நுவல் நடுத்தீர்வையை
எய்துமின் னென்றெவருந் துணுக்குற
வெய்தோர் சத்தம்பிறந்தது விண்ணிடை. 452

நீருக்கு விஞ்சிய சிந்தையினேன் செவிக்
குருக்கி வார்த்த செம்பாய தவ்வோசை நோந்
திருக்கும் புண்ணில் எரிநுழைந்தாலென
முருக்கி நின்ற தென்னுள்ளந்தனை முற்றுமே. 453

ஆங்கெழுந்த அவ்வோசை அங்கங்குறத்
தாங்கி நிற்குந் தருக்கில ஆதலில்
ஓங்குமால்வரை உட்கி அவ்வொலியில்
வீங்குமெய் பிளந்தொக்க வெடித்தவே. 454

(இன்னும்வரும்.)

# Exposition of the Church Catechism.

## ஞானோபதேசவினாவிடை
### வியாக்கியானம்.

## ௯-ம் அதிகாரம்.
### விசுவாசப்பிரமாணம்.
### ௫-ம் பிரிவு.

### கடைசி நியாயத்தீர்ப்பைப் பற்றி.
(தொடர்ச்சி.)

நியாயத்தீர்ப்பின் குறிப்பு பழைய ஏற்பாட்டின் காலத்தாருக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது.

காயீனுக்கு.

நீ நன்மைசெய்தால் மேன்மையில்லையோ ழி, ஆதி. 4: 7.

ஏனோக்குக்கு.

ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருக்கையில், காணப்படாமற்போனான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டார். ஆதி. 5. 24. யூகா. வச.

ஆபிரகாமுக்கு.

சர்வலோக நியாயாதிபதி நீதிசெய்யாதிருப்பாரோ என்றான். ஆதி. 18: 25.

யாக்கோபுக்கு.

கர்த்தாவே, உம்முடைய இரட்சிப்புக்குக் காத்திருக்கிறேன் ஆதி. 49: 18, 33.

மோசேக்கு.

நான் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனுயிருக்கிறேன் என்றார். யாத். 3: 6, 16. லூக். 20: 37, 38.

யோபுக்கு.

என், மீட்பர் உயிரோடிருக்கிறார் என்று நான் அறிந்திருக்கிறேன். யோபு. 19: 25.

அன்னாளுக்கு.

கர்த்தர் பூமியின் கடையாந்தரங்களை நியாயந்தீர்ப்பார். 1 சாமு 2: 10.

சவுலுக்கு.



நாளைக்கு நீயும் உன் குமாரரும் என்னோடிருப்பீர்கள். 1 சாமு. 28: 19.

எலியாவுக்கு.

எலியா சுழல் காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான். 2. இரா. 2: 11.

தாவீதுக்கு.

துன்மார்க்கரும், தேவனை மறக்கிற எல்லா சாதிகளும், நரகத்திலே தள்ளப்படுவார்கள். சங். 9: 17.

சங். 16: 9-11. 21: 4. 50: 4-6. 73: 24-26. 96: 13. 98: 9.

சாலோமோனுக்கு.

துன்மார்க்கன் தன் தீமையிலே வாரிக்கொள்ளப்படுவான்; நீதிமானோ தன் மரணத்திலே நம்பிக்கையுள்ளவன். நீதி. 14: 32. பிர. 2: 17. 11: 9. 12: 7, 14.

ஏசாயாவுக்கு.

பராக்கிரமசாலி சணற்கூளமும், அவன் கிரியை அக்கினிப் பொறியுமாகி, இரண்டும் அவிப்பாரில்லாமல் ஏகமாய் வெந்து போம். ஏசா. 1: 31.

ஏசா. 25: 8; 26: 19—21. 30: 33. 33: 14. 57: 1, 2.

அவர்களுடைய பூச்சிசாகாமலும், அவர்களுடைய அக்கினி அவியாமலும் இருக்கும். ஏசா. 66: 24

எசேக்கியேலுக்கு.

பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும். எசே. 18: 4, 21, 26.

தானியேலுக்கு

நான் பார்த்துக்கொண்டிருக்கையில், சிங்காசனங்கள் வைக்கப்பட்டது; மற்றும் நியாயசங்கம் உட்கார்ந்தது; புஸ்தகங்கள் திறக்கப்பட்டது. தானி. 7: 9, 10. 12: 2.

ஓசியாவுக்கு.

அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன்; அவர்களை மரணத்துக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன்; மரணமே உன் வாதைகள் எங்கே? பாதாளமே உன் சங்காரம் எங்கே? ஓசியா. 13: 14.

ஆமோசுக்கு.

உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு. ஆமோஸ். 4: 12.

மல்கியாவுக்கு.

என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள். மல். 3: 17.

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்னும் கோத்திரத்தலைவர்கள் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கை

யிட்டு, சுயதேசத்தை நாடிப்போகிறோமென்று தெளிவாய்ச் சொல்லியிருக்கிறார்கள். எபி. 11: 13, 14.

நியாயத் தீர்ப்பைப்பற்றி புதியேற்பாடு இன்னம் தெளிவாய்ச் சாண்பிக்கிறது.

உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசிநாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பானென்று அறிந்திருக்கிறேனென்று மார்த்தாள் சொன்னாள். யோவா. 11: 24.

அப். 3: 20, 21. பிலி. 1: 23, 24.

நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே. ரோ. 14: 10. 2 கொரி. 5: 10.

எபி. 9: 27. யாக். 5: 9. 2 பேது. 3: 7, 10. யூதா. 6: 7, வச.

இந்த பயங்கரமான நாள் புதியேற்பாட்டில் அநேக உபமானங்களால் விளக்கப்பட்டிருக்கிறது.

நல்லகனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும். மத். 3: 10, 12.

களைகளையும், அறுக்கிறவர்களையும் ஒப்பிடும். மத். 13: 30, 39

நல்லவைகளையும், ஆகாதவைகளையும் சேர்க்கிற வலைக்கு ஒப்பிடும். மத். 13: 47, 48.

பொல்லாத ஊழியக்காரனுக்குண்டாகும் பங்குக்கு ஒப்பிடும். மத். 24: 45—51.

புத்தியில்லாத கன்னிகைகளுக்கு ஒப்பிடும். மத். 25: 10.

தாலந்து; செம்மறியாடு வெள்ளாடு என்ற உவமையைக் கொண்டும். மத். 25: 19—33.

இலாசரு, ஐசுவரியவான் உவமையைக்கொண்டும். லூக். 16: 19—31.

நோவாவின் நாட்களில் நடந்ததுபோல மனுஷகுமாரனுடைய நாட்களிலும் நடக்கும் என்றும் காட்டப்பட்டிருக்கிறது. லூக். 17: 26 மத். 24. 37, 39.

---

வினா. நியாயாதிபதியாயிருப்பவர் யார்?

விடை. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே.

தேவன் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு மனுஷருடைய அந்தரங்கங்களைக் குறித்து நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்நாளிலே இது விளங்கும். ரோ. 3: 16.

நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்குமுன்பாக நிற்போமே. ரோ. 14: 9, 10. 2 கொரி. 5: 10. 2 தீமோ. 4: 1.

---



## சமாசாரத்திரட்டு.

**இந்தியா.**—சந்தல்லென்னும் சீமையில் புரக்கலகங்கள் உண்டானதினால் பட்டாளங்கள் சில அவ்விடத்துக்கு விரைவில்போக உத்தரவு பிறந்திருக்கிறது. கோவை இருப்புப்பாதைக்குரிய ஆலோசனைகள் முடிவாயிருக்கிறது. அவ்வேலை இங்கிலீஷ்க்காரரின் ரொக்கத்தினால் விரைவில் நடத்தப்படுமாம். மைசூர்த் துரைத்தன இருப்புப்பாதை பங்களூரிலிருந்து 35 மைல் தூரமான சின்னபட்டணம்வரைக்கும் சென்றமீ முதல்தேதி திறக்கப்பட்டது. அது முடிவுபெற்றால், மைசூர் ராஜதானிமட்டும் செல்லுமாம். கொஞ்சவயதுள்ள பெண்களை துன்மார்க்க பிரவிர்த்திகளுக்காக விடும்பேருக்கு தெண்டனை செய்யப்படுமென்று சென்னைக் கவர்ண்மெந்தார் சென்னைராஜதானியெங்கும் பிரசித்தப்படுத்தியிருக்கிறார்கள். அப்கானிஸ்தானின் முந்தின அமீராகிய ஷீர் அலிக்கும் ருஷிய ராஜாங்கத்தாருக்கும் போக்குவரவுசெய்யப்பட்ட அந்தரங்க கடிதங்கள் சபூல்நகரத்தில் ராபர்ட்ஸ் தளபதியினால் முன் கண்டுபிடிக்கப்பட்டனவே. அவை இப்போது பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கின்றன. அடுபடை தடுபடை முயற்சிகளுக்குரிய சங்கேத உடன்படிக்கையொன்று அமீருக்கும் ருஷியாவுக்கும் இடையில் 1878-ம் வருஷத்தில் நிர்வகித்து கையொப்பமிடப்பட்டிருக்கிறது. அந்நிய ராஜ்ஜியபசத்துராதிகள் யார்வந்தாலும் ருஷியா அமீருக்குத் துணைநிற்பதாக அதில் வாக்குறுதி பண்ணியிருக்கிறது. 1878ம் வரு) அக்டோபர்மாசத்தில் எழுதிய ஒரு கடிதத்தில் பிரிட்டிஷ் துரைத்தனத்தாரோடு வெளிக்கு சமாதானம் பேசிக்கொள்ளவும் ரகசியத்தில் போருக்கு அயத்தப்படவும் ருஷிய தளபதி அமீருக்குப் புத்திசொல்லுகிறார். அதின்பின்னிட்டு ருஷிய தளபதிக்கு அமீர் எழுதிய கடிதத்தில் முன்னே வாக்களித்திருந்தபடி 32ஆ போர்வீரரை தமக்கு அனுப்பக் கேட்கிறார். மாரிகாலமானதினால் மேற்படி தளம் அனுப்ப சௌகரியமில்லையென்று ருஷியதளபதி அதற்குப் பதிலெழுதியிருக்கிறார்.

**ஐரோப்பா.**—ஒல்லாந்து தேசத்தில் மாஸ் நதியைச்செறுக்கும் பெரிய அணைக்கட்டு ஒன்று விலிமன் எனனும் இடத்தில் உடைந்துபோகவே ஹெறபுஸ்டென், அல்தீனு பிரதேசமெல்லாம் வெள்ளக்காடாயின. 18-கிராமங்கள் ஜலத்தில் மூழ்கிப்போனதினால் குடிகளிலும் பலர் மடிந்ததாக உத்தேசம். ஆடு மாடுகளின் சேதம் கணக்கில்லை. சிப்புருதீவிலும் பயங்கரமான ஜலப்பிரவாகங்கள் உண்டாகி, லார்னகா என்ற ஒரு ஊரில்மட்டும் 200-சில்வானங் குடும்பங்கள் இல்லிடமற்றவர்களாயினர். ஜர்மானியாவில் யூதஜாதியாருக்கு விரோதமான குழப்பம் இன்னும் நீடிக்கின்றதாம். அநியாயமாய் துன்பப்படும் யூதருக்கு ஜர்மானிய சக்கரவர்த்தி அநுசாரியாக நிற்கிறார்.

---

மார்ச்சுமீ௳ நாள் 31-மாசிமீ௳ 19உ முதல், பங்குனிமீ௳ 20உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| செ | 1 | ௧௯ | மகத்துவமானவராலே லீபனோன் விழும். ஏசாயா 10:34. |
| பு | 2 | ௨௦ | கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார். 11:2. |
| வி | 3 | ௨௧ | கர்த்தராகிய யெகோவா என்பெலனும் என்கீதமுமானவர். 12:2. |
| வெ | 4 | ௨௨ | கர்த்தரின் நாள் சமீபமாயிருக்கிறது. 13:6. |
| ச | 5 | ௨௩ | கர்த்தர் சீயோனை அஸ்திபாரப்படுத்தினார். 14:32. |
| ஞா | 6 | ௨௪ | அவனவனுடைய ஆத்துமா அவனவனில் கிலேசப்படுகிறது. 15:4 |
| தி | 7 | ௨௫ | உனக்கு என் கண்ணீரைப் பாய்ச்சுவேன். 16:9. |
| செ | 8 | ௨௬ | உன் ரட்சிப்பாகிய தேவனை மறந்தாய். 17:10. |
| பு | 9 | ௨௭ | என் வாசஸ்தலத்திலிருந்து கண்ணோக்குவேன். 18:4. |
| வி | 10 | ௨௮ | அவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்புவார்கள். 19:22. |
| வெ | 11 | ௨௯ | நாங்கள் எப்படி விடுவிக்கப்படுவோம். 20. 6. |
| ச | 12 | ௧ | நான் என் காவலிடத்திலே தரித்திருக்கிறேன். 21: 8. |
| ஞா | 13 | ௨ | எனக்கு ஆறுதல் சொல்லவராதேயுங்கள் என்கிறேன். 22:4. |
| தி | 14 | ௩ | அவர் அதை அழிவுக்கென்று நியமித்தார். 23:13. |
| செ | 15 | ௪ | இந்த ஜனங்களின் நடுவிலும் கொஞ்சம் மீந்திருக்கும். 24:13. |
| பு | 16 | ௫ | அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார். 25:8. |
| வி | 17 | ௬ | மரித்தோரை பூமி புறப்படப்பண்ணும். 26:19. |
| வெ | 18 | ௭ | அதை இரவும் பகலும் காத்துக்கொள்வேன். 27: 8. |
| ச | 19 | ௮ | விசுவாசிக்கிறவன் பதறான். 28:16. |
| ஞா | 20 | ௯ | இனி யாக்கோபு வெட்கப்படுவதில்லை. 29:22. (30:15.) |
| தி | 21 | ௧௦ | நீங்கள் மனந்திரும்பி அமர்ந்திருந்தால் ரட்சிக்கப்படுவீர்கள். (31: |
| செ | 22 | ௧௧ | சேனைகளின் கர்த்தர் எருசலேமின்மேல் ஆதரவாக இருப்பார். 5 |
| பு | 23 | ௧௨ | இதோ ஒரு ராஜா நீதியாக அரசாளுவார். 32:1. |
| வி | 24 | ௧௩ | கர்த்தர் நம்முடைய ராஜா, அவர் நம்மை ரட்சிப்பார். 33:22. |
| வெ | 25 | ௧௪ | கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள். 34:16. |
| ச | 26 | ௧௫ | மீட்கப்பட்டவர்களே அதில் நடப்பார்கள். 35:9. |
| ஞா | 27 | ௧௬ | நீ நம்பியிருக்கிற இந்த நம்பிக்கை என்ன! |
| தி | 28 | ௧௭ | கர்த்தாவே உமது செவியைச் சாய்த்துக் கேளும். 37:17. |
| செ | 29 | ௧௮ | கர்த்தர் என்னை ரட்சிக்க வந்தார். 38:20. |
| பு | 30 | ௧௯ | நீர் சொன்ன கர்த்தருடைய வார்த்தை நல்லதுதான். 39:8. |
| வி | 31 | ௨௦ | என் ஜனத்தை ஆற்றுங்கள் தேற்றுங்கள். 40:1. |

## விசேஷ நாட்கள்.

2. தபசு நாட்களில், முதல் நாளாகிய புதன்கிழமை.
6. லெந்தென்னும் நாட்களில், 1-ம் ஞாயிறு.
13. லெந்தென்னும் நாட்களில், 2-ம் ஞாயிறு.
16. பௌரணமி.
20. லெந்தென்னும் நாட்களில், 3-ம் ஞாயிறு.
25. பரி, கன்னிமரியாள் மங்களவாக்குத் திருநாள்.
27. லெந்தென்னும் நாட்களில், 4-ம் ஞாயிறு.
30. அமாவாசை.


# நற்போதகம்.

௪. ஏப்பிரல்மீ௳. ௲அஅக௵.


## யோசுவாவின் புஸ்தகம்.

## XV. அதிகாரம்.

1. சீட்டுப் போடப்பட்ட வகையைப்பற்றி நாம் கவனிக்கவேண்டியது என்னவென்றால், தேவனுடைய சமுகத்தில் செபத்தோடும், கவனத்தோடும் போடப்பட்டதென்றும்; யோசுவா 18 4, 5ல் தேசம் நன்றாய் பார்வையிடப்படுவதற்கு முன்னே 9½ பங்காக வகுக்கப்பட்டதென்றும், ஒவ்வொரு கோத்திரத்துக்குமுரிய பங்குகள் இந்தச் சமயத்தில் வெகுதிட்டமாயும், கூட்டக்குறைக்க வென்றிராமல் கண்டிப்பாயும் பகுக்கபடாமல், பொதுப்பட எந்தெந்த கோத்திரத்துக்கு என்னென்ன பங்கென்று அறியும்படிக்கு மாத்திரம் சீட்டுப்போடப்பட்டது. யூதாக்கோத்திரத்துக்குள் சிமெயோன், தாண் கோத்திரங்களுக்குப் பின்பு பிரித்துக்கொடுக்கப்பட்டது. யோசு. 19: 9.

யூதா தன் சகோதரரில் விசேஷித்தவன் என்று காண்பிக்கும்படியாகத்தேவ உத்தரவுப்படி யூதாவுக்கு முந்திச் சீட்டுவிழுந்தது.

3. எண். 34. 3—5.

6. போகானின் கல் என்கும்போது போகான்வாசம்பண்ணின இடமல்ல. யோர்தானுக்கிந்தப்பக்கத்தில் ரூபேனியருக்கு பங்கில்லையே. அவன்செய்த வீரமான ஒருசெய்கையினிமித்தம் அதைநினைக்க கல் வைக்கப்பட்டிருக்கும். அல்லது இராகேலின் கல்லறையின்மேல் இயாக்கோபு ஒருதூணை நிறுத்திவைத்ததுபோல ஆதி 35; 20. போகான்மரித்து அடக்கம்பண்ணின இடத்திலும் அப்படிப்பட்ட கல்தூண் நிறுத்தியிருக்கலாம்.

7. தேபீர் 15வால சொல்லப்பட்டதுமல்ல. அது எபிரோனுக்குச் சமீபமானதாம். யூதாவின் எல்லைக்கு வெகுதூரமுள்ளதாம். யோசு. 13. 26ல் சொல்லிய தேபீருமல்ல, அது யோர்தானுக்குப் புறத்தியுள்ளது.

8. இன்னோம் இவன்யாரென்றும் தெரியாது. அந்தப்பேரால் அந்த பள்ளத்தாக்கு அழைக்கப்படுகிற முகாந்தரமும் தெரியாது. இது எருசலேமுக்கு கீழ்பக்கத்திலிருக்கிறது. இது முந்தி வெகுபிரியமான இடமாயினும் பின்பு நிந்தையான இடமாயிற்று. இஸ்ரவேலர் பின்பு மோளேகுக்கென்று தங்கள் பிள்ளைகளை அங்கே பலியிட்டார்கள். 2இராசா. 23; 10. இது தோபேத்தென்றும் அழைக்கப்ப

டும். எரேமி. 7. 32; யோசியா இராசா மோளோகுஎன்ற விக்கிரத்தை அந்த இடத்தைவிட்டு எடுத்துப்போட்டபின்பு, எருசலேமியர் தங்கள் குப்பைமுதலான அசுத்தங்களை அதில் எறிந்துபோடுவார்கள். நாற்றமுண்டாகாதபடிக்கு அந்த அசுத்தங்களை நாடோறும் சுட்டெரித்துப்போடுவார்கள். இது முகாந்தரத்தால் புதுஏற்பாட்டில் அந்தவார்த்தை நரகமென்னப்படுகிறது. மத். 5 22, 29, 30; 10. 28; 18. 9.

எபூசியரின் பட்டினமாகிய எருசலேம் பூர்வீகத்தில் எபூசி என்னப்பட்டது. யோசு. 18: 28. நியாயாதி. 19: 10. எருசலேம் சரியானபடி பென்யமீனைச் சேர்ந்தது. உபா. 33: 12. யோசு. 18: 28. நியாயாதி. 1. 21; ஆனாலிங்கே 63ல் யூதாவைச்சேர்ந்ததாகச் சொல்லியிருக்கிறது. எருசலேமில் பாதி பென்யமீனுக்கும், பாதி யூதாவுக்கும் சேர்ந்திருக்கலாம். பென்யமீனர் இந்த முக்கிய இடத்தைப் பிடிப்பதற்கும் எபூசியரைத் துரத்திவிடுவதற்கும் யூதா கோத்திரத்தாருடைய உதவியைத் தேடவேண்டியிருந்தது. சிமியோனைச்சேர்ந்த சிக்லாகை பெலிஸ்தியரிடத்திலிருந்து தாவீது யுத்தத்தால் சம்பாதித்துக்கொண்டதுபோல 1 சாமு 27: 6. இந்த எருசலேம்பட்டினமும் யுத்தத்தால் யூதா வசமாயின.

10. பெத்சேமஸ்என்று அநேக பட்டினங்களுக்குப் பேர். யூதாவில் ஒன்று. யோசு. 21: 16. 2 இராசா. 14: 11. ஈசக்காரில் ஒன்று நபுதலியில் ஒன்று. யோசு. 19: 22, 38.

14. அர்பாவின்புத்திரர் தங்கள் அரண்களிலிருந்து துரத்தப்பட்டார்கள். யோசு. 14: 12. இதுவும் பின்சொல்லப்படுகிற சங்கதியும் யோசுவாவின் ஜீவியகாலத்திலாவது யோசு. 11: 21. அவனுடைய மரணத்துக்குபின்பாவது நியாயாதி. 1: 10. நடந்திருக்கும். இந்த இராட்சதர்களின் பேர்களே எண். 13: 33லும் சொல்லியபடியால் அவர்கள் வெகுகாலமாய் உயிரோடிருந்திருக்கிறார்களென்று எண்ணத்தக்கது. அல்லது தங்கள் பெற்றோர் பேரால் அழைக்கபட்டுமிருப்பார்கள்.

17. ஒதனியேல காலேபுடைய சகோதரனென்றால் அந்த விவாகம் சரியல்லவே யென்று சிலர் ஆக்ஷேபிப்பார்கள். சகோதரனென்று பொதுப்பட இனத்தாருக்குச் சொல்லப்படுவதாம். காலேப் ஒதனியேலுடைய சகோதரனல்ல, காலேப் எபுன்னேயின் குமாரனென்றும், ஒதனியேல் கேனாசின் குமாரனென்றும் சொல்லியிருக்கிறதே. 1 நாளா. 4: 13.

19. காலேப்பின் குமாரத்தி தனக்கொரு நன்கொடை கேட்கிறாள். ஆதி: 33: 11. புஞ்சைநிலம் கொடுக்கபட்டிருந்ததை போதாதென்று எண்ணி, நஞ்சைநிலங்களையும் சீதனமாகக் கேட்டாள். காலேப் தண்ணீர்எங்கும் பாயத்தக்கதாக மேட்டுப்புற நஞ்சைகளையும், பள்ளதாக்கான நஞ்சைகளையுங் கொடுத்தார்.

32. இதற்கு முந்தினவாக்கியங்களில் 38 பட்டினங்கள் பேர் குறிக்கபட்டிருக்க, 29 பட்டினங்களென்று தொகை சொல்வானேன்? 29 பட்டினங்கள் தான் யூதாவைச் சேர்ந்தது. மற்ற 9 பட்டினமும் சிமேயோனைச் சேரவேண்டியது. அல்லது இந்த 29 பட்டினங்கள்தானமதில்சூழ்ந்த பட்டினங்களாம். மற்ற 9 பட்டினங்களுக்கும் சுற்றுக் கிராமமிருக்கமாட்டாது.

36. இங்கே 15 பட்டினங்கள் எண்ணப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க 14 பட்டினமென்று சொல்வானேன்? 14 தான் சரியான



பட்டினமாம். அல்லது கேதேரா என்பதும் கெதேரோத்தாயீம்என்
பதும் ஒரேபட்டினத்துக்குப் போயிருக்கலாம்.
45—47. பெலிஸ்தியரின் பட்டினங்களில் 3 பேர் சொல்லப்ப
ட்டிருக்க காத், அஸ்கலோன்என்ற இரண்டு பட்டினங்களும் பேர்
காட்டப்படவில்லை. இவை இக்காலத்தில் வல்லமையுள்ளதும் பேர்
பெற்றதுமில்லை.
63. எருசலேமின் ஓர்பாகம் யோசுவாவால் பிடிபட்டது. ஆனா
ல் சீயோன் கோட்டை தாவீதின் காலம்வரைக்கும் எபூசியரால
காக்கப்பட்டது. அந்த எபூசியர் திரும்பவும் எருசலேமை தங்கள்
வசமாக்கியிருப்பார்கள். ஆகையால் இஸ்ரவேலர் இரண்டுமூன்று
தடவையாய் அவர்களோடே யுத்தஞ்செய்யவேண்டியிருந்தது. நியா
யாதி. 19: 11. 2 சாமு. 5, 6, 7: யூதா புத்திரர் தங்கள் அவிசுவாசத்
தால் அவர்களைத் துரத்தக்கூடாமற்போயிற்று. மாற். 6: 5, 6. அவர்கள்
அவிசுவாசத்தினிமித்தம் கிறிஸ்துநாதர் தமது பலத்த செய்கை
களை அவர்கள் நடுவில் செய்யாததுபோல இதுவுமிருந்தது. மத். 13:
5, 8. அவர்கள் தங்களுடைய சோம்பல், பயம், அக்கிரமங்களுக்கி
டங்கொடுத்தபடியால் தேவஒத்தாசையைத் தேடாமற்போனார்கள்.
இங்கே யூதாபுத்திரரைப் பற்றிச் சொல்லிய காரியமே நியாயாதி. 1:
21ல் பென்யமீனைப் பற்றியுஞ் சொலலியிருக்கிறது. ஆகையால் எருச
லேம் ஆதி. 49: 27. உபா. 33: 12. எரேமி. 6: 1. பென்யமீனைச் சேர்ந்
ததாகவும் இங்கேயும் சங். 78: 68, 69ல் யூதாவைச் சேர்ந்ததாகவுஞ்
சொல்லியிருக்கிறது. இரண்டு கோத்திரத்துக்கும் நடுவிலிருந்தபடி
யால் இருவரும் அதை சுதந்தரித்து வந்தவர்களென்றும் சிறையிருப்
புக்கு பின்பும் இருவரால் குடியேற்றப்பட்டதென்றும் நேகேமி. 11:
4. சிலர் நினைக்கிறார்கள். இப்போது பென்யமீனுக்குப் பாத்தியமில்லை.
யூதாப்புத்திரரே, யோசுவாகாலத்திலும் அவருடைய மரணத்துக்கு
ப்பின்பும் அதைப் பிடித்துக்கொள்ள வெகுமுயற்சியாயிருந்தார்கள்.
நியாயாதி. 1: 8. எருசலேமில் மிசசமானபாகம் பென்யமீன் எல்லை
க்குள்ளானது. ஆகையால் எருசலேம் பென்யமீனுக்குரிய பட்டின
ங்களோடே கணக்கிடப்பட்டிருக்கிறது. தேவாலயம் கட்டின மோரி
யாமலையும், எபூசியரிலிருந்து பறித்த சீயோன்கோட்டையும் யூதா
வசமாயின.

---

## கேள்விகள்.

---

1. யூதாக்கோத்திர 4 எல்லைகளையுஞ் சொல்லு? இதை வெகு
திட்டமாய்ச் சொல்லவேண்டியதென்ன?
2. யூதாவுக்குவிழுந்த பட்டினங்கள் எத்தனை? அதைப்பேர்
பேராகச் சொல்லவேண்டிய முகாந்திரமென்ன? பிற்காலங்களில்
அவைகளில் கலகஞ்செய்த பட்டினமெது?
3. பெத்சேமெஸ், பெத்தாகோன், என்கேதி, என்சேமேஸ், கிரி
யாத்சேபேர், பெயெர்சேபா, இப்பட்டினங்களின் அருத்தமென்ன?
4. போகானின்கல், கெயிலா, தெக்கோவா, மாரேசா, லாகீஸ்,
இவைகளில் நடந்த விசேஷமென்ன?
5. தாவீது இராசா, சவுலால் துன்பப்பட்ட காலங்களில், அவர்
பயந்து ஒதுங்கியிருந்த இடங்களெவை? அவைகளின் விசேஷங்க
ளுமெவை?

6. தேசம் பங்கிடப்பட்டதில் முதலாவது யூதாவுக்கும் பின்பு யோசேப்புக்கும் சீட்டுவிழுந்ததற்கு முகாந்தரமென்ன ?

7. இவ்வாகமம் தாவீதுஇராசாவின் காலத்துக்குமுன் எழுதப்பட்டதென்பதற்கு இவ்வதிகாரத்திலிருந்து நியாயஞ்சொல்லும் ?

8. ஓதனியேல் என்பவருக்கு மனையாட்டி கிடைத்தவண்ணம் வேறே யாருக்குங்கிடைத்தது ? எப்படி ? இரண்டுசரித்திரத்திலும் மனையாட்டிகள், கட்டாயமாயல்ல வெகுபிரியத்தோடு வாழ்ந்திருந்தார்களென்பதற்கு குறிப்பென்ன ?

9. ஓதனியேல் யார் ? அவருடைய வீரத்துக்கும், விசுவாசத்துக்குமுரிய சரித்திரச் சுருக்கத்தை எழுதும் !

---

## XVI. அதிகாரம்.

1. எப்பிராயீமரும், மனாசேயின் பாதிக்கோத்திரத்தாரும் இங்கே யோசேப்பின் புத்திரரென்று பொதுவாய் அழைக்கப்படுகிறார்கள். இருபேருக்கும் ஒரேசீட்டு விழுந்ததினால் அல்ல, இந்த அதிகாரத்தின் முதல்வாக்கியங்களில் அவர்களைப் பொதுவாயும், அவர்களுடைய தெற்குஎல்லையையும் சொல்லுகிறதால் அப்படி மொத்தமாய் அழைக்கப்படுகிறார்கள். தேவன் முதலாவது யூதாவுக்கும் பின்பு இயோசேப்பின் புத்திரருக்கும் ஒழுங்குப்படி சீட்டுவிழச்செய்தது ஆச்சரியமே. ரூபேனுடைய முதற்பிறப்புச் சுதந்தரம் யூதாவுக்கும், இரட்டைப்பங்கு இயோசேப்புக்கும் கிடைத்தது. 1 நாளா. 5, 1, 2. இயோசேப்பு எல்லாருக்கும் இளையவனாயினும், இயாக்கோபால் நேசிக்கப்பட்ட மனைவியால் பிறந்தவனும், எல்லாரிலும் அதிகமாய் நேசிக்கப்பட்டவனும், பஞ்சகாலத்தில் இயாக்கோபின் குடும்பத்தாரை ஆதரித்தவனுமாதலால் விசேஷித்த இரட்டிப்பான பங்கு அவனுக்குக் கிடைத்தது. இதினால் இயாக்கோபாலும், மோசேயாலும், அவர்களைப்பற்றிச் சொலலியத் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறின—: கிழக்கே யோர்தானும் மேற்கே பெரியசமுத்திரமும் அவர்கள் எல்லையாதலால் செழிப்பான கானான்தேசத்தின் நடுப்பங்கு அவர்களுக்குக் கிடைத்தது.

2. பேத்தேலே ஆதியில் லூஸ்என்றழைக்கப்பட்டது. ஆதி. 28, 19, 48, 3. சிலர் இந்த லூஸ் வேறே என்கிறார்கள். நியாயாதி. 1: 26. வேறுசிலர், வெவ்வேறான பட்டினங்களாயிருந்த இரண்டும் பிற்காலத்தில் விஸ்தாரமாகி ஒன்றாய்ப் போயிற்றென்பார்கள்.

4. யூதாக்கோத்திரத்தார் தங்கள் சுதந்தரத்தைப் பெற்றபிற்பாடு யோசேப்பின் புத்திரரும் மற்றக் கோத்திரங்களுக்கு முன்னாடியே தங்கள் சுதந்தரத்தை யடைந்தார்கள். இவர்களுக்கு இயோசுவா, எலியேசருடைய உத்தரவினால், சுதந்தரம் பிரித்துக்கொடுக்கப்பட்டது.

5—9. இங்கே சொல்லியிருக்கிற எல்லையும், பட்டினங்களும் இக்காலத்திலிருக்கிற நமக்கு கருகலாயும் சமுசயமாயும் தோன்றுவது ஆச்சரியமல்ல. வெகுகாலமானதால் இடங்கள் மாற்றப்பட்டுப் போயின. மற்ற இடங்கள் இருந்த தோற்றமுந் தெரியாமல் அழிந்து போயின. ஆனால் அக்காலத்து இஸ்ரவேலருக்கோ இங்கே சொல்லப்பட்டிருப்பதெல்லாம் தெளிவும், நிச்சயமுமான சங்கதிகளாக அறியப்பட்டவைகள்.



10. இங்கேயுள்ள கானானியரை சாலோமோன்இராசா காலம் வரை, துரத்தக்கூடாதவர்களாயிருந்தார்கள். 1 இராசா. 9: 16. கானானியர் பகுதிகட்டினார்கள். யோசு. 17: 13. 1 இராசா. 9: 16.

---

## கேள்விகள்.

1. இயாக்கோபு, மோசே என்பவர்கள் யோசேப்பைப்பற்றிச் சொல்லிய தீர்க்கதரிசனமென்ன ? அதெப்படி நிறைவேறிற்று ?

2. எப்பிராயீம் மனாசேயின் பாதிக்கோத்திரத்தாருக்கு சீட்டுவிழுந்த தேசத்தின் எல்லை எது ?—அதெப்படிப்பட்ட தேசம்.

3. எப்பிராயீம் கோத்திரத்திலுள்ள விசேஷித்தபட்டினங்களையும் அதிலுள்ள விசேஷங்களையும் சொல்லும் ?

4. இந்தக் கோத்திரத்திலுள்ளதும், புதிய ஏற்பாட்டில் பேர் காட்டியிருப்பதுமான கிராமங்களெவை ? அங்கங்கே சம்பவித்த காரியமென்ன ?

5. எப்பிராயீமர் கானானியரை துரத்திவிடாமற்போன முகாந்தரமென்ன ? நாம அதினால் என்னபடிக்கிறோம்?

6. எப்பிராயீமருடைய சரித்திரச்சுருக்கத்தை எழுதும். அந்தக் கோத்திரத்திரத்தில் எழும்பின விசேஷித்த ஆட்களைச் சொல்லும்.

---

## XVII. அதிகாரம்.

1. மனாசே யோசேப்புக்கு முதற்குமாரன். எப்பிராயீம் வல்லமையும், பெருக்கமுமுள்ளவனாயினும், முதற்பிறப்புக்குரிய சுதந்தரத்தை மனாசே பெறவேண்டியது இயல்பே. அந்தப்படி மனாசேயின் பாதிக்கோத்திரத்துக்கு யோர்தானுக்கப்பாலும் சுதந்தரங் கிடைத்தது போக, யோர்தானுக்கு மேற்காகவும், அலாதியான சுதந்தரங் கிடைத்தது.

மாகீர் மனாசேக்கு ஒரேகுமாரன். அவன் இங்கேயும் நியாயாதி. 5: 14லும் முழுக் கோத்திரத்துக்கும் தலைமையாகச் சொல்லப்படுகிறான். மாகீர் மனாசேக்கு ஒரேமகனாயினும் முதற்பேறானவனென்னப்படுவது வழக்கம். மத். 1: 25. யாத். 4; 22.— இவர் தன் காலத்தில் தன்சந்ததியாரில் வீரமானசெய்கைகளைச் செய்திருப்பார். காதியருக்கும் எப்பிராயீமருக்குமுண்டான சண்டையில் தமது வீரத்தை காண்பித்திருப்பார். 1 நாளா. 7: 21.—இந்த யுத்தவீரமே அவன் வமிசத்தாருக்குமிருந்தபடியால் கிலேயாத்தும் பாசான்சீமையும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. சத்துருக்கள் தேசத்துக்குள் வராதபடிக்குக் காக்கும்படியாகவே அந்த முகப்புக்குரிய பங்கு அவர்கள் கேளாதேபோதே தேவனால் கொடுக்கப்பட்டது.

2. யோர்தானுக்கப்பால் சுதந்தரம் பெறாதவர்களுடைய பேர்கள் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. எண். 26: 29. இங்கே சொல்லப்பட்ட அபியேசர் அங்கே ஈயேசர் என்னப்படுகிறான். எண். 26; 30.

5. "10பங்கு" (1) 6பங்கு, 6பிள்ளைகளுக்கே. அதிலொருவன்
எப்பேர். அவனுக்கு ஆண்பிள்ளைப்பிள்ளைகளில்லாததால் அவன் பங்கு
அவன் பெண்மக்களாகிய 5பேருக்கு 5பங்கு கொடுக்கப்பட்டிருக்க
லாம். அல்லது (2) 5பங்கு 5ஆண்மக்களுக்கும் 5பங்கு 5பெண்மக்க
ளுக்கும் ஆக (10)பங்கு கொடுக்கப்பட்டிருக்கலாம். எண். 27: 1—11;
36அதி.

9. எப்பிருயீமுக்குரிய பட்டினங்கள் மனுசேயிலும், மனுசேக்
குரிய பட்டினங்கள் எப்பிருயீமிலுமிருந்தன. அவர்கள் சகோதரரா
னதால் ஒருவருக்கொருவர் ஐக்கியமும் போக்குவரத்துமாயிருப்பத
ற்குமாக இப்படி கலந்திருக்க தேவனுக்குச் சித்தமாயிருந்தது.

10. மனுசேக்குரிய சில பட்டணங்கள் ஆசேர், ஈசக்கார்கோத்
திர எல்லைக்குளிருந்தன. அல்லது அந்த பட்டினங்கள் எப்பிருயீ
மரின் பட்டினங்கள் மனுசேயிலிருந்ததுபோல யோசு. 16: 9. இவை
களுமிருக்கலாம்.—யூதாகோத்திரம் பெரிதாயிருந்தபடியால் சீமே
யோனுக்கு அதில்சுதந்தரம் கொடுத்ததுபோல, பெரிய பங்குகளின்
கோத்திரங்களிலிருந்து கொஞ்சமானபங்கு கோத்திரத்துக்கு சமீபமா
ன கொஞ்சவிகிதம் கொடுக்கப்பட்டன.

ஆசேர் இசக்கார் கோத்திரங்களில் கடைசியாகச் சொல்லப்ப
டுகிற 3 நாடுகளும் அல்லது இங்கே சொல்லப்படுகிற எல்லாப்பட்டி
னங்களுமே 3 நாடுகளாக பிரிக்கப்பட்டு மனுசேயைச் சேர்ந்தன. அல்
லது எபிரோயமூலத்தில் "நாடு" என்று ஒருமையிலிருப்பதால் இங்
கே சொல்லப்பட்ட நாடுகளும் பட்டணங்களும் அந்தக் கோத்தி
ரங்களின் மூன்றிலொரு பாகம் மனுசேயைச் சேர்ந்திருந்தனவென்
று கருத்துக்கொள்ளும்.

14. யோசேப்பின் புத்திரர் தாங்கள் இரண்டு பேராயினும்
ஒரேபங்கு கொடுக்கபட்டதற்கு மொறுமொறுத்தார்கள். அவர்களுக்கு
கொடுத்த ஒரேபங்குதான் பின்பு பிரிக்கப்பட்டது. அவர்கள் பெரு
க்கமானதால் அவர்களுக்குக் கிடைத்தபங்கு சுருக்கந்தான்.

15. இயோசுவா யோசேப்பின் புத்திரர் சொன்ன நியாயத்தை
ஒப்புக்கொண்டு அவர்கள் பங்கை விஸ்தாரமாக்கும்படிக்கு ஞான
மாய்ப் புத்திசொல்லுகிறார். காட்டைவெட்டி விஸ்தாரமாக்கவும், கானு
னியரை தேவஒத்தாசையினால் துரத்திவிடவுமாகச் சொல்லுகிறார்.

"எப்பிருயீம்மலை" எப்பிருயீம் கோத்திரத்துக்கு இந்தமலை
விசேஷித்த முக்கியபங்கு. யோசு. 19. 50; 20: 7; 21, 21; நியாயாதி.
4; 5.

16—18. நாங்கள் மலைத்தேசத்தை செயித்தாலும், காடுகளை
வெட்டி கானுனியரைத் துரத்தினாலும் தேசம் எங்களுக்குப் போதா
தென்று யோசேப்பின் புத்திரர் சொன்னாலும் கானுனியருக்குள்
இருப்புரதங்களிருப்பதால் நாங்கள் மலைத்தேசத்தையும் பள்ளத்தா
க்கான தேசங்களையும் பிடிப்பதற்குக் கூடாதவர்களாக விருக்கிறோ
மென்று சொன்னாலும், அவர்கள் பெருக்கமும் வல்லமையுள்ள சன
மாயிருப்பதால் லேசாய் அவைகளைப் பிடிக்கலாம் என்கிறார். அவர்
கள் தங்களைப்பற்றிச் சொன்ன நியாயத்தைக்கொண்டே அவர்கள்
வாயை யடைத்தார். உபா. 20: 1. யோசுவா உறுதியான விசுவாசத்
தோடும், தீர்மானத்தோடும், ஞானத்தோடும் சொன்ன நியாயங்கள்
ஆவலாதி கொண்டுவந்தவர்களுடைய மனதை மாற்றிப்போட்டது.



## கேள்விகள்.

1. மனுசேயின் புத்திரரில் எத்தனைபேருக்கு யோர்தானுக்கு
மேற்கில் சுதந்தரம் கிடைத்தது! இவர்களுக்கு யோர்தானுக்கு கிழ
க்கில் பங்குகொடுக்கவேண்டிய முகாந்தரமென்ன?

2. செலோப்பெயாத்தின் குமாரத்திகளின் பேரென்ன? அவர்
களுடைய விசுவாசம், தயிரியம், ஞானமிவைகளுக்குரிய சரித்திரக்
குறிப்பை எழுது.

3 மனுசேக்கு ஆசேர், இசக்கார் கோத்திரத்தில் விழுந்த
பட்டினங்களெவை? அவைகளின் விசேஷமென்ன?

4. மனுசேக் கோத்திரத்தில் பிற்காலத்தில் எழும்பின விசேஷி
த்த மனிதனயார்? அவனுடைய நடபடிக்கை எப்படி?

5. யோசேப்பின் குமாரர் யோசுவாவிடத்தில் தங்கள் பங்கு
அதிகமாய்த் தரவேண்டுமென்று கேட்பானேன்? அப்படிக் கேட்ப
தற்கு என்னமுகாந்தரஞ் சொல்லுகிறார்கள். அவர்களுக்குக் கொடுக்
கப்பட்ட மறுமொழி என்ன?

6. யோசுவாவுடைய பாரபட்ச மற்ற குணத்துக்கும், விசுவாச
த்துக்கும் இவ்வதிகாரத்தில் திருஷ்டாந்தரம் சொல்லும்

## XVIII அதிகாரம்.

1. தேவதீர்மானத்தின்படி ஆசரிப்புக்கூடாரம் கில்காலிலிருந்து
சீலோவில்கொண்டுவந்து வைக்கப்பட்டது. உபா. 12: 5; எரே. 7: 12;
இது யோசுவாவுக்கு சனமாகவும் வசதியாகவுமிருக்கும்படி வைக்க
ப்பட்டிருக்கலாம். யோசுவா எப்பிருயீம் கோத்திரமாதலால் தேவ
னிடத்தில் தனக்கு விருப்பமும் அவசியமுமான காரியங்களை ஆலோ
சிக்கும்படிக்கு தனக்கு சமீபத்தில் ஆசரிபபுக்கூடாரம் வைக்கநேரி
ட்டது. (2) எல்லாக்கோத்திரத்தாரும் பலவிடங்களிலிருந்து தேவனை
ஆராதிக்க கூடிவரும்படிக்கேற்ற மத்திபமான இடமாயிருந்தது. (3)
இது இயாக்கோபு மேசியாவைப்பற்றிச் சொன்ன சீலோஎன்ற வார்
த்தைக்குச் சரியானபேர் அந்த இடத்துக்குமிருப்பதால் அந்த இட
த்தைத் தெரிந்துகொண்டார்கள். சிலர், அந்த இடத்துக்குப்பேர் ஆச
ரிப்புக்கூடாரம் நிறுத்தபபட்டதற்கு பின்புதான வந்ததென்பார்கள்.
இங்கே ஆசரிப்புக்கூடாரம் சாமுவேல் தீர்க்கதரிசி காலம்வரை 300வரு
ஷத்துக்கதிகமாயிருந்தது. 1 சா. 1: 3;
ஆசரிப்புக்கூடாரம் முன் பாளையங்களின் நடுவில் வைக்கப்பட்
டது. இப்போது அதற்கு சமீபமாய் முன்னணியில் கூடாரம்போட்
டிருந்த, ரூபேன், யூதா, எப்பிருயீம கோத்திரங்கள் தன்தன் சுதந்
தரத்துக்குப் போய்விட்டதுப; இப்போது அது இடம்பெருகிறதற்கு
அவசியம் நேரிட்டது. எண் 4 5ல் சொல்லிய கட்டளைப்படி ஆசாரியரோ
அதைச் சுமந்து வந்திருப்பார்கள். சீலோஎன்ற வார்த்தை சமாதான
மென்ற பொருள் கொண்டது. இக்காலத்தில் தேசம் சமாதானமா
யிருந்தால் அதைநினைக்க இந்தஇடத்தில் ஆசரிப்புக்கூடாரம் நிறுத்த
பட்டிருக்கலாம். அப்படியே தேவாலயமும் பிற்காலத்தில் சமாதான
மென்றருத்தங்கொண்ட சாலேமில் கட்டபட்டதென்பார்கள். (Dr
Light foot.)

2, 3. 7 கோத்திரத்தாருக்கு தேசம் பங்கிடப்படவில்லை. யோசேப்பின் புத்திரர் செய்தபிராதால், ஆசரிப்புக்கூடாரம் சீலோவாவுக்குக் கொண்டுவருமட்டும் அதாவது சற்றேறக்குறைய ஒரு வருஷமட்டும் சிலர் நினைக்கிறபடி 7வருஷமட்டும் தாமதமாயிருந்ததால் யோசுவா அவர்களைப் பார்த்து "நீங்கள் எந்தமட்டும் அசதியாயிருப்பீர்களென்று கண்டிக்கிறார். இப்படிப்பட்ட அவர்களுடைய அசதிக்கு பல முகாந்தரஞ் சொல்லலாம்.

1. யூதாப் புத்திரருக்கு விரிவான பங்கும், யோசேப்பின் புத்திரருக்கு நெருக்கமான பங்கும் கிடைத்திருப்பதை அறிந்து திருப்தியற்றவர்களாயிருந்திருப்பார்கள். (2) எல்லாம் திட்டமாக பரிசோதிக்கப்பட்டும், அளவெடுக்கப்பட்டுமிருந்ததால்தான், ஒழுங்கும் சமமுமான பங்கு செய்யப்படுமென்று காத்திருக்கலாம். (3) அவர்கள் தூரமான இடங்களுக்குப் போய்க் குடியிருக்க வருத்தப்பட்டு, பாபிலோன் கோபுரத்தைக் கட்டினவர்கள்போல், கூட்டத்தைவிட்டுப் பிரிந்துபோகவும் மனமில்லாமல் அசதியாயிருக்கலாம். (4) அவர்கள் கானானியரிடத்தில் பறித்த கொள்ளைப் பொருள் மிகுதியாயிருப்பதால், அதை அனுபவிக்கிற சந்தோஷத்தினாலும், இனி கானானியரோடே யுத்தஞ் செய்து தேசத்தைக் கட்டிக்கொள்ள வருத்தப்பட்டதாலும் (யோசு. 17: 15, மி. அசதியாயிருக்கலாம். இவர்கள் அசதியாயிருப்பதால் கானானியர் புதுப்பெலனடைந்து அரணான பட்டினங்களில் சேர்ந்து பலத்துப் போவதற்கேதுவாயிருக்கும்.

4. தேசம் நன்றாய் வேவுபார்க்கப்படவும் திட்டமான அளவு கணக்குகள் கொண்டுவரவுமாக, சுதந்தரம் கிடையாத 7 கோத்திரத்தில், கோத்திரத்துக்கு 3 ஆட்களாக தெரிந்துகொள்ளப்பட்டு, 3 பவுஞ்சுகளாக பவுஞ்சு ஒன்றுக்கு 7 ஆட்களாகவும்—ஒவ்வொரு பவுஞ்சிலும் ஒவ்வொரு கோத்திரத்தின் ஆளிருக்கவும் திட்டஞ் செய்து அனுப்பப்பட்டார்கள்.

5—3. பவுஞ்சாகப் போனவர்கள் சமமான 7 பங்காகத் திட்டமான கணக்குக் கொண்டுவந்தார்கள். கோத்திரத்தார் பெருகவும், குறையவுமிருந்தாலும் அது கவனிக்கப்படவில்லை. பெருக்கமுள்ளவர்கள் தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற எல்லைவரைக்கும் அதாவது ஐப்பிராத்து நதிவரைக்கும் தங்களுக்குக் குடியிருப்பைச் செய்துகொள்ள விடப்பட்டார்கள்.

6. ஒவ்வொரு கோத்திரத்தாரும் தங்களுக்கு விழுந்த சீட்டின்பேரில் மனத்திருப்தியுள்ளவர்களாயிருக்கும்படி, தேவனே சாட்சியாயும் நியாயாதிபதியாயு மிருக்கும்படிக்கு உடன்படிக்கைப் பெட்டியிருக்கிற ஆசரிப்புக் கூடாரமாகிய தேவ சந்நிதியில் சீட்டுப் போடப்பட்டன.

7.—யோசு. 13: 33.—

8—10— 21பேரும் போய்ச் சுற்றிவர 7மாசஞ் சென்றதென்று யோசேப்புஸ் சொல்லுகிறார்.—குட்டியைப் பறிகொடுத்த கரடிகள் போல கானானியர் பதிவிருந்து இந்த வேவுகாரர்மேல் கைபோடவொட்டாதபடிக்கு தேவன் கிருபையாக காத்தார். அந்த 7பங்கையும் படமாக வரைந்து கொண்டுவந்திருப்பார்கள். இஸ்ரவேலர் இந்தக் கணக்கை எகிபதியரிடத்தில் கற்றிருப்பார்கள். நீலநதியின் ஓட்டத்தால் எகிப்தியரின் நிலங்களின் எல்லை தெரியாமற்போவதால் வருஷந்தோறும் அளக்கிறது வழக்கமாயிருக்கும். இப்படிபட்ட அளவை புஸ்தகத்தில் கொண்டுவர தேவனால் போதனையுண்டாயிருக்கும். யாத். 31: 1—6.



11. தேவஞானத்தின்படி யோசேப்புக்கும் யூதாவுக்கும் மத்தியில் பென்யமீனுக்குச் சீட்டு விழுந்தது. இதினால் உபா. 33: 12ல் சொல்லிய தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இவன் யோசேப்புக்குப் பிரியமான குமாரன். பிற்காலத்தில் இந்தக் கோத்திரம் யூதாவோடு சேர்ந்து, எருசலேமின் தேவாலயத்துக்கும், யூதாவின் இராசாங்கத்துக்கும் சம்பந்தப்பட்டவர்களாயிருக்குபடி தேவன் முன்னறத் தீர்மானித்திருந்தபடியால் இந்தப்படி சீட்டு விழுந்தது.

14. கிரியாத்யெயாரீம் என்பது முன் கீரியாத் பாகால் என்னப்பட்டது. இஸ்ரவேலர் பாகால்களை வெறுக்கும்படிக்கு அடையாளமாக அந்தப்பேரால அழைக்கப்பட்ட கிராமங்களை பேர்மாற்றினார்கள். எண். 32: 38; யோசு. 15: 9.

## கேள்விகள்.

1.—ஆசரிப்புக்கூடாரம் சிலோவில் நிறுத்தப்பட்டதற்கு நியாயங்களென்ன?

2. இஸ்ரவேலர் தங்கள் சுதந்தரத்துக்குப் போகாமலிருந்த தாமதத்திற்கு நியாயமென்ன? அதினாலுள்ள நஷ்டங்களெவை?—இதினால் நமக்குரிய போதனை யென்ன?

3. பிந்தி அனுப்பப்பட்ட வேவுகாரருடைய விசுவாசத்தை தெளிவாய்ச் சொல்லும். அவர்களுடைய பங்கு எப்படித் தீர்மானிக்கப்பட்டது.

4. பென்யமீனுடைய பங்கின் எல்லை யெது? அவனைப்பற்றி இயாக்கோபும் மோசேயும் சொன்ன தீர்க்கதரிசனமென்ன? அதெப்படி இங்கே நிறைவேறிற்று?

5. பெயமீன் கோத்திரத்திலிருக்கிற முக்கியமான பட்டணங்களையும் அதிலுள்ள விசேஷக் குறிப்புகளையும் எழுதும்?

6. யூதாக் கோத்திரத்தில் எழும்பின முக்கியமானவர்களுடைய சரித்திரக்குறிப்பை எழுதும்.

## Exposition of the Church Catechism.

## ஞானோபதேசவினாவிடை

வியாக்கியானம்.

### ௯-ம் அதிகாரம்.

விசுவாசப்பிரமாணம்.

௫-ம் பிரிவு.

கடைசி நியாயத்தீர்ப்பைப் பற்றி.

(தொடர்ச்சி.)

கிறிஸ்துவானவர் ஏன் இந்த உத்தியோகத்தை ஏற்றுக்கொள்ளுகிறார்?

விடை. 1. அவர் தம்முடைய நியாயாசனத்துக்கு முன்பாக நிற்கிறவர்களின் தன்மையில் பங்காளியாயிருக்கிறபடியினாலும்.

அவர் மனுஷகுமாரனாயிருக்கிறபடியால் நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார். யோவா. 5: 27.

2. பிதாவானவர் அவரை நியமித்தபடியினாலும்.

பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமல் நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார். யோவா. 5: 22.

அப். 10: 42. 17. 31.

அவருடைய வருகை எல்லாரும் கவனிக்கத்தக்க வகையாயிருக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமைபொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார். மத். 16: 27.

மத். 24: 30. 26: 64. மாற். 8: 38. லூக் 9: 26. அப். 1: 11: 1 தெச. 4: 16. 2 தெச. 1: 7-10. வெளி. 1: 7. 2 பேது. 3: 10-13. வெளி. 10: 5, 6.

இந்த கம்பீரமான நியாயாசனத்துக்கு முன்பாக ஆதாமின் புத்திரர் அனைவரும் காணப்படுவார்கள்.

அப்பொழுது சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மத். 25: 32.

மத். 13: 27. யோவா. 5: 28, 29. வெளி. 20: 12, 13.

அப்பொழுது எல்லாரும் நியாயந்தீர்க்கப்படுவார்கள். 2 திமோ. 4: 1. 1 பேது. 4: 5.

வினா. எவைகளைப்பற்றி நியாயந்தீர்க்கப்படுவோம்?

விடை. 1. மனுஷர் தங்களுடைய நினைவுகள் எல்லாவற்றையும் குறித்து கணக்குக் கொடுப்பார்கள்.

தீயநோக்கம் பாவமாம். நீதி. 24: 9.

மல்கி. 3: 16. அப். 8: 22. கொலோ. 3: 5, 6.

2. தங்கள் வார்த்தைகளைக்குறித்துக் கணக்குக் கொடுப்பார்கள்.

மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்புநாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில் உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய். மத். 12: 36, 37.

மல்கி. 3; 13. யூதா 15.



3. தங்கள் கிரியைகளைக்குறித்துக் கணக்குக் கொடுப்பார்கள்.

ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார். பிர. 12: 14.

அவனவன் கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார். மத். 16: 27.

மத். 25: 35. ரோ. 2: 6. யூதா 15. வெளி. 20: 12, 13.

மனுஷர் தாங்கள் செய்த பாவங்களுக்காக உத்தரவாதம்செய்வதுபோல, செய்யவேண்டியவைகளை செய்யாமல் விட்டுவிட்ட பாவங்களுக்காகவும் உத்தரவாதம்செய்யவேண்டும்.

துன்மார்க்கரும், தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும் நரகத்திலே தள்ளப்படுவார்கள். சங். 9: 17.

மத். 25: 42. லூக். 12: 47. கலா. 6: 7, 8. யாக். 4: 17.

வினா. மனுஷர் எப்படி நியாயந்தீர்க்கப்படுவார்கள்?

விடை. 1. தேவனுடைய நியாயப்பிரமாணத்தைக்கொண்டு நியாயந்தீர்க்கப்படுவார்கள்.

நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும். யோவா. 12: 48.

எவர்கள் நியாயப்பிரமாணத்துக்குட்பட்டவர்களாய்ப் பாவஞ்செய்கிறார்களோ, அவர்கள் நியாயப்பிரமாணத்தினாலே ஆக்கினைத்தீர்ப்படைவார்கள். ரோ. 2: 42. வெளி. 20: 12.

உத்தியோகம் செய்தேன் என்பது மட்டும் அந்நாளில் உதவாது. அதைக்கொண்டு நியாயஞ்சொல்லத் தூண்டப்படுவது வீணாயிருக்கும்.

அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா என்பார்கள். மத். 7: 21—23. லூக். 13: 25—30.

எல்லார்மேலும் நீதியுள்ள நியாயத்தீர்ப்புக் கூறப்படும். தானி. 12: 2, 3. யோவா. 5: 28, 29.

வினா. நீதிமான்களுக்குச் சொல்லப்படும் தீர்ப்பும், அவர்களுடைய நிலைமையும் எப்படிப்பட்டதாயிருக்கும்?

விடை. மறுஜென்மகாலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும்போது, என்னைப் பின்பற்றின நீங்களும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின்மேல் வீற்றிருப்பீர்கள். மத். 19: 28.

வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே! உலகம் உண்டானதுமுதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற இராச்சியத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். மத். 25: 34.

1 யோவா. 3: 2. வெளி. 5: 9, 10. 7: 14, 17. 15: 13. 20: 4.

வினா. பொல்லாதவர்களுக்குச் சொல்லப்படும் தீர்ப்பும், அவர்களுடைய நிலைமையும் எப்படிப்பட்டதாயிருக்கும்?

விடை. அங்கே அவர்கள் புழுச் சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும். ஏசா. 66: 24. மாற். 9: 44.

இராச்சியத்தின் புத்திரரோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும். மத். 8: 12. 13: 42, 50.

மத். 22: 13. 24: 51. 25: 30, 41. ரோ. 2: 5. 2 தெச. 1: 8, 9. வெளி. 6: 16. 14: 10, 11. 21: 8.

எவ்வளவு பயங்கரமும், எவ்வளவு தவறுததுமான சத்தியம்.

அவருடைய பயங்கரத்திற்கும், அவருடைய மகிமைப் பிரதாபத்திற்கும் விலகி, கன்மலைகளின் வெடிப்புகளிலும், பூமியின் குகைகளிலும் புகுந்துகொள்வார்கள். ஏசா. 2: 19.

ஓசே. 10: 8. எசேக். 22: 14. ஏசா. 32: 14.

இவ்வுலகத்தில் நீதிமான்கள், பொல்லாதவர்கள் என்ற இருவகுப்பார் மாத்திரம் இருக்கிறார்கள்;—அவ்விரு வகையாரின் முடிவையும் பற்றி நீ கேள்விப்பட்டிருக்கிறாய். நீ யாரைச் சேர வேண்டுமென்பதைத் தெரிந்துகொள். நீ நீதிமான்களின் மரணமாய் மரிக்கவேண்டுமானால் அதற்காக ஆயத்தப்படு.

உன்னுடைய நியாயாதிபதியாயிருக்கப்போகிறவர் இப்பொழுது உன்னுடைய மத்தியஸ்தராயிருக்கிற இரட்சகரே. அவரை உனக்குச் சிநேகிதனுக்கிக்கொள். அப்பொழுது நீ பயப்படவேண்டியதில்லை. அந்தப் பயங்கரமான நாளின் பயங்கரங்கள் நிச்சயமாகவே வரும். உனக்குத் திடீரென்று அதிசயத்தை உண்டாக்கலாம். அது நீ உன் தேவனைச் சந்திக்கும்படி நல்ல ஆயத்தம்பண்ணத் தவக்கும்படி உன்னை ஏவி எழுப்பலாம். பரி. பவுல் நீதியையும், இச்சையடக்கத்தையும், இனி வரும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில் பேலீக்ஸ் பயமடைந்தான். அப். 24: 25. நீ பயப்படுகிறாயா? நீ பயப்பட்டால் அந்த நல்ல பயத்தை அடக்கிப்போடாதே; பேலீக்ஸைப்போல அந்த நல்ல சமயத்தைக் கடத்திவிடும் நினைவு உன்னில் உண்டாகாதிருப்பதாக. ஞானத்தின் சத்தத்துக்குச் செவிகொடுக்க ஒருமணி நேரமாவது தாமதிக்காதே. நான்



கூப்பிட்டும் நீங்கள் கேட்கமாட்டோம் என்கிறீர்கள். (நீதி 1: 24, 31) என்று சொல்லாதபடி பார்.

பாவமன்னிப்பையும், ஒப்புரவாகுதலையும் தேடு. அது அந்த நாளில் உனக்குப் பிரயோசனமாயிருக்கும்.

ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு நம்மைத் தகுதியானவர்களாக்கும்படி செபம் செய். கொலோ. 1: 12.

உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள். 2 பேது. 1: 10, 11.

---

## The World's Birth.

## உலகப்பிறப்பு.

(தொடர்ச்சி.)

### II. அதிகாரம்.

#### தேவன்.—வானம்.—பூமி.

"தேவ வெட்டாந்தரைக்குப் பூமி" என்று பேரிட்டார். ஆதியா
கமம். 1: 10. வேதாகமத்தில் பூமி என்பதற்கு இரண்டு அர்த்தம் வரு
வதுபோல வானமென்பதற்கு மூன்று அர்த்தம்வரும். முதலாவது
நம்மைச் சுற்றியிருக்கிற ஆகாயவிரிவுக்குப் பேர். பறவைகள் பறக்
கிறதும், மேகங்களிருக்கிறதுமான ஆகாயம். சங்கீதம். 104: 12. ஆகா
யத்துப் பறவைகள் என்பதில் வானத்தின் பறவைகளென்று வேத
த்திலிருக்கிறது. ஆகாய. 1: 10. இரண்டாம் வானமென்பது சோதி
மண்டலத்தைக் குறிக்கும். மூன்றும் வானமென்பது உன்னதம் என்
றும், வானங்களின் வானமென்றும் சொல்லப்படுகிற பேரின்ப
இடம். பவுல் அந்த இடத்துக்குப் போனான். நமது இரட்சகராகிய
இயேசு அங்கே போயிருக்கிறார். உன்னதமானவர் அங்கே தமது
மகிமையை விசேஷித்தவிதமாய் வெளிப்படுத்துகிறார்.

நாம் வாசம்பண்ணுகிற பூமியைப் பற்றிச் சிலவைகளைச் சொல்
லுகிறேன. 1-வது அது உண்டையாயிருக்கிறது என்பதை நீங்கள்
அறிந்திருக்கலாம். இதைப்பற்றி வேதாகமத்தில் வெகுகாலத்துக்கு
முன்னே சொல்லியிருக்கிறது. ஏசாயா. 40: 22 "தேவன் பூமியின்
உண்டையிலிருக்கிறார்." என்று எழுதியிருக்கிறது. யோபு. 26: 10.
நீதிமொழி. 8: 27. இது சத்தியமென்பதை மனிதர் சோதித்தறி
ந்திருக்கிறார்கள். வருஷந்தோறும் கப்பல்கள் பூமியைச் சுற்றிஓடுகி
றது. மேற்குமுகமாய் யாத்திரைபண்ணிக்கொண்டு போனவர்கள்
மறுபடியும் தாங்கள் யாத்திரையைத் துவக்கின இடத்துக்கே வந்து
சேர்ந்திருக்கிறார்கள். 2-வது நம்முடைய பூமி வருஷத்துக்கொருத
ரம் சூரியனைச் சுற்றி முட்டைவடிவான அயனத்தில் ஓடுகிறது. அப்

படி ஓடுகையில் தன்னைத்தானே 24-மணி நேரத்திற்கொருதரம் சுற்றிக்கொள்ளவுஞ் செய்கிறது. பிரட்சரோகையில், பூமி ஒருமினிற்றுக்குள் 17மயில் அல்லது ஒருமணிநேரத்தில் 1020மயில் ஓடுகிறது. ஒருசெக்கண்டு அல்லது ஒருநொடிப்பொழுதில் 20மயில் சூரியனைச் சுற்றிக்கொண்டு போகிறது. பூமிக்குமேலே நீ 300மயில் தூரம் உயர்வான ஒருஇடத்தில் நின்றுபார்த்தால், பூமி, பீரங்கிக்குண்டு செல்லும் வேகத்தை விட 60மடங்கு அதிக விரைவாய்ப் போவதை அறிவாய். 3-வது பூமியை அளவிட்டதில் அது 25000மயில் சுற்றளவுள்ளதென்றும் 8000மயில் விட்ட அளவுள்ளதென்றும் கணிக்கப்பட்டிருக்கிறது. அதின் பரப்பு விஸ்தாரமுள்ளதென்பதைப் பின் சொல்லியதால் நீ அறியலாம். நாலுபக்கத்திலும் 40மயில் தூரமான இடங்களைப் பார்க்கத்தக்கதான ஒரு இடத்தில் நீ நின்று ஒருமணி நேரத்துக்குள்ளாக அவைகளைப் பார்க்கலாம் என்று வைத்துக்கொள். இந்தப்படி பூமி முழுவதையும் பார்க்க 9 வருஷமும் 48மணி நேரமும் செல்லும். 4-வது பூமியானது திண்மையான பூகியத்தினால் மூடப்பட்டிருந்தாலும் உள்ளே முழுவதும் அக்கினியால் நிறைந்திருக்கிறது. மனிதர் இதைக் கண்டறியுமுன்னமே, இதைப் பற்றி வேதாகமத்தில் சொல்லியிருக்கிறது. ஏறக்குறைய 3000 வருஷத்துக்கு முன்னேயிருந்த யோபு இதைப் பற்றிப் பேசியிருக்கிறான். யோபு. 28: 5. பின்னும் பருவதங்கள் மெழுகுபோல உருகுகிறது என்றும் ஆட்டுக்குட்டிகளைப் போல துள்ளுகிறதென்றும் வேதத்தில் அடிக்கடி வாசிக்கிறோம். அதைப் பார்க்கில் அக்கினியின் பலத்தினாலே பர்வதங்கள் பூமியின் ஆழத்திலிருந்து மேலே எழும்பினதைக் குறிக்கலாம் என்று அறியலாம். உள்ளிருக்கிற அக்கினி அடிக்கடி வெளியே கக்கப்படுவதுண்டு. கர்த்தாவே பர்வதங்கள் புகையும்படி அவைகளைத் தொடும் என்று சங்கீதத்தில் வாசிக்கிறோம். சங்கீதம். 144: 5. அக்கினியை மூடுகிற பூகியம் 9முதல் 12மயில் வரையுமுள்ள திண்மையுள்ளதாயிருக்கிறது என்று எண்ணப்படுகிறது. இந்தப் பூகியத்தில் வெடிப்புக் கண்டால் பெரிய பட்டணங்கள் மூழ்கத்தக்கதாக அங்கேயிருந்து சாம்பலும், அக்கினிப்பிரவாகமும் வெளிப்படுவதுண்டு. பூமி கம்பிக்கிறதையும், திறவுண்கிறதையும் சமுத்திரத்தில் ஒரே நாளில் சிறுதீவுகளும், மலைகளும் உண்டாகிறதையும் பற்றி அடிக்கடி வர்த்தமானங்களில் சொல்லப்படுவதுண்டு.

பரிசுத்த வேதாகமத்தில் 33 நூற்றாண்டுகளுக்கு முன்னமே விளம்பியிருப்பதை சாஸ்திரிகள் நூதனமாய்க் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆல்ப்ஸ்மலை இமயகிரி முதலிய பர்வதங்கள், பூமிசிருஷ்டிக்கப்பட்ட அநேக காலத்துக்குப் பின்பு, தேவனுடைய சொற்படிசெய்யும் அக்கினியினால் பூமியில் உயரமாய் எழும்பினவைகளாயிருக்கிறது. பூமிக்குள்ளாக மிகுந்த உஷ்ணமிருப்பதினால், ஊற்றுக்கண்கள் அதிக ஆழமாயிருக்கிற சுவிச்சர்லாந்து முதலிய தேசங்களில் சுடுதண்ணீர் சுரந்து வருகிறதுண்டு. அந்தத் தண்ணீரை மனிதர் ஸ்நானத்துக்காகவும், மருந்துக்காகவும் உபயோகிக்கிறார்கள். பூமிகுள் 7000 ஜாதிஅடி, அல்லது 1½-மயில் தூரம் ஒரு தாவுவெட்டினால் அங்கேயிருந்து வரும்தண்ணீர் கொதிக்கும். 10-மைல் ஆழத்திலோ கல்லுங்கூட இழகிப்போம்.

நாம் வாசம்பண்ணுகிற பூமி, இத்தன்மையுள்ளதாயிருக்கிறது. வேதாகமத்தில் சொல்லியபடி. அது அக்கினியால் ஒரு காலத்தில் அழிக்கப்படும். தேவ கட்டளையின் பேரில், எந்த நேரத்திலும் வெளி



யே பீறிவரத்தக்கதான அக்கினி பூமிக்குள்ளாகவிருக்கிறது. "இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையிலேனாயே யே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவ பக்தியில்லாதவர்கள் நியாயந் தீர்க்கப்பட்டு, அழிந்துபோகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது." தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல், எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும், அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம். இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும், தேவபக்தியும், உள்ளவர்களாயிருக்கவேண்டும்." "தேவனுடைய நாளுக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள். அந்த நாளில் வானங்கள் வெந்து, அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம். அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே புதியவானங்களும் புதிய பூமியும் உண்டாகும் என்று காத்திருக்கிறோம். ஆகையால் பிரியமானவர்களே இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடு அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள் 2 பேதுரு. 3: 7, 9—14. என்று வாசிக்கிறோம்.

சிருஷ்டிப்பின் கிரியைகள், எவ்வளவு ஆச்சரியமானவைகளாயிருக்கின்றன. இப்போது சொல்லப்பட்டிருக்கிற அற்பமான காரியங்கள் முதலாக எவ்வளவாய் இருதயத்தைத் துதி தோத்திரங்களால் நிறையச் செய்கிறது. அநேக லட்சவருஷங்களாய் இந்தப் பூமி மனிதனுக்காக ஆயத்தப்படுத்தப்பட்டுக், கடைசியாக சர்வவல்லவருடைய ஒரேகுமாரன் மீட்பின் கிரியை முடித்த இடமாயிருக்கிறது. கடைசியான இந்தக் கிரியை, சிருட்டிப்பின் மகிமையான கிரியைகளை விட மகத்தானது. வார்த்தையானவர் ஆதியிலே தேவனோடே இருந்தார். அவர் தேவனாயிருந்தார். அவர் மாம்சமாகி, உலகத்தோற்றத்துக்கு முன்னே தமது பிதாவினால் தமக்குக் கொடுக்கப்பட்டவர்களை மீட்கும்படியாக இந்த மண்ணில் நடமாடி மரணமடைந்தார். அவர் திரும்பவும் வந்து, அவர்களை உயிரோடே எழுப்பி, தம்மோடே என்றும் இருந்து அரசாளும்படி செய்வார்.

---

## III. அதிகாரம்.

"வானங்கள்."

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையுஞ்
சிருஷ்டித்தார்.
சங்கீதம். 19. 1—11.

இப்போது நாம்பார்க்கபோகிறப் பொருள் மாட்சிமையுள்ளது. நாம் வானங்களையும் வானங்களின் வானங்களையும் பற்றிப் பார்ப்பதுடன் அவைகள் சிருஷ்டிக்கப்பட்டதையும் பற்றிய பார்க்கப்போகிறோம். நாம் வானசோதிகளின் மகத்துவத்தையும், அவைகளின் அயனங்களையும், அகண்டவெளிகளையும் பற்றிப் பேசிக்கொள்வ

துடன் இந்த மாட்சிமையான வஸ்துக்கள் நித்தியவாசகருடைய சித்த
த்தினாலே இன்மைப் பொருளிலிருந்துண்டான யுகத்தைப் பற்றியும்
கவனிக்கப்போறோம்.

ஆதியிலே எலோயீம் வானத்தைச் சிருஷ்டித்தார். சங்கீத கவி
ஞன், "வானங்கள் தேவனுடைய மகிமையை அறிவிக்கிறது. ஆகாய
விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. பகலுக்கு
ப்பகல் வார்த்தைகளைப் பொழிகிறது. இரவுக்கு இரவு அறிவைத்
தெரிவிக்கிறது. அவைகளுக்குப் பேச்சுமில்லை வார்த்தையுமில்லை என்
று சொல்லியிருக்கிறான். பழைய திருப்புதலில் அவைகளின் சத்தம்
கேள்விப்படாத பாஷையுமில்லை பேச்சுகளுமில்லை, என்றிருக்கிறது.
அவைகளின் சத்தம் கேட்கப்படுகிற விதம் இன்னதென்பதைச் சொல்
லுகிறேன். அவ்வாள் நமது கண்களுக்கும் புத்திக்கும் இருதயத்துக்
கும் பேசுகின்றன.

1-வது பார்வைக்கு அழகாயும் இன்பமாயும் காணப்படுகிறதால்
பேசுகின்றன. அவைகள் மகா தேவனுடைய மகிமையை, ஞானிகளு
க்கும் பேதைகளுக்கும் அறிவிக்கிறது. வெளியில் சஞ்சரிக்கிற மேய்
ப்பனுக்கும் தூரதிர்ஷ்டிக் கண்ணாடியினால் சூரியன்களும் தலைதூரமா
யிருக்கிற உலகங்களும் ஓடுகிறதை ஆச்சரியத்தோடே கவனித்துக்
கொண்டிருக்கிற சோதிட சாஸ்திரிக்கும் அறிவிக்கிறது.

2-வது நமது புத்திக்கும், தெரியப்படுத்துகிறது. நம்மால்
கிரகிக்கக்கூடாத மாட்சிமையும், ஆச்சரியமுமான காரியங்களை நம
க்கு அறிவிக்கின்றன. திவ்வியஞானம், மகத்துவம், அளவற்ற மகிமை
என்றவைகளைப் பலமாய்க் காட்டுகின்றன.

3-வது நமது இருதயத்தில் அவைகள் மிகுந்த வல்லமையாய்ப்
போதிக்கிறது. மனிதனே, இந்த மகிமையும் சிறப்புமானவைகளைச்
சிருஷ்டித்தவர் உன் தேவனாயிருக்கிறார். அவர் உன்னை ரக்ஷிக்கப்
பிரியசித்தமுள்ளவராயிருக்கிறார். மனிதனே, அவருடைய ஆச்சரிய
மான செய்தியைக் கேள். ஆதியிலே தேவனோடே யிருந்தவரும்
தேவனா யிருக்கிறவரும் சகலத்தையு முண்டாக்கினவருமான நித்தி
யரான தேவகுமாரன் மாம்சமானார். தேவனுடைய ஒரே குமாரனும்
வானத்தையும் பூமியையும் உருவாக்கினவருமானவர் தமது மிஞ்சின
அன்பினாலே ஏவப்பட்டு, இந்தப் பூமிக்குவந்து, உன்னுடைய அரு
வருப்பான பாவங்களுக்குப் பிராயசித்தஞ் செய்யும்படி மரணமடை
ந்தார். தாம் உண்டுபண்ணின உலகத்தில் வந்தபோது தமது தலை
சாய்க்கமுதலாய் இடமற்றிருந்தார் என்று அறிவிக்கிறது.

ஆதியிலே எலோயீம் வானத்தையும் பூமியையும் படைத்தார்.
பூமி என்பதற்கு இரண்டு அர்த்தம் வேதத்தில் வருவதுபோல வானம்
என்பதற்கு மூன்று அர்த்தம் வருகிறது என்று சொன்னேனே.
1-வது ஆகாய விரிவைக் குறிக்கும். இந்த ஆகாய விரிவு பூமியிலி
ருந்து 40 அல்லது 45 மைல் உயரம்வரையும் எட்டுகிறது. உன்னத
மான மலைகளின் உச்சியில் சனங்கள் தாராளமாய் சுவாசிப்பதற்கு
ஆகாயமில்லை. 40 மயிலுக்கு உயர ஆகாயமேயில்லை. சூரியன் உதிக்
கும்போது மனிதர் அவதானித்து ஆகாயத்தின் உயரத்தைக் கணித்
திருக்கிறார்கள். வாயு நிறுக்குங் கருவியாகிய பெரோமிற்றரால் ஆகா
யத்தின் பாரத்தையும் அறிந்துகொள்ளாம். இதைப் பற்றி இன்னொ
தரம் பேசிக்கொள்ளலாம்.

இப்போது இரண்டாம் வானத்தைப் பற்றிச் சிந்திப்போமாக.
இரண்டாம் வானம் என்பது நட்சத்திரமண்டலம். அதின் காரியங்



களைப் பார்க்கையில், நாம் ஆச்சரியத்தில் மூழ்கிப்போகிறவர்களா
யிருக்கிறோம். பூமிக்கும் சந்திரனுக்கும் இருக்கிற தூரம் 240000
மயில். பூமியிலிருந்து சூரியனுடைய தூரத்தைக் கவனித்தாலோ அது
மிகவுந் தொலையிலிருக்கிறது. ஒரு பீரங்கிக்குண்டு ஒருமணி நேரத்
தில் 1000 மயில் விசையாய்ச் செல்லுமென்று வைத்துக்கொண்
டால், அந்தக் குண்டு சூரியனைச் சேர 10 வருஷத்துக்கு மேற்
செல்லும். பூமிக்குச் சமீபமாயிருக்கிற நட்சத்திரத்தின் தூரமோ
சூரியனுடையதைவிட 400,000 பங்கு அதிகத் தொலையிலிருக்கிறது.
மற்ற நட்சத்திரங்கள் கோடி கோடி பங்கு தொலையிலிருக்கின்றன.
தேவன் உண்டாக்கின இந்த இரண்டாம் வானத்துக்கு அப்பா
ல் பவுல் மூன்றாம் வானமாகிய பரதீசுக்கு எடுத்துகொள்ளப்பட்
டான். அது வேதத்தில் வானங்களின் வானமென்று சொல்லப்பட்
டிருக்கிறது. நட்சத்திரமண்டலம் நம்முடைய ஆகாயவிரிவுக்கு எவ்
வளவு அப்பாலிருக்கிறதோ அப்படியே நட்சத்திர மண்டலத்துக்கு
மூன்றாம்வானம் அப்பாலிருக்கிறது. சாலோமோன் எருசலேமில்
தேவாலயம் கட்டுவதைப் பற்றி தீருபட்டணத்தின் இராசாவாகிய
ஈராமுக்கு எழுதினபோது அதைப்பற்றி வானாதிவானங்கள் என்று
சொல்லுகிறான். எங்கள் தேவன் எல்லாத் தேவாகளைப் பார்க்கிலும்
பெரியவர். ஆகையால் நான் கட்டப்போகிற ஆலயம் பெரிதாயிருக்
கும். வானங்களும், வானாதிவானங்களும் அவரைக் கொள்ளக்கூடா
திருக்க அவருக்கு ஒரு ஆலயத்தைக் கட்ட வல்லவன்யார். 2 நாளா
கமம் 2: 5—6. அந்த வானாதிவானங்களிலே தேவன் தமது மகிமை
யை விசேஷித்த வகையாய் வெளிப்படுத்துகிறார். பவுல் அந்த இடத்
துக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோது தான் சரீரத்திலிருந்ததையும்
சரீரத்துக்கு அப்புறத்திலிருந்ததையும் அறியேன் என்று சொல்லி
யிருக்கிறான். அந்த இடத்திலேயே மகிமைபொருந்திய தேவதூதர்,
தேவனுடையதும் ஆட்டுக்குட்டியானவருடையதுமான ஆசனத்தைச்
சூழநிற்கிறார்கள். எண்ணுக்கடங்காத பரிசுத்தவான்களும் அங்கே யிரு
ப்பார்கள். அங்கே ஆசனங்களும் துரைத்தனங்களும் வல்லமை
களும், மகிமையான கேருபீன்களும், சேராபீன்களுமுண்டு.
தேவன், தேவதூதா இருக்கிற வானத்தையும் ஆதியிலே சிரு
ஷ்டித்தார். அந்தத்தூதர், ஆதாமுக்கு வெகுகாலத்துக்கு முன் சிரு
ஷ்டிக்கப்பட்டவர்கள். ஆதாம் பரதீசில் வைக்கப்படுமுன்னமே, தூத
ர்களில் சிலர் தங்கள் நிலைமையைக்காத்துக் கொள்ளாதபடியால்
தள்ளுண்டுபோனார்கள். "தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்
கொள்ளாமல் தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தேவதூ
தர்களையும், மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று, நித்திய சங்கிலிக
ளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார்." ஜோதி
தரித்த தேவதூதர்கள், ஆதாமுக்கு முன்னமே மோட்சத்தில் வாழ்
ந்துகொண்டிருக்கிறார்கள். கோடிகோடி தூதர், தேவனுடைய ஆச
னத்தைச் சூழ்ந்து, அவருக்குத் துதிகளைப் பாடி அவர் சித்தத்தை
நிறைவேற்றப் பறந்து செல்லுகிறார்கள்.
அவருடைய ஞானம், வல்லமை, மகிமை, மகத்துவம் இவை
களைப் பற்றி, சிருட்டியானது எவ்வளவு மாட்சிமையான எண்ண
த்தை நமக்குண்டாக்கிறது. தோத்திரிக்கப்படத்தக்க நமது மீட்பரின்
மீட்பின்கிரியையைப் பற்றி நாம் என்ன சொல்ல ! இவ்வளவு வல்லமை
யும் பெருமையுமுள்ளவர் மனிதனை ரக்ஷிக்க தம்மைத் தாழ்த்திக்கொ
ண்டது எத்தனை ஆச்சரியம்? அது ஆச்சரியத்திலும் ஆச்சரியமே?

நாம் இப்போது இரண்டாம் வானத்தைப் பற்றிப் பார்ப்போ
மாக; அதை நாம் நமது கண்ணால் பார்க்கலாம். அதைப் பற்றிச்
சொல்லிய சாஸ்திரத்துக்கு வானசாஸ்திரம் என்று பேர். அந்த
சாஸ்திரத்தை நாம் எத்தனைக்குக் கற்றுக்கொள்ளுகிறோமோ, அத்
தனைக்கு நமக்கு இன்பமும் பிரமிப்புமுண்டாகிறது. நட்சத்திர மண்
டலம், உலகத்தோற்ற முதல் ஏகோவாவின் மகிமையை காலங்கள்
தோறும் அறிவித்து வருகின்றன. தூரதிர்ஷ்டிக் கண்ணாடி கண்டு
பிடிக்கப்பட்ட பின்பு, இப்போது ஏறக்குறைய 250 வருஷங்களுக்
குள்ளே வானசாஸ்திரத்தைப் பற்றிய அறிவு விர்த்தியடைந்து வந்
திருக்கிறது. அதற்கு முன்னிருந்தவர்களுக்குத் தெரியாத அநேக
நூதனகாரியங்களைப் பிறகிலிருந்தவர்கள் கண்டறிந்திருக்கிறார்கள். தூர
திரஷ்டிக் கண்ணாடியினாலும், க்ஷேத்திர கணித்தினாலும் ஆயிர
மாயிரங்களாய்ப் பிரகாசிக்கிற நட்சத்திரங்களின் தூரத்தைக் கணி
த்திருக்கிறார்கள். தூரத்திலிருக்கிற சில உலகங்களின பாரத்தை முத
லாய்க் கணித்திருக்கிறார்கள். சூரியன், சந்திரன், கிரகங்களுடைய
பாரம் இவ்வளவென்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

வானசாஸ்திரிகள் நமது சூரியனைச் சுற்றி 60 கிரகங்கள் ஓடுகிற
தாகக் கணக்கிட்டிருக்கிறார்கள. அவைகளில் சில நமது பூமியைவிட
பெரியவைகள். சில சிறியவைகள். திர்ஷ்டாந்தமாக, யூரானுஸ் என்ற கி
ரகம் பூமியைவிட 77-பங்கும் சனி 887-பங்கும் வியாழன் 1470-பங்கும்
பெரிதாயிருக்கிறது. இந்தப் பெரிய கிரகங்கள் சூரியனுக்கு நமது
பூமியைவிட தொலைதூரத்திலிருப்பதினால், அவைகளுக்குப் பல சந்
திரன்களுண்டு. பூமிக்கும் சூரியனுக்கும இருக்கிற தூரத்தை விட
வியாழனுக்கும் சூரியனுக்கும் இருக்கிற தூரம் ஐந்து மடங்கு அதி
கம். அப்படியே சனிக்கிரகம் 9½-மடங்கும், யூரானுஸ் 19-மடங்கும்
அதிகமாயிருக்கிறது. நட்சத்திரங்களுக்கும் நமது பூமிக்கும் இருக்
கிற தொலையைப் பார்த்தாலோ, நாம் ஆச்சரியத்தில் மூழ்கவேண்டி
யவர்களாயிருக்கிறோம். கடந்த ஐம்பது வருஷங்களுக்குள்ளே ஆச்
சரியமானவைகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆகாயத்தில் கொட்
டைப்பாக்குப் பருமனாய்க் காணப்படுகிற நட்சத்திரமுதலாய் சூரி
யன்களாம். சில நட்சத்திரங்கள் நமது சூரியனை விட மகா பிரமாண்
டமுள்ளது.

நல்ல, வெளிவாங்கின இரவிலே, நாம் 1000 நட்சத்திரங்களை
நமது கண்ணால் காணலாம். தூரதிர்ஷ்டிக் கண்ணாடியினால் 80000
மடங்கு அதிகமாய்க் காணலாம். ஹெர்சல் சாஸ்திரியாருடைய தூர
திருஷ்டிக் கண்ணாடி ஒரு பொருளை 6000-மடங்கு பருமனாகக் காட்
டும். அந்தக் கண்ணாடியினால், நாம் சந்திரனுக்கு 40-மயில் தூர
த்துக்கு இப்பாலிருந்து பார்ப்பதுபோல சந்திரனுடைய மலைகளையும்
பள்ளத்தாக்குகளையும் காணலாம். இந்த அதிசயமான ஆடி, நட்சத்
திரங்கள் நமது கண்ணுக்குத் தெரிகிறதைப் பார்க்கிலும் 3700 மட
ங்கு அதிகப் பிரகாசமாய்த் தெரியச் செய்கிறது. நாம் நமது கண்
ணால் நட்சத்திரங்களில் ஆறு அல்லது ஏழாம்தரமானவைகளை மாத்
திரம் பார்க்கலாம். அந்த ஆடியினால் 1344ம் தரமாயுள்ள நட்சத்தி
ரங்களையும் காணலாம். ஹெர்சல் சாஸ்திரியார், தமது கண்ணாடி
யில் அந்தகாரமுள்ள ஒரு இரவில் மூன்று மயில் தூரத்துக்கப்பாலி
ருக்கிற கோவிலின் கோபுரத்தையும் அதில் வைக்கப்பட்டிருக்கிற
கடியாரத்தையும் அந்தக் கடியாரத்தில் நிமிஷம் காட்டுகிற கம்பி எந்
த இடத்திலிருக்கிறதென்பதையும் அறிந்துகொள்வார்.



# சமாசாரத்திரட்டு.

**ஐரோப்பா.**— ஆப்கானிய யுத்தச் செலவுக்காக இங்கிலந்து
50-லட்சம் பவுன் கொடுத்திருக்கிறது. அந்த யுத்தத்தின் மொத்தச்
செலவுகளில் இத்தொகை நாலிலொரு பாகமென்று உத்தேசம். மகா
மகிமைதங்கிய இந்திய சக்கரவர்த்தினியவர்களும் ஆப்கான் யுத்த
சகாய நிதிக்காக 100-பவுன் கொடுத்து உதவினார்கள். சகாயம் பெற
வேண்டியிருக்கிற விதவைகள் 84, அநாத பிள்ளைகள் 156, இந்த வகை
க்கு நாளதுவரையும் கையொப்ப மூலமாய்ச் சேர்ந்த ரொக்கம்
2 614 பவுன்தான். ருஷிய சக்கரவர்த்தியானவர் சென்றமீ 13உ
சார்துபீற்றர்புரியின் தெருவொன்றிற் சவாரிபோகையில் தமது ரதத்
தின் கீழிருந்து ஒரு சட்டிப்பீரங்கிச்குண்டு வெடித்ததினால் சதிக்
கொலையடைந்தார். அவரது சேஷ்ட புத்திரன் அலேக்சாந்தர்
என்னும் ராஜபிரபு அவர் ஸ்தானத்தில் சக்கரவர்த்தியானார்.

**தேன்ஆபிரிக்கா.**—ஸ்பித்ஸ்கொப் என்னுமிடத்தில் நடந்த
சண்டையில் பிரிட்டிஷ் சேனை தோல்வியடைந்து, தளபதியாகிய ஸ்ரீ
ஜியோர்ஜ் கொல்லாய் துரையும் ராணுவ உத்தியோகஸ்தர் பலரும் கொ
லையுண்டனர். கொல்லாய்துரை ஸ்தானத்துக்கு ஸ்ரீ பிரடெரிக் ராபெர்
ட்ஸ் துரை அனுப்பப்பட்டார். அவருக்கு பரோனெற்று பிரபுவரிசை கி
டைத்திருக்கிறதாம்.

**இந்தியா—**தபாலாபீஸ் சம்பந்தமாய் சேவிங்ஸ் பாங்கு என்
னும் மீதமுதல் காணயசாலை ஸ்தாபிக்க இந்திய துரைத்தனத்தார்
யோசித்திருக்கிறார்கள். எவ்வளவு சிறு தொகையான ரொக்கமும் அதில்
வாங்கிக்கொள்ளப்பட்டு, வருஷத்துக்கு நூற்றுக்கு 4-விகிதம் வட்டி
கொடுக்கப்படும். முதல் போடுகிறவர்கள் வாரத்தில் ஒருதடவை
பணம் எடுத்துக்கொள்ளத்தக்கதான ஏற்பாடுகள் செய்யப்படுவது
மன்றி, அவரவர் சுயபாஷையில் கணக்கு விபரங்களும் ஒப்புவிக்கப்ப
டும். ஜனங்களின் சுகவாழ்வை விர்த்திபண்ணுவதே இவ்வேற்பாட்டின்
தாற்பரியம். ஆப்கானிய போரில் துணைபுரிந்த சுதேச அரசரின் சேனைக
ளுக்கும் உதவிப் படைஞருக்கும் யுத்தப் பரிசு முத்திரை வெகுமதி
பண்ண இந்திய அரசாட்சியாரின் அனுமதி பிறந்தது. விஜய நகா
த்தின் மகாராஜாவானவர் பங்காளக் குடாக்கடலின் சென்னைப் பக்
கத்தில் பிம்பிலிப் பட்டினம் அல்லது வேறொரு துறைமுகத்திலிருந்து
வடமேற்கு மாகாணங்களைச் சேர்ந்த ஜெயபுரியில் யாதாமொரு
பெரிய நகரமட்டும் எட்டக்கூடிய இருப்புப் பாதை ஒன்றுக்கு ரோட்
டு சர்வே செய்யும் செலவுக்காக லட்சம் ரூபாய் கொடுக்க உடன்
பட்டிருக்கிறார். மேற்படி சூழச்சி அவர் தந்தை ஜீவந்தராயிருந்த
காலங்களில் கொண்டிருந்த மனோரதியங்களில் ஒன்றாம்.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| வெ | 1 | ௨௧ | உங்கள் வழக்கைக் கொண்டு வாருங்கள். ஏசாயா. 41: 21. |
| ச | 2 | ௨௰ | என் ஆவியை அவர்மேல் அமரப்பண்ணினேன். 42: 1. |
| ஞா | 3 | ௨௧ | உன் பாவங்களை நினையாமலும் இருப்பேன். 43: 25. |
| தி | 4 | ௨௨ | இஸ்ரவேலே; நீ என்னால் மறக்கப்படுவதில்லை. 44: 21. |
| செ | 5 | ௨௩ | கர்த்தரிடத்தில் மாத்திரம் நீதியும் வல்லமையுமுண்டு. 45: 24. |
| பு | 6 | ௨௪ | பேல் பணியும், நேபோ குனியும். 46. 1. |
| வி | 7 | ௨௫ | கல்தேயரின் குமாரத்தியே தரையிலே உட்காரு. 47: 1. |
| வெ | 8 | ௨௬ | துன்மார்க்கருக்குச் சமாதானமில்லை. 48:22. |
| ச | 9 | ௨௭ | இஸ்ரவேலே நான் உன்னில் மகிமைப்படுவேன். 49:3. |
| ஞா | 10 | ௨௮ | மீட்கக் கூடாதபடிக்கு என்கரம் குறுகிற்றோ. 50: 2. |
| தி | 11 | ௨௯ | என் ரட்சிப்போ என்றென்றைக்கும் இருக்கும். 51: 6. |
| செ | 12 | ௧ | அவர் அநேகம் ஜாதிகள்மேல் தெளிப்பார். 52: 15. |
| பு | 13 | ௨ | அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். 53: 5. |
| வி | 14 | ௩ | என் முகத்தை இமைப்பொழுது உனக்கு மறைத்தேன். 54: 8. (55 |
| வெ | 15 | ௪ | அவனை ஜனக்கூட்டங்களுக்குச் சாட்சியாக ஏற்படுத்தினேன். ( 4. |
| ச | 16 | ௫ | என் நீதி வெளிப்படவும் சமீபமாயிருக்கிறது. 56: 1. (57: 14) |
| ஞா | 17 | ௬ | இடறல்களை என் ஜனத்தின் வழியிலிருந்து எடுத்துப்போடுங்கள், |
| தி | 18 | ௭ | கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும். 58: 8. |
| செ | 19 | ௮ | எங்கள் அக்கிரமங்களை அறிந்திருக்கிறோம். 59: 12. |
| பு | 20 | ௯ | என் கிருபையினால் உனக்கு இரங்கினேன். 60:10. |
| வி | 21 | ௰ | என் ஆத்துமா களிகூர்ந்திருக்கிறது. 61: 10. |
| வெ | 22 | ௧௧ | உன் தேவன் உன்மேல் மகிழ்ச்சியாயிருப்பார். 62: 5. |
| ச | 23 | ௧௨ | அவர்கள் நடுவிலே பரிசுத்தாவி இருக்க. 63:12. |
| ஞா | 24 | ௧௩ | எங்களுடைய நீதிகளெல்லாம் கந்தை. 64: 6. |
| தி | 25 | ௧௪ | அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன். 65: 24. |
| செ | 26 | ௧௫ | அவர்களுடைய அக்கினி அவியாமலும் இருக்கும். 66: 24. |
| பு | 27 | ௧௬ | என் வார்த்தைகளை உன் வாயிலே வைக்கிறேன். எரேமியா. 1: 9. |
| வி | 28 | ௧௭ | உன் இளவயதின் பக்தியை நினைத்திருக்கிறேன். 2: 2. |
| வெ | 29 | ௧௮ | தேவரீர் என் இளவயதின் அதிபதி. 3: 4. |
| ச | 30 | ௧௯ | என்னிடத்தில் திரும்பு என்று கர்த்தர் சொல்லுகிறார். 4: 1. |

## விசேஷ நாட்கள்.

3. லெந்தென்னும் நாட்களில், 5-ம் ஞாயிறு.
10. உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும் 5-ம் ஞாயிறு.
14. பௌரணமி.
15. பெரிய வெள்ளிக்கிழமை.
17. ஈஸ்தர் பண்டிகை.
24. உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் 1-ம் ஞாயிறு.
25. பரி. மாற்கு சுவி. திருநாள்.
28. அமாவாசை.

# நற்போதகம்.

௫. மேமீ. ௲௮௮௧ வூ.

## யோசுவாவின் புஸ்தகம்.

## XIX. அதிகாரம்.

1. சிமியோனுக்கு யூதாப்புத்திரரின் நடுவே சீட்டு விழுந்தது;
ஏனென்றால் (1) ஆதி. 49: 7-ல் சொல்லியபடி "இயாக்கோபிலே அவர்
களைப் பிரியவும இஸ்ரவேலிலே அவர்களைச் சிதறவும்பண்ணுவேன்"
என்ற சாபம் நிறைவேறும்படி தேவசெயலால் இப்படி நடந்தது.
(2) யோசுவாவும் எலியேசரும் எல்லாப் பிரபுக்களும், சனங்களும்
தேசத்தை நன்றாய் அளந்து சோதித்தபிற்பாடு யூதாவுக்குக் கிடைத்
தப் பங்கு அதிகமாயும்; அவர்களுடைய தேவைக்கு மிஞ்சினதாயுமிருந்
ததைக் கண்டு சமாதானமாய் அவர்கள் நடுவே பங்கு கிடைத்தது.
(3) எண். 26: 14-ல் கண்டபடி சிமியோன் எல்லாக் கோத்திரங்களி
லும் சிறுத்துப்போனதால் வேறொரு கோத்திரத்துக்குள் பங்கு கொ
டுக்கும்படி நேரிட்டது. இவர்கள் தங்கள் எல்லை விஸ்தாரமாகும்படி
பிற்காலத்தில் செய்த நடபடிக்கையை 1 நாளா. 4: 39-முதல் பார்.
10. செபுலோன், இசக்காருக்குத் தம்பியாயினும், இயாக்கோ
பும் மோசேயும் கோத்திரப்பிதாக்களை ஆசீர்வதிக்கையில் செபுலோன்
முந்தி ஆசீர்வதிக்கப்படுவதால், இப்போது பங்கும் இசக்காருக்கு
முன்னாடியே கொடுக்கப்பட்டது. ஆதி. 49: 13, 14. உபா. 33: 18.
"அவன் கப்பல் துறைமுகமாயிருப்பான்" என்றபடி அவன் பங்கு
மேற்கே பெரிய கடலுக்கும், கிழக்கே கலிலேயாக் கடலுக்கும் நடு
வேயிருந்தது. அங்கும் இங்கும் மீன்பிடிக்கிற கப்பல் துறைமுகங்களி
ருந்தன. கர்மேல் மலையில் நடந்த அதிசயமும், தாபோர் மலையில்
நடந்த அதிசயமும், கலிலேயாக்கடலில் நடந்த அதிசயங்களும், இயே
சுவானவர் இத்திசையில் போதித்த உபதேசமும் பழைய புதிய ஏற்
பாட்டாகமங்களில் விபரமாய்க் காணலாம்.
11. "யொக்கினேயாம்" பேறு அல்லது கீசோன் ஆறு என்று
உத்தேசிக்கப்படுகிறது.
17—23. மேற்கே பெரிய சமுத்திரமும், கிழக்கே யோர்தான் நதி
யும், வடக்கே செபுலோன் கோத்திரமும், தெற்கே மனாசே கோத்தி
ரமுமாகிய இந்நான்கெல்லைக்குட்பட்ட தேசம் இசக்காருக்குரியது.
இந்தக் கோத்திரத்தில் விசேஷித்த இடங்களாவன (1) எஸ்ரேயேல்

ஆகாப் இராசாவுடைய இராசதானி. அங்கேதான் நாபோத்தின் தோட்டமிருந்தது. (2) சூனேம் எலிசா தீர்க்கதரிசியை உபசரித்த நல்ல பெண்பிள்ளை இருந்த ஊர். (3) கீசோன் ஆறு. தேபோராளும் பாராக்கும், சிசேராவை முறியடித்த இடம். (4) கில்போவா மலைகள் சவுல் இராசாவும் அவன் மக்களும் மரித்த இடம். (5) மெகிதோவின் பள்ளத்தாக்கு யோசியா இராசா கொல்லப்பட்டது. 2 நாளா. 23: 29. சகரி. 12: 11.

24—31. ஆசேர் கோத்திரம் பெரிய சமுத்திரக் கரையோரமாயிருக்கிறது. இந்தக் கோத்திரத்தில் லூக். 2: 36-ல் சொல்லிய அன்னாள் தீர்க்கதரிசியைத் தவிர முக்கியமானவர்களில்லை. சூரியாதேசத்து இராசாவாகிய பெனாதாத் ஆகாப் இராசாவால் முறியடிக்கப்பட்ட ஆபேக்கைத் தவிர, விசேஷித்த இடமுமில்லை. 1 இரா. 20: 30. இதற்குச் சமீபமாய் தீருசீதோன் பட்டினங்களுண்டு. இங்கேதான் பூர்வீகக் குடிகளாகிய கானானியர் அடைக்கலம் புகுந்திருந்தார்கள்.

27. 1 இராசா 9: 13-ல் சொல்லிய காபூல் தேசமும் அதைச்சேர்ந்த 20-பட்டினங்களும் இதல்ல. ஏனென்றால் ஒரு விசேஷித்த கோத்திரத்துக்குப் பாத்தியப்பட்டதை சாலோமோன் இராசா வேறுபடுத்தி, ஈராமுக்குக் கொடுத்திருக்கமாட்டார். அதற்குச் சமீபமானதும் ஆசேருக்குப் பாத்தியப்பட்டதும், வேறு காபூலே.

28. "பெரிய சீதோன்" அதின் பூர்வீகம, ஆஸ்தி, மகிமை, சனப்பெருக்கம் முதலிய முகாந்தரங்களால் அப்படி அழைக்கப்படுகிறது. இந்தப் பட்டினம் இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்படவில்லை.

32—39. லீபனோன் மலையடிவாரத்தில் நப்தலிக் கோத்திரமிருக்கிறது. இதின் வடக்கில், தாண்கோத்திரத்தார் கைவசப்படுத்தின லாயீஸ் இருக்கிறது. மேரோம் ஆற்றண்டையில் யோசுவா யாபீனைத் தாத்தினார். 11: 1. இங்கேதான் கப்பர்நகூம், பெத்சாயிதா என்னும் பட்டினங்கள் திபேரியாக் கடலின் வடக்கிலிருக்கிறது. அங்கே கிறிஸ்துநாதர் செய்த அதிசயங்கள் மிகவுண்டு; சிலர் ஏசுநாதர் செய்த மலைப்பிரசங்கமும் அங்கேதானென்று நினைக்கிறார்கள்.

34. நப்தலிக் கோத்திரத்தின் தெற்கெல்லை, அதற்கும் யூதாக் கோத்திரத்துக்கும் இடையில் அநேக கோத்திரங்களிருக்க எப்படி "யோர்தானிலே யூதாவைச் சார்ந்துவரும்" என்று சொல்லலாம்? இந்த வாக்கியத்தில் செபுலோனையும், ஆசேரையும் பற்றிச் சொல்வதுபோல் சொல்லாமல் வேறே கருத்துண்டாகும்படி சொல்லுகிறார். எப்படியும் யோர்தான்மூலமாய் நப்தலிக்கும் யூதாவுக்கும் போக்குவரவு இருந்திருக்கலாம். நப்தலி வடகடையாந்தரத்தில் குடியேறியிருந்தாலும் மேற்கிலும் தெற்கிலுமுள்ள சம்பத்துக்களைச் சுதந்தரிப்பான் என்கிற தீர்க்கதரிசனம் ஒருவகையில் நிறைவேறியிருக்கின்றன. உபா. 33: 23. நப்தலி யோர்தான் நதிமூலமாய் தெற்கிலுள்ள கோத்திரங்களில் வியாபாரஞ்செய்திருப்பான். நப்தலி மட்டும் எட்டியிருக்கிற யோர்தான் நதியை தேவன் யூதாக்கோத்திரத்துக்குக் கொடுத்திருக்கலாமென்று சிலர் உத்தேசிக்கிறார்கள்.

40—48. இஸ்ரவேலர் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணுகையில் சதுரங்க சேனைக்கு முன்னணியில் சென்ற நால்வரில் ஒருவனாயிருந்தும், கானான்தேச சுதந்தரத்தில் கடைசிப் பங்காகச் சீட்டுவிழுந்தது.

47. தாணியர் பக்கத்திலுள்ள பெலிஸ்தரால் வெகுவாய் நெருக்கப்பட்டபோது, ஒரு கோத்திரத்துக்குஞ் சம்பந்தப்படாத வெகு தூரமான லேசேம் பட்டினத்தைப் பிடித்து தங்கள் கைவசப்படுத்திக்



கொண்டார்கள். இது யோசுவாவின் மரணத்துக்குப்பின்பு சம்பவித்தது. நியாயாதி 18-அதி.

49. எல்லாக் கோத்திரத்தாரும் சமாதானமாய்த் தங்கள் சுதந்தரங்களை ஏற்றுக்கொண்டு போவதற்குமுன், யோசுவாவுக்கும் ஒரு சுதந்தரங் கொடுத்தார்கள். யோசுவாவும், எலியேசர், கோத்திர பிரபுக்களோடே தேசத்தை சனங்களுக்குப் பங்கிட்டுக்கொடுத்தாரேயல்லாமல் தமக்கென்று முன்னாடியே தமதிஷ்டபடி ஒன்றைத் தெரிந்துகொள்ளவில்லை.

50. தேவன் காலேபுக்குக் கொடுக்கவேண்டியதைப்பற்றி மோசேக்குச் சொல்லியிருப்பதுபோல் யோசு. 14: 6 அவனைப்போலொத்த விசுவாசமும், தைரியமுமுள்ள யோசுவாவுக்கும் தேவன் ஒரு சுதந்தரத்தைக் கொடுக்க வாக்குக்கொடுத்தார். அந்தப்படிக்கு எப்பிராயீம் கோத்திரத்தில் திம்னாத் சேராவைக் கொடுத்தார்கள். யோசுவா மற்றவர்களுக்கு மாதிரியாக அந்தப் பட்டினத்தைக் கட்டி விஸ்தாரமாக்கி குடியிருந்தான். பிற்காலத்தில் இந்தப் பட்டினம் திம்னாத், ஏரேஸ் என்று பேர் வழங்கிற்று. நியாயாதி. 2: 9.

51. எண். 34: 17. யோசு. 14: 1. 18: 1.

## கேள்விகள்.

1. சிமியோனைப்பற்றி இயாக்கோபு சொன்ன தீர்க்கதரிசனமென்ன? அதெப்படி நிறைவேறிற்று? பிற்காலத்தில் தங்கள் எல்லையை விஸ்தாரமாக்கும்படி அவர்கள் செய்த முயற்சியென்ன?

2. சிமியோன் கோத்திரம் இந்தக் காலத்தில் சிறுத்துப்போயிருந்ததற்கு முகாந்தரமென்ன? அவர்களுக்குக் கிடைத்த சுதந்தரம் யூதாக்கோத்திரத்துக்குள்ளிருந்தபடியால் அவர்களுக்கு பிற்காலத்தில் கிடைத்த நன்மையென்ன?

3. செபுலோன் கோத்திரத்தைப்பற்றி மோசே சொன்ன தீர்க்கதரிசனமென்ன? அதெப்படி இங்கே நிறைவேறிற்று? இங்கே கிறிஸ்துநாதர் செய்த அற்புதங்களெவை?

4. ஈசக்கார் கோத்திரத்தில் பிற்காலத்தில் எழும்பின விசேஷித்த மனிதர்களார்?

5. கானான்தேசத்தில் எத்தனை கர்மேல் மலைகளுண்டு? அங்கங்கே நடந்த விசேஷமென்ன?

6. யோசுவா இவ்வாகமத்தை எழுதினவரல்லவென்று ஆட்சேபிக்கிறவர்கள் சொல்வதற்கு இங்கே ஏதாவது ஆதாரமுண்டா? அதற்கு என்ன சமாதானம்!

7. தாண்கோத்திரத்தைப் பற்றிய தீர்க்கதரிசனமும், நிறைவேறுதலுமென்ன? இந்தக் கோத்திர வரலாறு சொல்லும்.

8. யோசுவாவுடைய நற்குணத்துக்கு இதில் உதாரணமுண்டா?

## XX. அதிகாரம்

2. அடைக்கல பட்டினங்களைப்பற்றி. உபா. 19: 1—13. எண். 35: 9—34. யாத். 21: 13 பார். எல்லாருக்குள்ளும் தேசம் பங்கிடப்பட்டபின்பு தேவன் அடைக்கல பட்டணங்களை ஏற்படுத்தச் சொல்லுகிறார்.

இதுவும் லேவியருக்கு பட்டணங்கள் கொடுக்கப்பட்டபின்பு தான் இவைகள் நியமிக்கப்பட்டன. ஏனென்றால் அடைக்கல பட்டணங்களும் லேவியரைச் சேர்ந்ததே. இஸ்ரவேலருக்குப் பட்டணங்களைக் கொடுத்தபின்பு, மோசங்களுக்குத் தப்பும்படி அடைக்கல பட்டணங்களை ஏற்படுத்தச் சொல்லுகிறார்.

2. அறியாமல், கைப்பிசகாய் என்று இரண்டுதரம் சொல்லியிருப்பதைக் கவனிக்கையில், மனதார, அறிவோடே வேணுமென்று கொலை பாதகஞ்செய்தவர்கள் தப்பிக்கொள்வதற்கு எவ்வளவென்கிலும் இடமில்லையென்று அறியவேண்டும். இப்படிப்பட்டவன் பலிபீடத்தின் கொம்பைப் பிடித்தாலுஞ் கொலைசெய்யப்படவேண்டுமென்று சட்டம். யாத். 21: 14. அந்தப்படியே சாலோமோன் உத்தரவுப்படி யோவாபும் கொல்லப்பட்டான். 1 இராசா 2: 28, 34.

4. நியாயாதிபதிகள் பட்டணங்களின் ஒலிமுகவாசலில் உளுக்கார்ந்திருப்பார்கள். கைப்பிசகாய்க் கொன்றவன் சங்கதிகளையெல்லாம் விபரமாயும், உண்மையாயும் தெளிவாயும் சொல்லவேணும். நியாயாதிபதிகள் அவன் சொல்வதை சத்தியமென்று அறிந்தால் தங்களோடே குடியிருக்க இடங்கொடுப்பார்கள்.

6. "சபைக்கு முன்பாக அவன் நிற்கும்வரைக்கும்" இது குற்றவாளிகளும், குற்றஞ்சாட்டுகிறவர்களும் நிற்கவேண்டும். யாத். 28: 13. ஏசா. 50: 8. சகரி. 3: 1. கிரிமினல் சங்கதிகளை விசாரிக்கும்படிக்கு ஒவ்வொரு பட்டணத்திலும் 23-பேர் நியாயாதிபதிகளாக நியமிக்கப்பட்டிருப்பார்கள். முதலாவது அடைக்கல பட்டணத்து நியாயாதிபதிகள் தீர்ப்புச்செய்ததற்கு (4-வா.) குற்றஞ்சாட்டுகிறவன் சம்மதியாவிட்டால், பழிச்சங்கதி நடந்த சமீபமான பட்டினத்து நியாயாதிபதிகளே தீர்ப்புச்செய்யவேண்டும். எண். 35: 12, 25. அக்காலத்து பிரதானஆசாரியனுடைய மரணமட்டாக்கும் அவன் கைதிபோல் அப்பட்டணத்திலிருக்கவேண்டும். பிரதானஆசாரியன் மரிக்குமுன் அவன் இறந்துபோனால் அவனை அங்கேயே அடக்கம்பண்ணி, பிரதானஆசாரியன் மரித்தபின்பு அவனுடைய எலும்புகளை அவன் பிதாக்கள் கல்லறையில் அடக்கஞ்செய்யக் கொண்டு போவார்களென்பதாய் யூதர் சொல்வார்கள்.

7. யோசுவாவும் பிரபுக்களும் கூடி ஆலோசித்து யோர்தானுக்கு மேற்கே 3-பட்டணங்களும் யோர்தானுக்கு கிழக்கே 3-பட்டணங்களும் ஏற்படுத்தினார்கள். இந்தப் பட்டணங்களைபற்றி நாம் கவனிக்க வேண்டியது. (1) கைப்பிசகாய்க் கொன்றவன் நேராய் ஓடி வரவும், தூரத்திலே பார்க்கவும் அவைகள் மலைகளின்மேல் கட்டப்பட்டிருந்தன.´ (2) எல்லாக் கோத்திரத்தாருக்கும் பிரயோசனமுண்டாகவே அதாவது பாதிநாள் பயணதூரத்துக்குள்ளாகவே அவைகளிருந்தன. காதேஸ் வடக்கிலும், எபிரோன் தெற்கிலும், சீகேம் மத்தியிலும் சமதூரத்திலிருந்தன. (3) இவைகளெல்லாம் லேவியருக்குக் கொடுக்கப்பட்ட பட்டணங்கள். இவர்கள் நியாயப்பிரமாணத்தை நன்றாய் அறிந்திருப்பவர்களாதலால், அநியாயமாயும் பாரபட்சமாயும் தீர்ப்புகள் செய்யாதபடிக்கிருக்கவும், பழிவாங்கும்படிக்கு பின்தொடருகிறவன் மூர்க்கமாய் பட்டணத்துக்குள் வந்து பழிசெய்யாமல் நல்ல ஆலோசனையினாலும், போதனையினாலும் தடுக்கும்படிக்கும், இப்பட்டணங்கள் லேவியரைச் சேர்ந்திருந்தன. அடைக்கலஞ் சேர்ந்தவனும் ஆறுதலாயிருக்கவும், தேவாலயத்துக்குப் போகக் கூடாதவர்களானதால் தேவஊழியக்காரரோடிருந்து அவர்கள் போதனைகளை கற்றுக்கொள்ளவும் இடமாயிற்றே.



8. உபா. 4: 43-ல் யோர்தானுக்குக் கிழக்கிலுள்ள 3-பட்டினங்களும் மோசேயினால் கொடுக்கப்பட்டன. அல்லது மோசே கொடுத்த கட்டளையை உறுதிப்படுத்தினார்கள்.

9. கைப்பிசகாய் கொலைசெய்தவர்களுக்கும் மனதாரக் கொலை பாதகஞ் செய்தவர்களுக்கும் வித்தியாசஞ்செய்யும்படி அவர்கள் நடுவேயிருக்கிற புறோசெலுத்துக்களுக்கு மாத்திரமல்ல, எந்த அந்நியனுக்கும் இந்தச் சலாக்கியமுண்டு. எண். 35: 15

## கேள்விகள்.

1. அடைக்கல பட்டணங்கள் நியமிக்கப்பட்ட நோக்கமென்ன? அந்தப் பட்டணங்களிருக்கிற இடத்தைக் காண்பிக்கிற ஒரு படம் வரையும்.

2. அடைக்கல பட்டணங்களின் அருத்தமென்ன? அவைகளெப்படி கிறிஸ்துநாதருக்கு முன்னடையாளம்?

3. பட்டணத்தின் ஒலிமுக வாசலில் நியாயம் விசாரிக்கிற வழக்கமுண்டென்பதற்கு உமக்குத் தெரிந்த வேதஉதாரணங்களையும் வேதவாக்கியங்களையுஞ் சொல்லுங்கள்!

4 ஒவ்வொரு அடைக்கல பட்டணத்திலும் நடந்திருக்கிற விசேஷங்களை எழுதும். அவைகள் அடைக்கலத்துக்கேற்ற சரியான இடங்கள் தானென்பதற்கு நியாயமென்ன?

5. அடைக்கல பட்டணங்கள் தவிர வேறெதையும் உயிர் தப்பும்படி தேவன் யூதருக்கு நியமித்திருக்கலாம். அதெப்படி கிறிஸ்துநாதருக்குக் குறிப்பு?

---

## XXI. அதிகாரம்.

1. லேவியரின் வம்ச பிதாக்களாகிய கேகாத், கெர்சோன், மெ
ராரி, என்பவர்களும் அவர்களுடைய குடும்பத் தலைவரும் தங்கள் சுதந்
தரத்துக்காக விண்ணப்பஞ்செய்தார்கள்.

2. எண். 35: 2

3. ஆதியாகமம் 49: 7-ல் சொல்லிய இயாக்கோபுடைய தீர்கக
தரிசனத்தின்படியே லேவியர் எல்லாக் கோத்திரங்களிலும் சிதறியி
ருக்கும்படிக்கு இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சுதந்தரத்திலே பட்ட
ணங்களைக் கொடுத்தார்கள். எல்லாச் சனங்களும் வேதத்தை அவர்
கள் வாயில் தேடும்படிக்கும், மல். 2: 7. இஸ்ரவேலருக்கு நியாயப்
பிரமாணத்தைப் போதிக்கவும், உபா. 33: 10. எல்லாச் சமயங்களி
லும் தாராளமாய் இஸ்ரவேலர் லேவியரண்டை போகவும் பிரயோச
னமாயிற்று. பட்டணங்களும் அதைச் சேர்ந்த வெளி நிலங்களுமே
லேவியருக்குரியது. அப்பட்டணத்தைச் சேர்ந்த வயல்களும் பட்டி
களும் இஸ்ரவேலரைச் சேரும். 11, 12-வாச். பட்டணத்திலுள்ள ஒரு
லேவியன் வீட்டை இஸ்ரவேலன வாங்கினால் யூபிலி வருஷத்தில்
லேவியரைச் சேருமென்பதினால், லேவி. 25: 33, 34. அந்தப் பட்டணங்
கள் லேவியருக்கே சொந்தமென்று அறியலாம்.

4. இந்த 3-கோத்திரங்களும், தேவாலயத்துக்குச் சமீபமானதி
னால் ஆசாரியருக்கு அவைகளில் சுதந்தரம் கிடைத்தது இசைவுதான்.

தற்காலத்தில் ஆசாரியர் ஒரு பட்டணத்திலுங்கூட வாசமாயிருக்க போதுமானவர்களாயிராவிட்டாலும், பிற்காலத்தாருக்காக 13-பட்டணங்கள் கிடைத்தது அவர்களுக்குரிய கனமே. யூபிலி வருஷம்வரை லேவியர் தங்கள் வீடுகளை விற்க பாத்தியப்பட்டவர்களானதாலும், லேவி. 25: 33. இஸ்ரவேலரும் இனமுறையினாலும், பத்திக்கடுத்த விஷயங்களாலும், அவர்களோடேகூட குடியிருக்கவேண்டியிருப்பதாலும் அந்தப் பட்டணங்கள் பாழாயிராமல், எல்லாம் குடியேற்றப்பட்டிருக்கும்.

5. கோகாத்தின் புத்திரர் ஆரோனின் வம்சத்தார்தான். ஆரோனின் குடும்பம் மாத்திரம் ஆசாரியர், மற்றவர்கள் லேவியரே. ஆகையால் இவர்களுடைய சுதந்தரம் முந்தின 3-கோத்திரங்களுக்குச் சமீபமும், ஆரோனியருக்கு அடுத்ததாயுமிருந்தது. முந்தின கோத்திரங்களிலும், இந்தக் கோத்திரம் சிறியதானபடியால், 10-பட்டணங்கள் மாத்திரம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. எண். 35: 8.

12. ஒவ்வொரு பட்டணத்தின் 2,000 முழத்துக்கப்புறமுள்ள வயல்களும் பட்டிகளும் இஸ்ரவேலரைச் சேரும். எண். 35: 5. இந்தச் சங்கதி மற்றப் பட்டணங்களுக்கு இப்படியே என்பதற்கு உதாரணமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 1 நாளா. 6: 56.

15. ஓலோன் என்பது ஈலென் என்றும், 1 நாளா. 6: 58. யுத்தா என்பது ஆசான் என்றும், 1 நாளா. 6: 59. மி. அழைக்கப்படுகிறது. இடங்களின் பேர்கள் வெகுகாலத்துக்குப் பின்பும், விசேஷித்த நோக்கத்துக்காகவும் மாற்றப்படுகிற வழக்கப்படி நடந்திருக்கிறது.

41. எல்லாக் கோத்திரங்களிலும் சிறியதான லேவிக் கோத்திரத்துக்கு மற்றவர்களிலும் அதிகமான 48-பட்டணங்கள் கொடுக்கப்பட்ட அவசியமென்ன? லேவியர் அதிகம் பெற்றார்களென்பது சரியல்ல. லேவியருக்குக் கிடைத்த பட்டணங்களை விபரமாய்ச் சொல்லியிருப்பதுபோல் மற்ற கோத்திரங்களுக்கு அப்படிச் சொல்லாமல் அநேகம் விடப்பட்டிருக்கிறது. லேவியருக்கு அந்தப் பட்டணங்களும் அதைச் சேர்ந்த வெளி நிலங்களுமாத்திரம் தானே கிடைத்தது. ஆகையால் லேவியருக்குக் கிடைத்த அதிக பட்டணங்கள் கூடி இஸ்ரவேலருக்குரிய ஒரு பட்டணத்துக்குச் சரியாயிருக்கும். லேவியர் தேவஊழியக்காரரானதால் அவர்கள் முழுவதுமாய், தேவாராதனைக்கும் சனங்களுடைய ஆத்துமாக்களைப்பற்றிக் கவலைப்படுவதற்கும், தடைவராதபடிக்கும், தேவன் இப்படிச்செய்ய சித்தமானார்.

## கேள்விகள்.

1. லேவியருக்குக் கொடுக்கப்பட்ட பட்டினங்கள் எங்கே? இதினால் விளங்கிய தேவஞானமும், கிருபையுமென்ன?

2. ஆசாரியர் ஆரோனுடைய குடும்பமாய் மாத்திரமிருக்க அவர்களுக்கு 13-பட்டணங்கள் கொடுக்கப்படுவதற்கு நியாயமென்ன?

3. லேவியரின் பட்டணங்களில் சில பிற்காலத்தில் பேர்பெற்றதாறாற்று. எது? எப்படி?

4. ஆசாரியருக்கு யூதா, பென்யமீன் கோத்திரத்தில் சுதந்தரங் கொடுக்க நேரிட்டதென்ன?

5. லேவியருக்குக் கொடுக்கப்பட்ட பட்டணங்கள் எல்லாம் அவர்களால் முழுவதுமாய் குடியேற்றப்படவில்லையென்பதற்கும் லேவியரில்லாததாயிருக்கிற பொல்லாங்கின்னதென்பதற்கும் ஒரு உதாரணம் சொல்லும்!

6! போதகன்மாருக்கிருக்கவேண்டிய இலட்சணங்களில் அவர்களால் தேசத்துக்குக் கிடைக்கிற நன்மைகளில் இங்கே என்னபடிக்கிறோம்?



## XXII அதிகாரம்.

7. யோசுவா $2\frac{1}{2}$ கோத்திரத்தாரை ஆசீர்வதித்து அனுப்புகை
யில் தன் முற்பிதாவாகிய யோசேப்பின் சந்ததியில் மனாசே பிரிந்து
போகையில், அவர்களை அலாதியாய் ஆசீர்வதித்து அன்புக்கும் நினை
ப்புக்குமடையாளமாக வெகுமானங் கொடுத்தனுப்பினார்.

8. படையெடுத்துப் போனவர்களுக்கும், யோர்தானுக்கப்பா
லிருந்த சபையனைத்துக்கும் சரிபங்கு செய்துகொள்ள கற்பிக்கப்பட்
டார்கள். என் 31: 27. 1 சா. 30: 24.

10. $2\frac{1}{2}$ கோத்திரத்தாரும் யோர்தானுக்கப்புறத்திலப் பலிபீடங்
கட்டினார்கள். சாடையாய்ப் பார்த்தால் பலிபீடம் கானானில் கட்
டப்பட்டதாகத் தோன்றும். "கானானுக்கெதிரே" என்று சொல்லியி
ருப்பதாலும் பலிபீடம் கட்டுவதற்கு அவர்கள் சொன்ன முகாந்
தரத்தாலும், கானான்தேசத்தில் தேவனை ஆராதிக்கும்படி செய்யப்
பட்ட பலிபீடத்தின் மாதிரிப்படி தங்கள் தேசத்திலே ஒன்றைக்
கட்டினார்கள். "அங்கே" என்ற வார்த்தை "அப்பேது" என்று
பொருள்கொள்ளும். சங். 14: 5. 36: 12. ஓசே. 2: 15. லத்தீன் பாஷை
யில் இடத்தைக் காட்டும் வினையுரிச்சொல் காலத்தைக் காட்டும்
வினையுரியாக வழங்கப்படும்.

12. தேவனுடைய கட்டளைப்படி தேவனைவிட்டு மறுதலிக்கிற
வர்கள் கொல்லப்படவேண்டும். உபா 13: 13. அதற்காக மூப்பர்களு
டைய உத்தரவால் யுத்தத்துக்கு அவர்களுக்கு விரோதமாக இஸ்ர
வேலர் எழும்பினார்கள். நியாயாதி 20; 1.

16. தேவன் ஆச்சரியமான நன்மைகளை யளித்திருக்கிற நாளி
லே நமது வருத்தங்கள் மோசங்களினின்று காக்கப்பட்டு, நமது
வேலையின் பலனை அறுக்கப்போகிற இந்நாளில், வேறே பலிபீடம்
கட்டி தேவனை வணங்குவது பெரிய பாவமென்று இஸ்ரவேலர்
சொன்னார்கள். யாத் 20: 24. லேவி 17: 8, 9. உபா. 12: 5. 11: 13.

17. பேயோரில் பாகாலை வணங்கின பாவம் பெரிது. எண். 25.
அதினிமித்தம் தேவன் தண்டித்தாலும் எண். 25: 11. அந்தப் பாவத்
தின் அழுக்கும் நிந்தையும் இன்னும் போகவுமில்லை. அந்த புளித்த
மா இன்னும் சிலருக்குள் மறைக்கப்பட்டிருந்தது. யோசு. 24: 23.

18. ஒருவர் அல்லது சிலருடைய பாவத்தினால் சபையனைத்தின்
மேலும் தேவன் கோபங்கொள்வாரென்ற பயமிருந்தது. எண். 16: 22.
யோசு. 7: 24.

9. $2\frac{1}{2}$ கோத்திரத்தாருடைய தேசம், ஆசரிப்புக்கூடாரமும்
பலிபீடமுமில்லாமலிருப்பதால் அது தீட்டாயிருக்குமென்றாலும் அவர்
கள் வசதிக்காக தெரிந்துகொண்ட பங்கு, தேவாராதனைக்கும் தேவ
தயவுக்கும் இடைஞ்சலாயிருக்கிறதென்று உணர்ந்துகொண்டாலும்
வேறே பலிபீடங் கட்டுகிற இப்படிப்பட்ட பெரிய பாவத்தைச் செய்

கிறதிலும் எங்கள் நடுவே காணியாட்சி பெற்றுக்கொள்ளுங்கள் என்கிறார்கள்.

23. "கர்த்தர் அதை விசாரிப்பாராக. இந்த வாசகம் வேதத்தில் அடிக்கடி வழங்கப்படுகிறது. உபா. 18: 19. 1 சாமு. 20: 16. யோபு 10: 6. சங். 10: 13.

25. வாக்குத்தத்தின் தேசத்திலிருந்து, யோர்தான்நதி 2½ கோத்திரத்தாரைப் பிரித்துப்போடுவதாலும், தேவன் தங்கள் பிதாக்களோடு செய்த உடன்படிக்கையை நீக்கிப்போடவும்; தேவனை வணங்கவும், அவருடைய தயவைப் பெறவும் பாத்தியமில்லாமல் அகற்றிப்போடவும் ஏதுவில்லாதபடிக்கு இப்படிச் செய்தோம் என்றார்கள். 2 சாமு. 20: 1. எஸ் 4: 3. யோவா. 13: 8.

34. 2½ கோத்திரத்தாரும் கர்த்தரே தேவனென்பதற்கு இந்தப் பீடமே சாட்சியென்று சொல்லி அதற்கு "ஏத" என்று பேரிட்டார்கள். அப்படியே யோசுவாவும் 24: 27-ல் சாட்சி வைக்கிறார்.

## கேள்விகள்.

1. ஆசாரியர் மாத்திரமல்ல பிரபுக்களும் ஆசிர்வதிக்கிற வழக்கத்துக்கு உதாரணமுண்டா?

2. 2½ கோத்திரத்தாரைப்பற்றி நாம் புகழ்ச்சியாய்ச் சொல்ல வேண்டிய பத்திக்குரிய நற்குணங்களை விபரமாய்ச் சொல்லவும்.

3. சாட்சிக்கடையாளமாகப் பீடம் கட்டினதாரார்?

4. தேவன் நம்மோடு கூடவிருக்கிறாரென்றதார் எப்படி? வேறே யாரும் அப்படிச் சொன்னது.

5. பீனேகாஸ் ஆர் அவனுடைய பத்தி வைராக்கியத்துக்குரிய திருஷ்டாந்தாமுண்டா? அதற்கு அவருக்குக் கிடைத்த கனமென்ன?

6. இஸ்ரவேல் புத்திரர் எனைத்துக்காக கர்த்தரை ஸ்தோத்திரித்தார்கள். அப்படியே தேவனுக்கு யார்யார் என்னென்ன சமையத்தில் ஸ்தோத்திரஞ் செலுத்தினார்கள்.

## XXIII அதிகாரம்.

2. தேசம் பங்கிட்ட 14-அல்லது 17-வருஷங்களுக்குப் பின்பு யோசுவா எல்லா சபையாரின் மூப்பர், தலைவர், நியாயாதிபதிகள் எல்லாரையும், கர்த்தருடைய உடம்படிக்கைப் பெட்டியிருக்கிற சீலோவில் வரவழைத்து புத்தி சொல்லுகிறார்.

6. மோசேயின் நியாயப்பிரமாணங்களைக் கைக்கொள்வதில் விசேஷமாய் மீதியானகானானியரை துரத்துவதிலும் அழிப்பதிலும் தைரியமாயிருக்கவும், நியாயப்பிரமாணத்தோடே ஒன்றைக் கூட்டவும், குறைக்கவும் கூடாதென்றும் எச்சரிக்கிறார். 1: 7. உபா. 5: 22. 28: 14.

7. மீதியாயிருக்கிற சாதிகளோடு உறவாடாமலும், சம்பந்தங் கலவாமலுமிருக்கவும்.—அந்நிய தேவர்களின் பேரைச் சொல்வதிலும், அந்தப் பேரைக் கேட்பதிலும் அதை வணங்குவதற்கான சோதனைகுட்படாமலிருக்கவும்; யாத். 23: 13. உபா. 12: 3. சங் 16:



எபேசி. 5: 3.—புறச்சாதியாரை அவர்கள் வழக்கப்படி அவர்கள் தே
வர்களுக்கு ஆணையிட பலவந்தம் செய்யாமலும், அதை வணங்கா
மலிருக்கவும் எச்சரிக்கிறார்.
8. விடா ஐக்கியத்தினாலும் நிலைவரமான கீழ்ப்படிதலினாலும்,
முழுவதுமான பட்சத்தாலும், உண்மையுள்ள ஆராதனையினாலும் தேவ
னைப் பற்றிக்கொண்டிருக்க ஏவுகிறார். உபா 10: 20. 11: 22. 13: 4. 22: 5.
11. இஸ்ரவேலர் வனாந்தரத்தில் எச்சரிப்பும் விழிப்பும், சாக்
கிரதையுமுள்ளவர்களாயிருந்ததைப் பார்க்கிலும், இப்போது அதிக
சோதனையுள்ள நிலைமையிலிருப்பதால் அதிக கவனமாயிருக்க எச்சரி
க்கிறார். மீதியான கானானியர் பக்கத்தில் மிகவும் துன்மார்க்கராயிரு
க்கிறபடியால் அதிக சோதனைக்கிடமாயிருக்கும். இஸ்ரவேலர் இப்
போது சுகமும், செல்வமும், சமாதானமு முள்ளவர்களாயிருப்பதால்
பெருமை, தேவனை மறக்கிறகுணம், சிற்றின்பமுதலிய பாவங்களுக்கு
மிடமாயிருக்கும். உபா 6: 10—12.
13. கானானியரோடு சம்பந்தங் கலந்து, உறவாடும்போது, அவ
ர்கள் லேசாய் அநியாயம், அவபக்தி, தகாத இச்சைகளுக்கு நாளடை
வாய் இழுத்துக் கெடுத்துப்போடுவார்கள். யாத் 23: 33. உபா 7: 16.
1 இராசா. 11: 4.
14. சகல மனிதரும் போகிறவழி மரணமே. மனிதர் யாவரும் சா
கவேண்டும். எபி 9: 27. இப்படியே தாவீதும் சொல்லுகிறார். 1 இரா
சா. 2: 2. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின் மிகுதியான
பங்கு இன்னும் ஜெயிக்கப்படாமருக்கக்கொள்ள "ஒரு வார்த்தையும்
தவறிப்போகவில்லை" யென்று சொல்வது சரியாவென்றால், தேவன்
சத்துராதிகளெல்லாரையும் சர்வ சங்காரஞ் செய்ய வாக்குக்கொடுத்
திருந்தாலும் அவர்கள் தேசத்தையெல்லாம் ஒருமிக்கவல்ல, படிப்படி
யாய்க் கொடுக்கச் சித்தமானதால் சரிதான். உபா 7: 22.

## கேள்விகள்.

1. யோசுவா இஸ்ரவேல் சபைக்கு, என்னபுத்தி சொல்லுகி
றார். அந்த புத்திமதிகள் கவனமாய் அங்கிகரிக்கப்படும்படி என்ன
நியாயமுரைக்கிறார்?
2. கர்த்தரைவிட்டு பின்வாங்கினால் இஸ்ரவேல் சபைக்கு என்
னென்ன குறைவுகள் நேரிடுமென்கிறார்.
3. "ஒருவன் ஆயிரம் பேரைத் துரத்துவான்" என்பதை ஏன்
சொல்லுகிறார். அதற்குரிய திருஷ்டாந்தஞ் சொல்லவும்.
4. "தேவன் சொன்ன நல்வார்த்தைகளில் ஒன்றும் தவறவி
ல்லை." என்பதை ரூபகாரப்படுத்தும்.
5. விக்கிரகாராதனைக்கு விலக்கமாயிருக்கும்படி என்ன போதனை
உரைக்கிறார். இந்த போதனைக்கு விரோதமாய் நடந்தவர்களுண்டா?
எப்படி?

## XXIV அதிகாரம்.

1. ஆசரிப்புக் கூடாரமும், உடன்படிக்கைப் பெட்டியுமிருந்த
சீலோவுக்கு இஸ்ரவேல் சபையார் கூடி வந்திருப்பார்கள். அவர்

கள் தேவனுடைய சந்நிதியில் வந்து நின்றார்களென்றும், வா. ௨. ஒரு பெரிய கல்லையெடுத்து கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தின் அருகில் யோசுவா நாட்டினானென்றும் சொல்லியிருப்பதால்; தகுதியான இடமென்று நினைக்கவேண்டியது. ஆனாலிங்கே சீகேமில் கூடிவந்தவர்களென்று சொல்லியிருக்கிறது. இந்த சமையத்தில் சீசேம் வசதியான இடமாயும், லேவியருடைய பட்டணமாயும், அடைக்கல பட்டணமாயும், யோசுவாவுடைய பட்டணத்துக்குச் சமீபமாயுமிருந்ததினால் மாத்திரமல்ல, வேறே விசேஷித்த (2) முகாந்தரங்களுக்காகவும் சீகேமுக்கு கூடிவந்தார்கள். அதென்னவென்றால் (1) யோசேப்புடைய எலும்புகளையும் வா. 32 கோத்திரப் பிதாக்களின் எலும்புகளையும் அப் 7: 15, 16 கெம்பீரமாய் அடக்கஞ் செய்யவும்; (2) தேவனுக்கும் ஆபிரகாமுக்கும் சீசேமில் செய்த உடன்படிக்கையை புதுப்பிக்கவும் ஆதி 12: 6, 7. இஸ்ரவேலர் கானானில் பிரவேசித்தபோது, ஏபால் கெரிசீம் மலைகளுக்கு நடுவே செய்த உடன்படிக்கையைப் புதுப்பிக்கவும் நோக்கமாக சீகேமில்கூடிவந்தார்கள். இந்த மலைகளும் சீகேமுக்குச் சமீபமே. யோசு 8: 30. நியாயாதி. 9: 6, 7. இப்படியானால் அவர்கள் தேவனுடைய சந்நிதியில் வந்து நின்றார்களென்பது சரியா? சிலசமயங்களில் உடன்படிக்கைப்பெட்டி விசேஷித்த சமயங்களில் கொண்டுபோகப்பட்டிருந்தபடி இந்தச் சமயத்திலும் நடந்திருக்கும். 1 சாமு. 4: 3. 2 சாமு. 15: 24. அல்லது பக்திக்குரிய காரியங்களுக்காகச் சபையார் ஏகமாயும், வெளியரங்கமாயும் பரிசுத்தமாயும் கூடி வரும்போது தேவன் அவர்கள் நடுவிலிருக்கிறார். யாத். 20: 24. சங். 82: 1. மத். 18: 20. அல்லது யோசுவா தேவநாமத்தைக்கொண்டு பேசினதும், அவர்கள் தேவனுடைய கட்டளையாக ஏற்றுக்கொண்டதுமான செய்கையே தேவன் அவர்களோடிருந்ததுபோலாயிற்று. ஈசாக்கு கர்த்தருக்கு முன்பாக யாக்கோபை ஆசீர்வதித்தானென்கையில், தேவனுடைய நாமம், பிரசன்னத்தைக்கொண்டு என்ற பொருளாம். ஆதி. 27: 7. யெப்தா மிஸ்பாவில் கர்த்தருக்கு முன்பாக தன் வார்த்தைகளைச் சொன்னானென்கையில் தேவசமுகத்தில் அவைகளுக்குச் சாட்சியாக அழைக்கிறான் என்ற பொருளாம்.

2. "நதி" ஐப்பிராத் நதியை மேன்மையாக அப்படி அழைத்திருக்கிறது. இஸ்ரவேலர் தங்கள் முற்பிதாக்களைப்பற்றி, வீம்பாய் பெருமைபாராட்டாதபடிக்கும், தங்களுக்குக் கிடைத்த நன்மைகள் யாவும் தங்கள் புண்ணியத்தினாலல்ல, தேவகிருபையினாலேயே கிடைத்திருக்கிறதென்று நிச்சயப்படுத்த நோக்கமாயும், ஆபிரகாம், நாகோர் விக்கிரகாராதனைக்காரராய் முன்னிருந்தார்களென்று சொல்லுகிறார்.

4. ஏசாவுக்கு தேவன் சேயீர் மலையைக் கொடுத்ததற்கு முகாந்தரமென்ன? இயாக்கோபுக்கும் அவன் குடும்பத்துக்கும் முழுவதுமாய்க் கானான்தேசத்தைக் கொடுக்கவே. ஆதி. 36: 7, 8.

9. பாலாக் இஸ்ரவேலருக்கு விரோதமாக ஒருக்காலும் யுத்தஞ் செய்யவில்லையே. நியாயாதி. 11: 25. அப்படியிருக்க இங்கே சொல்லியிருப்பது சரியா? பாலாக் வெளியரங்கமாயல்ல, அந்தரங்க ஆலோசனையினாலும், தந்திர உபாயங்களினாலும், பிலேயாமுடைய அபாயங்களினாலும் யுத்தஞ்செய்தானென்கலாம். வேதத்தில் எண்ணமே செய்கையாகச் சொல்லப்படுவதுண்டு. 11-வச. ஆதி. 37: 21. எசேக். 24: 13. மத். 5: 28. யோவா. 10: 32.

12. "குளவிகள்" பயங்கரமான அழிவுகளுக்கும் வாதைகளுக்கும் உவமானமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறதென்று சிலர் நினைப்



பார்கள். கானானில் பிரவேசிக்குமுன்னே நேராகவே குளவிகளைக்
கொண்டு தேவன் சத்துருக்களைத் துரத்தினார் என்று சொல்வதே சரி.
யாத். 23: 28. உபா. 7: 20.
14. "தேவர்களை அகற்றிவிடுங்கள்." யோசுவா வெளியரங்கமா
ன தோப்புகளையும் விக்கிரகங்களையும் அழித்துப்போட்டாலும் அவர்
களில் சிலர் இரகசியமாய் தங்கள் வீடுகளில் அப்பியாசித்து வந்தார்
கள். 23-வா. ஆமோ. 5: 25, 26. அப். 7: 42, 43.
15. கர்த்தரைச் சேவிப்பது அவசியமும், பிரயோசனமுமுள்ள
தென்றும், விக்கிரகாராதனை புத்தியீனமும் வீணும், மோசமுள்ளதெ
ன்றும் நன்றாய் அறிந்துகொள்ள இப்படிச் சொல்லுகிறார். இஸ்ரவே
லர் மெய்த்தேவனை வணங்குவதற்கு அவர்கள் சுயாதீனமாய் அல்லது
அவர்களிஷ்டப்படிக்கு விட்டதாக நாம் நினைக்கக்கூடாது. நியாயப்
பிரமாணமோ விக்கிரகத்துக்கு விலக்கமாயிருக்கவும், விக்கிரகபத்திக்
காரரைக் கண்டிப்பாய்க் கொலைசெய்யவும் கற்பித்திருக்கிறபடியால்,
பயத்தோடேயாவது கர்த்தரை சேவிக்கவேண்டியதுதான். இருதயத்
தோடே கர்த்தரை சேவிக்க இப்படிச்சொல்வது வேதபாஷையே
ருத். 1: 8. 5. 1 இராசா. 18: 21. எசே. 30: 39. யோவா. 6: 67.
19. கர்த்தரைச் சேவிப்பது கூடாத காரியமாகச் சொல்லாமல்
அவரைச் சேவிக்கிறதற்கு அதிக வருத்தமும், அதிகக் கவலையும், கவ
னமும், தீர்மானமுமிருக்கவேண்டியதென்று யோசுவா எச்சரிக்கிறார்.
தேவன் நிறைந்த பரிசுத்தரானபடியால் தம்மை பரியாசம்பண்ண
வொட்டார். மோசேயின் காலத்திலிருந்ததுபோல அவர்கள் அவபத்தி
யும் அஞ்ஞானமுமுள்ளவர்களாய் தன் காலத்துக்குப்பின்பு கலகஞ்
செய்யாதபடிக்கு எச்சரிக்கிறார். அவர்கள் தேவனையும் விக்கிரகங்களை
யும் ஒருமிக்க வணங்க இசையாதபடிக்கு அவர் எரிச்சலுள்ள தேவன்
என்கிறார். தேவன் தமது பிரமாணத்தை மீறி நடக்கிறவர்களைப் பயங்
கரமாய்த் தண்டிக்கிறவராயிருக்கிறார்.
23. சிலர் எகிப்திலிருந்து கொண்டுவந்ததும், கானானில் எடுத்தது
மான அந்நிய தேவர்களை தேவகட்டளைக்கு விரோதமாய் பொருளா
சையினாலும், அவபத்தியினாலும் வைத்திருந்ததாகத் தோன்றுகிறது.
ஆவிக்குரிய உள்ளான ஆராதனையின்னதென்று காண்பிக்கிறார். உபா.
6: 5. 1 இரா. 8: 53. 1 நாளா. 29: 10—19. நீதி. 23: 16.
25. இஸ்ரவேலர் கர்த்தருடைய சனங்களென்பதற்குரிய உடன்
படிக்கையை வெளியரங்கமாய்ப் புதுப்பித்தார். அவர்களும் அவர்கள்
பின்சந்ததியாரும் என்றைக்கும் கர்த்தரையே சேவிக்கும்படிக்கும்,
உடன்படிக்கைக்குரிய நியாயங்களை கைக்கொள்ளும்படிக்கும் ஏற்பாடு
செய்தார். 2 இரா. 11: 17—20. நெகே. 10: 1.
26. சனங்கள் கர்த்தரோடே செய்த உடன்படிக்கையின் வார்த்
தைகளை எழுதி, உடன்படிக்கைப்பெட்டியில் வைத்திருக்கிற உபா. 31:
9, 26. ஆகமத்தில் சேர்த்து அத்தோடே யோசுவாவின் புஸ்தகமும்
வைக்கப்பட்டது. இப்படிப்பட்ட பெரிதும், விசேஷித்ததுமான நிலைய
படிக்கையை எப்போதும் ஞாபகமாய் நினைத்துக்கொள்ளவும்,-சனங்
கள் தாங்கள் செய்த உடன்படிக்கையில் எப்போதும் உண்மையாய்
நிலைத்திருக்கவும்;-அவர்கள் அதை மீறுங்காலத்தில் தேவன் பயங்கர
மாய்த் தண்டிக்கும்போது சாட்சியாயிருக்கவும் நோக்கமாக, அப்
படிச் செய்தார். பூர்வீக வழக்கப்படி இந்தச் செய்கைக்கு ஞாபகச்
சின்னமும் சாட்சியுமாக ஒரு கல்லை நாட்டினார். ஆதி. 28: 18. 31: 45.
35: 14. யாத். 24: 4. உபா. 27: 2. யோசு. 4: 3, 8: 32. இந்த உடன்

படிக்கை ஓர்வேளை இந்தக் கல்லில் எழுதப்பட்டிருக்கலாம். புறச்சாதியார் செய்கிறபடி பலிபீடத்தினருகே மரத்தோப்புகள் வைக்கக் கூடாது என்று உபா. 16: 26-ல் கற்பிக்கப்பட்டிருந்தாலும், இப்போது ஒரு பெரிய மரத்தினருகே பலிபீடம் அல்லது உடன்படிக்கைப்பெட்டி வைக்கப்பட்டிருந்தது.

24. கல் கேட்டதாக சொல்லுகிற பாஷை உவமானமே. அப்படியே வானமும் பூமியும் கேட்பதாகச் சொல்லியிருக்கிறதே. உபா. 32: 1. ஏசா. 1; 2. எரே. 2: 12.

32. சீகேமில் அல்ல, அதைச் சேர்ந்த வெளிநிலத்தில் ஆதி. 33 18. இஸ்ரவேலருக்குரிய கல்லறைகள் பூர்வீகத்தில் பட்டணத்துக்கு வெளியே வயல்களிலும் தோட்டங்களிலுமிருந்தது.

33. விசேஷித்த தயவுக்காகவும், வசதிக்குத்தக்கதாகவும் உடன்படிக்கைப்பெட்டியும், ஆசரிப்புக்கூடாரமுமிருந்த ஷீலோவுக்குச் சமீமான மேட்டிலே பிரதானஆசாரியன் வாசம்பண்ணி அங்கே அடக்கஞ் செய்யப்பட்டான். மற்றப்படி ஆசாரியருக்குரிய பங்கு வீதம் யூதா பென்யமீன், சிமியோன் கோத்திரத்திலுள்ளது. அவை ஷீலோவுக்கு வெகு தூரம்.

## கேள்விகள்.

1. இந்தச் சமயத்தில் சபையார் கூடிவந்த இடமெது? அதற்குரிய நியாயமென்ன?

2. யோசுவா செய்த பிரசங்கமும், அதின் நோக்கமுமென்ன?

3. யோசுவா இஸ்ரவேல் சனங்களோடே உடன்படிக்கை செய்வதற்கு அவசியமென்ன! அந்த உடன்படிக்கையை புதுப்பித்ததற்கு அவர்செய்த (2) விசேஷித்த ஞாபக சாட்சிகளெவை?

24. மோசே இஸ்ரவேலரோடே உடன்படிக்கையை எத்தனைதரம் புதுப்பித்தார்? அப்படியே யோசுவாவும் எத்தனை தடவை?

5: நாம் தேவனோடே உடன்படிக்கைக்குள்ளாக வேண்டியது மிகவும் அவசியமும் பிரயோசனமுமுள்ளதென்று காண்பியும்.

6. யோசுவாவுடைய குணங்களை விபரமாய் எழுதி அதற்குரிய சரித்திரக் குறிப்பையும் காட்டுக.

7. அக்காலத்து இஸ்ரவேல் சபை யோசுவாவின் காலம்வரை கர்த்தரை சேவித்தவர்களென்று காட்டும்.

8. யோசுவா அந்நிய தேவர்களை அகற்றிப்போட கற்பிக்கிறாரே அவைகளெவை? ஏது? இப்படியே கற்பித்தவர் ஆர்? இதினால் நாம் படிக்கிறதென்ன?

9. ஒரு தலைவனுக்கும் போதகனுக்குமுரிய சிறந்த இலட்சணங்கள் யோசுவாவுக்கிருந்ததென்று தெளிவாய் எழுதும்.

---



## Exposition of the Church Catechism.

## ஞானோபதேசவினாவிடை

வியாக்கியானம்.

### ௯-ம் அதிகாரம்.

விசுவாசப்பிரமாணம்.

௯-ம் பிரிவு.

பரிசுத்தாவியானவரைக் குறித்து.

வினா. விசுவாசப்பிரமாணத்தில் அடுத்த உபதேசம் எது?

விடை. பரிசுத்தாவியையும் விசுவாசிக்கிறேன்.

வினா. பரிசுத்தாவியானவர் யார்?

விடை. திரித்துவத்தில் மூன்றாவது ஆளாகிய ஜீவனின் அதிபதியும், ஜீவனைக் கொடுக்கிறவரும், பிதாவிலும் குமாரனிலும் நின்று புறப்படுகிறவருமானவரே. அவர் சிருஷ்டிக்கப்படாதவர், தம்மாலே தானே இருக்கிறவரும், பிதாவோடும் குமாரனோடுங் கூட தொழுது தோத்திரிக்கப்படுகிறவருமாயிருக்கிறார்.

தேவன் ஆவியாயிருக்கிறார். யோவா. 4: 24.

வினா. பரிசுத்தாவி ஒரு ஆள் என்று சொல்லப்படுவதெப்படி?

விடை. அவர் ஒரு ஆளுக்குரிய தன்மை, இலட்சணங்கள் உடையவராக வேதத்தில் சொல்லப்படுவதினாலேயே. அவரைக்குறித்து அறிகிறார், கொடுக்கிறார், அழைக்கிறார், செய்கிறார், வருகிறார், அனுப்புகிறார், பேசுகிறார், கேட்கிறார் முதலானவை சொல்லப்பட்டிருக்கிறது.

அவர் தோன்றத்தக்க ரூபமாய்க் காணப்பட்டார். லூக். 3: 22. அப். 2: 3.

அவர் அப்போஸ்தலருக்கு பாஷைகள் பேசும் வரத்தைக் கொடுத்தார். அப். 2: 4—8.

அவர் அப்போஸ்தலருக்கு அநேக அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்யும் திராணியைக் கொடுத்தார் அப். 2: 43

கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக்கொண்டு போய்விட்டார். அப். 8: 39.

அப். 15: 28. 1 கொரி. 12: 8—10. 12: 11.

கிறிஸ்து, தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்தினார். மத். 12; 28.

வினா. பரிசுத்தாவி, தேவனாயிருக்கிறாரென்பதற்கு அத்தாட்சியென்ன?

விடை. தேவனுக்கே உரிய பற்பல இலட்சணங்களும், கிரியைகளும் அவரைக்குறித்தும் சொல்லப்பட்டிருக்கிறது. அவர் தேவன் என்று வேதத்தில் தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறார்.

1. சிருஷ்டிப்பின் கிரியை அவரால் நடந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

தேவஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார். ஆதி. 1: 2.

தமது ஆவியினால் வானத்தை அலங்கரித்தார். யோபு 26: 13, சங். 33: 6. 104: 30.

2. சர்வவியாபகர்.

உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன். சங் 139: 7. எபே. 9: 18.

3. சர்வஞ்ஞர்.

கர்த்தருடைய ஆவியை அளவிட்டு, அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்து, அவருக்குப் போதித்தவன் யார்? ஏசா. 40: 13, 14.

அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார். 1 கொரி. 2: 10, 11.

பரிசுத்தாவியானவர் கட்டளையிடுகிறார், நியமிக்கிறார்.

ஆவியானவர்: நீ போய் அந்த இரதத்துடனே சேர்ந்துகொள் என்று பிலிப்புடனே சொன்னார். அப். 8: 29.

ஆவியானவர்: பேதருவை கொர்நேலியுவினிடத்திற்கு அனுப்பினார். அப். 10: 20. 11: 12.

பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்தஆவியானவர் திருவுளம்பற்றினார். அப். 13: 2.

அப். 13: 4. 20: 28.

பரிசுத்தாவியானவர் விலக்குகிறார், தடைசெய்கிறார்.

ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்தஆவியினாலே தடைபண்ணப்பட்டார்கள். அப். 16: 6.

பித்தினியா நாட்டுக்குப் போகப் பிரயத்தனம்பண்ணினார்கள்; ஆவியானவரோ அவர்களைப் போகவொட்டாதிருந்தார். அப். 16: 7.

பரிசுத்தாவியின் நாமத்திலே நாம் ஞானஸ்நானம் பெறுகிறோம்.

பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம்கொடுங்கள். மத். 28: 19.



பரிசுத்தாவியானவர் திரித்துவத்தில் ஒருவரானதினாலே அவருடைய நாமத்தினாலே ஆசீர்வதிக்கப்படுகிறோம்.

கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக் கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன்மேல் கிருபையாயிருக்கக் கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரசன்னமாக்கி, உனக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர். எண். 7: 24—26.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்தஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. 2 கொரி. 13: 14.

பரிசுத்தஆவியானவரின் தேவதன்மையை இன்னம் தெளிவாய் அறியத்தக்கதாக பின்வரும் வேதவாக்கியங்களைக்கொண்டு ஒப்பிட்டுப் பார்க்கவும்.

நீங்கள் காதாரக் கேட்டும் உணராமலும், கண்ணாரக் கண்டும் அறியாமலும் இருங்கள் என்று ஆண்டவர் சொன்னதாக ஏசா. 6: 9-ல் சொல்லிய வார்த்தைகளை, பரிசுத்தாவியானவர் உரைத்ததாக அப். 28: 26, 27-ல் காட்டியிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரைப் பரீட்சை பார்த்தார்கள் என்று யாத். 17: 7-ல் சொல்லிய வார்த்தைகளை, பரிசுத்தாவியானவர் தம்மைப் பரீட்சைபார்த்தார்கள் என்று சொன்னதாக எபி. 3: 7—9 ல் காட்டப்பட்டிருக்கிறது.

அப்படியே எரே. 31: 33ஐ எபி. 10: 15, 16 உடனும்.
2 தீமோ. 3: 16ஐ 2 பேது. 1: 21 உடனும்.
அப். 5: 3ஐ அப். 5: 4 உடனும்.
1 கொரி. 3: 17ஐ 1 கொரி. 6: 19 உடனும்.
மத். 4: 7ஐ அப். 5: 9 உடனும்.
மத். 19: 17ஐ சங். 143: 10 உடனும் ஒத்துப்பார்.

பரிசுத்தாவியானவருக்குச் சொல்லப்பட்டிருக்கிற நாமங்களாவன.

நல்ல ஆவி. நெகே. 9: 20. சங். 143: 10.
தேவனுடைய ஆவி. ஆதி. 1: 2. மத். 12: 28.
பரிசுத்தஆவி. லூக். 11: 13. மத். 12: 32. மாற். 1: 8.
வாக்குத்தத்தத்தின் பரிசுத்தஆவி. எபே. 1: 13.
சத்தியஆவி. யோவா. 14: 17. 15: 26. 16: 13.
உயிர்ப்பிக்கிற ஆவி. 1 பேது. 3: 18.
புத்திரசுவிகாரத்தின் ஆவி.ரோ. 8: 15.
பரிசுத்தத்தின் ஆவி. ரோ. 1: 4.
கர்த்தருடைய ஆவி; ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவி; ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவி; அறிவை

யும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவி; ஏசா. 11: 2.

ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவி. எபே. 1: 17.

ஆவி. மாற். 1: 12. லூக். 2: 27.

கிறிஸ்துவின் ஆவி. ரோ. 8: 9. 1 பேது. 1: 11.

பிதாவின் வாக்குத்தத்தம். லூக். 24: 49. அப். 1: 4.

தேற்றரவாளன். யோவா. 14: 16. 15: 26. 16: 7.

கிருபையின் ஆவி, எபி. 10: 29. சகரி. 12: 10.

மகிமையுள்ள ஆவி. 1 பேது. 4: 14.

ஜீவனுடைய ஆவி. ரோ. 8: 2.

கிருபையின் ஆவி, விண்ணப்பங்களின் ஆவி. சகரி. 12: 10.

தேவனுடைய ஆழங்களை ஆராய்ந்தறிகிறவர். 1 கொ. 2: 10.

பரிசுத்தாவியானவர், பழைய புதியஏற்பாட்டாகமங்களில் 300-தடவைக்கு மேலாக பேர் சொல்லப்பட்டிருக்கிறார்.

விறு. பரிசுத்தாவியானவர் இறங்கினதை திருச்சபை எப்போது கொண்டாடுகிறது?

விடை. பரிசுத்தாவியின் திருநாளில்—அது பெந்தேகோஸ்தே நாளாகிய வருஷோற்சவ நாள். அந்நாளில் அப்போஸ்தலன்மார் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே கூடியிருந்தபொழுது, அவர்களெல்லாரும் சடுதியாய் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குக் கொடுத்த கிரணியின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.

விறு. பரிசுத்தாவி மனுஷருக்கு அவசியமா?

விடை. ஆம், அவசியந்தான். அவரில்லாமல் நாம் தேவன் அங்கிகரிக்கத்தக்க ஆராதனைசெய்யக்கூடாது, மறுபிறப்படையக்கூடாது, பரிசுத்தராய் நடக்கக் கூடாது.

தேவனைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும். யோவா. 4: 24.

ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். ரோ. 8: 5.

கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல. ரோ. 8: 9.

ரோ. 8: 14. 1 கொரி. 12: 3.

விறு. பரிசுத்தாவியானவர் வாக்குத்தத்தம்பண்ணப்பட்டிருக்கிறாரா?

விடை. ஆம்.

என் ஆவியை உங்களுக்கு அருளுவேன். நீதி. 1: 23.

ஏசா. 44: 3. யோவே. 2: 28. அப். 2: 17, 18.



அவர்கள் உள்ளத்தில் புது ஆவியைக் கொடுப்பேன். எசே. 11: 19.

உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைப்பேன் எசே. 36: 27. 37: 14. லூக். 11: 13.

---

## The World's Birth.

## உலகப்பிறப்பு.

### III. அதிகாரம்.

" வானங்கள்."

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையுஞ் சிருஷ்டித்தார்.
சங்கீதம் 19: 1—11.

(தொடர்ச்சி.)

---

நட்சத்திரங்களாகிய சூரியன்களையும், அவைகளின் பருமனையும்
பற்றிச் சிலகாரியங்களைச் சொல்லுகிறேன். ஜோதி மண்டலத்திலே
நட்சத்திரங்கள் திரளாயிருக்கிறதென்பதற்கு ஒரு திருட்டாந்தம்
சொல்லுகிறேன். ஹெர்சல் சாஸ்திரி பால்வீதி மண்டலத்திலே நமது
கண்ணுக்குத் தோன்றுகிறபடி, சந்திரனுடைய பருமனுள்ள இடத்தில்
மாத்திரம் 2000- நட்சத்திரங்களைத் தமது தூரதிருஷ்டிக் கண்ணாடி
யினால் கண்டறிந்திருக்கிறார். கால்மணி நேரத்துக்குள்ளாக 1,16,000
நட்சத்திரங்கள் கடந்துபோனதாகக் கண்ணாடியினால் பார்த்தார்.
நெபுலி என்கிற நட்சத்திரக் கணத்தில் ஓர்கூட்டத்தைப் பார்த்தால்
முன் சொல்லியபடி, சந்திரனுடைய பருமன் அளவுக்குள் 2,00,000
சூரியன்களிருக்கிறதாகக் கணக்கிட்டிருக்கிறார். பலமான தூரதிருஷ்
டிக் கண்ணாடியினால், விசேஷமாய் ரோஸ்பிரபு செய்திருக்கிற கண்
ணாடியினால் சென்ற சிலவருஷங்களுக்குள்ளாக இலக்கமற்ற நட்சத்தி
ரங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். பரிசுத்தவேதம் சொல்லுகிற
படி தேவன் மாத்திரம் அவைகளைக் கணக்கிடக் கூடியவர். சங்கீ
தம் 147: 4. "அவர் நட்சத்திரங்களின் லக்கத்தை எண்ணி அவை
களுக்கெல்லாம் பேரிட்டு அழைக்கிறார்."
பூர்வீகத்திலிருந்தவர்கள் நட்சத்திரங்களின் தொகை 1022 அல்
லது 1026 என்று கணக்கிட்டிருந்தார்கள். வேதாகமமோ அவைகளி
ன் தொகை எண்ணத் தொலையாதது என்று சாட்சிபகர்ந்திருக்கிறது.
தேவன், அகண்ட வெளியிலே நட்சத்திரங்களைத் தூளத்தனையாய்ச்
சிதறியிருக்கிறார் என்று ஹெர்சல் சொல்லியிருக்கிறார். ஆதி 15: 5; 22.
17; எபி 11: 12. ஏசாயா 40: 26.
நட்சத்திரங்களின் தொகை எண்ணிறந்ததாயிருப்பதுபோல
அவைகளின் பருமனும் பிரமாண்டமாயிருக்கிறது. திருஷ்டாந்தமாக,
மிகவும் துலக்கமாய்ப் பிரகாசிக்கிற சீரியஸ், ஆர்க்டியூரஸ் அன்டேரஸ்

## மேஷமீ நாள்-31 சித்திரைமீ 20உ முதல், வைகாசிமீ 19உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| ஞா | 1 | ௨௦ | அவர்கள் சீர்கேடுகள் அதிகரித்தது எரேமியா. 5:6. |
| தி | 2 | ௨௧ | உங்கள் பலிகள் எனக்கு இன்பமாயிரா. 6:20. |
| செ | 3 | ௨௨ | என் வாக்குக்குச் செவிகொடுங்கள். 7:23. |
| பு | 4 | ௨௩ | இதோ சீயோனில் கர்த்தர் இல்லையோ. 8:19. |
| வி | 5 | ௨௪ | அவர்கள் என்னை அறியமாட்டோமென்கிறார்கள். 9:6. |
| வெ | 6 | ௨௫ | அவர் ஜீவனுள்ள தேவன், நித்திய ராஜா. 10:20. |
| ச | 7 | ௨௬ | நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள். 11:3. |
| ஞா | 8 | ௨௭ | கர்த்தாவே நீர் என்னை அறிந்திருக்கிறீர். 12:3. |
| தி | 9 | ௨௮ | நீ சுத்திகரிக்கப்பட மாட்டாயா? 13:27. |
| செ | 10 | ௨௯ | உம்முடைய நாமத்தினிமித்தம் கிருபை செய்யும். 14:7. |
| பு | 11 | ௩௦ | நான் உன்னைத் திரும்பச் சீர்ப்படுத்துவேன். 15:19. |
| வி | 12 | ௩௧ | அவர்களைத் திரும்பி வரப்பண்ணுவேன் 16:15. |
| வெ | 13 | ௧ | தீங்குநாளில் நீரே என் அடைக்கலம். 17:17. |
| ச | 14 | ௨ | என் ஆத்துமாவுக்குப் படுகுழியை வெட்டுகிறார்களே. 18:20. |
| ஞா | 15 | ௩ | அவர்கள் என்னை விட்டுவிட்டார்கள். 19:4. |
| தி | 16 | ௪ | என்னை இணங்கப் பண்ணினீர். 20:7. |
| செ | 17 | ௫ | ஜீவ வழியையும் மரண வழியையும் வைக்கிறேன். 21:8. |
| பு | 18 | ௬ | நீங்கள் நியாயமும் நீதியும் செய்யுங்கள். 22:3. |
| வி | 19 | ௭ | நமது நீதியாயிருக்கிற கர்த்தர். 23:6. |
| வெ | 20 | ௮ | அவர்களைக் கட்டுவேன். 24:6. |
| ச | 21 | ௯ | துன்மார்க்கரைப் பட்டயத்துக்கு ஒப்புக்கொடுப்பார். 25:31. |
| ஞா | 22 | ௧௦ | உங்கள் வழிகளையும் கிரியைகளையும் சீர்ப்படுத்துங்கள். 26:18. |
| தி | 23 | ௧௧ | இந்த நகரம் பாழாய்ப் போகவேண்டியதென்ன? 27:17. |
| செ | 24 | ௧௨ | பாபிலோன் ராஜாவின் நுகத்தை முறித்தேன். 28:2. |
| பு | 25 | ௧௩ | என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள். 29:13. |
| வி | 26 | ௧௪ | அவனைச் சமீபித்து வரப்பண்ணுவேன். 30:21. |
| வெ | 27 | ௧௫ | அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன். 31:3. |
| ச | 28 | ௧௬ | எனக்குப் பயப்படும் பயத்தை அவர்கள் இருதயத்தில் வைப்பேன். (32:40 |
| ஞா | 29 | ௧௭ | எல்லா அக்கிரமங்களையும் மன்னிப்பேன். 33:8. |
| தி | 30 | ௧௮ | அவர்களோடே உடன்படிக்கை பண்ணினேன். 34:14. |
| செ | 31 | ௧௯ | எனக்குக் கீழ்ப்படியாமற் போனீர்கள். 35:14. |

## விசேஷ நாட்கள்.

1. பரி. பிலிப்பு, யாக்கோபு அப். திருநாள்.
கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும், 2-ம் ஞாயிறு.
8 கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும், 3-ம் ஞாயிறு.
14. பௌரணமி.
15. கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும், 4-ம் ஞாயிறு.
22. கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும், 5-ம் ஞாயிறு.
26. கிறிஸ்து பரத்துக்கேறின திருநாள்.
28. அமாவாசை.
29. கிறிஸ்து பரத்துக்கேறின திருநாளுக்குப் பின்வரும், ஞாயிறு.